36

25

உ

விவேகானந்த கேசரி

தொகுதி - ௩ பக்கம் 2 ௩
3
[illegible] 1 2 3

1928-1929

JL
Y592.Cm211, N27CH.
N: 9.3.13
129809.

Registered No. M. 1514

# செங்குந்த மித்திரன்

3 APR

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு.

ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

தொகுதி - ௩] விபவ௵ - தை, மாசி, பங்குனி௴ [பகுதி - ௧, ௨, ௩

## தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டு நிகழ்ச்சிகள்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

கெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

# பொருளடக்கம்.


தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாடு

மகாநாடு வைபவம். பக்கம்

மகாநாடு கூட்ட முயற்சி ... 1
'செங்குந்த மித்ரன்' வைபவம் ... 4
ஈரோடு முனிசிபாலிடியாரின் விசேஷ ஏற்பாடுகள் ... 5
மகாநாட்டுப் ஸ்பெஷல் ... 6
ஊர்வலச் சிறப்பு ... 7

கொடியேற்று விழா.

கொடியேற்றுப்பாட்டு ... 8
கொடியுயர்த்திய தலைவர் உரை ... 9

சமூக மகாநாடு.

கனம் நாயருக்கு வரவேற்பு ... 12
கனம் நாயர் அவர்களின் திறப்புரை ... 14
வரவேற்புத் தலைவர் திரு. செங்கோட்டையா முதலியார் உரை ... 17
வாழ்த்துச் செய்திகளுடன் தந்தியனுப்பியோர். 27
தலைவரை உபசரித்தல் .. 29
தலைவர் திரு. முத்தையா முதலியார் பேருரை. 30

பொருட்காட்சித் திறப்பு.

திரு. நாயகர் திறப்புரை ... 36

விஷயாலோசனை சபை

அங்கத்தினர் பெயர்கள் ... 38
தலைவர் முகவுரை ... 40

வர்த்தகர் மகாநாடு.

திரு. சபாபதி முதலியார் திறப்புரை ... 41
வரவேற்புத் தலைவர் திரு. கந்தப்பமுதலியார் உரை ... 43
தலைவரை உபசரித்தல் ... 49
தலைவர் திரு. ஆறுமுக முதலியார் பேருரை. 50

வாலிபர் மகாநாடு.

திரு. முத்துக்குமாரசாமி முதலியார் திறப்புரை ... 55
வரவேற்புத் தலைவர் திரு. நா. மு. சண்முகசுந்தர முதலியார் உரை ... 57
தலைவரை உபசரித்தல் ... 64
தலைவர் திரு. பா. வே. பீமராஜா முதலியார் பேருரை ... 64
'மித்திரன்' ஆசிரியர் விண்ணப்ப உரை ... 73
மகாநாட்டுத் தீர்மானங்கள் ... 75
தலைவர் திரு. முத்தையா முதலியார் முடிவுரை. 88
தலைவர்களை வழியனுப்பல் ... 92
இரண்டாவது மகாநாடு கூடுமிடம் ... 92

தலைச்சங்கத்தின் 2-வது பொதுக்கூட்டம் 93

தலைவர்களின் சரித்திரங்கள்.

மகாநாட்டுத் தலைவர்கள்

திரு. ம. த. சாமிநாத முதலியார் ... 96
திரு. ஆ. வே. முத்தையா முதலியார் ... 97
திரு. மத. ப. கு. ஆறுமுக முதலியார் ... 97
திரு. பா. வே. பீமராஜா முதலியார் ... 98

மகாநாடுகளைத் திறந்துவைத்த

திரு தி. நா. சபாபதி முதலியார் ...
திரு. கு. முத்துக்குமாரசாமி முதலியார் ...

வரவேற்புத் தலைவர்கள்.

திரு. வ. செ. செங்கோட்டையா முதலியார் ...
திரு. தி. நா. கந்தப்ப முதலியார் ...
திரு. நா. மு. சண்முகசுந்தர முதலியார் ...
திரு. V. V. C. V நடேச முதலியார் ...

செங்குந்தர் கிளர்ச்சிக்கு மூல புருஷர்கள்.

ஸ்ரீலஸ்ரீ சாமி நாகலிங்க முனிவர் ...
திரு தி நா. கலியாணசுந்தர முதலியார் ...
திரு. ம. சண்முகசுந்தர முதலியார் ...
செங்குந்தர் கல்விநிதி ...

நிருபங்கள்.

மகாநாட்டு யாத்திரை ...
'மித்திரன்' ஆசிரியர் விண்ணப்ப வுரையின் பயன் ...
மகாநாடும், குடியரசு நிருபரும் ...

தலைச்சங்கத்து நிர்வாக சபைக் கூட்டங்க

தலைச்சங்கத்து 1927—28 வருஷத்திய அறிக்கைப் பத்திரம் ...
கிளைச்சங்கங்களின் ஜாபிதா ...
மாவட்டங்கள் முதலிய சம்பந்தமான விஷயங்கள் ...
அன்பர்களுக்கு பத்திரிகாசிரியர் அறிக்கை

படங்கள்.

ஒட்டக்கூத்தர் ..
'மித்திரன்' ஆசிரியர் ...
கொடியுயர்த்திய பெரியார் ...
கொடியேற்று விழா ...
மகாநாடுகளைத் திறந்து வைத்தோர் ...
சமூக மகாநாட்டுத் தலைவர்கள் ...
தொண்டர் படை ...
தலைவர்கள் (முதல்நாள்). ... 25
தலைவர்கள் (இரண்டாம் நாள்) ...
உத்தர மகாநாட்டுத் தலைவர்கள் ... 41
மகாநாட்டுக் காரியதரிசியும் தொண்டர் படைத் தலைவரும் ..
மகாநாட்டுப் பொருட்காட்சியும், மூல புருஷ
வாலிபர் மகாநாட்டுத் தலைவர்கள் .
செங்குந்தர் கூட்டம், வியாபார மாளிகையும் ..
மகாநாட்டு ஊர்வலம் ..
'செங்குந்த பிரபஞ்சமித்திரன்' பதிப்பாசிரியரும், பதிப்பாளரும் ..
தலைச்சங்கத்தின் புதிய நிருவாகசபை அங்கத்தினர் ..
தலைச்சங்கத்தின் அமைச்சர்கள் ..
தலைச்சங்கத்தின் பிரசாரகர்கள் .
புது வருஷத்துச் செங்குந்த பட்டன்.


ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.


பத்ராதிபர்:—டாக்டர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி.ஏ., பி.எல்.

காரியதர்சி:—பி. ஆர். ரங்கஸ்வாமி அய்யங்கார், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 12] துந்துபி வரு ஆடிமீ [ஸஞ்சிகை 10.


" [illegible]
[illegible] "

[ஸ்ரீ பாகவதம் 1-2-8.]

## பத்ராதிபரின் குறிப்புக்கள்.

மேல்நாட்டுத் தத்வவிசார க்ரமங்களில் மனிதருடைய தர்மாதர்ம விவேகத்தை (morality) ப்பற்றிய விசாரம் முக்கியமானவைகளில் ஒன்று. இவ் விஷயத்தை ப்ராயேண 'ஸ்வபாவம்' என்பதை யனுஸரித்தும் ஈச்வரனொருவனை அபேக்ஷிக்காமலும், சர்ச்சை செய்வார்கள். ஈச்வரனை ஒப்புக்கொண்ட வாதிகளும்கூட இவ்வழியிலேயே யிழிந்து தாமபேக்ஷித்த வாதத்தைத் நாட்ட எத்தனிப்பார்கள். இத்தகைய வாதிகளுக்கு ஈச்வரன் அதர்மம் செய்கிறவர்களைத் தண்டிக்கமாத்திரம் உதவுவான். இவ்விசாரத்தின் பலபடிகளிலிருக்கும். பொதுவில் எல்லாரும் ஒப்புக்கொள்வது ஒன்றுதான்:—பஹுஜநங்களுக்கு ஸுகத்தை (greatest happiness to the greatest number) க்கொடுக்கும் கார்யங்கள் தர்மங்கள்; அதற்கு விரோதிகள் அதர்மங்கள்; என்பது. இதை லக்ஷ்யமாக வைத்துக்கொண்டு நன்று தீது என்று பகுத்தறியவேண்டும். பஹுஜந ஸௌக்யத்தை நாடுவதால் ஒவ்வொருவனுடையவும் ஏகாந்த ஸுகத்துக்கு ஹேது இயற்கையாலேயே பிறரோடு கூடிவாழ வேண்டியவனை யாது தன்னிருப்பே தனக்கு துக்ககரமாயிருக்குமா ஸுகம் குறைந்தால் தான் வாழும் ஸமூஹமும் கஷ்

டப்பட்டு அதன்காரணமாய்த் தனக்கும் துன்பமேற்படுவதாலும், பஹுஜந ஹிதத்தின் பொருட்டுத் தான் தனதென்பதை த்யஜித்துச் சில வருத்தங்களுக்குள்ளாவதும் உண்மையில் தனக்கு அஹிதமாகாது. இப்படிச்செய்பவன் தான் பரமதார்மிகன். இவன் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் அவைகளுக் காதாரமாகவிருக்கும். இவனுடைய பொறுமை, ஊக்கம், தயை, த்யாகம், தன்னடக்கம் (self control) முதலிய குணங்களும் இவனை விடப்புத்தி பரிபாகாதிகளில் குறைந்தவர்களுக்கு நிதர்சகங்களாயும் நியாமகங்களாயுமிருக்கும். இப்படிப்பட்ட மஹான்களிலும் தரதமந்யாயத்தால் மேன்மேலும் படிகளேற்படக்கூடும். நாநாதேச சரித்திரங்களையும் அவ்வோஜந ஸமூஹங்களில் உத்பவித்த மஹாபுருஷர்களுடைய நடவடிக்கைகளையும் உபதேசங்களையுமாராய்ந்தால், எவர் ப்ரவர்த்திப்பித்த தர்மாதர்ம விவேகம் ஸர்வோத்க்ருஷ்டமானது; எந்த ஜநங்கள் உயர்ந்த லக்ஷ்யத்துடன் கூடிய தர்மங்களில் நிஷ்டையை யுடையவர்களாயிருக்கிறார்கள்; எவை அத்யந்த பரிஹரணீயங்களான அதர்மங்கள்; எவை முக்ய லக்ஷ்யத்துக்கு உபயுக்தங்களாகாமையால் தர்ம ப்ரமையிலிருந்து விடத்தகுந்தவை; என்றிப்படிகளில் ஸாராஸாரவிவேகம் பிறந்து, தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் வரையறையும் தர்ம அநுஷ்டானத்துக்கு நியாமகமான குறிப்பும் (moral standard) ஏற்படும். ஆகவே அதர்மம் என்பதெல்லாம் அநுபவத்தாலும் அநுமானத்தாலும் அறியத்தக்கவை—என்பது இக்காலத்திவர்களுடைய ஸமுதாயமான நினைவு.


* * * * * *

வித்யாவாரிதி என்று பட்டம் பெற்றவரும் காச்மீரத்தில் ப்ராசீன சாஸநாதிகளைப் பரிசீலிக்கும் (archaeology) இலாகாவுக்கு அத்யக்ஷராய் பாஸ்சாத்ய ந்யாய சாஸ்த்ரங்களிலும் நிபுணருமான, ஜகதீச சந்த்ர சட்டர்ஜி என்பவர் நமது ந்யாய, வைசேஷிக ஸித்தாந்தங்களை யனுசரித்து 'ஹிந்து தத்வாஸ்தி
வம்' (Hindu Realism) என்று க்ரந்த மொன்றை ஆங்கிலேயத்திலெ
ப்ரசுரித்திருக்கிறார். ந்யாயமும் வைசேஷிகமும் தத்வநிரூபணம் புருஷ
நிரூபணம் உபாய நிரூபணம் இவை மூன்றுக்கும் நிரம்பப் போதும
யென்றும், வேதாந்தமும் (இவரறிந்தது அத்வைதம் மட்டில் என்று
வேண்டியிருக்கிறது) இந்த யோசனைக்கு ஒத்திருக்கிற தென்றும்
புத்தகத்தில் அபிப்பிராயப் படுகின்றார். மேலும் ப்ரக்ருத விஷ
சொல்வ தென்னவென்றால்:—ஜீவனுடைய ப்ரவ்ருத்தி முத
அவனுக்குச் சில ஸம்ஸ்காரங்களும், அத்ருஷ்டங்களும் உண்ட
கார மென்பது மனது இந்த்ரியங்கள் மூலமாய்ச் செய்யும்
ஆத்மாவுக்கு உண்டாகும் அநுபவமும், அதனால் வரும் ஸ
கு உதாஹரணம்—ஒருவன் கணிதத்திற் பயின்றால்,
தான் ... முதலியவைகளை மறந்து விட்ட



129809

'செங்குந்தமித்திரன்' பத்திராசிரியர்



திரு. ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.


# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

[ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

| தொகுதி - ௩ | விபவஸு - தை, மாசிமீ | பகுதி - ௧, ௨ |
| --- | --- | --- |


3 APR 1929

முருகன் துணை.

யாமோதிய கல்வியு மெம் மறிவும்
தாமே பெற வேலவர் தந்ததனால்
பூமேல் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே நடவீர் நடவீ ரினியே.

# தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாடு.

## தைமீ 7, 8 தேதிகளில் (19, 20-1-'29) ஈரோட்டில் நடைபெற்றது.

### மகாநாடு கூட்ட முயற்சி.

மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாகிய கல்விச் செல்வத்திலும் பொருட் செல்வத்திலும் நம்மவர்களில் பெரும்பாலோர் பின்னடைந்து, வறுமைப்பிணியால் சூழப்பட்டு, மிக நலிந்த வாழ்க்கையினை நடத்தி வருகின்றனர். மற்றுஞ் சிலர் வெளிநாடுகட்குச் சென்று எவ்வளவோ இன்னல்கட்குஞ் சிறுமைகட்கு மிடையே ஜீவனோபாயஞ் செய்து வருகின்றனர். இத்தீமைகளை மேலும் வளரவிடாமல் தடுப்பதற்குரிய மார்க்கங்களை ஆராய்ந்து முடிவு செய்தற் பொருட்டு உலகத்தின் எல்லாப் பாகங்களிலுமுள்ள நம்மினத்தாரைப் பெருந்திரளாக ஓரிடத்திற் கூட்ட வேண்டியதன் அவசியத்தை நன்குணர்ந்து சென்னைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், 'செங்குந்த மித்திரன்' வாயிலாகவும், பிரசார மூலமாகவும் அநேக நாட்களாக வற்புறுத்தி வந்தது. பிரசாரஞ் செய்யத் தொடங்கிய நாள் தொட்டு வியாபாரச் செழிப்புடையதும், நம்மவர் நிறைந்து வசிக்கப்பெறுவதுமான கோயமுத்தூர் ஜில்லாவிலேயே பிரசார காலத்திற் பெரும்பகுதியைச் செலவழித்து, அந்த ஜில்லாவிலுள்ள செங்குந்தர் வதியும் கிராமங்களில் பெரும்பாலானவைகட்குச் சென்று கிளைச் சங்கங்கள் ஸ்தாபித்து, நம்மவர் திரண்டு கூடுதற்குச் சந்தர்ப்ப மளிக்கத் தக்க மகாநாடு ஒன்று கூட்ட வேண்டியதின் காரணங்களை நன்கு விளக்கிக் காட்டி, அம் மகாநாடு விரைவில் கூட்டப்படவேண்டியது மிக அவசியமாகுமென ஒவ்வொருவரும் உணர்ந்து தீவிர முயற்சி கொள்ளுமாறு செய்துவிட்டனர். கடைசியாகக் கோயமுத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த பல கிராமங்களின் செங்குந்த முக்கியஸ்தர்களனைவரும் ஈரோட்டில் கூடியிருந்த நாட்டுக் கூட்டத்திற்கு நமது தலைச்சங்கப் பிரதிநிதிகள் இருவர் சென்று, செங்குந்தர் முதல் மகா

நாட்டைக் கோயமுத்தூர் ஜில்லாவில் கூட்ட வேண்டியதற்குரிய அநேக காரணங்களை எடுத்துக் காட்டி, அதற்குரிய முயற்சிகளில் உடனே தலையிடுமாறு வற்புறுத்திக் கூறினர். இதன் பயனாய் அதே சமயத்தில் தலைச்சங்கத்தின் விருப்பப்படி ஜனவரி மாதத்தில் ஈரோட்டில் மகாநாட்டைக் கூட்டுவதென 10—10—28-ல் முடிவுசெய்யப்பட்டது.

### மகாநாட்டு வேலைகள்.

மகாநாட்டு வேலைகளைத் தொடங்குவதற்கு முன் தலைச்சங்கத்தாரின் ஆலோசனையையும் ஒத்துழைப்பையும் பெறும் பொருட்டுத் தலைச் சங்கத்தின் அமைச்சரும், 'செங்குந்த மித்திரன்' ஆசிரியருமாகிய திரு ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., அவர்களை ஈரோட்டு, சித்தோடு, ஊற்றுக்குழி முதலிய இடங்களைச் சேர்ந்த செங்குந்த மகாஜனங்கள் 12-12 28-ல் வரவழைத்து மகாநாட்டைச் சிறப்புடன் நடத்துவதற்கு வேண்டிய யோசனைகளைப் பெற்றதோடு, கூட்டப்போகும் மகாநாட்டினைத் தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாடு என்னும் பெயருடன் சமூக மகாநாடு, வர்த்தகர் மகாநாடு, வாலிபர் மகாநாடு, கைத்தொழிற் கண்காட்சி என்னும் பிரிவுகளோடு கூட்டுவதெனத் தீர்மானித்து, வரவேற்புச் சபையின் உத்தியோகஸ்தர்களையும், மகாநாடுகளுக்குத் தலைமை வகிக்கும் பெரியார்களையும் அன்றே தேர்ந்தெடுத்தனர்.

### வரவேற்புச் சபையினர்.

கீழ்க்கண்ட அறிவும் ஆர்வமும் மிகுந்த அன்பர்கள் மகாநாட்டின் வரவேற்பு உத்தியோகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:-

### வரவேற்புத் தலைவர்கள்.

சமூக மகாநாடு : திரு. V. S. செங்கோட்டையா முதலியார் அவர்கள், முனிசிபல் கவுன்சிலர், மால் மில் ஏஜண்டு, கோயமுத்தூர்.

வர்த்தகர் மகாநாடு: திருச்செங்கோடு திரு. T.R. கந்தப்ப முதலியார் அவர்கள், ஜில்லா தாலூகா போர்டு அங்கத்தினர், மில் ஏஜண்டு, திருச்செங்கோடு.

வாலிபர் மகாநாடு : திரு. நா. மு. சண்முகசுந்தர முதலியாரவர்கள், மில் ஏஜண்டு, ஈரோடு.

### பொதுக் காரியதரிசி.

திரு. V. V. C. V. கூடச முதலியார் அவர்கள் ஜில்லா தாலூக்காபோர்டு அங்கத்தினர், மில் ஏஜண்டு, திருச்செங்கோடு.

### காரியதரிசிகள்.

சமூக மகாநாடு: திருவாளர்கள் சித்தோடு ல. சுப்பராயமுதலியாரவர்கள், ஊற்றுக்குழி மொ. க. குழந்தையப்ப முதலியாரவர்கள், சென்னிமலை சு. பாலசுந்தரமுதலியாரவர்கள்.

வர்த்தகர் மகாநாடு: திருவாளர்கள் வ. மு. மொட்டையப்ப முதலியாரவர்கள், ஒ. கொ. சென்னியப்ப முதலியாரவர்கள், ம. லட்சுமண முதலியாரவர்கள்.

வாலிபர் மகாநாடு : S. சென்னியப்ப முதலியாரவர்கள், மு. பழனியப்ப முதலியாரவர்கள், கு. வையாபுரி முதலியாரவர்கள்.

### பொக்கிஷதார்கள்

திருவாளர்கள் செ. ராமசாமி முதலியாரவர்கள், V. V. C. V. பெரியசாமி முதலியாரவர்கள்.

### தொண்டர் படை

தலைவர்: திரு. S. மீனாட்சிசுந்தர முதலியாரவர்கள், பி.ஏ., எல்.டி., ஹெட்மாஸ்டர், ராஜா ஹைஸ்கூல் சிவகங்கை.

உபதலைவர்கள்: திருவாளர்கள் தி ரா. சுந்தரமுதலியாரவர்கள், எஸ். வடிவேல் முதலியாரவர்கள், T R. பெருமாள் முதலியாரவர்கள், சி. செ. ராமசாமி முதலியாரவர்கள், M. S. மாரியப்ப முதலியாரவர்கள்.

மேலும் பல அங்கத்தினர்களடங்கிய பந்தல் கமிட்டி, சமையல் கமிட்டி, கண்காட்சிக் கமிட்டி, விளம்பரக் கமிட்டி முதலிய உப சபைகள் நியமிக்கப்பட்டன.

### மகாநாட்டுத் தலைவர்கள்

#### கொடியேற்றும் பெரியார்

திரு. ம. த. சாரங்கநாத முதலியாரவர்கள், மாஜி முனிசிபல் சேர்மன், மாஜி ஜில்லா போர்டு மெம்பர், காஞ்சிபுரம்.

#### தலைவர்கள்

சமூக மகாநாடு:—திரு. ஆ. வே. முத்தைய முதலியாரவர்கள், பி.ஏ., பி.எல்., பிரெஞ்சு அரசாங்கத்தின் இந்திய அமைச்சர், புதுவை.

வர்த்தகர் மகாநாடு:—திரு. தே. ப. கு. ஆறுமுக முதலியாரயாகள், பாங்கர், தென்காசி.

வலிபர் மகாநாடு:—திரு. மா. வே. பீமராஜா முதலியாரவர்கள், மாஜி முனிசிபல் சேர்மன், குடியேற்றம்.



### மகாநாடுகளைத் திறந்து வைத்தோர்

சமூக மகாநாடு:—கனம் திவான்பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள், பி.ஏ., பி எல்., சட்ட மெம்பர், சென்னை அரசாங்கம்.

வர்த்தகர் மகாநாடு:—திரு. தி. நா. சபாபதி முதலியாரவர்கள், முனிசிபல் வைஸ் சேர்மன், திருவாரூர்.

வாலிபர் மகாநாடு:—திரு. கு. முத்துக்குமர முதலியார் அவர்கள், மிராஸ்தார், கொல்லங்கோடு.

கண்காட்சியைத் திறந்துவைத்தோர்:—திரு. ஈ. வி. ராமசாமி நாயகரவர்கள், 'குடியரசு'ப் பத்திரிகாசிரியர், ஈரோடு.

### துணை செய்தோர்

அன்றியும், தலைச்சங்கத்தின் பிரதிநிதியாக ஈரோட்டில் இருந்து மகாநாட்டினைச் சங்கத்தின் சட்டப்படிக்கு நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச்செய்து மகாநாடு சிறப்புடன் நடைபெறத் துணைபுரியும்படி திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் தலைச் சங்கத்தாரால் மகாநாட்டுச் சிறப்புக் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 2 மாதங்கட்கு முன்னரே ஈரோட்டுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களும் அவ்வாறே ஈரோட்டில் மகாநாடு முடியும் வரை தங்கியிருந்து எல்லாவகையினும் துணைசெய்து ஒத்துழைத்து வந்தனர். அவருக்குத் துணையாகச் சென்னைச் செங்குந்த வாலிபர் சங்கத்தின் காரியதரிசியாகிய திரு. தீ. இராஜவேல் முதலியார் அவர்கள் தலைச் சங்கத்தினால் கிறிஸ்மஸ் விடுமுறையின்போது அனுப்பப்பட்டு மகாநாடு முடியும் பரியந்தம் ஈரோட்டிலேயே இருந்து கடிதப் போக்குவரத்துக்குப் பேருதவி புரிந்தார். வடவழி மருதவரைநீழல் திரு. V. M. அப்பா முதலியார் அவர்களும் ஜனவரி மாதம் முதல் தேதி தொடங்கி இவர்களோடு கலந்து உழைத்தனர். மேலும், மகாநாட்டின் வரவேற்புச் சபைக்கு உதவியாக இருந்து மகாநாடு சம்பந்தமான விஷயங்களில் ஆலோசனை கூறவும், கடிதப் போக்குவரத்து நடத்தவும், அவசியமான பிரசுரங்களை அப்போதைக்கப்போது தயாரித்து வெளிப்படுத்தவும் திருவாளர்கள் மா. அ. கனகசபை முதலியார், மா. பா. கந்தசாமி முதலியார் பி.ஏ., பி.இ., மு. சரவண முதலியார், பீ. செ. மாணிக்கவாசக முதலியார், ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி., ஆகிய ஐவர் அடங்கிய ஒரு ஆலோசனை சபை தலைச்சங்கத்தாரால் நியமிக்கப்பட்டது.

கோயமுத்தூர், சேலம் ஜில்லாக்களிலுள்ள கிராமங்களிலுள்ளவர்களெல்லாம் நமது கிளைச் சங்கங்களின் மூலம் இச்செய்திகளைக் கேட்டு அளவிறந்த சந்தோஷங்கொண்டு, மகாநாடு வெற்றியுடன் நடைபெற வேண்டிய பொறுப்புத் தங்கள் தங்களுடையதெனக் கொண்டு, தாங்களே வலிய வந்து உதவிசெய்ய முற்பட்டனர். இவ்வாறு ஒவ்வொரு கிளைச் சங்கமும், ஒவ்வொரு கிராமத்துச் செங்குந்த அறிஞர்களும் முற்பட்டமையால் எதிர் பார்த்ததைவிட எண்மடங்கு அதிக சிறப்புடன் மகாநாடு நடைபெற்றதென்பதில் ஐயமின்று.

### விளம்பரம்

மகாநாடு சம்பந்தமாக அவ்வப்போது நடைபெறும் வேலைகள் துண்டுப்பிரசுர மூலமாகவும், தமிழ், ஆங்கில தினசரிப் பத்திரிகைகள் வாயிலாகவும், 'செங்குந்த மித்திரன்' மூலமாகவும் அனைவரும் அறியும்படி வெளியிடப்பட்டன. தலைச்சங்க அமைச்சர் தம் கைப்பட எல்லாச் செங்குந்த பிரமுகர்களுக்குமாக ஏறக்குறைய ஐந்நூறு அழைப்புக் கடிதங்கள் அனுப்பினர். இவற்றைக் கண்ட சில முக்கிய நகரங்களிலுள்ள செங்குந்த அறிஞர்கள் மகாநாட்டின் சிறப்புக்களைப் பற்றித் தாங்களே தனியாகத் துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டுத் தங்கள் ஜில்லா முழுதும் வழங்கத் தலைப்பட்டனர்.

### மகாநாட்டு உற்சாகம்

இவைகளின் பயனாய்ச் செங்குந்தர் வதியும் கிராமங்களே யன்றித் தென்னிந்தியாவிலுள்ள ஏனைய கிராமங்கள் எல்லாவற்றிலும் ஒரு மாத காலமாய் மகாநாட்டுப் பேச்சே நிறைந்திருந்தது. வரவேற்புச் சபையினருக்கும் தலைச்சங்கத்திற்கும் பாராட்டுக் கடிதங்கள் அளவில்லாது வந்து குவிந்துகொண்டிருந்தன. ஒவ்வொரு கிளைச் சங்கமும், கிராமமும் அதிகமான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அறிவித்து வந்தன. சிலர், மகாநாட்டைச் சிறப்புடன் நடத்துவதற்கு வேண்டிய தங்கள் யோசனைகளைத் தெரிவித்தனர். மற்றுஞ் சிலர் தாங்களே வலிந்து உதவி செய்வதாகக் கடிதங்கள் எழுதினர். வேறு சிலர் சில முக்கியஸ்தர்கட்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்புமாறு விலாசங்கள் அறிவித்தனர். இன்னுஞ் சிலர் ஒவ்வொரு மகாநாட்டிற்கும்பொருத்தமான சிறந்த அறிவும், ஆற்றலும், செல்வாக்கும் அந்தஸ்தும் வாய்ந்த தலைவர்களைத் தேர்ந்தெடுத்ததைப் பாராட்டினர். பலர் மகாநாட்டில் தாங்கள் கொண்டுவர விரும்

பும் தீர்மானங்களைத் தெரிவித்தனர். குடும்பத்தோடு வருவதாகவும், நண்பர்களோடு வருவதாகவும், இத்தனை பேர்களுடன் வருவதாகவும், இன்னின்ன காலத்தில் வந்து சேர்வதாகவுங் கடிதங்கள் வரைந்தோர் பற்பலர். தங்கள் ஜில்லாவிலுள்ள கிராமங்கள்தோறுஞ் சென்று பல்லாயிரக் கணக்கான பிரதிநிதிகள் வருமாறு தூண்டுவதாகவும், பிரசாரஞ் செய்து வருவதாகவும் தெரிவித்தோர் சிலர். இவ்வாறு வரவேற்புக் கமிட்டியினர்க்கும், கலைச்சங்கத்தினர்க்கும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் ஊட்டத்தக்க கடிதங்கள் எண்ணிறந்தனவாய்த் தினந்தோறும் வந்து குவிந்துகொண்டிருந்தன.

### ‘செங்குந்த நகர்’ வைபவம்

ஈரோட்டின் மத்திய ஸ்தானமாயுள்ளதும், செங்குந்தர்கள் நிறைந்து வசிக்கும் கோட்டைக்குச் சமீபமாயுள்ளதுமான பிரப் துரையவர்களின் பெரிய மைதானத்தில் மகாநாட்டிற்கென ‘செங்குந்த நகர்’ ஒன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. இந்நகரம் மொத்தத்தில் 600 அடி நீளமும் 400 அடி அகலமும் உள்ளதாய், நகர வாயிலில் நுழைந்ததும் மனங் கவரத்தக்க வனப்பும் ஒழுங்கும் வாய்ந்து விளங்கியது. இந் நகரத்தின் தென்பாகத்தில் மகாநாடு கூடுதற்காக ‘நவவீரர் மாளிகை’ என அழைக்கப்படும் ஓர் பெரும் மண்டபமும், அதனைச் சுற்றி அநேக தெருக்களும் அமைக்கப்பட்டிருந்தன.

### ‘நவவீரர் மாளிகை’

நவவீரர் மாளிகையானது [illegible] அடி நீளமும் 200 அடி அகலமும் உள்ளது. அம் மாளிகை முன்புற வாயில் அலங்கரிக்கப்பட்ட அழகிய பூப்பந்தலோடு பொலிவுற்றது. மாளிகையின் தெற்குப் பாகத்தில் 50 அடி நீளமும், 30 அடி அகலமும் உள்ள 100 பேர்கள் இருக்கத்தக்க சற்று உயரிய மேடையும், அம் மேடைக்குச் சரியாக மேலே சித்திர வேலைப்பாடுகளுடன் தோரணங்களும் கொடிகளும் நிறைந்த ஓர் கொட்டாரமும் காணப்பட்டன. அம்மேடையின் நடுவே தலைவர்கள் இருக்க ஓர் உயரிய ஆசனமும், அதற்குச் சற்று முன்பாக மகாநாட்டில் பேசுவோர்கள் நின்று பேசுவதற்கு ஓர் உயரிய பேசும் மேஜையும் போடப்பட்டிருந்தன. மேடையின் வலப்பக்கத்தில் பெண்கள் இருக்க இடமும், இடப்பக்கத்தில் கௌரவ அழைப்பாளர்கள் இருக்க இடமும் வகுக்கப்பட்டிருந்தன. இவர்களுக்கு முன்பாக வரவேற்பு அங்கத்தினர்களும், அவர்களுக்கு முன்புறம் ஜில்லா வாரியாகப் பிரதிநிதிகள் இருக்க இடமும் அமைக்கப்பட்டு, ஜில்லாக்களின் பெயர்கள் அமைந்த போர்டுகள் ஆங்காங்கு தொங்கவிடப்பட்டிருந்தன. மாளிகையில் நுழைந்தவுடன் 2000 பேர்கள் இருக்குமாறு பார்வையிடுவோர்க்கு (விசிடர்) இடம் பிரிக்கப்பட்டிருந்தது. மாளிகையில் காணப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட கம்பங்களில், முன் பாகத்தில் கமுகு, வாழை, ஈஞ்சு, இளநீர்க் குலைகள் முதலியவைகளும், மேற்புறத்தில் கரும்பங்கழிகளும் கட்டப்பட்டு எங்கு திரும்பினும் பச்சைப் பசேலென விளங்கி, மேலே விதான முழுவதும் தூய வெண்மை நிறம் பொலிந்து காணப்பட்டது பார்ப்போர் மனத்தைப் பரவசப்படுத்தியது. இவ்வளவு பெரிய மாளிகைக்குத் தரை முழுதும் பரிசுத்தமான பாய் விரிப்புகள் விரிக்கப்பட்டிருந்தது மிக ஆச்சரியமாயிருந்தது.

### நகரும் வீதிகள் : கொடிமரம்

செங்குந்த நகரில் நுழைந்தவுடன் இடது புறமாகச் செல்லும் வீதிக்குச் ‘சண்முகசுந்தர முதலியார் வீதி’ எனவும், வலது புறமாகச் செல்லும் வீதிக்குச் ‘சபாபதி முதலியார் வீதி’ எனவும், நகரின் கிழக்கிலும் மேற்கிலும் தென் வடக்காக அமைந்த வீதிகட்கு முறையே ‘செங்கோட்டையா முதலியார் வீதி’ எனவும், ‘கந்தப்ப முதலியார் வீதி’ எனவும், பெயர்கள் அமைக்கப்பட்டிருந்தன.

‘கந்தப்ப முதலியார் வீதி’யில் வரவேற்புத் தலைவர்கள் ஆபீஸ், காரியதரிசி ஆபீஸ், விசாரணை ஆபீஸ், ‘செங்குந்த மித்திரன்’ ஆபீஸ், ஒட்டக்கூத்தர் வாசகசாலை, முனிசிபல் சித்த வைத்திய சாலை முதலியவைகளும், சில விற்பனைக் கடைகளும் இருந்தன. ‘சண்முகசுந்தர முதலியார் வீதி’யில் தொண்டர் படைத்தலைவர் ஆபீசும் சில விற்பனைக் கடைகளும் காணப்பட்டன. ‘சபாபதி முதலியார் வீதி’யில் தமிழ்நாடு, திராவிடன், குடியரசு முதலிய பத்திரிகைகளின் காரியாலயங்களும் சில கண்காட்சி சாலைகளும் அமைக்கப்பட்டிருந்தன. செங்கோட்டையா முதலியார் வீதியில் அரசாங்கத்தினரது தொழிற்சாலையிலிருந்து கொண்டு வரப்பட்ட புதுமாதிரித் தறிநெசவுச் சாலைகளும், துணிகட்கு அச்சடிக்கும் மெஷின் சாலைகளும், சாயந்தீர்க்குஞ் சாலைகளும், மற்றும் அநேக விசித்திர கண்காட்சிச் சாலைகளும் அழகுற விளங்கின.



இவ்வீதிகட்கு நடுவணதாய இடத்தில் 60 அடிகட்கு மேற்பட்ட உயரமுள்ள செங்குந்தர் கொடிமரம் நாட்டப்பட்டிருந்தது. ஈரோட்டின் எந்தப் பாகத்திலிருந்து பார்த்தாலும் இக்கொடிமரத்தின் உச்சி நன்கு தென்பட்டது. இக்கொடிமரத்திலிருந்து ‘நவவீரர் மாளிகை’க்கும் மற்றுமுள்ள வீதிகட்கும் போவதற்காகக் குறுக்குப் பாதைகள் வகுக்கப்பட்டு, அப்பாதைகளின் ஓரங்களில் செடிகள் வைக்கப்பட்டிருந்தது மிக அழகாகக் காணப்பட்டது

இவ்வளவு அழகாய் அனைவரும் மெச்சத்தக்க வகையில் தமது அறிவையுங் காலத்தையுஞ் செலவழித்து, இராப்பகலாய் அந்த இடத்திலிருந்து இரண்டு வாரங்கட்குள் செங்குந்த நகரை நிர்மாணித்துத் தந்தது திருச்செங்கோடு திரு. T. R. கந்தப்ப முதலியார் அவர்களென்பதை அனைவர்க்கும் உணர்த்த மிக்க சந்தோஷப்படுகின்றோம்.

### ஈரோடு நகரின் அலங்காரம்.

ஈரோடு நகரமானது, ரயில்வே ஸ்டேஷன் முதல் ‘செங்குந்த நகர்’ வரையில் உள்ள முக்கிய தெருக்களெல்லாம் தோரணங்களும், கொடிகளும், பச்சிலைகளும், வாழை, கமுகு, ஈச்சு முதலிய மரங்களும் கட்டப்பட்டு அழகுடன் விளங்கிய பூப்பந்தல்களாலும், அருமையான வேலைப்பாடுகள் நிறைந்த சித்திர வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டு ஓர் தேவநகரம் போல் திகழ்ந்தது. தலைவர்களை வரவேற்கும் வாக்கியங்களாகிய ‘சட்ட நிபுணரே வருக’, ‘புதுவை அரசாங்கத்தின் பொதுவமைச்சரே வருக’, ‘முத்தைய முதலே வருக’, ‘செங்குந்தரெல்லாம் சீர்பெற வருக’, ‘நம் குலப்பெருமை நாட்டிட வருக’, ‘செங்குந்த மித்திரனே சீர்தரும் புத்திரன்’, ‘காஞ்சி மகாநாட்டின் கவினுறு தலைவரே வருக’, ‘சாமிநாதப் பெயரிய பெரியோய் வருக’, ‘தண்ணளி சுரக்கும் நுண்ணறிவுடையீர் வருக’, ‘வர்த்தகர் மகாநாட்டின் தலைவரவர்களே வருக’, ‘ஆறுமுகத் தண்ணலே வருக’, ‘இளைஞர் மகாநாட்டின் எழுலுறு தலைவரே வருக’, ‘பீமாராஜப் பெருமைய வருக’, ‘சபாபதி வள்ளலே சண்முகசுந்தரமே வருக’, ‘வைக்கம் வீரரே வருக’ என்பன போன்ற அநேக வாக்கியங்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் பொறிக்கப்பட்ட சித்திர வளைவுகள் நகர முழுதும் கட்டப்பட்டிருந்தன.

### முனிசிபாலிடியாரின் விசேஷ ஏற்பாடுகள்.

மகாநாட்டிற்கு வரும் பிரதிநிதிகளின் சௌகரியத்தை உத்தேசித்து ஈரோடு முனிசிபாலிடியார் விசேஷமான அநேக ஏற்பாடுகள் செய்திருந்தனர். தெருக்களில் சிறிதும் குப்பை இல்லாமல் அவ்வப்போது சுத்தஞ் செய்து அப்புறப்படுத்தவும், பிரதிநிதிகள் தங்குகின்ற வீடுகளிலுள்ள கக்கூஸ்களை அடிக்கடி சுத்தஞ் செய்யவும், செங்குந்த நகரிலுள்ள வீதிகளை ஒழுங்காய் வைத்திருக்கவும் அநேக தோட்டிகள் எப்பொழுதும் தயாராக இருக்க ஏற்பாடு செய்ததோடு, மகாநாடு கூடுவதற்கு இரண்டு தினங்கட்கு முன்பிருந்தே ஈரோடு நகரிலும் செங்குந்த நகரிலும் உள்ள முக்கியமான வீதிகட்கெல்லாம் மோட்டார் லாரி மூலமாகத் தண்ணீர் தெளித்துச் சிறிதும் புழுதி கிளம்பாமல் வைத்திருந்து, மகாநாடு நல்ல நிலவுடைய காலத்தில் கூடினாலும் வரவேற்புச் சபையினர் விரும்பிய பல இடங்களில் விளக்குகளைப் புதிதாயமைத்தும், அவசியமான சில இடங்களில் புதிதாய்க் குழாய்கள் வைத்தும், செங்குந்த நகரின் முன்பாகப் பல குழாய்கள் அமைத்தும், முனிசிபல் ஆரம்ப பாடசாலைகட்கும், ஹைஸ்கூலுக்கும் 21-ந் தேதி திங்கட்கிழமையும் லீவு விட்டுச் சனி, ஞாயிறு, திங்களாகிய மூன்று தினங்களிலும் பிரதிநிதிகள் அப் பாடசாலைகளில் தங்குதற்காக அவற்றைக் காலி செய்து கொடுத்தும், மகாநாடு கூடிய நாட்களில் இரவும் பகலும் நிறுத்தாமல் குழாய்களில் தண்ணீர் விட்டும், முனிசிபல் பார்க்கிலிருந்து அநேக பூந்தொட்டிகளை மகாநாட்டு உபயோகத்தின் பொருட்டு இரவலாகத் தந்தும் வேண்டிய வரையில் உபகாரஞ் செய்தனர். இத்தகைய ஏற்பாடுகளெல்லாம் பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடுகின்ற ஓரிடத்தில் மிகவும் அவசியமானவென்பதை நன்கு உணர்ந்து அவற்றைச் செய்து கொடுத்த ஈரோடு முனிசிபல் சபையினர்க்குப் பொதுவாகவும், இவற்றிற்குக் காரணபூதராயிருந்த கௌன்சிலர் திரு வ. மு. பொட்டையப்ப முதலியார் அவர்கட்குச் சிறப்பாகவும் நாம் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம். முனிசிபல் சபையினர் மகாநாட்டைத் திறந்து வைக்கும் கனம் திவான் பகதூர் M. கிருஷ்ணன் நாயர் அவர்கட்கு மகாநாட்டுப் பந்தலில் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கவும் தீர்மானித்தனர்.

### பிரதிநிதிகள் வருகை

மகாநாடு கூடுவதற்கு இரண்டு மூன்று தினங்கட்கு முன்னிருந்தே வெளியூர்ப் பிரதிநிதிகள் கூட்டங் கூட்டமாய் வந்து சேர்ந்து கொண்டிருந்தனர். சுற்றுப் பக்கத்துக் கிராமங்களிலிருந்து 17ந் தேதியே ஏராளமாய் ஜனங்கள் வந்து கூடிவிட்டனர். வர்த்தகர் மகாநாட்டுத் தலைவர் தென்காசி பாங்கர் திரு. T. P. K. ஆறுமுக முதலியாரவர்கள் சுமார் 50 பிரதிநிதிகளோடு 18ந் தேதி காலை மெயிலுக்கு வந்திறங்கினர். அவர்களைச் செங்குந்த மித்திரன் ஆசிரியர் திரு. ம. சண்முகசுந்தர முதலியார், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார், தொண்டர்படைத் தலைவர் திரு. S. மீனாட்சிசுந்தர முதலியார் முதலியவர்கள் அநேக தொண்டர்களோடு எதிர்சென்றழைத்துவந்தனர். அதுமுதல் 10 தொண்டர்கள் வரையில் எப்பொழுதும் ரயிலடியில் காத்திருந்து ஒவ்வொரு ரயிலிலும் வந்துகொண்டிருந்த பிரதிநிதிகளை வரவேற்று அவரவர் ஜாகைக்கு அழைத்துச் சென்றனர்.

### மகாநாட்டு ஸ்பெஷல்

மகாநாட்டிற்காகச் சென்னையிலிருந்து ஈரோட்டிற்கு ஒரு ஸ்பெஷல் வண்டிவிட ஏற்பாடு செய்யும்படி ரயில்வே அதிகாரிகளை வரவேற்புச் சபையினர் பல தினங்கட்கு முன்னரே கேட்டிருந்தும், அதை உடனே கவனித்து ஏற்பாடு செய்யாமல் அசிரத்தையாக இருந்துவிட்டு, 19ந் தேதி இரவு 7-30 மணிக்கு வழக்கமாய்ச் செல்லும் மெயிலில் ஏறுவதற்காகச் சென்னையிலிருந்து அநேக பிரதிநிதிகள் சென்டிரல் ஸ்டேஷனையடைந்ததும் அங்குத் "தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டு ஸ்பெஷல்" என்ற போர்டு தொங்கவிடப்பட்டு ஒரு ரயில் வண்டி நிற்பதைப் பார்த்து அங்குள்ள அதிகாரிகளை விசாரித்ததில் ஸ்பெஷல் ஏற்பாடு செய்திருப்பதாகவும், முக்கியமான ஸ்டேஷன்களிலெல்லாம் அது நிற்குமென்றும், மெயில் புறப்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம் ஸ்பெஷல் வண்டி புறப்படு மென்றும் மகாநாட்டுப் பிரதிநிதிகள் அனைவரும் அவ் வண்டியில் போவதற்கு ஏற்பாடு செய்துகொள்ளும் படிக்கும் அறிவித்தனர். ஸ்பெஷல் வண்டி புறப்படுவது தெரியாமல் பலர் மெயிலிலும் ஏறிச் சென்றுவிட்டனர். இத்தகைய நிலையில் ஸ்பெஷல் வண்டிக்கு நிறைந்த அலங்காரங்கள் செய்ய முடியாமற் போயிற்றென்றாலும், மெயிலில் சென்றவர்கள் போக, இந்த ஸ்பெஷலில் ஒவ்வொரு முக்கிய ஸ்டேஷனிலும் ஏறிவந்த பிரதிநிதிகளின் தொகை அளவில்லாததாகும். தலைவர்கள் வந்து ஏறிய ஒவ்வொரு ஸ்டேஷனிலும் தலைச்சங்கத்தினர் அவர்கட்குப் புட்பமாலைகள் சூட்டி ஜே கோஷ்டத்தோடு வரவேற்றனர்.

சென்னை அரசாங்கத்தின் சட்டமெம்பர் கனம் திவான்பகதூர் M. கிருஷ்ணன் நாயர் அவர்களும், தலைவர்கள் புதுவை பிரெஞ்சு அரசாங்கத்தின் இந்திய அமைச்சர் திரு. A. V. முத்தைய முதலியார், குடியேற்றம் மாஜி முனிசிபல் சேர்மன் திரு. M. V. பீமராஜா முதலியார், காஞ்சிபுரம் மாஜி முனிசிபல் சேர்மன் திரு. ம. த. சாமிநாத முதலியார், திவான் பகதூர் T. வரதராஜுலு நாயுடு, 'திராவிடன்' ஆசிரியர் J.S. கண்ணப்பர் முதலியவர்களும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நிர்வாகிகளும், மற்றும் பல பிரமுகர்களும் ஏறிவந்த இந்த ஸ்பெஷல் வண்டி 19-ந்தேதி விடியற் காலை 5-30 மணிக்கு ஈரோட் ஸ்டேஷனையடைந்தது.

### ஈரோடு ஸ்டேஷனில் வரவேற்பு

அங்கும் இரவு 1-மணி முதலாகவே வந்து குவிந்துகொண்டிருந்த பெருங் கூட்டத்திலிருந்து 'கிருஷ்ணன் நாயருக்கு ஜே', 'முத்தைய முதலியாருக்கு ஜே', 'சாமிநாத முதலியாருக்கு ஜே', 'ஆறுமுகமுதலியாருக்கு ஜே', 'பீமராஜ முதலியாருக்கு ஜே', 'சபாபதி வள்ளலாருக்கு ஜே', 'சண்முகசுந்தர முதலியாருக்கு ஜே', 'தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு ஜே', 'செங்குந்த மித்திரனுக்கு ஜே', 'செங்குந்த மகாஜனங்களுக்கு ஜே' என்ற கோஷ்டம் கிளம்பி வானும் அதிரச் செய்தது. தாரை, சின்னம், மேள வாத்தியங்களெல்லாம் முழங்கின. அச்சமயம் அங்கிருந்தோர் உள்ளம் என்றுமடையா இன்பமெய்தி யிருக்குமென்பதில் ஐயமில்லை. வரவேற்புச் சபையினரும், தலைச்சங்க அமைச்சரும், தொண்டர்களுமாகப் புட்பமாலைகள் சூட்டித் தலைவர்களை வரவேற்றனர். உடனே அங்கு வந்திருந்தோர்களில் முக்கியமானவர்கள் ஒருவருக்கொருவர் அறிமுகஞ் செய்விக்கப்பட்டு அனைவரும் அளவிலா ஆநந்தமடைந்தனர். பின்பு தலைவர்கள் ரயில்வே ஸ்டேஷனிலேயே மெத்தையின் மீதுள்ள ஓருயர்ந்த இடத்தில் அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் ஸ்நான முதலியவற்றிற்கும் சிற்றுண்டிக்கும் மெத்தையிலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவற்றிற்கெல்லாம் அநுமதி தந்து, தலைவர்களுக்கு எல்லாவித சௌகரியங்களையும் ஸ்டேஷனிலேயே செய்து தருவதற்கும், மற்றும் இதர ஏற்பாடுகளுக்கும் பெருந்துணையாக இருந்து நம்மவர் மகாநாட்டு விஷயமாக நிறைந்த உற்சாகங் காட்டிய ஸ்டேஷன் மாஸ்டர் துரையவர்களை நாம் என்றும் மறக்க இயலாது.



### ஊர்வலச் சிறப்பு

பிறகு ஈரோடு நகரிலிருந்து நமது மகாஜனங்கள் சகல விருதுகளுடன் ஊர்வலமாகப் புறப்பட்டுத் தலைவர்களை அழைக்க வந்தனர்.

காலை 8-30 மணிக்குத் தலைவர்கள் ஊர்வலம் ஸ்டேஷனிலிருந்து புறப்பட்டது. ஆரம்பத்தில் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஊர்வலம் புறப்பட்டபோது அவ்வைபவத்தில் ஐயாயிரம் பேர்களே கலந்துகொண்டார்களென்றாலும் ஊர்வலம் புறப்பட்டுச் சிறிது தூரம் செல்வதற்குள் திரள் திரளான மக்கள் ஆங்காங்கு வந்து கலந்து கொண்டதால் வரவரக் கூட்டம் பத்தாயிரக் கணக்காகப் பெருகிக் கொண்டே வந்தது. ஊர்வலம் புறப்படுவதற்கு முன் தலைவர்கட்குப் புட்பமாலைகள் சூட்டப்பட்டன. 'தலைவர்கட்கு ஜே' என்ற பெருஞ் சப்தமும், பாண்டு வாத்தியங்களின் பேரொலியும், தாரைகளின் ஆரவாரமும், சின்னங்களின் வீர முழக்கமும், நாகசுரங்களின் இனிய ஓசையும் ஒன்று சேர்ந்து அங்கு வந்திருந்தோர் உள்ளந்தோறும் ஊடுருவிப் பாய்ந்து என்றென்றுந் தோன்றியிராத ஓர் புத்துணர்ச்சி யரும்பவும், ஒவ்வொருவர் முகத்திலும் ஓர் உவகை மலர் பூப்பவும் செய்து விட்டன.

அவ்வுவகை மிகுதியினால் அங்கிருந்தோர் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டதைக் கவனித்தோர் மனமுருகு மென்பதில் ஐயமின்று. இத்தகைய கூட்டத்தினை இதுவரை கண்டதில்லை என்றார் சிலர். இவ்வளவு சிறப்புடன் நடைபெறுமென்பது தெரிந்திருந்தால் இன்னும் பல ஆயிரக் கணக்கானவர்கள் வந்திருப்பார்களே என்று வருந்தினர் சிலர். இதனைப் பார்க்காத செங்குந்தர்கள் பயனற்றவர்களே என்றார் சிற்சிலர். இயன்ற வரையில் இனித் தலைச்சங்கத்திற்கு உதவிபுரிய முயல்கின்றேன் என உறுதி கூறினார் பலர். தலைச்சங்க அமைச்சர்களின் அறிவையும் முயற்சியையும் மெச்சினர் பற்பலர்; வரவேற்புச் சபையினரை வாழ்த்தினர் வேறு பலர்; என்ன ஏற்பாடுகள்! என்ன அலங்காரங்கள்! என இறும்பூதெய்தினர் மிகப் பலர்; 'இனி நம் சமூகம் உய்ந்தது, உய்ந்தது' எனக் கூறி உவகை பூத்தார் பலப்பலர்; சபாபதி வள்ளலின் தன்மையை நினைந்து நினைந்து உருகினர் அளவற்றோர். இவ்வாறு அனைவரும் இன்பக் கடலில் திளைத்துத் தங்கள் தங்கள் உள்ளக்கிடக்கையை ஒருவர்க்கொருவர் உணர்த்திநிற்குஞ் சமயம் ஊர்வலமும் புறப்பட்டது.

ஊர்வலத்தின் முன்புறத்தில் ஜதை ஜதையாகத் தாரைகளுஞ் சின்னங்களும் பேரொலி செய்து சென்றன. அவற்றின் பின்னே பாண்டு வாத்தியங்களும், அவற்றின்பின் மேள வாத்தியங்களும் முழங்கிச் சென்றன. இவர்களையடுத்து வரிசை வரிசையாகத் தொண்டர்கள் அணிவகுத்துச் சென்றார்கள். இவர்களையடுத்துத் தொண்டர்கள் ஒன்பதுபேர் நவ வீரர்களே போன்று செங்குந்தர் கொடிகளைத் தாங்கிச் சென்றனர். பிறகு, கொற்றக் குடைகள் கவின ஒட்டக்கூத்தர் திருவுருவப் படம் இரு தொண்டர்களால் தாங்கிச் செல்லப்பட்டது. பாதைகளின் இருமருங்கிலும் பல தொண்டர்கள் வரிசையாக நின்று தலைவர்களினருகே கூட்டம் நெருங்கி வரவொட்டாமல் பாதுகாத்துச் சென்றனர். தொண்டர்களையடுத்துத் தலைவர்கள் ஏறிவந்த மோட்டார்கள் வரிசையாகச் சென்றன. முதலில் கனம் கிருஷ்ணன் நாயரவர்களும் திரு. ம. சாமிநாத முதலியாரவர்களும் ஏறிச்சென்ற மோட்டாரும், அதன்பின் திரு. A. V. முத்தைய முதலியாரவர்களும் திரு. V. S. செங்கோட்டைய முதலியாரவர்களும் ஏறியிருந்த மோட்டாரும், அதன்பின்னர் திரு. T. P. K. ஆறுமுக முதலியாரவர்களும் திரு. கந்தப்ப முதலியாரவர்களும் ஏறியிருந்த மோட்டாரும், அதனையடுத்துத் திரு. M.V. பீமராஜா முதலியாரவர்களும் திரு. N. M. சண்முகசுந்தர முதலியாரவர்களும் ஏறிவந்த மோட்டாரும், அதன் பக்கத்தில் திரு. T. N. சபாபதி முதலியாரவர்களும் திரு. K. முத்துக்குமர முதலியாரவர்களும் ஏறிவந்த மோட்டாரும், அதன் பின்னே வரிசையாக மற்ற தலைவர்களும், முக்கியஸ்தர்களும் ஆக இவ்வொழுங்கில் ஊர்வலம் புறப்பட்டது. வழியில் திரு. ஈ. வே. ராமசாமி நாயகரவர்களின் மூன்றடுக்கு மாடியிலிருந்து தலைவர்கள்மீது பூமாரி பொழிந்தனர். ஆங்காங்கு பலரால் போட்டோ படங்கள் பிடிக்கப்பட்டன. இவ்வாறு புறப்பட்ட ஊர்வலமானது அலங்கரிக்கப்பட்ட வீதிகளின் வழியே சென்று 10-மணிக்குச் செங்குந்த நகரையடைந்தது. அப்பொழுது கூட்டம் சுமார் பதினைந்தாயிரத்திற்குமேலிருக்கும்.

### கொடியேற்று விழா

செங்குந்த நகரையடைந்ததும் நகரில் எங்கு பார்த்தாலும் ஜே என்ற சப்தமே நிறைந்திருந்தது. மக்கள் மேல் விழுந்து கொண்டு நகருள் நுழைந்தனர். ஊர்வலமானது கொடி மரத்தை யடைந்ததும் தொண்டர்படைத் தலைவர் திரு. எஸ். மீனாட்சிசுந்தர முதலியார், பி.ஏ., எல்.டி., (சிவகங்கை ராஜா ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர்) அவர்கள் கீழ்க்காணும் செங்குந்தர் கொடியேற்றுப் பாட்டினை இனிய இராகத்தோடு படித்தனர்:—

## முதலாவது செங்குந்த மகாநாட்டுக் கொடியேற்றுப் பாட்டு.

ஆனந்தக்களிப்பு.

பல்லவி.

வீரர் மணிக்கொடி பாரீர்—அதை
வேண்டிப் பணிந்து புகழ்ந்திட வாரீர் (வீ)

சரணம்.

வண்மை யுயர்திருக் கம்பம்-அதன்
மாமுடி மேலே யெழுதித் திகழும்
உண்மைச் செங் குந்தர்தம் நாமம்-இந்த
வுலகெங்கும் வீசிப் பரந்தது காணீர் (வீ)

வேங்கை வரிப்புலி யோர்பால்-மிக்க
வீரங்கொள் சேவற் றிருவுரு வோர்பால்
ஓங்குபுகழ்க் குந்தம் நடுவே-நின்று
ஒளிரு நன் மாண்பை யுரைத்திடப் போமோ(வீ)

வானுறு கம்பத்தின் கீழே-வீரர்
வரிசை வரிசையாய் நிற்றலைக் காணீர்
ஞானிலக்கே வளர் மிஞ்சுஞ்-சோழ
நாட்டுச் செங்குந்தர்க ளோர்புற மாக (வீ)


நல்லவர் சேர்பாண்டி நாட்டில்-வாழும்
நவவீரர் வழிவந்த தீரரோர் பக்கம்
புல்லியர் தங்களை வீழ்த்துஞ்-சேரர்
பொருந்திய நாட்டுச் செங்குந்த ரோர்பக்கம்(வீ)

எழுபத் திரண்டெனு நாட்டில்-தங்கும்
எண்ணருஞ் செங்குந்த சூரரோர் பக்கம்
குழுமித் திரண்டதைப் போற்றும்-வண்மை
கூறிடப் போகுமோ பாரிடைத் தானே. (வீ)


சுபம்! சுபம்!! சுபம்!!!

அதன்பின் காஞ்சிபுரம் மாஜி முனிசிபல் சேர்மனும், மாஜி ஜில்லா தாலூக்கா போர்டு அங்கத்தினரும், தேவஸ்தான கமிட்டித் தலைவரும், முனிசிபல் கவுன்சிலருமான திரு. ம. த. சாமிநாத முதலியாரவர்கள் கீழ்க்கண்ட தமஹர பங்யாசத்தை நிகழ்த்திக் கொடியினை உயர்த்தினர்.

கொடியுயர்த்திய பெரியார்



திரு. ம. த. சாமிநாத முதலியார்.



செங்குந்தர் முதலாவது மகாநாட்டுக் கொடியுயர்த்தும் திருவிழா



கொடியுயர்த்திய தலைவர்

## காஞ்சிபுரம் திரு. ம. த. சாமிநாத முதலியாரவர்கள்

# சொற் பொழிவு

**பெரியோர்களே! சகோதர சகோதரிகளே!**

இன்று இங்கு நமது செங்குந்த மகாநாட்டின் பெருமை பொருந்திய கொடியினை யுயர்த்தும் மகத்தான கௌரவத்தை நமது வரவேற்புச் சபையார் அடியேனுக்களித்து என்னைப் பெருமைபடுத்தியதற்காக அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். ஆனால் இப்படிப்பட்ட பெருமை பொருந்திய காரியத்தை நடத்துவதற்கு என்னைக் காட்டிலும் அறிவும், ஆற்றலும், அனுபவமும், தேசபக்தியும் நிறைந்து, முக்கியமாய் நமது ஜாதி முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டு வருபவரான அநேகம் பெரியார்களிருக்க, யாதொன்றிற்கும் சம்பந்தமில்லாத என்னை இப் பணிக்கு ஆளாக்கியது வரவேற்புச் சபையாருக்கு என் மீதுள்ள அபிமானத்தினாலேயோ, வேறு எந்தக் காரணத்தினாலேயோ அறிகிலேன். ஒருகால், மகா கவியாகிய காளிதாசர் 'நகரேஷு காஞ்சி', அதாவது நகரங்களுக்கெல்லாம் சிறந்தது காஞ்சியா நகரமென்று கூறியிருப்பதினாலேயோ, அல்லது முக்கியமாக நம்மவர்களுக்குக் காஞ்சிபுரமானது தலைநாடென்று தொன்று தொட்டு வழங்கி வருவதினாலேயோ, அங்கிருந்துள்ள ஒருவரைக் கொண்டு இப்பணியாற்றல் வேண்டுமென்று அவர்கள் கருதினார்கள் போலும். அப்படியவர்கள் கருதியிருப்பார்களாயின் இதை என்னுடைய கடமைகளில் முக்கிய கடமையாக எண்ணி உங்களுடைய பேராதரவினாலே இதை ஒருவாறு ஏற்றுக்கொள்ள முன் வருகின்றேன்.

இப்போது இங்கு நடக்கப்போதும் நமது செங்குந்த மகாநாட்டிற்கு இந்தக் கொடியேற்றல் என்னும் சடங்கானது எதற்காகவென்று நீங்கள் நினைக்கக்கூடும். ஒவ்வொரு பெரிய தலங்களிலும், ஒவ்வொரு பெரிய ஆலயங்களிலும் வருடந்தோறும் நடக்கும் பிரம்ம உற்சவங்களில் முதல் முதலாக நடக்கும் திருவிழாவானது இந்தக் கொடியேற்றல் என்னும் திருவிழாதான். இதைத்தான் துவஜாரோகண உற்சவமென்று வேறு பாஷையிலே கூறுவார்கள், அதுபோலவே இனிமேல் நமது செங்குந்த மகாநாட்டு மகோற்சவமும் வருடந்தோறும் நடைபெற வேண்டியிருப்பதால், நமக்கும் இந்தக் கொடியேற்றல் என்னும் சடங்கு அவசியம் என்று நமது பெரியோர்கள் இதை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். ஆனால், தேவாலயங்களில் நடக்கும் துவஜாரோகண உற்சவமானது சகல கல்யாண குணங்களும் நிறைந்த ஷட்சாஸ்திர பண்டிதர்களான பெரியார்களைக் கொண்டு நடத்திவைப்பது வழக்கம். ஏனென்றால், அப்பெரியார்களுடைய மந்திர பலத்தினாலும், பக்தி விசேஷத்தினாலும், அல்த விசேஷத்தினாலுந்தான் மேல் நடக்கும் உற்சவமானது யாதொரு விக்கினமின்றி சிறப்பாகவும் ஒழுங்காகவும் நடைபெறுகிற வழக்கம். ஆனால், அப்படிப்பட்ட அரிய குணங்களில் ஒன்றேனும் அமையப்பெறாத என்னை நமது வரவேற்புச்சபையார் இத் திருத்தொண்டிற்கு ஆளாக்கி இருப்பதினாலே இந்தக் கொடி மரத்தை அணுகுவதற்கு மெத்தவும் அஞ்சுகின்றேன். ஆயினும், இந்தக் கொடிமரத்தைப் பார்க்கும்பொழுது இதில் வரையப் பெற்றிருக்கும் குந்தம் அல்லது ஈட்டியின் உருவமும், அதன் இருபுறமும் உள்ள சேவல் வேங்கையின் உருவங்களும் எனக்கு அளவில்லாத உற்சாகத்தையும் தைரியத்தையும் உண்டாக்கிவிட்டன. ஏனென்றால், அவ்வுருவங்களின் சக்திகளே நம்முடைய மகாநாட்டுத் திருவிழாவைச் சிறப்பாகவும் ஒழுங்காகவும் நடத்திவிடுமென்றும், நம்மவர்களுக்கும் அதிக ஊக்கத்தையும் உற்சாகத்தையும் உண்டாக்குமென்றும் உணர்த்துகின்றன.

அவ்வுருவங்கள் நமது கொடியில் எதற்காக வரையப்பட்டிருக்கின்றனவென்றும், அவைகள் எப்படி நமக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் உண்டாக்குகின்றன வென்றும் நீங்கள் நினைக்கக்கூடும்.

நமது கொடியில் குந்தம் அல்லது ஈட்டியின் உருவத்தை எழுதியிருப்பதானது: முன்னொரு காலத்தில் மகாவிஷ்ணு, பிரம்மா, இந்திரன் முதலான தேவர்களுக்கெல்லாம் அநேக நாளாய்த் துன்பங்களைச் செய்து இம்சை செய்து வந்த ஆயிரத்தெட்டண்டங்களையும் ஏக சக்ரேஸ்வரனாய் ஒரு குடையின்கீழ் ஆண்டுவந்த

சூராதிசூரனாகிய சூரபதுமனையும் அவனுடைய சேனை சைன்யங்களையும் கொன்று அடியோடு வேரறுக்க வேண்டுமென்று தேவர்கள் ஆலகால விஷத்தை யுண்ட நம் பரமசிவ மூர்த்தியை வேண்டாநிற்க, அவர் ஷண்முகப் பெருமான் அவதாரத்திற்காகத் தன்னுடைய முகங்களினின்று ஆறு நெருப்புப் பொறிகளைச் சிந்தினார். அப் பொறிகளின் அதி உக்ரமான சுவாலையைப் பொறுக்கமாட்டாமல் உலகத்திலுள்ள ஜீவகோடிகளெல்லாம் நடுநடுங்கி ஓடினபொழுது, பரமசிவமூர்த்தியின் இடப்பாகத்தில் வீற்றிருந்த பார்வதி தேவியாரும் அவ்வெப்பத்திற்காற்றாது பயந்து வெளியே புறப்பட்டு ஓடத் தன் பாதங்களில் அணிந்திருந்த சிலம்புகள் ஒன்றோடொன்று தாக்க, அச்சிலம்புகளினின்று நவமணிகள் சிந்தின. பிறகு சுவாலை தணிந்து ஷண்முகாவதாரமானவுடனே பார்வதி தேவியார் பரமசிவனிடத்திலே வந்த பொழுது அம்மையாருடைய ஒப்பற்ற அழகிய திருவுருவமானது சிதறிக்கிடந்த நவமணிகளில் பிரதிபிம்பித்ததால் ஒவ்வொரு மணியிலும் ஒவ்வொரு மாதர் தோன்ற, அம்மாதர்களை இறைவன் அன்போடு வருக என்றழைத்து அவர்கள் சுந்தர வடிவத்தை நோக்க ஒன்பது பேரும் கர்ப்பவதிகளானார்கள்.

இதை யெல்லாம் நேரில் பார்த்துக்கொண்டிருந்த பார்வதி தேவியாருக்கு மனந்தாளாமல் இவர்கள் நமக்குச் சக்களத்திகளானார்களே என்று கோபம் பிறக்க அம்மாதர்களை நோக்கி, 'உங்கள் குழந்தைகள் வெளிப்படாமல் கர்ப்பத்திலேயேஇருக்கக்கடவன'வென்று பார்வதியார் சாபமிட்டார்கள். அப்போது அம் மங்கையர்கள் அச்சாபத்துக் காற்றமாட்டாதவர்களாய் நடுநடுங்கிப் பயந்து வியர்த்தபோது அவர்களுடைய தேகத்தினின்றும் வழிந்த வியர்வையானது கெங்கையாக வோட அக்கெங்கையினின்றும் இலட்சம் வீரர்கள் தோன்றினார்கள். இது இங்ஙனமிருக்க. கர்ப்பவதிகளாயிருந்த நவ மங்கையர்களுக்குப் பிரசவகாலங் கடந்தமையால் அதிக துன்பப்பட்டுப் பரமசிவனை வணங்கி அழாநிற்க, அப்பெருமான் பார்வதியாரை வேண்ட, அம்மையாரும் மங்கையர்கள்பால் கிருபை பாலித்து 'இனிமேல் நீங்கள் சுலபமாகச் சற்புத்திரர்களைப் பெறக்கடவீர்கள்' என்று ஆசீர்வதித்தார்கள்.

அப்பொழுது அந்நவமங்கையர்களிடத்தில் அதிசுந்தரமும் வீரமும் பொருந்திய நவவீரர்கள் தோன்றினார்கள். அவ்வீரர்களைப் பரமசிவனும் பார்வதியும் கண்டு ஆனந்தித்துப் பரமசிவன் பார்வதியைப் பார்த்து, "பெண்ணே! இவர்களை யாரென்று நினைக்கின்றாய்? இவர்கள் நமது புத்திரர்களே யாவார்கள். நமது ஷண்முகனுக்கு இளைய சகோதரர்கள்" என்று சொல்லப் பார்வதியார் இவர்களுக்கு அழகு பொருந்திய பளபளப்பாகிய 'குந்தம்' என்னும் ஈட்டியைக் கொடுத்து, 'நீங்களும் ஏற்கனவே உங்கள் தாய்மார்களின் வியர்வையில் உற்பவித்திருக்கும் இலக்ஷம் வீரர்களும் ஆக இலக்ஷத்தொன்பதுபேரும் உங்களுடைய சகோதரனை ஷண்முகப் பெருமானுக்குத் துணைவராக இருந்து ஏவல் புரிந்துவரக் கடவீர்கள்' என்று ஆக்ஞாபித்தார்கள். இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இந்தக் குந்தமானது நமது முன்னோர்களுக்குப் பார்வதியாரால் அளிக்கப்பெற்றது. எனவே, நமது முன்னோர்களுக்குச் சொந்தமான இந்தக் குந்தமானது அவர்கள் வழித்தோன்றிய நம்மவர்களுக்கும் உரித்தானபடியினாலே, நம் பெரியோர்கள் நமது கொடியின் நடுவில் 'குந்தம்' என்னும் ஈட்டியை வரைந்திருக்கின்றார்கள்.

அதுவுமல்லாமல் நமது கொடியில் குந்தத்தின் இருபுறத்திலும் சேவலின் உருவமும் வேங்கையின் உருவமும் அமைக்கப்பட்டிருப்பது எதற்காக என்றும் நீங்கள் நினைக்கக்கூடும். அதாவது: நமது சண்முகப் பெருமான் தன் சகோதரர்களான வீரவாகுதேவர் முதலான இலக்ஷத்தொன்பது வீரர்களுடன் வீராதிவீரனான சூரபத்மனோடு ஆறுநாள் வரையில் பெரும் போர் புரிந்து அவனுடைய சேனை சைன்யங்களையெல்லாம் கொன்ற பிறகு, சூரபத்மனானவன் தன்னந் தனியனாய் நமது பெருமான்முன் நிற்கமாட்டாதவனாய்த் தன்னுடைய மாயா சக்தியினாலே மகா சமுத்திரத்தின் நடுவே மாமரமாக ஒளித்து நின்றான். அதை அறிந்த நமது வேலாயுத மூர்த்தியானவர் தன்னுடைய வேலாயுதத்தினாலே அம்மரத்தை இருகூறாகப் பிளந்தெறிந்தபோது, சூரபத்மனானவன் சாகாவரம் பெற்றவனானதினாலே மறுபடியும் தன்னுடைய வயிரவுருவந் தாங்கி அதி உக்கிரத்தோடு சுவாமியைத் தாக்கவந்தபோது, சுவாமிகள் தம்முடைய வேலாயுதத்தை அவனது மார்பினில்விட்டு அவனை இருகூறாகப் பிளந்தெறிந்தார். அவ்விருகூறுகளும் ஒன்று மயிலாகவும் மற்றொன்று சேவலாகவும் புறப்பட்டு நமது சுவாமியைக் கோபத்துடன் தாக்க வந்தபோது, மகா வீராதிவீரனான சூரபத்மன் சகல வன்மைகளும் குன்றி அறிவில்லாத இப்படிப்பட்ட



உருவங்களானானே என்று சுவாமிகள் கிருபா நோக்கத்துடனே பார்த்தபோது, அவ்வுருவங்களைத் தாங்கிய சூரபத்மன் அடங்கிப் பயபக்தியோடு நமது சுவாமிமுன் நிற்க, நமது சண்முகப் பெருமான் மஞ்ஞையைத் தனக்கு வாகனமாகவும், சேவலை தன் கரத்தினிடத்தில் கொடியாகவும் தரித்துக்கொண்டு, சூரபத்மனுடைய புலிக்கொடியை வீரவாகு தேவர்களுக்குக் கொடுத்தார்கள். ஆகையினாலே நமது ஷண்முகப் பெருமானுக்கும் அவர் சகோதரர்களான வீரவாகுதேவர்களுக்கும் முறையே உரித்தான சேவல்கொடியும் புலிக்கொடியும் அவர்கள் பரம்பரையிலே தோன்றிய நம்மவர்களுக்கும் சொந்தமானதுபற்றியே நம் பெரியோர்கள் சேவலின் உருவத்தையும் வேங்கையின் உருவத்தையும் இக்கொடியில் தீட்டியிருக்கின்றார்கள்.

ஆனால் இப்படிப்பட்ட பெருமை பொருந்திய கொடியானது நம்மவர்களுக்கு என்னென்ன உணர்த்துகின்றது என்று சிந்திப்போமானால், "ஏ செங்குந்த மக்களே! நீங்கள் கந்தன் சகோதரர்களல்லவா? சூரபத்மனை வென்று சண்முகப் பெருமானிடத்தில் வேங்கைக் கொடியைப் பெற்ற வீராதி வீரர்களல்லவா? நமது பார்வதியாரின் கையினின்று குந்தம் என்னும் ஆயுதத்தைப் பெற்றவர்களல்லவா? அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த நீங்கள் தற்போது அடிமை நிலைமையில் இருக்கின்றீர்களே! இராஜீயத் துறையிலேனும், ஜாதி சமுதாயத் துறைகளிலேனும், தொழில் முறைகளிலேனும் மற்ற ஜாதியர்களைப்போல முன்னேற்றமடைந்திருக்கின்றீர்களா? இல்லையே. இனிமேலாவது வீரர்களாக வெளிவாருங்கள். சகல துறைகளிலும் முன்னேற்றமடைய முயற்சி எடுங்கள். இதுகாறும் உறங்கி யிருந்ததுபோலிராமல் இனியேனும் விழித்துக் கொள்ளுங்கள்" என்று நமது கொடியிலுள்ள சாமக்கோழியானது கூவி நம்மை எல்லாம் தட்டி எழுப்பி ஞாபகப்படுத்துவது போலும் இருக்கின்றது.

இப்படிப்பட்ட பெருமை பொருந்திய கொடியை உயர்த்தும் மகத்தான கௌரவத்தை எனக்களித்து என்னைப் பெருமைபடுத்திய நமது வரவேற்புச் சபையாருக்கு என்னுடைய மனமார்ந்த வந்தனத்தை மறுமுறையும் செலுத்துகின்றேன். எல்லாம் வல்ல நம் குலக்கடவுளாய முருகப்பெருமான் நமது கொடியினை உலக முழுவதும் பறக்கச்செய்து நம்மவர்களைக் கண் விழிக்கச்செய்யுமாறு அருள்புரிவாராக. சுபம்!

## மகாநாட்டுத் திறப்புவிழா

அதன்பின் மிகவும் நெருக்கத்தோடு தலைவர்களும் மற்றவர்களும் 'நவவீரர் மாளிகை'யில் நுழைந்தனர். இதற்கு முன்னரே பந்தலில் பதினாயிரக்கணக்காகப் பிரதிநிதிகளும் மற்றவர்களும் ஜில்லா வாரியாகப் பிரிக்கப்பட்ட தத்தமிடங்களில் அமர்ந்திருந்தனர். தலைவர்கள் மேடைக்குச் சென்றதும் ஜே என்ற சப்தமே எல்லாப் பாகங்களிலுங் கிளம்பி மாளிகையும் அதிருமாறு செய்துவிட்டது. தலைவர்கள் அமர்ந்தவுடன் பிரதிநிதிகளும், வரவேற்பு அங்கத்தினர்களும், கௌரவ அழைப்பாளர்களும், பார்வையாளர்களும் உட்கார்ந்தனர். மேடையின் மீது, தலைவர்கள் மத்தியில், கவிச்சக்கிரவர்த்தி ஒட்டக்கூத்தரது உருவமானது, முன்னர் நம் குலதிலகர் சோழமண்டலத்தை அரசனுக்குப் பதிலாக ஆண்ட சமயம் சிம்மாசனத்தின்மீது வீற்றிருந்த அதி கெம்பீர கோலத்துடன் பொலிந்து விளங்கியது. செங்குந்த சமூகத்தினரே யன்றி இதர சமூகத்தினர்களும் சுமார் 1000 பேர்கட்கு மேல் விஜயஞ் செய்திருந்தனர். பெண்மக்களும் 1000க்கு மேற்பட்ட தொகையினர் வந்திருந்தனர். தேசிய மகாநாடுகளில் போன்று எவருக்கும் உயர்ந்த ஆசனம் போடப்படவில்லை. மகா நாட்டிற்கு உள்ளூர் வெளியூர்களிலிருந்து, முனிசிபல் கவுன்சிலர்களும், கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும், ஜில்லா தாலுக்கா போர்டு அங்கத்தினர்களும் தலைவர்களும், தேவஸ்தானக் கமிட்டி அங்கத்தினர்களும், பிரபல வியாபாரிகளும் மற்றும் பல முக்கியஸ்தர்களும் விஜயஞ் செய்திருந்தனர். மகாநாட்டிற்கு வர இயலாத நூறு கனவான்களுக்குமேல் கடிதங்கள் மூலமும் தந்திகள் மூலமும், மகாநாடு வெற்றியுடன் நடைபெறுமாறு விரும்பிப் போற்றினர்.

### கனம் நாயருக்கு வரவேற்பு

காலை 10-30-மணிக்கு மகா நாட்டு நடவடிக்கை தொடங்கியதும், ஈரோடு முனிசிபல் சபையினர் சட்ட அங்கத்தினர் திவான் பஹதூர் கனம் கிருஷ்ணன் நாயர் அவர்கட்கு ஒரு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தவுடன், மகாநாட்டுப் பொதுக் காரியதரிசி திரு. V. V. C. V. நடேச முதலியாரவர்கள் வரவேற்புச் சபையின் சார்பாகவும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாகவும், கீழ்க்கண்ட வரவேற்புப் பத்திரத்தைக் கனம் கிருஷ்ணன் நாயர் அவர்களுக்கு வாசித்துக் கொடுத்தார்:—

# The First South Indian Sengunthar Conference, Erode

(18—1—1929)

## WELCOME ADDRESS TO

**The Hon'ble Diwan Bahadur**

**M. KRISHNAN NAIR,** B.A., B.L., C.I.E.

**Law Member, Government of Madras**

Honoured Sir,

On behalf of the Sengunthars of South India we have the greatest pleasure to accord you our heartiest welcome to our First Conference in this central town of Erode.

It is a well-known fact that the Textile and the Dyeing Industries of the South were once in such a flourishing condition as to excite the envy and jealousy of the foreign countries where-in there was a great demand for our goods. The Sengunthar Community was then in its palmy days and enjoyed a large share in the local manufacturing industries and the foregin trade of the country. Some of the still-surviving names of piece-goods and sarees attest to the greatness of these industries. For, these very names are even to-day guarantee for fine, artistic, and durable texture, and for fast colour. Not only this. Many architectural buildings dedicated to the Almighty in Southern India bear ample testimony to the past culture and prosperity of this Community. Alas! Such a Community has now fallen on evil days. The Industrial Competition of the West for the last two centuries and more, and of the East in recent times, aided by organised capitalism and mechanical skill, have very nearly killed our foreign trade, and won a great share of the local demand for textile goods, to the detriment of the economic independence of our Community.

Sir, next to Agriculture, the weaving and dyeing industries were finding occupation and means of livelihood for a great percentage of the people, and especially so, of our Community. Now the question of unemployment and of the consequent miseries of the industrial classes, which are becoming more and more acute day by day, must be the concern not only of the people, but also of thé Government in any well-ordered State. With this view, we plead before you for greater State help to resuscitate the hand-loom industry of the Country. Intensive propaganda on up-to-date methods, financial help through Co-operative Societies, training for our youths in well-equipped Textile Schools and in foreign Countries are some of the ways that we would suggest.

Your experience as an administrator and as a leader, we believe, will be of immense value in devising ways and means for the elevation or uplift of our present lot.

We feel greatly honoured by your presence which is a sign of your sympathy for our community and our cause. Your elevation to the Executive Council is a matter for pride and rejoicing among the whole Non-Brahmin Community. We hope and pray that you may long be spared to continue your useful work for our Country and Community.

**சென்னை அரசாங்கத்தின் சட்ட அங்கத்தினர்**
**கனம் திவான் பகதூர்**
**எம். கிருஷ்ணன் நாயர் பி.ஏ.பி.எல்.,சி.ஐ.இ.**
**அவர்கட்கு**
**ஈரோட்டில் நடைபெற்ற**
**தென்னிந்திய செங்குந்தர் முதலாவது**
**மகாநாட்டில்**
**மகாநாட்டைத் திறந்துவைத்த ஞான்று**
**அளித்த வரவேற்பு நல்லுரை.**

பெருமை சான்ற ஐய!

தென்னிந்தியாவிலுள்ள செங்குந்தர்களின் சார்பாக மத்திய ஸ்தானமாயுள்ள இந்த ஈரோடு நகரில் நடைபெறும் எங்கள் முதல் மகாநாட்டிற்குத் தங்களை உள்ளம் நிறைந்த அன்புடன் வரவேற்க நாங்கள் மிக்க மகிழ்ச்சியுறுகின்றோம்.

நமது நாட்டுப் பொருள்கட்கு மிக்க கிராக்கி ஏற்பட்டிருந்த வெளிநாடுகளில் உள்ளவர்களெல்லாம் பொறாமைப் படத்தக்க வகையில் தென்னிந்தியாவில் நெய்தலுஞ் சாயந்தீர்த்தலுமாகிய கைத்தொழில்கள் அதிக மேன்மை யடைந்திருந்தன வென்பது அனைவரும் நன்கு அறிந்த உண்மையே. செங்குந்தர் சமூகமானது அக்காலத்தில் உச்சநிலை யடைந்திருந்ததால் உள் நாட்டில் செழித்தோங்கிய கைத்தொழில்களிலும் இந்தியாவிலிருந்து வெளி நாடுகளுடன் செய்யப்பட்ட வியாபாரத்திலும் பெரும் பகுதியைத் தன் பொறுப்பில் வைத்திருந்தது. சேலை முதலியவைகட்கு நெடுங்காலமாக வழங்கிவரும் சில பெயர்களும் பண்டைக் கைத்தொழிலின் பெருமைக்குச் சான்று பகர்கின்றன. ஆடைகளின் உயர்வு, அழகு, வேலைப்பாடு, கெட்டியான சாயமாகியவற்றிற்கு இந்தப் பெயர்களே நம்பிக்கையுந் தருகின்றன. இது மாத்திரமல்ல, தென்னிந்தியாவிலுள்ள சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த அநேக தேவாலயங்கள் இச்சமூகத்தின் பண்டைய நாகரீகத்திற்கும் வளமைக்கும் நற்சான்றுகளாய்த் திகழ்கின்றன. என்னே! இத்தகைய உயரிய சமூகம் தற்காலத்தில் அடைந்துள்ள சிறுமை. யந்திரங்களின் துணையையும், ஒருங்கு திரட்டப்பட்ட மூலதனத்தின் துணையையும் பெற்று மேனாடுகளிலிருந்து இருநூறாண்டுகட்கு முன்னும், கீழ் நாடுகளிலிருந்து சமீபத்திலும் ஏற்பட்ட கைத்தொழிற் போட்டியானது எங்கள் வெளிநாட்டு வியாபாரங்களை அடியோடு நசுக்கிவிட்டது; எமது சமூகத்தின் பொருளாதார நிலைக்குப் பேராபத்தேற்படுமாறு எங்கள் நெசவுப் பொருள்கட்கு உள்நாட்டிலிருந்த கிராக்கியையுங் கவர்ந்து விட்டது.

பெரியீர்!

நெசவுத் தொழிலும் சாயவேலையும், விவசாயத்திற்கு அடுத்த படியாக இடம் பெற்றிருந்ததோடு, பொதுவாய்ப் பெரும்பாலரான மக்களுக்கும், சிறப்பாய் எமது சமூகத்திற்கும் ஜீவாதாரமாகவு மிருந்தன. கைத்தொழிலை மேற்கொண்டுள்ள சமூகங்களினிடையே இப்பொழுது நாளுக்கு நாள் அதிகரித்துவரும் வேலையில்லாத் திண்டாட்டமும், அதனால் உண்டாகும் பரிதாபமான நிலையும் ஜனங்களுக்குமட்டுமன்றி, நன்கு அமைக்கப்பட்ட அரசாங்கத்திற்கும் கவலையைத்தரும் ஓர் விஷயமாகும். இவ் வபிப்பிராயத்தோடுதான் இந்நாட்டின் கைத்தறி நெசவுத் தொழிலைத் திருத்தி யமைக்கப்போதிய உதவியைத் துரைத்தனத்தார் புரியச் செய்யுமாறு தங்கள் முன் மன்றாடுகின்றோம். புது வகையான நெசவு முறைகளைப் பற்றித் தீவிர பிரசாரஞ் செய்தலும், ஐக்கிய சங்கங்கள் மூலமாகப் பொருளுதவி செய்தலும், இந்தியாவிலும் வெளி நாடுகளிலுமுள்ள சிறந்த கைத்தொழிற் சாலைகளில் எங்கள் சமூக இளைஞர்கட்குக் கைத்தொழில் போதித்தலும் நாங்கள் எடுத்துக் காட்டத்தக்க சமூக முன்னேற்றத்திற்கான சில வழிகளாகும்.

எமது சமூகம் முன்னேற்ற மடைவதற்கு இன்றியமையாது வேண்டற்படும் வழிகளையும் முறைகளையும் காண்பதில் தாங்கள் தலைவராகவுஞ் சட்ட அமைச்சராகவு மிருந்து பெற்றுள்ள அனுபவம் எமக்குப் பெரிதும் பயன்தருமெனவே எண்ணுகின்றோம்.

தாங்கள் இத்துரைத்தனத்தின் சட்ட மந்திரியாக நியமனஞ் செய்யப்பட்டமை எமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. நமது நாட்டிற்கும் எங்கள் சமூகத்திற்கும் நெடுநாள் துணைபுரியும் வண்ணம் தாங்கள் நீடூழி வாழ எல்லாம்வல்ல இறைவனைத் துதிக்கின்றோம்.

எங்கள் சமூகத்தினிடத்திலும், நாங்கள் செய்யும் முயற்சி வகைகளிலும் தாங்கள் கொண்டுள்ள அபிமானத்திற் கறிகுறியான தங்கள் வருகையினால் நாங்கள் மிகவும் பெருமையடைகின்றோம்.

Sir, we have, therefore, the greatest pleasure to request you to open this Conference.

*We remain,*
*Honoured Sir,*
*Your loving Friends and Admirers,*
**The Members of the Reception Committee**
**&**
**The South Indian Senguntha Mahajana Sangam, Madras.**

இப்பொழுது இம்மகா நாட்டைத் திறந்து வைக்குமாறு தங்களை வேண்டிக்கொள்ள நாங்கள் அளவிறந்த சந்தோஷ மடைகின்றோம்.

இங்ஙனம்,
ஈரோடு, 18-1-29. }
தங்கள் வருகையை விழையும் அன்பான நண்பர்களாகிய
வரவேற்புச்சபை அங்கத்தினர்களும்,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தினர்களும்.

# கனம் சட்ட அங்கத்தினரின் திறப்புரை

# The Law Member's Opening Address

இவரவேற்புப் பத்திரத்திற்குக் கனம் கிருஷ்ணன் நாயர் அவர்கள் கீழ்க்கண்டவாறு ஆங்கிலத்தில் பதில் கூறினர் :—

இவ்வன்புரையைச் 'செங்குந்த மித்திரன்' ஆசிரியர் திருவாளர் ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள், எம். ஏ., எல். டி. வாக்கியம் வாக்கியமாகத் தமிழில் மொழிபெயர்த்துக் கொண்டு வந்தனர்.

Members of the Reception Committee of the First South Indian Sengunthar Conference, and the South Indian Senguntha Mahajana Sangam, ladies and gentlemen,—

I thank you most warmly for your very kind welcome on this occasion. I wish I could speak to you in Tamil. I may tell you, ladies and gentlemen, that I know Tamil. I also know how to speak Tamil, though it will not be in idiomatic and chaste language. I do not want to speak to you in bad Tamil. In anticipation, ladies and gentlemen, of your kind permission, I shall speak to you in English, and my friend Mr. M. Shanmukasundara Mudaliar will translate to you in Tamil what I am saying in English.

### 1. The Name 'Sengunthar.'

It gives me considerable pleasure to open your conference this morning. One of my friends told me that the meaning of "Sengunthar" is "Bearers of red lances." The lance is red by the blood stained. This expression therefore indicates that your lances are always stained with

தென்னிந்திய செங்குந்த முதலாவது மகாநாட்டு வரவேற்புச் சபையின் அங்கத்தினர்களே! தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அங்கத்தினர்களே! சீமாட்டிகளே! சீமான்களே!

இச்சமயத்தில் நீங்கள் எனக் களித்த அன்பு நிறைந்த வரவேற்பிற்காக நான் உள்ளம் நிறைந்த அன்போடு உங்களுக்கு வந்தனஞ் செலுத்துகின்றேன். உங்களுக்கு முன் தமிழில் பேசவேண்டுமென எனக்கு விருப்பமுண்டு எனினும், எனக்குத் தமிழ் தெரியுமென்றாலும், உங்கள் முன்பாகச் சொச்சைத் தமிழில் பேச நான் விரும்பவில்லை. தங்கள் அன்பான உத்தரவை எதிர்பார்த்து ஆங்கிலத்தில் நான் பேசுகின்றேன். அதை எனது நண்பர் திரு. ம. சண்முகசுந்தர முதலியாரவர்கள் உங்களுக்குத் தமிழில் மொழி பெயர்த்துச் சொல்லுவார்.

### 1. 'செங்குந்தர்' என்னும் சொல்லுக்குப் பொருள்.

இன்று உங்கள் மகாநாட்டைத் திறந்து வைக்க நேர்ந்தது எனக்கு அளவிறந்த சந்தோஷந் தருகின்றது. 'செங்குந்தர்' என்பதற்குச் 'செந்நிறமுடைய ஈட்டியினைத் தாங்கியவர்கள்' என்பது பொருளென எனது நண்பர்களில் ஒருவர் எனக்குக் கூறினர். ஈட்டியோ ரத்தந் தோய்ந்து சிவந்துள்ளது. ஆகையால், உங்கள் பகைவர்களுடைய ரத்தத்தில் உங்கள் குந்தம்



the blood of your enemies, and, in other words, you are a valiant race.

### 2. The Past glory and present poverty of the Community.

You state in your address that your community enjoyed prosperous days in the past and it has now fallen on evil days. I sympathise with you in your present trouble. I wish success and prosperity to your community. The prosperity of your community is the prosperity of the State as a whole. It is because I wish prosperity to your community that I readily accepted the kind invitation of the organisers of this conference to open this conference.

### 3. The importance of the Weaving Industry.

You state in your address that the textile and dyeing industry is next in importance only to agriculture. May I say, ladies and gentlemen, that it is an accurate statement. Food is the first requiste of man, and next to that comes clothing. Therefore, it is correct to say that agriculture is the most important industry, and next to it comes the textile industry.

### 4. The Value of English Education to the Community.

Your community, I understand, comes to about 4 lakhs in this presidency—not an insignificant number. I am also told that the percentage of those who know English in your community comes to only half a p. c. This is a very unsatisfactory state of affairs. Ladies and gentlemen, English has come to stay amidst us. It is, I need hardly say, essential that you should

எப்பொழுதும் தோய்ந்துள்ள தென்பதையும், விளக்கமாய்க் கூறமிடத்து, நீங்கள் வீரம் நிறைந்த ஒரு சிறந்த ஜாதியார்கள் என்பதையும் அது நன்கு விளக்குகின்றது.

### 2. இச்சமூகத்தின் பண்டைப்புகழும் தற்கால வறுமையும்

நீங்கள் அளித்த வரவேற்புப் பத்திரத்தில் உங்கள் சமூகம் பண்டைக் காலத்தில் மிகச் சிறப்பெய்தி யிருந்ததென்றும், தற்சமயம் அது தாழ்வடைந் திருக்கிறதென்றுந் தெரிவித்திருக்கின்றீர்கள். உங்கள் தற்கால நிலைமைக்கு நானும் உங்களுடன் அநுதாபப்படுகின்றேன். உங்கள் சமூகம் வளமை யுறவும் வெற்றியடையவும் நான் விரும்புகின்றேன். உங்கள் சமூகத்தின் முன்னேற்றம் பொதுவாய் இந்திய தேச முழுதும் முன்னேறுவதேயாகும். உங்கள் சமூகம் முன்னேற்றமடைய வேண்டுமென்னும் ஆர்வம் எனக் கிருப்பதால்தான் இந்த மகாநாட்டைத் திறந்துவைக்க வேண்டுமென்று மகாநாட்டைக் கூட்டுவித்தவர்களென்னை அன்புடன் அழைத்ததும் சற்றுந் தயங்காது உடனே நான் இணங்கிவிட்டேன்.

### 3. நெசவுத் தொழிலின் முக்கியம்

நெசவுத்தொழிலும் சாயந் தீர்த்தலும் விவசாயத்திற்கு அடுத்த படியில் வைக்கத்தக்க மிக முக்கியமான தொழில்கள் என்று நீங்கள் உங்கள் வரவேற்புப் பத்திரத்தில் கூறியிருக்கின்றீர்கள் அது மிகவும் வாஸ்தவமான தென்பதைச் சீமாட்டிகளே! சீமான்களே! உங்களுக்குத் தெரிவிக்கின்றேன். மக்கள் வாழ்க்கைக்கு முதலில் வேண்டப்படுவது உணவு; அதற்கடுத்தபடி இன்றியமையாதது உடையேயாகும். ஆகையால், விவசாயம் மிக முக்கியமான தென்பதும் அதற்கடுத்தபடியானது நெசவுத்தொழிலே என்பதும் உண்மையாகும்.

### 4. ஆங்கிலப் படிப்பின் அவசியம்

இந்த மாகாணத்தில் உங்கள் சமூகத்தினர் சுமார் 4 லட்சம் பேர்கள் இருப்பதாக நான் அறிகின்றேன். இது ஒரு குறைந்த எண்ணிக்கை அல்ல. உங்கள் சமூகத்தில் இருநூறு பேர்களுக்கு ஒருவர் வீதமே ஆங்கிலம் படித்தவர்களிருக்கிறார்களென்றும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இது மிகவும் அதிருப்தியான நிலைமையாகும். ஆங்கிலம் நம்மிடையே நிலைத்து நிற்கத் தோன்றியிருக்கிறது. உங்கள் தாய்ப் பாஷையை வளர்க்கவேண்டுமென நான்

cultivate your vernacular. Your vernacular is bound to be for all time to come the language of the people and the language of the masses. But English has its own value, most particularly under modern conditions, in our country. In the first place, it is a very rich language; secondly, it is the political language of India, and practically the commercial language of the whole world. In order, therefore, that you may be able to hold your own in the commercial world, it is necessary that your young men should learn that language, so that they may correspond with the traders and merchants of all parts of the globe. I would earnestly request you, therefore, to impart English education to your young men, may I say, to your young women also.

### 5. How the Government Can Help the Community.


You make several suggestions in your address calculated to improve your community. I regard these suggestions as wise ones. I think it is necessary that more textile peripatetic parties than exist at present are necessary for imparting instructions in the textile industry to the young men and women of your community. I think it is also desirable that more textile schools should be established in the Presidency. It would also be a good thing if co-operative banks for the purchase and sale of yarn and cloth are started to help the community. It would also be a very good thing that some of the cleverest young men of your community are sent to foreign countries to learn the arts on Government scholarships. You make some of these suggestions in your address. The Portfolios relating to these subjects are not in my hands. They are in the hands of my Hon. colleague Mr. M. R. Sethurathnam Iyer.

உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. உங்கள் தாய்ப் பாஷையானது உங்களுக்கும் ஏனைய பொதுமக்களுக்கும் எக்காலத்திலும் வழக்க பாஷையாக இருக்க உரிமையுடையது. ஆனால் தற்கால நிலையில் நமது தேசத்தில் ஆங்கிலம் அநேகமான அநுகூலங்களுடையதாக இருக்கிறது. முதலாவது அது ஒரு சிறந்த புஷ்டியுள்ள பாஷை; அன்றியும், இந்தியாவின் ராஜாங்க பாஷையாகவுமிருக்கிறது; மேலும், உலக முழுவதும் வியாபாரத்துக்கந்த பாஷையாகவும் இருக்கின்றது. ஆகையால் வியாபார உலகத்தில் உங்களுக்குரிய பாகத்தைப் பெற வேண்டுமானால், உலகத்தின் எல்லாப் பாகங்களிலுமுள்ள வியாபாரிகளோடு கடிதப் போக்குவரத்து செய்வதற்கு உங்கள் சிறுவர்கள் ஆங்கிலம் படிக்கவேண்டியது அவசியமாகும். ஆகவே உங்கள் சிறுவர்கட்கும், இன்னும் உங்கள் சிறுமிகட்குங்கூட, ஆங்கிலக் கல்வியைப் போதிக்குமாறு மிக ஆர்வத்தோடு உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.


### 5 துரைத்தனத்தார் செய்யவேண்டிய உதவிகள்

உங்கள் சமூகத்தை விருத்தி செய்வதற்கு அநேக வழிகளைப் பத்திரத்தில் எடுத்துக்காட்டியிருக்கிறீர்கள். இம்முறைகளெல்லாம் மிகவும் புத்திசாலித்தனமானவையென்றே நான் கருதுகின்றேன். உங்கள் சமூகச் சிறுவர்கட்கும் சிறுமிகட்கும் கைத்தொழிற் கல்வியைப் போதிப்பதற்காகத் தற்போதுள்ளவர்களைக் காட்டிலும் இன்னும் அதிகமான கைத்தொழிற் பிரசாரகர்கள் நியமிக்கப் பெறவேண்டியது மிக அவசியமென நான் நினைக்கின்றேன். இந்த மாகாணத்தில் இன்னும் அதிகமான நெசவுத் தொழிற்பாடசாலைகள் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்பதும் விரும்பத்தக்கதே. உங்கள் சமூகத்திற்கு உபகாரமாயிருக்கும்படி நூலையும் துணிகளையும் பொதுவாக வாங்கிக்கொள்ளவும் விற்கவுமான ஐக்கிய வியாபார சங்கங்கள் ஏற்படுத்துவதும் மிக நலந்தருவதேயாகும். கவர்ன்மெண்டார் அளிக்கக்கூடும் உபகாரச் சம்பளம் பெற்று உங்கள் சமூகத்தைச் சார்ந்த புத்திகூர்மையுள்ள சிறுவர்களிற் சிலர் வெளிநாடுகட்குச் சென்று நெசவுத் தொழிலைக் கற்று வருவதும் நல்ல பயன்தரத்தக்கதாகும். இவை சம்பந்தமான இலாக்கா என் பார்வையிலில்லை. அவை எனது நண்பர் கனம் சேதுரத்தினமையரவர்கள் பார்வையிலுள்ளன. அவர் ஒரு பரிவுமிகுந்த மந்திரி. உங்கள் குலமுன்னேற்ற சம்பந்தமான






கனம் கிருஷ்ணன் நாயர்



திரு. தி. நா. சபாபதி முதலியார்




திரு. கு. முத்துக்குமாரசாமி முதலியார்



திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர்



சமூக மகாநாட்டு வரவேற்புத் தலைவர்
திரு. வா. செ. செங்கோட்டையா முதலியார்



சமூக மகாநாட்டுத் தலைவர்
திரு. வே. முத்தைய முதலியார், பி.ஏ., பி.எல்.



He is a sympathetic Minister, and I promise you that I will speak about these, your needs, to my Hon. colleague, aud I have no doubt he will listen to them sympathetically as far as it lies in his power to carry them out.

I thank you, ladies and gentlemen, for your kindness towards me and very cordial welcome to me. I wish success and prosperity once again to your community, and have great pleasure in declaring this great Conference open.

இவ்விஷயங்களைக் குறித்து அவரிடம் பேசுவதாக நான் உங்களுக்கு வாக்களிக்கின்றேன். தம்மாலானவரையில் அவற்றை நிறைவேற்றி வைக்க அவரும் அன்புடன் ஏற்றுக்கொள்வாரென்று நான் நம்புகின்றேன்.

சீமாட்டிகளே! சீமான்களே! என்னிடம் நீங்கள் கொண்டுள்ள அன்பிற்காகவும், நீங்கள் எனக்கு அளித்த சிறந்த வரவேற்பிற்காகவும், உங்களுக்கு வந்தனஞ் செலுத்துகின்றேன். உங்கள் சமூகத்திற்கு எல்லா வளனும் செல்வாக்கும் அந்தஸ்தும் உண்டாகுமாக. இப்போது இம்மகத்தான மகாநாட்டைத் திறந்து வைக்கின்றேன் என உங்களுக்கு அறிவிக்க மிக்க சந்தோஷப்படுகிறேன்.

* * * *

பலத்த கரகோஷமும், ஜே கோஷ்டங்களும் இவ் வுபந்யாசத்தைத் தொடர்ந்தன. மகாநாட்டுப் பந்தலில் மீண்டும் அமைதி யேற்பட்டதும், சமூக மகாநாட்டுத் தலைவர் திரு. வா. செ. செங்கோட்டைய்யா முதலியார் அவர்கள் எழுந்து தமது வரவேற்புச் சொற்பெருக்கை நிகழ்த்தினர்.

சமூக மகாநாட்டு வரவேற்புத் தலைவர்

கோயமுத்தூர் முனிசிபல் கவுன்சிலரும், பிரபலமான பருத்தி வியாபாரியுமான

## திருவாளர் வா. சே. செங்கோட்டைய்யா முதலியார் அவர்கள்

# சொற்பெருக்கு

### வரவேற்பு

செங்குந்த சமூகப் பிரதிநிதிகளே! சீமாட்டிகளே! சீமான்களே!

வரவேற்புக் கழகத்தின் சார்பாகவும், கோயமுத்தூர் சேலம் ஜில்லாக்களிலுள்ள செங்குந்த மகாஜனங்களின் சார்பாகவும், இங்கு முதன் முறையாகக் கூடும் தென்னிந்திய செங்குந்தர் மகாநாட்டிற்கு உள்ளம் நிறைந்த அன்போடு உங்களனைவரையும் நான் வரவேற்கின்றேன். தமிழ் ஜில்லாக்கள் முழுதும் பெருந்திரளாக நம்மவர்கள் வாழ்ந்து வருகின்றனரேனும், முதலாவதாகக் கூடும் நமது மகாநாட்டை இவ்விரு ஜில்லாக்களின் சார்பாக இங்கு நடத்தும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்தமைக்காகவும், இதுவரையிலிருந்த இருட்டறையினின்றும் நம்மை வெளிப்படுத்தி, அழகும் ஒளியும் அமையப்பெற்ற நமது முன்னேற்றமென்னும் பாதையைப் பக்குவஞ் செய்யும் பெரும் பேறு நாங்கள் பெற்றமைக்காகவும் கடவுளை வந்திக்கின்றேன். மகாநாடு கூட்டவேண்டுமென்று நாங்கள் இரண்டொரு மாதங்களுக்கு முன்னரே முடிவுசெய்தோமாயினும், செங்குந்த நலமே பெரிதெனக் கொண்ட பெரியார்களாகிய உங்களனைவரையும் மிக விரைவில் சந்திக்க வேண்டுமென்ற பேராவலினால், காலத்தை நீட்டிக்க விரும்பாமல் துரிதமாய்க் கூட்டியுள்ளோம். முதல் மகாநாடாகையால், அனுபவக் குறையாலும், காலச் சுருக்கத்தினாலும் அநேக குறைவுகள் ஏற்பட்டிருக்கலாம். அவற்றை மன்னிக்குமாறு உங்களனைவரையும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

### மகாநாடு கூட்டப் போட்டி

இம் மகாநாடு கூட்டுவதில் போட்டியும் இல்லாமலில்லை. நமது கிளர்ச்சிக்கும், பத்திரிகைத் தோற்றத்திற்கும் தலை கொடுத்து நிற்கும் தஞ்சை ஜில்லாவிலுள்ள செங்குந்த சிகாமணிகள் இம் முதல் மகாநாட்டைத் தங்கள் ஜில்லாவிலேயே கூட்டிப் பெருமையோடு பெருமையினைப் பெருக்கிக்கொள்ளப் பேராவாக் கொண்டனர். என்றாலும், பல காரணங்களை உத்தேசித்து இங்குக் கூட நேர்ந்தது நாங்கள் செய்த நற்பயனேயாகும்.

### ஈரோட்டின் பெருமை

குணகடல், குமரி, குடகம், வேங்கடமாகிய எல்லையினையுடையதும், பண்டைய பாபிலோனியா, எகிப்து முதலிய நாடுகளைக் காட்டிலும் நாகரீகத்தில் முதிர்ந்ததும், வியாபாரத்தில் பழங்கால முதற்கொண்டே கீர்த்தி பெற்றதுமான தமிழகத்தின் மத்திய ஸ்தானமாயொளிரும் ஈரோடு நகரில் இன்று நாம் கூடியுள்ளோம். இந்நகர்க் கணித்தாயோடும் காவேரியாற்றின் பேரொலியும், இந்நகரைச் சூழ்ந்து காணப்படும் சென்னிகிரி, வேதகிரி, சங்ககிரி, நாககிரி, மங்களகிரி, பத்மகிரி ஆகிய பன்னெடுங் குன்றுகளின் பெருமிதக் காட்சியும் இந்நகரின் இயற்கை யழகுகளாய்த் திகழ்கின்றன. இந்நகரின் நடுவே எழுந்தருளியுள்ள கபாலீசுரரின் காட்சியும், அதன் சூழலிலுள்ள கரூர், வெஞ்சமாக்கூடல், கொடுமுடி, திருச்செங்கோடு, பவானி, திருமுருகன்பூண்டி, அவிநாசி யாகிய பாடல் பெற்ற சிவஸ்தலங்கள், திருப்புகழ் பெற்ற முருகன் தலங்கள் ஆகியவற்றின் தோற்றமும் இக்கொங்கு நாட்டின் தெய்வத் தன்மையைக் காட்டுகின்றன. அம்மட்டோ! இந்நகரும் இவ்விரு ஜில்லாக்களும், செங்குந்தர் பெருந் தொகையினராய் வதியுமிடங்களா யுள்ளதோடு, வியாபாரச் செழிப்பும் நிறைந்தனவாயுள்ளன. இத்தகைய உயரிய இடத்தில் நமது முதல் மகாநாடு கூடுவது ஒரு நற்குறியே யாகும்.

### நமது உறக்கமும் விழிப்பும்

இந்தியாவில் நாம் எந்த மூலைக்குச் சென்றாலும் சுதந்திரப் பேச்சுகளே நம் காதுகளைச் செவிடுபடுத்துகின்றன. இயற்கைப் பொருளனைத்தும் சுதந்தரமுடையனவா யிருக்கின்றன. மரம், புல், பூண்டு, பறவை யாகியன சுதந்தர வாழ்வு நடத்துகின்றன. இந்திய மகா ஜனங்கள் மட்டும் ஏன் சுதந்தரமற்ற வாழ்வு வாழ வேண்டுமென்னும் எண்ணம் பலவாண்டுகட்கு முன்னரே அநேகர் உள்ளத்தில் உதித்தது. இவர்களது எண்ணமாம் ஊற்றனைத்தும் ஒன்றுதிரண்டு 1885-ம் ஆண்டில் காங்கிரஸ் மகாசபை யென்னும் கேணி உண்டாயிற்று. இக்கேணியின் ஊற்றுக் கால்கள் சில சமயத்தில் தூர்ந்து போவதும், சில சமயத்தில் சிறிது நீர் கசிவதுமா யிருந்ததால் நீர்ப் பெருக்கின்றிக் கிடந்தது. 1914-ம் ஆண்டில் ஏற்பட்ட உலக மகா யுத்தமானது இந்தியர் உள்ளமாகிய ஊற்றுக்கால்களை நன்கு பறித்துவிட்ட தாகையால் கேணியும் நிரம்பிச் சிறிய வாய்க்காலொன்றும் அதினின்றும் புறப்பட்டது. ஆயினும், பரந்த நிலப்பரப்புடைய இந்தியா முழுவதும் தோன்றியுள்ள சுதந்தர தாகத்தைத் தணிக்கக்கூடியதாக இவ்வாய்க்கால், இல்லாமல் வட இந்தியாவில் மிகவும் அகன்றும், தெற்கே வரவரக் குறுகியும், நமது நாட்டின் இயற்கைத் தோற்றத்துக்கேற்ப காணப்பட்டது எனினும், 1917-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ந் தேதி ஆரம்பிக்கப்பட்ட பார்ப்பனரல்லாதார் இயக்கமானது தென்னிந்தியா முழுதும் சுதந்தர வெள்ளம் பாய்ந்தோடுமாறு செய்துவிட்டது. இதன் பயனாக 1920-ம் வருடம் வழங்கப்பட்ட மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்திற்குப் பிறகு, சென்னை மாகாண முழுதுமுள்ள பல்வேறு சமூகத்தினரும் தங்கள் சுதந்தரத் தாகந் தீர்த்துக்கொள்ள மேல்விழுந் தோடினார். ஆங்காங்குச் சமூகக்கூட்டங்கள் பல கூட்டினார். ஆண்டுகள் தோறும் தவறாது தங்கள் மகாநாடுகளைக் கூட்டித், தங்கள் குறைகளை அரசாங்கத்திற்கு அறிவித்து அவற்றை நீக்க இடைவிடாது உழைத்து வந்தனர்; வருகின்றனர். அதன் பயனாக அளவற்ற நன்மைகளையும் அடைந்துள்ளார்க ளென்பதை எவரும் மறுக்க இயலாது. இவ்வளவையும் நாம் கண்கூடாகக் கண்டிருந்தும் "மண்டெரி தான் வாய் மடுப்பினும் மாசுணங் கண் துயில்வ போலப் பெருமூச்செறிந்து" என்பது போன்று, நாம் தலையெடுக்கா வண்ணம் பாழ்படுத்தக் கேடும் பழியும் நம்மெதிரே காத்துக் கொண்டிருந்தன வென்றாலும், அதனை ஒரு சிறிதும் கவனியாது சோம்பலாய்க் கிடந்துவிட்டோம். இதனால், மிக அற்பமாய் அன்றே அடக்கக்கூடிய காரியங்களெல்லாம் மிகப் பெரிதாய் வளர்ந்து விட்டன. ஏனைய சமூகத்தார்கள் 10, 15, 20-வது மகாநாடுகள் நடத்துகின்ற இந்தக் காலத்திலே நாம் முதலாவது மகாநாடு கூட்டுவது அனைவர்க்கும் வியப்பையும் நமக்கு வருத்தத்தையும் தருவதாயிருப்பினும், இக்காலத்திலுங் கூட உறங்கிக் கிடக்காமல் இம்மகாநாடு கூட்ட முனைந்தமைக்கு நாம் பெரிதும் சந்தோஷிக்க வேண்டியவர்களாகவே இருக்கின்றோம். நாம் சும்மாயிருக்க நினைத்தாலும் நம்மைச் சூழ்ந்துள்ள அநேக நெருக்கடியான விஷயங்கள் விரைவில் இப்பெருங் கழகங் கூட்டுமாறு நம்மை நிர்ப்பந்திக்கின்றன. அத்தகைய நெருக்கடியான விஷயங்கள் என்னவென்பதை நீங்களனைவரும் அறிவீர்களென்றே எண்ணுகின்றேன்.



### நமது பழங்காலப் பெருமை.

செங்குந்தரின் தோற்றம் முருகவேளின் தோற்றத்தோடு இணைந்தது. முருகன் இவ்வுலகிற்கு வந்த அந்த மிகப் பழங்காலத்தில் செங்குந்தர்கள் அவருக்குத் துணைவராய்ப் போந்து, வெற்றி வாகை சூடி, சீர்த்த மிக்கோராய்ச் செழிப்புற வாழ்ந்தனர். இவ்வுண்மையினைக் கந்தபுராணம், ஈட்டியெழுபது, செங்குந்தர் பிள்ளைத் தமிழ் முதலிய அநேக நூல்கள் நன்கு விளக்குகின்றன. மற்றைய சமூகத்தினர் தங்கள் பெருமையினை விளக்குதற்குப் புதிது புதிதாகப் புராணங்கள் புனைந்து கொள்கின்றனர். ஆனால் நமது சமூகத்தின் பெருமையினை விளக்குவதற்குப் பண்டைக் காலத்திலேயே அளவற்ற உயரிய நூல்கள் ஏற்பட்டுள்ளன. நம்மவர்கள் கி. பி. 10, 11-வது நூற்றாண்டுகளில் பராந்தக சோழன், குலோத்துங்க சோழன், விக்கிரம சோழன், இராஜராஜ சோழன் முதலானவர்களுடைய மந்திரிகளாகவும், சேனாதிபதிகளாகவும், படைத்தலைவர்களாகவும் உடற்காவலர்களாகவும் திகழ்ந்தனர். அன்றியும் பல்லவ மன்னர்களால் இவர்கள் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளனர். அக்காலத்தில் கைக்கோளப் பெரும்படை என்ற பெருஞ் சைனியம் ஒன்று இருந்ததாகவும் கல்வெட்டுகளால் தெரிகின்றது. கச்சிமாநகரில் அரசாண்ட பல தொண்டைமான்கட்குத் துணையாகப் போந்து நம்மவர்கள் பல போர்களில் வெற்றி கொண்டனர். இந்நாட்டில் மட்டுமன்று. இலங்கைக்குஞ் சென்று அந்நாட்டரசனிடம் வாழ்ப்பாணத்தைப் பரிசாகப்பெற்று அதனையும் ஒழுங்குற ஆண்டு வந்தனர். கச்சியர்வழிச் செங்குந்தர்கள் இலங்கைக்குச் சென்றாரதலின், அப்பரம்பரையினர 'மாவடி' என்று தங்கள் பெயர்க்கு முன் அமைந்து வழங்குவதை இன்றுங் காணலாம். அன்றியும், "செங்குந்து வயலம்பெவு செங்குந்த வளநாட சப்பாணி கொட்டியருள்" என்ற செய்யுளைக் கவனிப்போமாயின செங்குந்த வளநாடு என்ற ஓர் பெரும் நாடும் இருந்ததாகத் தெரிகின்றது.

பாண்டிய, சோழ, பல்லவ அரசர்களின் ஆதரவைப் பெற்றுச் செங்குந்தர்கள் அநேக ஆலயங்களும், சத்திரங்களும், மடங்களும் எடுப்பித்துள்ளனர். தற்காலத்திலுள்ள மடங்களின் பூர்வீகத்தை நுனித்து ஆராய்வோமானால் பெரும்பாலானவை நம்மவர்களால் கட்டப்பட்டவை என்பது நன்கு விளங்கும். அநேக காரணங்களால் அவற்றில் பலவும் வேற்றார் கையில் மாறிவிட்டன என்பதை அறிய நாம் மிக வருந்தவேண்டியவர்களாகவே யுள்ளோம். பண்டைய காலத்தில் திருவாரூர் போன்ற மிகப் பெருங் கோயில்களெல்லாம் செங்குந்த தர்மகர்த்தத்தின் கீழ் நடைபெற்று வந்தன. அநேக செங்குந்த மடாதிபதிகளும் சிறப்புடன் விளங்கியிருந்தார்கள்.

இனி, புலவர்கள் வரிசையைப் பார்ப்போமானால் செங்குந்த தெய்வீகப் புலவர்களுக்கோரளவில்லை. காளியருளால் வரப்பிரசாதம் பெற்று, முதலாவது குலோத்துங்க சோழன் முதலாக நான்கு அரசர்களின் காலத்திலும் சமஸ்தான வித்துவானாகவும், மந்திரியாகவுமிருந்து, கவிச் சக்கிரவர்த்தி என்னும் பட்டம் பெற்று, இரண்டாங் குலோத்துங்கச் சோழனுக்குத் தன் கரத்தால் முடிசூட்டி, அவன் திருமண காலத்தில் அரசுரிமையையும் அவன் தரப் பெற்று அரசாண்டு, புலவரெல்லாம் போற்றும் அரும்பலகைத் தொள்ளாயிரம், மூவருலா, தக்கயாகப்பரணி, ஈட்டியெழுபது போன்ற இணையற்ற நூல்கள் இயற்றி, "பாடுந் தமிழ்ப் பெருமான் புலவர் பணிகொண்ட கூத்தன், செங்கைக் கவிச்சக்கிரவர்த்தி" என்று ஏனையோர்களால் என்றென்றும் போற்றத்தக்க பெருஞ் சிறப்பும் தெய்வீகத் தன்மையும் வாய்ந்த ஒட்டக்கூத்தப் புலவரினும் வேறு புலவரும் உண்டோ? மெய்யறி புலவராய்ச் சந்தக் கவிச் சிங்கமாய்ச் சான்றோர் குழாத்தராய்த் தமிழகத்தே சீர்சிறக்க விளங்கி, தில்லைச் சிவகாமியம்மையால் படிக்காசு பெற்று, திருச்செங்கோடு வந்த காலத்துக் குமாரசாமிக் காங்கேயரால் தந்தச் சிவிகையு மடைந்த படிக்காசுப் புலவரினுஞ் சீரிய புலவர் வேறுண்டோ? நமது முருகவேளும் தானே வலியச்சென்று, தன்மீது ஒரு பாடல் பாடவேண்டுமென வருந்திக் கேட்கும் நிலையில் விளங்கிய பொய்யா மொழியின் புண்ணிய மென்னே! வியக்கத்தக்க அற்புதங்கள் அநேகம் இயற்றிய மெய்ஞ்ஞானக் களஞ்சியங்களாகிய இரட்டையர்க்கும் வேறு இணையுண்டோ? இவர்களனைவரும் எந்த மரபைச் சார்ந்தவர்கள்? நமது செங்குந்த மரபைச் சார்ந்தவர்கள் என்று கூறும்போது நமது

மனம் ஆனந்தக் கடலிலன்றே ஆழ்ந்து நிற்கின்றது?

### நமது வீழ்ச்சி.

இவ்வாறு கல்வி நலனும், அறிவின் மாட்சியும், ஒழுக்க மேம்பாடும், கொடைப் பெருக்கும், வீரச் செறிவும், அஞ்சாத் தன்மையும் நிறைந்து விளங்கிய நமது சமூகம் தற்காலம் கல்வியிலும், அந்தஸ்திலும், கைத்தொழில் வியாபாரங்களிலும் அடைந்துள்ள மிகுந்த ஏழ்மை நிலையுன்னும்போது நமக்கு வருத்தமும் நாணமும் ஏற்படவில்லையா? நம் உடலில் செங்குந்த ரத்தம் ஓடுவது உண்மையானால், நமது வீழ்ச்சியின் காரணத்தை யறிந்து, அவற்றினின்றும் நீங்கி, எல்லாச் சமூகங்கட்கும் ஓரடி முன்னாக நாம் விரைந்து செல்ல முயலுதல் வேண்டும். இல்லையென்றால் நமது சமூகத்தின் கதி அதோகதி என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

### நமது தலைச்சங்கம்.

இதனை நன்கு உணர்ந்தே அறிவும் ஆற்றலும் மிக்க ஆன்றோர்கள் சென்னையில் "தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்" என்னும் ஒரு சங்கம் ஸ்தாபித்து இராப்பகலாய் இடைவிடாது நமது முன்னேற்றத்தின் பொருட்டு உழைத்து வருகின்றனர். அவர்களது அளவிறந்த முயற்சிகளின் பயனாகவே இங்கு இம்மகாநாடு கூட்டவும் நேர்ந்தது. அவர்களது ஒத்துழைப்பும் ஆலோசனையும் இல்லையென்றால் மகாநாடு இவ்வளவு வெற்றியுடன் நடைபெறுதென்பதும் உண்மையேயாகும். எனவே, இத்தலைச் சங்கத்தாரனைவர்க்கும் பொதுவாகவும், அதன் அமைச்சர்களாகிய திருவாரூர் முனிசிபல் வைஸ் சேர்மென் திரு. தி. நா. சபாபதி முதலியார், சென்னை முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல் ஆசிரியர் திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி., அவர்களுக்கும் உங்களனைவரின் சார்பாக நன்றி செலுத்துகின்றேன். அநேக லட்சம் ஜனத்தொகை கொண்ட மிகப்பெருஞ் சமூகமான செங்குந்தர்களைச் சீர்திருத்தம் செய்வது இலேசான காரியமல்ல. எத்தனையோ இடைஞ்சல்களும் துன்பமும் நேரிடலாம். எல்லாவற்றையும் ஆண்மையுடன் எதிர்த்துச் சென்று, சங்கம் தோன்றிய இரண்டாண்டுகட்குள்ளாகவே அவர்கள் செய்துள்ள வேலை அபாரமாயிருக்கின்றது. இன்னும் நம்மனைவருடைய ஒத்துழைப்பும் ஆதரவும் இருந்திருக்குமானால் எந்தச் சங்கமும் செய்து முடிக்க இயலாத அவ்வளவு வேலைகளைச் செய்திருப்பார்களென்றே துணிந்து கூறலாம். இத்தகைய உயரிய கடனாற்றியுள்ள நமது தலைச் சங்கமாகிய சென்னைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு இன்று முதலாகவாவது நாம் உறு துணையாய் நின்று பேராதரவு செய்ய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

### கோவைச் சங்கத்தினர் வேறு

செங்குந்தர் பெயரால் சிலர் கோவையில் ஒரு சங்கம் நடத்தி வருவது உங்களுக்குப் பத்திரிகை வாயிலாகத் தெரிந்திருக்கலாம். அக்கோவைச் சங்கத்தினர் தங்கள் சமூகத்தார் நடத்தி வரும் பொட்டுக்கட்டும் வழக்கத்தினைத் தொலைக்க வேண்டி முயன்று வருகின்றனரென்பதும் அச்சங்க நடவடிக்கைகளையும் அறிக்கைகளையும் கவனித்து வந்தோர் நன்கு அறிந்திருக்கக்கூடும். இவ்வொழுக்கத்தினின்றும் அவர்கள் வம்சத்தினர் நீங்கி நல்லொழுக்கங் கைக்கொள்ளுமாறு அரசாங்கத்தினரும் பொது ஜனங்களும் அவர்களுக்குத் துணைபுரிய வேண்டியது அவசியமே. எல்லா சமூகத்தினரும் முன்னேற்றமடைந்தாலன்றி இந்திய தேசம் விடுதலை பெறுமென்பது உறுதியேயாகும். என்றாலும், சீர்திருத்தம் பெற்று முன்னேற்றமடைய விரும்பும் ஒரு சமூகத்தார், பண்டு முதல் இன்று வரை நல்லொழுக்க முடையோராய் விளங்கும் ஒரு பெருஞ் சமூகத்திற்குப் பங்கம் விளைக்கத்தக்க முறையில் பிரசாரஞ் செய்வார்களானால், அதைக் கண்டித்துப் பொதுஜனங்களுக்கு உண்மையை விளக்கவேண்டியது நமது கடமையாகும்.

கோவைச் சங்கத்தார் வேறு; நமது செங்குந்த சமூகம் வேறு. இரண்டிற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. கோவைச் சங்கத்தார் கூறும் இத்தீய வழக்கம் செங்குந்தர்களிடம் எக்காலத்திலும் இருந்ததில்லை. 'ஜஸ்டிஸ்' பத்திரிகையின் ஆசிரியர் கருத்தும் இங்கு கவனிக்கத்தக்கது :

"We know that it is absolutely incorrect to say that there is or was at any time a custom amongst the Sengunthars to dedicate a member of the family to Temple worship. * * * We know of many towns which are solely inhabited by Sengunthars where this custom is absolutely unknown."



"செங்குந்தர்களுக்குள் தங்கள் குடும்பத்தைச் சார்ந்த ஒரு பெண்ணைக் கோயிலுக்கு விடுகிற வழக்கம் இருக்கிறதென்றாவது, எப்பொழுதாவது இருந்ததென்றாவது கூறுவது முற்றும் பிசகானதாகும். செங்குந்தர்களே வதியும் பல ஊர்களை நாம் நேரில் அறிவோம். அவ்விடங்களில் இவ் வழக்கம் எப்பொழுதும் இருந்ததில்லை" என்பதே இதன் மொழி பெயர்ப்பாகும். எனவே இரண்டு சங்கங்கட்கும் எவ்வித சம்பந்தமுமில்லை யென்றும், இரண்டும் வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்தவை யென்றும் பொதுஜனங்களுக்கு அறிவித்துக்கொள்ளுகின்றேன். ஜாதி வித்தியாசமே ஒழியவேண்டுமென்று முயற்சிகள் நடைபெறும் இந்நாளில், ஒரு வகுப்பினர் உயர்வு என்றும் மற்றொரு வகுப்பினர் தாழ்வென்றும் எடுத்துக்காட்ட நான் முயல்வதாக நீங்கள் எண்ணக்கூடாது. மேற்குறிப்பிட்டுள்ள தீய வழக்கம் நமது சமூகத்தில் என்றும் இருந்ததில்லை என்னும் உண்மையைக் கூறுவதே எனது கடமையாகும்.

### நாகரீக வளர்ச்சி.

நமது வீழ்ச்சிக்குக் காரணம் என்ன? அவ்வக்காலங்களின் நாகரீக வளர்ச்சிக் கேற்ப நம்மைச் சீர்திருத்திக்கொள்ளாத குறையென்றே கூறுவேன். மற்றவர்களைப்போல் காலத்திற்குத் தக்கபடி நம்மைப் பக்குவப் படுத்திக்கொண்டே வந்திருப்போமாயின், இத்தகைய நிலைக்கு வந்திருக்கமாட்டோம் என்பது திண்ணம். கல்வி, கைத்தொழில், வர்த்தகம், விவசாயம் முதலிய எல்லாத் துறைகளிலும் நம்மவர்கள் பழைய கருப்பண்ணன்களாகவே விளங்குகின்றனர். புதிய முறையை ஒரு சிறிதும் கைப்பற்றுவதேயில்லை. ஏதாவது புதுமுறையைப் புகுத்த முயலுவோமாயின் உடனே "பழங்காலத் தூர்க்காதே, புதுக்காலத் தோண்டாதே" என்றும், "இது பரம்பரைப் பழக்கம்" என்றும் கூற முற்படுகின்றனர். இதுவரை நாம் அர்த்தமற்ற குருட்டுப் பழக்கங்களைக் கையாண்டு வந்ததாலடைந்த நன்மைகள் போதும். இன்று முதலாகவாவது உலக மாறுதலுக்கேற்றவாறு தொழின் முறைகளையும் சீர்திருத்திக்கொண்டு உலகமாந்தரின் பெரிய போட்டியில் ஆண்மையுடன் முன்னேறிச் செல்வோமாக. நாம் பின் தங்குவோமாயின், பின்னே வருகின்றவர்கள் நம்மை மிதித்துக்கொண்டு முன்னேறிச் செல்ல நாம் அடியோடு அழிந்து பாழ்படுவோம்.

### கட்சிப் பிரதி கட்சிகள்.

நமது வீழ்ச்சிக்கு ஒற்றுமைக் குறைவே மிக முக்கிய காரணமாகக் கூறவேண்டும். குலாபிமானம் தழைத்துக் குல முன்னேற்றம் பெறுக வேண்டுமானால் நம்மவர்க்குள் ஒற்றுமை அவசியமாகும். ஆனால் நம்மவர் வதியும் எந்தக் கிராமத்திற்குச் சென்றாலும் ஒற்றுமைக் குறைவும் கட்சிப்பிரதி கட்சிகளும் இருக்கக் காணுகின்றோம். இக்கட்சிப்பிணியினால் நம்மினத்தைச் சார்ந்த ஒருவர் மற்றொருவரை அந்நியருக்குக் காட்டிக்கொடுக்க நேர்கின்றது. நமக்குள் ஏற்படும் சிறு அபிப்பிராய பேதங்களுக்காக உட் சண்டைகளைக் கிளப்பிக் காலத்தையும், அறிவையும், பொருளையும் அதிலேயே செலவு செய்துகொண்டு கோர்ட்டுங் கையுமாகத் திரிவோமானால் நம்மை நாமே தற்கொலை செய்து கொண்டவர்களாவோம். நாம் பழையபடி பலத்தையும், ஆண்மையையும், செல்வத்தையும், செல்வாக்கையும், கீர்த்தியையும் பெறவேண்டுமானால், நமக்குள்ளாக உள்ள கட்சிப் பிரதிகட்சிகளும் பொறாமையும் உடனே கட்டொழிக்கப்படவேண்டும். வேற்றுமைக்கும் பொறாமைக்கும் சிறிதும் இடங்கொடுக்கக் கூடாது. ஒவ்வொரு ஊரிலும் உள்ள நாட்டாண்மைக்காரர், புள்ளிக்காரர், பெரிய தனக்காரர், காரியக்காரர் முதலிய தலைவர்கள் இதனை நன்கு ஆலோசித்து நமது மரபின் பெருமதிப்புக்கும் முன்னேற்றத்திற்கும் தடையாயுள்ள கட்சிப்பிரதிகட்சி வேற்றுமை வைமனசத்தை மிக விரைவில் வேருடன் துரத்தியடித்து, நமக்குள் சமாதானத்தை உண்டாக்க முயலவேண்டும். இது தான் அவர்கள் சமூகத்திற்குச் செய்யவேண்டிய முதல் வேலையாகும்.

### நமது சமூகத்தின் ஐக்கியம்.

வழக்கம் வழக்கமெனக் கூறிச் சமீபத்திலுள்ள சில கிராமங்களில் மட்டும் கொண்டு கொடுத்து வருவதும் கண்டிக்கத் தக்கதாம். பண்டைய காலத்தில் நீண்ட தூரம் பிரயாணம் செய்ய வசதி இல்லாமையால் சமீபத்திலுள்ள கிராமங்களோடு மட்டும் சம்பந்தம் செய்து வந்தனரென்றால், இந்நாளில் ஆயிரக்கணக்கான மைல்கள் பிரயாணஞ் செய்யக்கூடிய எல்லா வசதிகளும் ஏற்பட்டுள்ள இக்காலத்திலும் நாம் ஏன் இதனைக் கையாளவேண்டுமென்பது தெரியவில்லை. பழையகாலத்தில் சமீபத்திலுள்ளவர்களோடு

மட்டும் சம்பந்தம் செய்துவந்த மற்றைய சமூகத்தாரனைவரும் தற்காலத்தில் நெடுந்தூரத்தில் சம்பந்தம் செய்யவில்லையா? நாம் மட்டும் ஏன் இம்முறையைக் கையாளக் கூடாது? நாம் வெகு சமீபத்திலேயே சம்பந்தம் செய்து வருவதால் நெடுந்தூரத்திலுள்ள செங்குந்தர்களைப் பற்றி அநேகர் ஒன்றுமே அறிந்துகொள்ள முடியாதவர்களாக இருக்கின்றோம். இதனால்தான் அநேகர் ஏமாறவும், மற்றையவர் ஏமாற்றி உள்ளே நுழையவும் சந்தர்ப்பமேற்படுகின்றது. இதுவுமன்றி, நாம் மிக நெருங்கிய பந்துக்களோடு மட்டும் சம்பந்தம் செய்து வருவதே நமது சந்ததியார் அறிவிலும் ஆற்றலிலும் பலத்திலும் வரவரக் குறைந்து வருவதற்கு ஒரு முக்கிய காரணமெனக் கூறுவேன். ஒருவர் தமக்கு நெருங்கிய பந்துவும் ரத்தக் கலப்பு நிறையப் பெற்றவருமான வேறொருவரிடம் பெண்கொண்டால் அவ்விருவருக்கும் பிறக்கும் குழந்தை, பொருளாராய்ச்சிக்காரரின் கூற்றுப்படி, எல்லாவிதத்திலும் பலமற்றதாகவே இருக்குமென்பது நிச்சயம். ஐரோப்பியர்கள் நிறைந்த ஆராய்ச்சியும், அறிவும், பலமும் வாய்க்கப்பெற்றிருப்பதற்குக் காரணம் ஒரு தேசத்தைச் சேர்ந்தவர் மற்றொரு தேசத்தைச் சேர்ந்தவரோடு சம்பந்தம் செய்து வருவதேயாம். நமது இந்தியாவிலும் பிராம்மண சமூகத்தைப் பாருங்கள். அவர்களுடைய குழந்தைகள் எவ்வளவு சுறுசுறுப்பும், அறிவும், தேஜஸும், தைரியமும் வாய்க்கப் பெற்றுள்ளன. இதன் காரணமென்ன? அவர்களில் ஒரு கோத்திரத்தைச் சேர்ந்தவர் அந்த கோத்திரத்தைச் சேர்ந்தவர்களிடம் கொள்ளவோ கொடுக்கவோ செய்யக்கூடாதெனக் கட்டுப்பாடு செய்துகொண்டிருக்கின்றார்கள். இக் கட்டுப்பாட்டால் அவர்கள் நெருங்கிய பாந்தவ்யத்தில் சம்பந்தம் செய்ய நேரவதில்லை. புதிய பாந்தவ்யங் கொள்வதினால் புது ரத்தக் கலப்பு ஏற்படுகின்றது. இப்புது ரத்தக் கலப்புடையார்க்குப் பிறக்கும் குழந்தைகள் எல்லா வளனும் வாய்க்கப்பெற்று விளங்குகின்றன. எனவே நாமும் நமது சந்ததியாரின் அபிவிருத்திக்கு முயற்சிக்கவேண்டுமானால் சிறிது தூரத்திலுள்ளவர்களோடும் சம்பந்தம் செய்துகொள்ள வேண்டியது மிக அவசியமாகும். இவ்விஷயத்தைக் குறித்து நாம் ஒரு முடிவிற்கு வர வேண்டியதும் அவசியமாகும்.

## கல்வி.

கல்வியே கருந்தனம் என்பதை நம்மவர் அடியோடு மறந்துவிட்டனர். நமது இளஞ்சிறார்கட்கு நாம் தேடிவைக்கவேண்டிய பொருள் கல்விப்பொருளேயாகும். நமது குழந்தைகளைக் குருடர்களாக்கி விடாமல் எண்ணும் எழுத்துமாகிய இரு கண்களையும் அவர்கள் அடையுமாறு செய்தல்வேண்டும்.

"தந்தை மகற்காற்று முதவி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்."

என்றார் நாயனார். நீட்டோலை வாசியா நின்றவனே நல்ல மரமாவான். கல்வியறிவற்றவனே காட்டில் திரியும் மிருகமாவான். நமது சிறுவர்களிடத்தில் நாம் உண்மையில் அன்புடையவர்களாயின், எந்த விதத்திலும் நமது இளைஞர்கட்குக் கல்வி கற்பிக்க வேண்டும். எவ்வளவு கஷ்டங்கள் நமக்கு இருந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் 11-வது வயது வரையிலாவது சிறுவர்களை வேறு வேலையில் புகுத்தாமல் ஆரம்பக் கல்வியாவது கற்பிக்கவேண்டும். அரசாங்கத்தாரும் கட்டாய கல்வியைத் தீவிரமாய் ஏற்பாடு செய்து வருகின்றனர். அநேக முனிசிபாலிடிகளில் ஏற்படுத்தப்பட்டு அமுலில் இருந்தும் வருகின்றது. இரண்டொரு வருஷங்களில் எல்லாக் கிராமங்களிலும் கட்டாய கல்வி ஏற்படுத்தப்படும். அப்பொழுது திடீரென அரசாங்கத்தார் நம்மையெல்லாம் வற்புறுத்தி 11-வயதிற்குட்பட்ட பிள்ளைகளைப் படிக்க வைக்காமல் தொழிலில் அமர்த்தியுள்ள பெற்றோர்களுக்கு அபராதம் முதலியன விதித்துக் கஷ்டப்படுத்தும்படி விடாமல், இன்று முதலாகவே நாம் படிக்கவைத்து விடுவது சிறந்ததல்லவா? ஐந்நூறு ஜனத்தொகையுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் பாடசாலை வைக்கவேண்டுமெனச் சட்டசபையில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருப்பதால் நாம் முயற்சி செய்தால் ஏறக்குறைய எல்லாக் கிராமங்களிலும் பாடசாலைகள் ஏற்படக் கூடுமென்றெண்ணுகின்றேன்.

## வயது வந்தவர்க்குக் கல்வி.

தற்சமயம் நமது சமூகம் உள்ள நிலையில் நாம் நமது இளைஞர்கட்குக் கல்வி கற்பிப்பதோடு மட்டும் நின்றுவிடுவதில் பயனில்லை. இளைஞர்கள் கல்வி கற்று, அதைத் தமது வாழ்க்கையில் பயன்படுத்திக்கொண்டு நமது சமூகத்



திற்கும் உபகாரிகளாய் விளங்குவதற்குப் பல வாண்டுகள் செல்லும். ஆனால் தற்போது நமக்கெதிரே 20 வயதிற்கு மேற்பட்டவர் எத்தனை பேர் கல்வியறிவின்மையால் தமது தினசரி வாழ்க்கையில் வருந்துகின்றார்கள். தங்கள் வாழ்க்கைக்கு வேண்டியவற்றைத் தாங்களே தேடவும், குடும்பத்தை ஒழுங்குற நடத்தவும் வேண்டிய பொறுப்பு மேற்கொண்டுள்ள இவ்வாலிபர்கள் எழுத்து வாசனையும் அறியாதிருப்பார்களானால் இவர்கள் குடும்பம் ஒழுங்கும் அமைதியும் உடையதாக எப்படி நடைபெறுமெனத் தோன்றவில்லை. வாழ்க்கையில் ஈடுபட்டு வருந்துகின்றவர்களை முதலாவதாகச் சீர்திருத்தவேண்டும். இவர்களை அறிவுடையவர்களாக்க என்னென்ன சாதனங்கள் உண்டோ அவற்றையெல்லாம் நாம் கையாளவேண்டும். வயது வந்தவர்கள் பாடசாலைகளில் சேர்ந்து படிப்பது இயலாத காரியம். உபந்நியாசங்கள் மூலமாகவும், பத்திரிகை மூலமாகவுந்தான் அவர்கட்கு அறிவூட்டக் கூடும். விவசாயம், கைத்தொழில், வியாபாரம், சுகாதாரம், உடற்கூறு, நூல்பொருளாராய்ச்சி, மேல்நாட்டறிவு, உலகானுபவமாகிய பல துறைகளிலும் சிறந்த அறிவு வாய்க்கப் பெற்றுள்ள பல அறிஞர்களைப் பிரசாரத்திற்கென நியமித்து, அவர்கள் கிராமந்தோறுஞ் சென்று படக்காட்சி (Magic lantern) மூலமாக நம்மவரிடையே நல்லறிவூட்ட ஏற்பாடு செய்யவேண்டும். இவ்வாறு இடைவிடா முயற்சி செய்வோமானால் வெகு சீக்கிரத்தில் நம்மவர்களின் வாழ்க்கை பெரிதும் மாறுதலடையுமென்றே எண்ணுகின்றேன். அரசாங்கத்தாரும் இவர்கள் அறிவை விருத்தி செய்ய ஒரு திட்டம் தயாரித்து வருகின்றார்கள்.

## உயர்தரக் கல்வி.

நம் சிறுவர்கள் ஆரம்ப கல்வி மட்டும் பயின்றால் தற்காலத்தில் பயனில்லை. இன்னும் கொஞ்சம் செல்வமும் சௌகரியமும் வாய்க்கப்பெற்றவர்கள் தம் மக்களுக்கு உயர்தரக்கல்வி கற்பிக்க வேண்டும். பி.ஏ., எம்.ஏ., பட்டங்கள் பெற்றுப் பலர் உத்தியோகத்திலும், வியாபாரத்திலும் தலைசிறந்து விளங்கினாலொழிய நமது சமூகம் முன்னுக்கு வர இயலாது. தற்காலத்தில் நம்மவர் உத்தியோகத்திலிருப்ப தென்றால் அருமருந்தாக இருக்கின்றது. இக்குறையினை விரைவில் நீக்குதற்கு நமது இளைஞர்கள் முனைந்து படித்துப் பட்டதாரிகளாகப் பலர் வெளியில் வரவேண்டும். ஊக்கமும், சுறுசுறுப்பும், புத்திக்கூர்மையு மிருக்க அநேக இளைஞர்கள் தம் வறுமையால் ஊக்கமிழந்து கொம்புத் தேனுக்காசைப்படும் முடவனைப் போல் தயங்குகின்றனர். அத்தகைய சிறுவர்கட்கு நாம் உபகாரச் சம்பளம் கொடுத்து அடிக்கடி உற்சாக மூட்டி வரவேண்டும். சென்னையிலுள்ள தலைசங்கம் இதனை மேற்கொண்டிருப்பது பெரிதும் பாராட்டத்தக்கதே. என்றாலும் பொருள் வருவாய்க் குறைவினால் 10, 15 மாணவர்கட்கே தலைச்சங்கம் உபகாரச் சம்பளம் கொடுத்துவருகின்றது. இது எவ்விதத்திலும் போதாது. நூற்றுக்கணக்கான மாணவர்கட்கு வழங்கவேண்டும். இது ஒரு பெரிய காரியமல்ல. நாம் கோர்ட்டுக்கும், கோயில்களுக்கும் செலவழிக்கும் செல்வத்தில் ஒரு சிறிது தலைச் சங்கத்திற்கு அனுப்பி வருவோமானால் தலைச் சங்கத்தார் அதனை அவரவர் பெயரால் உபகாரச்சம்பளமாக வழங்குவார்கள்.

இதுவன்றி, சில மாணவர்கட்கு உண்டியும் உறையுளும் இனமாய் உதவவேண்டும். இதன் பொருட்டு ஒரு மாணவர் விடுதியும் சென்னையில் மிக விரைவில் ஏற்படுத்த முயலவேண்டும். எத்தனையோ செல்வந்தர்களின் பிள்ளைகள் ஓட்டலில் சாப்பிட்டு உடல்நலங்குன்றி வீடுதிரும்புகின்றனர். ஆறு வருடங்கள் வரையில் விடாமல் ஓட்டலில் சாப்பிடுவது எவர்க்கும் சகிக்க முடியாததாகவே இருக்கும். அன்றியும், சரியான மேற்பார்வையின்மையால் சிலரது ஒழுக்கமும் குன்றக் காண்கின்றோம். ஆகையால், நம்மவர் மேற்பார்வையில் சென்னையில் உடனே ஒரு மாணவர் விடுதி ஏற்படுத்த முயலவேண்டும். வியாபாரத்தைப் பொருத்தும் ஏனைய விவகாரங்களைப் பொருத்தும், நகருக்குச் செல்லவேண்டியும் சென்னையை யடைகின்ற நம்மவரனைவரும் தங்குதற்கு அவ்விடுதியிலேயே ஒரு பாகத்தை ஒதுக்கி வைக்கவேண்டும். இது செங்குந்த சமூகத்திற்கே பெருத்த நன்மைதேடி வைத்ததாகும். இவ்விஷயங்களையெல்லாம் 'செங்குந்த மித்திரன்' 2-ம் தொகுதி, 4,8 பகுதிகளில் ஆசிரியர் மிகவிளக்கமாக எழுதியிருப்பதோடு, தலைச் சங்கம் சென்னையில் ஒரு விடுதி ஏற்படுத்த முயற்சி கொண்டிருப்பதாகவும் குறித்திருந்தது ஓர் நற்செய்தியே யாகும். இவ்விடுதி ஏற்படுவதற்கு ஒவ்வொருவரும் உதவிபுரிய வேண்டியது நமது கடமையாகும்.

இதுமட்டுமன்று. பட்டதாரிகளாய் வெளிவருவோர்க்கு ஆண்டுதோறும் விருந்தொன்று

நடத்தி, அதில் சிறந்த மாணவர்கட்குப் பரிசுகள் வழங்கி, உற்சாகத்தை யதிகப்படுத்தி மேல்நாடுகட்கும் கல்வி பயிலச் செல்லுமாறு தூண்டவேண்டும். இவர்களுக்கு வேண்டிய உதவிகளெல்லாம் நமது தலைச்சங்கம் செய்து கொடுக்கவேண்டும். இவ்வாறு நாம் கல்வியில் தீவிரமாய்க் கவனஞ்செலுத்தி வருவோமாயின் நாலைந்து வருடங்களில் நமது சமூகம் அனைவரும் போற்றத்தக்க நன்னிலையினை அடைந்து விடுமென்பதில் சந்தேகமில்லை. இதற்கு மேலும் நமது நிதி இடந்தருமாயின் செங்குந்தர் பெயரால் கிராமங்களில் பாடசாலைகள் வைக்க முயலவேண்டும்.

## பெண் கல்வி


ஆண் மக்களை மட்டும் படிக்கவைப்பதால் பெரும்பயன் விளையாது. பெண்மக்களும் கல்வி கற்பிக்க வேண்டியது இன்றியமையாததாகும். தாய்மார்களே சிறுவர்கட்கு முதல் ஆசிரியராவார்கள் தாங்கள் கற்றிருந்தால்தான் தாங்கள் பெற்ற அருமைப் புதல்வர்கட்கு ஓய்வு நேரங்களில் கல்வி கற்பிக்க முடியும். கல்லாத தாய்மார்கள் குழந்தைகளை வளர்க்கும் முறையும் தெரியாமல் அநாகரீகமான பேச்சுகளைக் கற்பித்து, சிறுவர்களின் வளர்ச்சியையும் ஒழுக்கத்தையும் பாழ்படுத்துவர். கல்வியறிவுடைய பெண்கள் நிறைந்துள்ள சமூகங்களிலுள்ள குழந்தைகள் எவ்வளவு அறிவும், ஆற்றலும், புத்தி கூர்மையும், தேஜஸும் பொருந்திக் காணப்படுகின்றன என்பதை நீங்களே கவனித் தறிந்து கொள்ளுங்கள். “தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்” என்ற ஆன்றோர் மொழிப்படி இளமையில் தாய்மார்கள் எந்த ஒழுக்கத்துடன் குழந்தைகளை வளர்க்கின்றார்களோ அவ்வொழுக்கந்தான் கடைசி வரையில் அவர்களிடம் தலைசிறந்து நிற்கும். “பெண்கள் கல்வி முதலியவற்றில் பின்னணியில் நிற்குமாறு விட்டுவிடுகின்ற எந்த தேசமும் ஒரு சிறிதும் முன்னேற முடியாது. ஆகையால், நமது சமூகங்களிலுள்ள பெண்மணிகட்குக் கல்வி கற்பிக்க மிகப்பெரும் முயற்சி செய்வோமாக” என்ற பனகால் அரசரது வாக்கியங்கள் பொன்போல் போற்றத் தக்கன. “பெண்களை முன்னேறச்செய்வது நாம் முன்னேறுவதே யாகும்.” சிறந்த தாய்மார்களாகவும் உண்மை மனைவிகளாகவும் விளங்கவும், இல்லற வாழ்க்கையைச் சச்சரவின்றி ஒழுங்காக நடத்தவும் பெண்கட்குப் போதிய ஞானம் ஏற்படவேண்டியது அவசியம். குடும்ப விவகாரங்களை நன்கறிந்து சிக்கன முறையைக் கையாள வேண்டியதற்கு முன் யோசனையும், புத்தி கூர்மையும் குடும்ப வரவு செலவு கணக்குத் தயாரிக்கும் சக்தியும் பெறுகின்ற அளவிற்காவது பெண்களுக்குக் கல்வி புகட்டவேண்டியது மிக அவசியமென நான் வற்புறுத்துகின்றேன்.

## கைத்தொழில்.


நமது கைத்தொழில் பண்டைக் காலத்திருந்த பெருமை என்னை! ஏனைய சமூகத்தினர் தழைகளையும் மரப்பட்டைகளையும் ஆடையாக உடுத்து வாழ்ந்த காலத்தில் இந்தியாவில டெக்கா மஸ்லின் முதலிய மெல்லிய வஸ்திரங்கள் நெய்யப்பட்டு, வெளிநாடுகட்கு அனுப்பப்பட்டுள்ளன. “பட்டினும், மயிரினும், பருத்தி நூலினும், கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்” என்ற சிலப்பதிகாரச் செய்யுளை நோக்குங்கள். பட்டு நூலாலும், எலி மயிராலும், பருத்தி நூலாலும் நுட்பமான தொழில் புரிந்து வந்த நமது நாடும், சமூகமும் இப்போதுள்ள நிலை யென்ன? ஒரு இழை நூலுக்கும் மேல் நாட்டை எதிர்பார்த்து நிற்கின்றோம். மேல் நாட்டினர் நூதன முறைகளெல்லாம் கண்டு பிடித்துக் கையாண்ட பொழுதெல்லாம் நாம் பழைய தறிகளையே விடாது கைப்பற்றி இத் தாழ்ந்த நிலைக்கு வந்துவிட்டோம். ஆகையால், கைத்தொழிற் கல்வி போதிக்கவல்ல பல பாடசாலைகள் ஏற்படுத்தவேண்டும். அரசாங்கத்தினரும் போதிய ஆதரவு தருவார்களென்றே எண்ணுகின்றேன். சென்னை பம்பாய் முதலிய இடங்களில் அரசாங்கத்தார் ஏற்படுத்தியுள்ள கைத்தொழிற் சாலைகளில் நம்மாணவர்கள் பயின்று புதிய தறி முறைகளைக் கையாளவேண்டும். அப்பொழுதுதான் மீண்டும் நமது கைத்தொழில் தலையெடுக்க முடியுமெனக் கூறுகின்றேன்.

## கூட்டுறவு முறையும் வியாபாரமும்.

நமது தொழிலை நன்னிலைக்குக் கொண்டுவர வேண்டுமானால் எல்லாக்கிராமங்களிலும் ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஏற்படுத்த முயலவேண்டும். இக்காலத்திலுள்ள ஐக்கிய நாணயச் சங்கங்கள் எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை யென்பது உண்மையே. ரொக்க லேவாதேவி மட்டும் இவை செய்து வருவதால் பலர் கடன் வாங்கிச் சென்று, கல்யாணம் முதலிய வற்றில்



செங்குந்தர் முதலாவது மகாநாட்டுத் தொண்டர்படை



மகாநாட்டுக்கு முதல்நாள் மாலை விஜயஞ்செய்த சில பிரமுகர்கள்



வீணை அதிகப் பணஞ் செலவழித்து விட்டு, வாங்கிய கடனைத் திருப்பித்தர வழியின்றி வீடு வாசலையும் இழக்க நேர்கின்றதைக் கண்கூடாகப் பார்க்கின்றோம். ஆகவே ரொக்க லேவாதேவி மட்டும் செய்துவருவதோடு நின்றுவிடாமல் செங்குந்தர் ஐக்கிய நாணயச் சங்கங்கள் நெசவிற்கும், விவசாயத்திற்கும் வேண்டிய நூதன சாமான்களை வரவழைத்து அவற்றைத் தவணைக் கடனுக்கோ, வாடகைக்கோ தருதல் வேண்டும். பொது லைப் பணத்திலிருந்து கைத்தொழிலும், விவசாயமும் வல்ல அறிவுடையார்களை அமர்த்திக் கொண்டு வீடுதோறும் சென்று நூதன முறைகளைக் கையாளுமாறு போதித்துவரவேண்டும். கிராமவாசிகள் நெய்யும் ஆடைகளையும், உற்பத்தி செய்யும் தானியங்களையும் அவர்களே சென்று போட்டியில் குறைத்து விற்கும்படி விடாமல் நல்ல விலை கொடுத்துச் சங்கத்திலேயே வாங்கிக்கொண்டு மொத்தமாக வெளிக்கு அனுப்பலாம். இப்பொழுது கடைவைத்துள்ளவர்களும் இதிலேயே சேர்ந்து அதிக பங்குகள் எடுத்துக்கொண்டால் அவர்களும் நிறைந்த லாபம் பெறக்கூடும். அன்றியும் தனித்தனியே வியாபாரஞ்செய்ய முயல்கின்ற போது ஒவ்வொருவரும் வீணை எவ்வளவோ புத்தியைச் செலவழிக்க வேண்டியிருக்கிறது. உலகம் எந்தவகை யாடைகளை விரும்புகின்றதென அறிவதற்கும், அதன்படி பட்டு முதலியவை பொருக்கி நெய்வதற்கும், சரியான விலை போகக்கூடிய இடம் முதலியவற்றைக் கண்டு பிடிப்பதற்கும், அங்கே கொண்டு போய்ச் சேர்க்கவேண்டிய சௌகரியம் செய்வதற்கும் எவ்வளவு காலமும் அறிவும் வீணாகின்றதென்று யோசித்துப் பாருங்கள். அவ்வாறின்றி இந்த ஐக்கிய சங்கத்தார் மொத்தமாக வாங்கி விற்பதாக இருந்தால் அவர்களே இந்த வேலைகள் முழுதும் கவனித்துக் கொள்வார்களன்றோ? நாம் நெய்யுந் தொழிலிலேயே நமது காலத்தையும் திறமையுஞ் செலுத்தி அதனை எல்லா வகையிலும் மேம்பாடுறச் செய்யலாம்.

இதுவுமன்றி, நமக்குள் பலர் ஒன்று சேர்ந்து பங்குத்தொகை ஏற்படுத்தி ஓர் பஞ்சாலை ஸ்தாபிக்கவேண்டும். இப்பஞ்சாலை நம்மவர்க்குப் பெரிதும் பயன்படு மென்பதில் ஐயமில்லை. நம்மவரனைவரும் இப் பஞ்சாலையில் உற்பத்தி செய்யப்படும் நூலையேவாங்க உறுதி செய்துகொள்ள வேண்டும். இங்கு உற்பத்தியாகும் நூலை நம்மவர்களால் ஸ்தாபிக்கப்படும் செங்குந்த சங்க மூலமாகவோ, செங்குந்தர் ஐக்கியச் சங்க மூலமாகவோ குறைந்த விலைக்கு நம்மவர்க்கே தர ஏற்பாடு செய்து இப்பொழுதுள்ள மிக வருந்தத்தக்க நிலையிலிருந்து நம்மவரைக் கைதூக்கி விடவேண்டியது நமது முக்கிய கடமையாகும். இப்படிச் செய்வோமானால் நமது கைத்தொழில் சின்னாட்களிலேயே உயர்ந்த நிலை யடையுமென்பது உண்மை.

இங்கிலாந்து, ஜெர்மனி, ஜப்பான் முதலான தேசங்கள் நன்னிலைக்கு வந்த காரணமென்ன? கூட்டுறவு முறையில் கைத்தொழிலையும் வியாபாரத்தையும் பெருக்கி வந்ததேயாகும். இந்தியாவில் ஆங்கில அரசாட்சி ஏற்பட்டது அவர்களது வியாபாரக் கம்பெனியினாலேயே. நம் நாட்டில் பெரும்பாலும் படிப்பற்றவர்களே வியாபாரஞ் செய்கின்றனர். மேல் நாட்டிலோ நன்கு படித்த பின்னரே வியாபாரஞ்செய்ய இறங்குகின்றனர் படித்த ஒருவன் வியாபாரஞ்செய்வதற்கும், எழுத்து வாசனையே அறியாத ஒருவன் வியாபாரஞ் செய்வதற்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. நம்மவர்களில் படித்தவர்கள் கூட வியாபாரத்தைத் தங்கள் ஊர்வரையிலேயே நடத்துகின்றனர். வெளி நாடுகளோடு சம்பந்தப்படுத்தி வியாபாரஞ் செய்வதே சிறந்த பயனளிக்கும். பண்டைக்காலத்தில் நம்மவர்கள் மெசபடோமியா, ரோம், கிரீஸ், ஜாவா, சுமத்திரா, ஜப்பான், சீனா முதலிய வெளி தேசங்களுடன் வியாபாரஞ் செய்து வந்ததாகச் சங்க நூல்களும் கிறிஸ்தவ வேதமும் சான்று பகர்கின்றன. ஆகையால் மீண்டும் இம்முறையினைக் கையாண்டு வியாபாரத்தில் மேலோங்க முயலவேண்டும். இவ்வாறு மிகப்பெரிய வியாபாரஞ் செய்யவேண்டுமானால் நம்பிக்கையோடும் ஒற்றுமையோடும் கூட்டுறவு முறையில் நடத்த வேண்டும். இவையும் இவைபோன்ற இன்னும் அநேக வர்த்தக சம்பந்தமான விஷயங்களும் இதே பந்தலில் நடக்கப் போகும் நமது வர்த்தகர் மகாநாட்டின் ஆலோசனைக்குக் கொண்டு வரப்படுமென்றும், அங்கு நன்கு விவாதித்து முடிவு செய்யப்படுமென்றும் கருதுகின்றேன்.

### நமது சங்கங்கள்.

இத்தகைய லட்சியங்களெல்லாம் நிறைவேற வேண்டுமானால், ஒவ்வொரு கிராமத்திலும் செங்குந்தர் சங்கம் தோன்ற வேண்டும். சென்

னையில் "தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கமும்," அதன் முயற்சியால் மற்ற இடங்களில் பல கிளைச் சங்கங்களும் ஏற்பட்டிராவிட்டால் இத்தகைய உணர்ச்சிகள் நமக்கு உதித்திருக்குமோ? சங்கங்களால் ஏற்படும் நன்மைகள் அளவற்றன. ஒவ்வொரு வகுப்பினரும் சங்கங்களாலடைந்துள்ள நன்மைகள் அளவிறந்தனவாகும். நமது அரசாங்கமே பார்லிமெண்டு என்னும் ஒரு கூட்டுக்கழகத்தால் நடத்தப்படுகின்றது. ஆகையால் கிராமந்தோறும் செங்குந்தர் சங்கம் ஏற்படுத்தி அதனைச் சென்னையிலுள்ள தலைச்சங்கத்தோடு இணைத்து, அதன் ஆதரவையும் ஆலோசனையையும் பெற்று அதன்படி நடந்தேற்றி வரவேண்டும். மகாநாடு முடிந்த ஒரு மாதத்திற்குள் எத்தனை கிளைச்சங்கங்கள் தோன்றுகின்றன வென்பதைப் பொருத்தே நமது முன்னேற்றம் இருக்கிறதென்று கூற வேண்டும்.

### பிரதிநிதித்துவம்.

நமது பிரதிநிதிகளை நாம் ஒவ்வொரு ஸ்தல ஸ்தாபனத்திலும் சட்டசபையிலும் பெறுவதற்கு உழைக்க வேண்டியது நமது கிளைச்சங்கங்களின் முக்கியமான வேலையெனக் கூறலாம். முதலில் செங்குந்த வாக்காளர் ஜாபிதா (Voters' List) தயாரித்து, அதன்படி எதாவது ஒரு இடத்தில் நம்மவர் வெற்றி பெறக் கூடுமெனத் தோன்றினால், சங்க சார்பாக ஒருவரை நியமித்து, அவருக்கே சங்க அங்கத்தினரனைவரும் சமூக கக்ஷிபேதங்களையும் இராஜீயகட்சி பேதங்களையும் புகவிடாமல் ஒற்று வேலை செய்யவேண்டும். அவ்வாறு செய்யும்போது ஏனைய சமூகத்தார்கட்குச் சிறிதும் மனத்தாபம் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். நம்மவர் நிற்க முடியாத இடத்தில் அந்நியராயினும் எவர் நம்மவர் நன்மைக்குப் பாடுபடுவாரென்னும் நம்பிக்கை யிருக்கின்றதோ அவருக்கே சங்கத்தினர் வேலை செய்யலாம்.

இதுவன்றி, சென்னை ராஜதானி முழுமைக்கும் தலைச்சபையாயுள்ள சென்னை சட்டசபையில் தென்னிந்தியா முழுதும் வியாபித்துள்ள அநேக லட்சம் ஜனத்தொகையுள்ள நம் சமூகத்திற்கு ஒரு பிரதிநிதியேனும் இல்லாதது மிகவும் வருந்தத்தக்கது. ஏனைய ஜாதியினரெல்லாம் தங்கள் பிரதிநிதிகளைப் பெற்றிருக்கின்றார்கள். ஆகவே நமது குறைகளைத் தெரியமாய் எடுத்துக்கூறி வாதாடத்தக்க அறிவும், ஆற்றலும், சௌகரியமும், செல்வாக்கும் பெற்ற கனவான் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவரையே நாமினேஷனில் எடுக்குமாறு கலைச் சங்கமும் ஒவ்வொரு கிளைச் சங்கமும் கிராமத் தலைவர்களும், தனிப்பட்ட மனிதர்களும் கடித மூலமாகவும், தந்தி மூலமாகவும் கவர்னரைக் கேட்டுக் கொள்ள வேண்டும். அடுத்து சமீபத்தில் வரப்போகும் சட்ட சபை எலக்ஷனில் இவ்வாறு செய்வோமானால், ஒரே கனவானைக் குறித்துச் சிபார்சு செய்துவரும் ஆயிரக்கணக்கான கடிதங்களையும் தந்திகளையும் கவர்னர் ஒருக்காலும் புறக்கணிக்கமாட்டார். இவ்விஷயத்தை நீங்களனைவரும் ஆழ்ந்து சிந்தனை செய்து ஒரு முடிவிற்கு வர வேண்டுமென்று உங்களனைவரையும் கேட்டுக் கொள்ளுகின்றேன். "கேட்டால் கொடுக்கப்படும் தட்டினால் திறக்கப்படும்" என்ற ஆங்கிலப் பழமொழியும், "அழுத பிள்ளை பால் குடிக்கும்" என்ற தமிழ்ப் பழமொழியும் நம் பொருட்டே ஏற்பட்டவை என மனத்திற் கொள்ளுங்கள்.

### பத்திரிகை.

ஒரு தேசமோ சமூகமோ முன்னேற்றமடைவது பத்திரிகை யொன்றினாலேயே யாகும். உள்நாட்டு வெளிநாட்டு விஷயங்களை இவை அவ்வப்போது உணர்த்துவதால் நாம் அடையும் நன்மைகள் அளவிறந்தன. இங்கிலாந்து முதலிய நாடுகளில் மணிதோறும் அநேக பத்திரிகைகள் வெளி வருகின்றன என்பதைக் கேட்க நாம் ஆச்சரியப்படலாம். அங்கே வண்டியிழுப்போருக்கும், குப்பை யெடுப்போருக்கும், பிச்சைக்காரருக்குந் தனிப் பத்திரிகைகள் உண்டு. மேல நாடுகளில மிகக் குறைந்ததாக வெளியிடப்படும் பத்திரிகைகட்கும் ஐம்பதினாயிரம் சந்தாதாரர்கள் இருக்கிறார்களென்றால் அந்நாடுகள் ஏன் முன்னுக்கு வரா? ஆனால் நம்மவரோ பத்திரிகை படிப்பதேயில்லை. நமக்கு மணிப் பத்திரிகையோ, தினப் பத்திரிகையோ, வாரப் பத்திரிகையோ, பக்ஷப் பத்திரிகையோ கிடையாது. செங்குந்த மித்திரன் என்னும் மாதப் பத்திரிகை ஒன்று தோன்றியுள்ளது. நமது சமூகத்தில் இப்போது விழிபபேற்பட்டது அதன் முயற்சியே யாகும். இத்தகைய மித்திரனைப் பல லட்ச ஜனத்தொகை யுடைய நம்மில் எத்தனை பேர்கள் ஆதரிக்கின்றார்கள்? 3500 பேர்கட்குள்ளாகவே அதனைப்பெற்றுப் பயனடைந்துள்ளார்களென்றும், அதிலும் பாதி சந்தாதாரர்கள் இன்னும் பணஞ் செலுத்தாமலிருக்கின்றார்களென்றும் இம்மாத மித்திரனில் கண்டு வருந்துகின்றேன். இன்னும் இரண்டொரு மாதங்களில இருபதினாயிரம் சந்தாதாரர்கட்குக் குறையாமல் சேர்த்துத் தர நாமனைவரும் கங்கணங் கட்டிக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வோமானால் அடுத்த ஆண்டில் பக்ஷப் பத்திரிகையாக மாற்றிவிட முடியுமென்றே நினைக்கின்றேன்.



### மூலதனம்.

நான் இதுவரை கூறிவந்த லட்சியங்களெல்லாம் நிறைவேற வேண்டுமாயின் ஒரு பெரும் மூலதனம் இருக்கவேண்டும். இல்லையென்றால் இக்காரியங்களெல்லாம் ஒழுங்காக நடைபெறுவது அருமை. நாம் பல வழிகளிலும் மூலதனம் சேர்க்க முயலவேண்டும். சென்னை பழைய காட் கம்பெனியாரும், சைதாப்பேட்டை வர்த்தகர்களும் செய்து வருவது போன்று ஒவ்வொரு செங்குந்த வர்த்தகர்களும் மகமை ஏற்பாடு செய்யவேண்டும். கல்யாணம் முதலிய சடங்குகளில் கிடைக்கும் கிராமப் பணத்தில் தலைச் சங்கத்திற்கு ஒரு பகுதி அனுப்புதல் வேண்டும். ஆங்காங்கு உண்டியல் வசூலிக்க ஏற்பாடு செய்தல்வேண்டும். ஒரு லாட்டரி ஏற்பாடு செய்து அதில் ஒரு லட்சம் ரூபாய்க்குக் குறையாமல் மிச்சப்படுத்த முயற்சிக்கவேண்டும். இவ்வாறு செய்வோமானால் ஓராண்டிற்குள் மூலதனம் பெருகிவிடுமென்பதில் சந்தேகமுண்டோ?

### முடிவாம்.

செங்குந்த சிகாமணிகளே!

இன்று தோன்றியுள்ள புத்துணர்வோடு பழைய கௌரவத்தைப் போக்காமல் அறிவுடையோர் ஓம்பும் வண்ணந் திருந்தி வெற்றியுந் தோல்வியுங் கருதாது முன்னணியில் நிற்க நாம் முனைந்து செல்வோமாக. ஓர் உண்மை வீரன் தோல்வியுற்ற காலத்து எவ்வாறு ஆண்மையுடன் ஓரடி முன்னே செல்வானோ அவ்வாறே நாமும் செல்லவேண்டும். அதற்கான விஷயங்களை யெல்லாம் தீரயோசித்து முடிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் அழைப்பிற்கிணங்கி நீங்களனைவரும் சிரமம் பாராது இங்கு வந்து எங்களைக் கௌரவித்தமைக்காக மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக் கொண்டு எனது வரவேற்பு உரையை முடித்துக்கொள்ளுகின்றேன். சுபம்!

## தலைவரை உபசரித்தல்.

வரவேற்புத் தலைவர் பேருரை முடிந்ததும், திரு. ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ. எல்.டி. அவர்கள் பிரேரேபிக்கவும், திரு. வா. செ. செங்கோட்டையா முதலியார் அவர்கள் ஆமோதிக்கவும், சமூக மகாநாட்டிற்குத் தலைமை வகிக்குமாறு திரு. ஆ. வே. முத்தைய முதலியார், பி.ஏ., பி.எல்., அவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். தலைவர் அவர்கள் கரகோஷத்தினிடையே ஆசனத்தமர்ந்ததும், அவர்க்கும் மற்றைய பிரமுகர்களுக்கும் பூ மாலைகளும் சரிகை மாலைகளும் சூட்டப்பட்டன.

இதன் பிறகு சமூக மகாநாட்டின் தலைவரவர்களுக்கு வரவேற்புச் சபையினரின் சார்பாக திரு. V. V. C. V. நடேச முதலியார் அவர்களாலும், தலைச்சங்கத்தின் சார்பாக திரு. ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி., அவர்களாலும் முறையே வசனத்திலும் செய்யுளிலும இரண்டு வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தும் பாடியும் கொடுக்கப் பெற்றன.

[அவைகளை அடுத்த பக்கங் காண்க.]

## வாழ்த்துத் தந்திகளும் கடிதங்களும்

இதன் பிறகு திரு. ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., அவர்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள கனவான்கள் மகாநாடு சிறப்புடன்நடைபெற வேண்டுமென்னும் நோக்கத்துடன் அனுப்பிய வாழ்த்துத் தந்திகளையும் கடிதங்களையும் படித்தனர் :—

**தந்தி யடித்தோர்;**

திரு. S. முத்தைய முதலியார் அவர்கள், பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஸி., சென்னை அரசாங்க மந்திரி.

திரு. P. T. இராஜன் அவர்கள், எம்.எல்.ஸி., மதுரை.

திரு. ராவ்பஹதூர் நாதலிங்க முதலியார் அவர்கள், கோயமுத்தூர்.

திரு. T இராமலிங்கம் செட்டியார் அவர்கள் பி.ஏ., பி. எல். கோயமுத்தூர்.

திரு. ம. முருகேச முதலியார் அவர்கள், செங்கல்பட்டு தாலூகா போர்டு அங்கத்தினர், பிள்ளையார் பாளையம், காஞ்சிபுரம்

திரு. சிவசுவாமி தேசிகர் அவர்கள், பிள்ளையார் பாளையம், காஞ்சிபுரம்.

திரு. M. சொர்ணசபை முதலியார் அவர்கள் பிள்ளையார் பாளையம், காஞ்சிபுரம்.

திரு K. K. நல்லமுத்து முதலியார் அவர்கள், நாகப்பட்டினம் முனிசிபல் கவுன்சிலர்.

திரு. ... பன்னிருகைப் பெருமான் முதலியார் அவர்கள், பி.ஏ., பி.எல்., திருவனந்தபுரம்.

திரு. அ. பழநியாண்டி முதலியார் அவர்கள், இரங்கூன் செங்குந்தர்க்காக.

திரு. அருணாசலம் செட்டியாரவர்கள், கோயமுத்தூர்.

திரு. ஜீ. கண்ணுசாமி அவர்கள், திருவாரூர்.

திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், பி. ஏ. கோயமுத்தூர்.

திரு. C. V. சுப்பைய்ய செட்டியார் அவர்கள், கோயமுத்தூர்.

திரு. பழநிசாமி நாயுடுகாரு, கோயமுத்தூர்.

**கடித மனுப்பியோர்.**

திரு. டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள், எம்.ஏ., எல். எல். டி., எம். எல். ஸி., சென்னை அரசாங்க முதன் மந்திரி.

திரு. R. K. சண்முகஞ் செட்டியார் அவர்கள், பி.ஏ, பி எல்., எம்.எல்.ஏ., டெல்லி.

திரு. C. விஜயராகவாச்சாரியார் அவர்கள், பி.ஏ., பி.எல்., மாஜி காங்கிரஸ் தலைவர், சேலம்.

திரு. W. P. A.. சௌந்தரபாண்டிய நாடார் அவர்கள், எம். எல். ஸி., இராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர்.

திரு. ராவ்பஹதூர் M. K. ரெட்டியார் அவர்கள், பி.ஏ., செங்கல்பட்டு ஜில்லாபோர்டு தலைவர்.

திரு திவான்பஹதூர் சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள், கோயமுத்தூர்.

திரு. M. A. மாணிக்கவேலு நாயகர் அவர்கள், பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஸி. சென்னை.

திரு. S. P. இராஜமாணிக்கம் அவர்கள், சேலம் ஜில்லாபோர்டு உபதலைவர்.

திரு. பி. தி. குமாரசாமி செட்டியார் அவர்கள், பி.ஏ., சென்னை.

திரு. பி. பாலசுந்தரம் செட்டியார் அவர்கள், கோயமுத்தூர்.

திரு. M. பக்தவத்சலம் அவர்கள், பி.ஏ., பி.எல்., சென்னை,

திருச்சிஜில்லா பார்க்கவ குல சங்கத்தினர்

திரு. காஞ்சி நாகலிங்கமுனிவர் அவர்கள், சென்னை.

திரு. வை. கந்தசாமி முதலியார் அவர்கள், தமிழ்ப் புலவர், வண்டிப்பாளையம்.

திரு. பொன்னுசாமி முதலியார் அவர்கள், காஞ்சிபுரம்.

திரு. ஆ. பெரியண்ண முதலியார் அவர்கள், வாலிப்பாளையம்.

திரு. எம். முருகேச முதலியார் அவர்கள், பள்ளிகொண்டா.

திரு. S. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், திருமருகல்.

திரு: G. ருத்திராபதி முதலியார் அவர்கள், குடவாசல்.

திரு. S. V. அர்த்தநாரி செட்டியார் அவர்கள், திருச்செங்கோடு.

---

ஈரோட்டில் விபவஷு தைமீ 7உ கூடிய
தென்னிந்திய செங்குந்தர் முதலாவது
மகாநாட்டுத் தலைவர்
புதுவை பிரஞ்சு அரசாங்க பிரதம இந்திய மந்திரி
திரு ஆ. வே. முத்தைய முதலியார்,
பி.ஏ., பி.எல், அவர்களுக்கு,
ஷை மகாநாட்டு வரவேற்புக் கழகத்தினர்
வாசித்துக் கொடுத்த

**உபசாரப் பத்திரம்.**

**செங்குந்த குலத்துதித்த சமரச சைவச்செம்மலே!**

தங்களை இச்செங்குந்த நகரில் இன்று வரவேற்கும் பாக்கியம் எங்களுக்கு வாய்த்ததைக்கு நாங்கள் என்றுமுறாத பெருமகிழ்ச்சியை யெய்துகிறோம். தங்கள் வரவு நல்வரவாகுக! ஆருத்திர கபாலபுரி, மயிலை என்னும் திருப்பெயர்களை உடைய ஈரோடு என்னும் இந்நகருக்கு எங்களைப் பொருட்படுத்தி இன்கெழுந்தருளிய தங்கள் மேலான தகைமையை நாங்கள் என்றும் மறவோம். அதிக தூரத்திலுள்ள தாங்கள் உடல்நலம் வேலைமிகுதி ஆகியவைகளைக் கருதாமல், குலாபிமானமே பெரிதென மதித்து விஜயம் செய்த தங்கள் நற்குணமொன்றே இங்கு திரளாகக் குழுமியிருக்கும் செங்குந்தகுல நன்மக்கள் ஒவ்வொருவருள்ளத்திலும் குலத்தொண்டாற்றுதலே ஏற்ற முதற்கடமை யாகும் என்னும் கொள்கையைக் கொழுந்துவிட்டெரியும்படி செய்திருக்கிறது என்பதை நாங்கள் உணர்கிறோம்.

**செங்குந்த ஜனசமூக சீரிய தலைவரே!**

இத்திரளான செங்குந்த ஜனசமூகம் ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றமடைந்து குலப்பெருமை நிலைநாட்டி நலப்படுத்தவேண்டுமென்பதைத் தெளிவுபடுத்த புதுவையம் பதியிலே அரசாங்கத்தில் உயரிய அமைச்சர் தம் பதவியை வகித்துத் திறமையுடன் நடாத்தும் அண்ணலாகிய தங்கள் நல்லுரைகளைக் கேட்டு அவற்றின் பயனை விரைவிலெய்தும் சந்தர்ப்பம் எங்களுக்கேற்பட்டிருப்பதைக் குறித்து நாங்கள் பெருமை பாராட்டிக்கொள்கின்றோம்.

**பிரெஞ்சு தமிழ் ஆங்கில முதலிய பல பாஷைகளிலே தேர்ச்சிபெற்ற பெரியீர்!**

பொதுநல நோக்கம், நடுநிலைமை, பரோபகாரம் முதலிய தூய குணங்களையுடையராம் ஜனநாயக ஆட்சி திகழும் புதுவையிலே அரசாங்கத்தாராலும் ஜனங்களாலும் நன்கு மதிக்கப்பெற்ற தாங்களே இச்சமூகத்தை முன்னேற்ற வழியில் நடத்துவிக்க இம்முதலாவது தென்னிந்திய செங்குந்தர் சமூக மகாநாட்டுத் தலைவராக இசைந்தமைக்கு நாங்கள் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

**நட்புள்ளார் அல்லாதார் முதல் எல்லாரும் உவக்கும் முக்சோம் புகலும் சொல்லாற்றலுடையீர்!**

தங்கட்கு நீண்ட வாழ்நாளும் திடமும் செல்வமும் புகழும் பெருக எல்லாம் வல்ல இறைவனை மனமார இறைஞ்சுகின்றோம்.

ஈரோட்டில் விபவஷு தைமீ 7ம் தேதி கூடிய
தென்னிந்திய செங்குந்தர் முதலாவது
மகாநாட்டுத் தலைவர்
புதுவை பிரஞ்சு அரசாங்க பிரதம இந்திய மந்திரி
உயர் திரு.
ஆ. வே. முத்தைய முதலியார்,
பி ஏ., பி.எல்., அவர்கட்குச்
சென்னைத் தென்னிந்திய செங்குந்த
மகாஜன சங்கத்தார் வாசித்துக் கொடுத்த

**வரவேற்புப் பத்திரம்**

**நிலைமண்டிலவாசிரியப்பா.**

உலகெலா மேத்த வொளிர்மதி சூடிய
கங்கைவார் சடைபெங் கண்ணுதற் பெம்மான்
மங்கையோர் பாகன் மலரடி மறவா
வேலா யுதன்நவ வீரர்தம் மரபில்
மேலா யுதித்தோன் விரும்பிப் புரிந்த
தவமதிற் றோன்றிய தக்கோய்! வருக.
அவமிலா வுயர்திரு வவைச்சேர்ந் தப் பொறுப்பை
புதுவையி லேற்றுப் புரிவோய்! வருக.
சனநா யகந்திகழ் தனியிடமதனி
லினைபோல் விளங்குந லேந்தல! வருக.
சுதந்தர வுணர்ச்சி,தான் றன்றியே மிளிரும்
விதந்தரு கட்சிகள் வேற்றுமை கருதா
திதம்பெற வுலகி னியல்பெலா முணர்ந்து
நீதியை வழங்கும் நீள்குடிப் பிறந்த
புண்ணியா! வருக. புகழ்பொறாஞ் சாங்கிலம்
எண்ணிலா வளஞ்சேர் நிறைந்தபு புலமை
குறையா துறுகுணக் குன்றே! வருக.
வறுமையால் வாடு மன்பருக்க கிரங்கித்
தண்ணருள் பெருக்கு மன்னவ! வருக.
மண்ணிடை நன்னெறி வழுவா தில்லையும்
தூய்மையு முடையநற் றுரையே! வருக.
செம்மையி லிருந்துடற் றிடமுமா பாரா
தெம்முடை வேண்டுகோட் கிணங்கியிங் கெழுந்த
குலப்பற் றுடையநற் குரிசிலே! வருக
வித்தகர் பலரும் விரும்புமெய்ம் மனத்தால்
முத்தைய நாம முதல்வா! வருக.
ஆயுளுஞ் செல்வமு மாற்றலும் நிறைவ
தாக; இங்கிச வருள்கனி சுரக்க.
வருக, வருக, இம் மாநாட் டிடையே;
தருக, தருக இன சால்புறு மொழியே.

முடிவில் தலைவரவர்கள் கிழ்க்காணும் பொன்போலுந் தமது பேருரையை மணிபோன்ற தமது குரலில் நிகழ்த்தினர்:—

சமூக மகாநாட்டுத் தலைவர்

புதுவை அரசாங்கத்தின் இந்திய அமைச்சர்

# திரு. ஆ. வே. முத்தைய முதலியார், பி ஏ, பி எல், அவர்களின்

# சொற்பெருக்கு.

தென் இந்திய செங்குந்தர் முதலாவது மகாநாடு நன்கு சிறப்பிக்க வேண்டுமென்ற பெருங் கருணையுடன் இங்குக் குழுமியிருக்கின்ற பெரியோர்களனைவருக்கும் சிறுவனுடைய எனது மனமார்ந்த வணக்கம்.

செங்குந்த நண்பர்கள் எக்காரணம் பற்றி என்னைச் சிலாக்கித்து இப்பெரியதோர் நிலையில் நிறுத்தி வைக்கின்றார்களென்பது எனக்கு இன்னும் வியப்பாகவே யிருக்கின்றது. எனினும், இவ்வியப்பை முடிவு செய்துகொள்வதற்கு இது சமயமும் இடமுமல்ல. அன்பர்கள் பணிக்க ஏந்திக்கொண்ட வேலையானது இனிது முடியுமென்னும் ஐங்கரற் கிளைய நம்பிறை அறுமுகனைத் துதிக்கின்றேன்.

நம்பவர் உறக்கந் தெளிந் தெழுகின்றனர்.

ஆன்மநேய சகோதரிகளே! ஆன்மநேய சகோதரர்களே! அன்பார்ந்த நண்பர்களே!

நம் தாய் நாடும், அந்நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள சாதி மதக் குழாங்களும், தங்கள் தங்கள் முன்னேற்றத்தையே உயர் இலக்கியமாகக்கொண்டு உழைத்துவரும் இக்காலத்தில், செங்குந்த மக்கள் மாத்திரம் பின்னிட்டு நிற்கின்றார்கள் என்பதை யான் சொல்லவேண்டியதில்லை. மற்றைச் சாதியர்களெல்லாம் ஆங்காங்குச் சபைகள் நிறுவி, தங்கள் தங்கள் அபிவிருத்தியைக் கருதி நெடுநாளாகத் தீவிர வேலை செய்து கொண்டிருக்க, இச் செங்குந்தர்கள் இப்போதுதான் முதல் மகாநாடு கூட்டியிருக்கின்றனர் என்ற இவ்வொரு சாக்ஷியமே, இதுவரையில் தூங்கியிருந்த மக்கள் இப்போது விழித்துக் கொண்டார்களென்பதைக் காட்டுகின்றது. இது காலபபோக்கின் அடையாளமாகும்.

## உயிரியக்கத்தின் ஆற்றல்.

உயிரியக்கமானது உலகமெங்கும் பல பல வெளிக் கிளர்ச்சிகளாகத் தோன்றி நடைபெற்று வருகிறது. இந்த இயக்கம் இறைவனுடைய இயக்கமாகையால் இதை யாரும் எந்த வகையாலும் நிறுத்திவிடுவது இயலாத காரியமாகும். அந்த இயக்கத்தோடே போகவேண்டும்; போகாமல் நின்றால், பின்னிட்டு, சிலகாலம் தங்கி, இடுக்கண்களும் அல்லல்களும் பலவுற்று, பிறகும் அந்த உயிரியக்கத்தோடே நடந்துதானாகவேண்டும். இவ்விஷயம் நடத்தலே, இவ்விதம் ஒழுகுதலே உயிரியக்கத்தின் ஆற்றலைக் குறிப்பிடுகின்றது.

இந்த இயக்கத்தில் எதிரிட்டு, எதிர்த்து நிற்பவர்களே தாழ்ந்த நிலையை யடைபவர்கள். இம்மாதிரியான தாழ்ந்த நிலை செங்குந்தர்களுக்கு மாத்திரந்தானென்று மனம் நிடையவேண்டுவதில்லை. எச்சாதியர்களும—முக்கியமாகப் பெரும் என்னுடைய சாதியர்கள் யாவரும்—நிலையில் தாழ்ந்து நிற்பது எளிது. சொற்ப என்னுடையவர்கள் அவ்வளவு ஆழம் இறங்குவதில்லை; இறங்கிவிட்டாலும், அதிக காலம் தங்கி நிற்பதில்லை. பெருத்த கும்பலாயும், பற்பலவிடங்களில் பரவியும் வசிக்கும் குலத்தவர்கள் முன்னேற்றமடைவது எளிதல்லவாயினும், முடியாததல்ல. ஏனைய வகுப்பினர்கள் முன்வருகிறதைப் பார்க்கிறோம். நம் தேசத்துச் சரித்திர வாயிலாகவும் அந்தந்தச் சாதியார்களுக்குரிய பழைய சாதனங்களாலும், ஒருகாலத்தில் உயர்வுற்றிருந்தவர்கள் பிற்காலத்தில் தாழ்வடைந்து நின்றார்கள் என்பதையும், தாழ்வடைந்து நின்றவர்கள் பின்னொரு காலம் முன்வந்துள்ளார்களென்பதையும் தெரிந்து கொள்ளுகிறோம்.

## குல முன்னேற்றத்திற்கு இடைவிடா முயற்சி வேண்டும்.

ஆனால் எந்தக் காரியத்தையும் செய்து முடிப்பதற்கு அதற்குள்ள தடங்கல்களை விலக்கவும், சாதகங்களைக் கொள்ளவும் வேண்டும் என்பது நண்பர்களுக்குத் தெரியாததல்ல. அதுபோலவே குலமுன்னேற்றத்திற்கும், ஆபத்தான துறைகளினின்றும் விலகி, அனுகுணமான வழிகளிலே நுழையவேண்டும். இதற்கு முயற்சி இன்றியமையாதது: முயற்சி வேண்டும், ஊக்கம் வேண்டும்; விடாமுயற்சி வேண்டும், இடைவிடா முயற்சிவேண்டும்.



## முன்னணி வேலை: பிரசாரம்.

அம்முயற்சியைத் தாங்கி வளர்ப்பதற்காகத்தான் இதுபோன்ற மகாநாடுகள் கூடுவதும் பிரசாரம் செய்து வருவதுமாகும். இந்த முன்னணி வேலையே அடிப்படை வேலை. இதில் ஈடுபட்டுள்ள, ஈடுபடும் நண்பர்கள் பேர் தெரியாமலிருக்கலாம். அவர்கள் வேலையை ஏனையோர் உணராமலிருக்கலாம். ஆனால் அவர்களே குலமுன்னேற்றத்திற் குழைக்கும் தலைவர்களாகும். வளரும் மரத்திற்கு அதன் வேர்களே ஆதாரமென்பதையும், அவ்வேர்களின் வேலையானது மண்ணிற்குள் மறைவாகவே நடைபெறுகிற தென்பதையும் இங்கு ஞாபகப்படுத்துகிறேன்.

## எத்துறைகளில் முயற்சி வேண்டும்?

எனவே, 'இப்போது குலத்திற்கு நற்காலம் பிறந்திருக்கிறது' என்றும், 'முன்னேற்ற வேலையில் பின்னிடைவதில்லை; இதற்கே கொடிபிடித்து நிற்கிறோம்' என்றும் உறுதியாகச் சொல்லக் கூடிய நிலையில் இங்கு அனைவரும் ஒருங்கு சேர்ந்து நிற்பதால், இனிமேல் எந்தெந்த விதங்களில் முயற்சிக்க வேண்டுமென்பதே நாம் கலந்து யோசிக்கக் கிடக்கிறது.

## உயிரியக்கமும் மக்கள் சமூகங்களும்.

உயிரியக்கத்தைப்பற்றி முன்னர் குறிப்பிட்டேன். உயிர் இயக்குதலுக்கு உடல் இன்றியமையாததே யெனினும், உயிர் உடலுக்குக் கட்டுப்பட்டு நிற்பதில்லை. உயிர் இன்றேல் உடல் விழுந்துவிடுகிறது. உடலானது எவ்வளவிற் கெவ்வளவு தூயதாயிருக்கின்றதோ, அவ்வளவிற்கவ்வளவு உயிர் இயக்கம் மேன்மை பெற்று இலங்குகிறது. உடல் நிலை தளர்ந்து அல்லது நோய்வாய்ப்பட்டு நிற்பின், உயிரானது அதனிடைக் கொஞ்ச காலமே தங்கி, பின் வெளிப்பட்டு, தன் இயக்கத்திற்குத் தக்கதோர் தேகத்தைத் தேடிக்கொள்ளுகிறது அன்றி, உடலினிச்சைப்படி உயிர் கட்டுப்பட்டு நின்றுவிடுவதென்பது கிடையாது. தனித்தனி ஜீவனைப்பற்றிய இந்த உண்மையே உலகிலுள்ள எல்லா வருக்கங்களிடையிலேயும் புலப்படுகிறது. மேலும்மேலும் அபிவிருத்தியடைந்து, உயிரினுடைய ஆற்றல்களை வெளிப்படுத்தி, உலகாகிற உடம்பை அழகுபடுத்தாமல் தடைகளாய் நின்ற மக்கள் வருக்கத்தார்கள் மறைந்தழிந்தார்கள்; வேறு வருக்கத்தார்கள் தோன்றினர். இவர்களுள்ளும் முன்னேற்றத்தைக் கைக்கொண்டவர்களே சீர்பெற்றார்கள்; ஏனையவர் இழிவுற்றார்கள். இது இறைவன் ஆணையாகும். இதை மறுக்கத் துணிவது, மேகத்தால் மறைந்துள்ள சூரியன் இல்லை யெனச் சொல்லும் பேதைமை போன்றதாகும்.

## ஒழுக்கமும் நமது குலமும்.

ஆகையால், குல முன்னேற்றமும், உயிர் இயக்கத்தை, அதாவது, உயிர் ஒழுக்கத்தைப் பொருத்ததாக விருக்கிறது. ஒழுக்கம், அறம், நடக்கை யென்பதாகப் பல பெயர்களால் குறிப்பாகச் சொல்லும் உயிரியக்கம் செங்குந்த மக்களிடம் தடங்கலுற்றதால், உடலாகிற செங்குந்த குலம் சீர்குலைந்தது. இல்லாவிடில் முற்காலத்தில் இந்தச் சாதியாரிருந்த மேன்மையென்ன? இப்போதிருக்கும் நிலைமையென்ன? நம் முன்னோர்கள் வைத்துப்போன—அவர்கள் காலத்தில் ஏற்பட்ட—பல சாதனங்களை ஒன்று சேர்த்து அவைகளிலுள்ள உண்மைகளை ஆராய்ந்து பார்ப்போமாயின், 'நம்மவர்களும் இப்படி இருந்திருப்பார்களா?' என்று சந்தேகிக்கவல்லவோ இடந்தருகிறது! காரணம் இதுதான்: பண்டைய நம் குலதிலகர்கள் ஒழுக்கத்தாற் சிறந்து விளங்கினார்கள்; குலம் சிறந்து நின்றது. இக்காலத்தில் ஒழுக்கங் குறைந்தது; குலமுந் தாழ்ந்தது. அதனால், கல்வியும் குறைந்தது; வீரத்தன்மை மறைந்தது; ஏழ்மை தலையெடுத்தது. இந்த இன்னல்களெல்லாம் விளைந்ததற்குக் காரணம் ஒன்றே: ஒழுக்கக் குறைவேயாகும்.

ஒழுக்கம், ஆசாரம் என்னும் மொழிகளில் இல்லாத பொருளையமைத்து இடர்ப்படுவது நம்மியற்கை. ஒழுகுதல், நடத்தல், சரிதல் என்பன அசைவைக் காட்டுகின்றன. ஆகவே ஒழுக்கமென்பது சில குறிப்பிட்ட—என்றும் மாறாத—சட்டங்களல்ல. ஒழுக்கம் நடைபெறும் போழ்து அதற்குரிய சில வெளித்தோற்றங்கள், ஆசாரங்கள் அமையும், உண்டாகும். இந்த ஆசாரங்களையே ஒழுக்கமென்று நினைத்துவிடுவது பிசகாகும். உயிரியக்கமானது நடைபெற்றுக்கொண்டே போக யாதொரு தடையாகவில்லாமலிருப்பதே வெளியொழுக்கத்தின் கடமை. அதைவிட்டு, அந்த ஆசாரங்களால் கட்டுண்டு நிற்பது உயிரின் இயல்பல்ல. இந்த உண்மையை நாம் அதிக கவனத்துடன் விசாரித்து உணர்ந்து கொள்ளவேண்டும்.

எனவே, நம்முல ஒழுக்கங்கள், குல ஆசாரங்கள், இவைகளினுடைய நோக்கமானது : உயிரை, உண்மையை மறைத்து நிற்கும் இருளைப் போக்கக் கூடியவைகளாயும், மேலும் மேலும் உயிரிபக்கத்திற்குப் பொருத்தமான வழிகளாயும் அமைந்திருக்க வேண்டும் என்பதேயாகும். உயிரினுடைய அமைவும் ஆற்றலும் அதன் வெளித் தோற்றமாகிற ஒழுக்கத்திலே விளங்கல் வேண்டும்.

**உயிரற்ற பழக்கங்களும் தீய வொழுக்கங்களும்.**

ஆனால் உலகத்திலே உண்மை ஒழுக்கமும் உயிரற்ற பழக்கங்களும் கலந்து நிற்கின்றன:

நாம் உட்கொள்ளும் உணவானது தூயகலத்தில் வடிக்கப்பட வேண்டுமெனற ஆசாரம், கலம் என்கிற பொருள் மாத்திரம் தழுவி நின்று விட்டது. உணவின் தன்மையையும், கலத்தின் தூய்மையையும் மறந்துவிட்டோம். எந்த உணவானாலும் இலையில் —எவ்வளவு அசுத்தமான இலையானாலும்—உதவலாம் ; அந்த இலையானது அரைகுறையாகச் சுத்தமானாலும் பாதகமில்லையென்பதாக இப்போது வெறும் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதில் நாம் எவ்வளவு தூரம் உண்மையைவிட்டு விலகி நிற்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இது ஒரு சிறு விஷயம். இது போன்ற அளவில்லாப் பழக்கங்கள் நம்மிடமிருக்கின்றன. செங்குந்த மக்களிடையே சில உயிரற்ற ஆசாரங்கள் உண்டு. இந்தக் குல ஆசாரங்களால் விளைவது இன்னலேயாகும் : பிறர் ஏளனம், அவமதிப்பு —பொதுவாகத் தாழ்வு.

ஒரு குலத்தவரை அதிக இழிவுபடுத்துவது அச்சாரபினர்களிடம் பரவியிருக்கும் வெளிப்படையான தீய வொழுக்கங்களல்லவோ? யோசியுங்கள்

உடலுக்கு மாத்திரமல்ல, புத்திக்கும், பொருளுக்கும் தீமை விளைவிக்கும் பழக்கங்கள் புலாலுணவுகளும், மயக்கபானங்களும, இவை போன்றவைகளுமல்லவோ? உயிர் நீங்கி அழிந்துபட்டுக்கிடக்கும் மாமிசமோ, காய்ந்து நாறும் உடல்களோ,—இவைகளை வயிறுறப் புசித்துக் களித்துவரும் வருக்கத்தினர் எங்ஙனம் பிறர் முன்பாக ஈடேறுவது?

'இவனைப் பார்' என்று சுட்டிக் காட்டி நாலு பேர் நகைக்கக்கூடிய நிலையில் இறக்கி விடுகிற பானத்தை யுண்டு திளைக்கும் மனிதனும் மனிதனோ? இம்மாதிரியான மாக்களல்லவோ குலத்தின் பெருமையைக் கெடுப்பவர்கள்?

ஒருவர் பசுகளில், ஒரு கும்பலில், வாய் திறந்தால் பிறர் நம்மை அவமதிக்கும்படி செய்வது இப்பழக்கமல்லவோ? இதோடு புகைப் பழக்கமும் இருந்துவிட்டால் சொல்லவேண்டியதில்லை. வாலிப நண்பர்களே, கவனியுங்கள்.

இவைகளெல்லாம், நம் குலத்தவர்களிடம் நடுவில் வந்தேறிய தீய ஒழுக்கங்களேயாகும். ஆதித்திராவிட நண்பர்களும் இவைகளைக் கண்டித்துப் பேசி, பேசுவதோடு நிற்காமல், விலக்கியும் வருகிறார்களென்றால், நம் மக்களுக்கு வேறென்ன உரைக்கக் கிடக்கிறது?

**ஏழ்மையும் பிள்ளைப்பேறும்.**

இதோடு, பிள்ளைகுட்டிகளைப் பெறுவதிலேயே காலம் கழிக்கிற பழக்கத்தையும் கவனிக்கவேண்டும். பலமற்ற, நோய்க் களஞ்சியங்களான பிள்ளைகளைப் பெற்றுப் பெற்று இடுக்கணுறுவது அறியாத்தன்மையே யாகும். என்னுடைய இந்த அபிப்பிராயம் நண்பர்களுக்கு வியப்பாகத் தோன்றலாம். ஒவ்வொருவரும் தாம் தாங்கக்கூடிய அளவில் சுமையை ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமேயன்றி, அதிகமதிகமாகக் கண்ணை மூடிக்கொண்டு சுமையைக் கனப்படுத்திக் கொள்வது முடிவில் குலத்திற்குக் கெடுதி விளைவிக்கக் கூடியதாகும் என்பதே இங்கு நான் குறிப்பிடுவது.

இப்பழக்கங்களோ ஏழ்மையினின்றும், தாழ்வினின்றும் ஏறுதவழி நம்மவர்களைத் தடை செய்துகொண்டே யிருப்பவைகளாகும்.

இவைகளுக்காக எளிய முறைகளில் திருத்தங்கள் செய்துகொள்ளவேண்டும்.

**ஒற்றுமையும் உண்மையும்.**

இன்னும், நம்மவர்களிடம் உண்மை, ஒற்றுமை என்னும் இலங்களை அதிகப்படுத்திக் கொள்ளவேண்டும். உண்மையைக் கைக்கொண்டவர்களே எவ்வகையிலும் முடிவில் மேன்மையடைபவர்கள். உண்மைப்பின் சென்றால், போலிச் சாதியார், உண்மை மரபினரென்ற சண்டைகள் நிகழா ; பிறழ்ச்சியான வழியில் வந்தவர்கள், தாங்கள் நேர்வழி வந்தவர்களென்று சாதிக்கமாட்டார்கள்; பொருள் மிகுதியாலும், பிறவேறு உபாயங்களாலும், வறுமையிலுள்ளோரை வலிந்திசைக் கெடுக்கார்கள் ; தங்கள் வழி யாதாயினும், தங்களிடையே நல்லொழுக்கங்களை யமைத்துக்கொள்வதே அவர்கள் முன்னேற்றத்தின் முதற்படியாமென உணருவார்கள்.



**உள்ளும் புறமும் ஒழுங்குபடவேண்டும்.**

உண்மையென்பது உள்ளும் புறமும் ஒற்றுமை யென்பதையும் குறிப்பிடுகிறது. நமது வெளி ஆசாரங்கள் உள்ளே நிறைந்திருக்க வேண்டிய குணங்களைக் காட்டுவனவாக விருப்பதே முறை. வெளி அபிவிருத்தியொன்றே போதுமெனக் கொள்வது, உயிரற்றுக் கிடக்கும் ஒருத்திக்கு நகைபோட்டு அழகு பார்ப்பதுபோலாகும்.

**நம்மவர் பண்டைய திட்டங்கள்.**

இதுபோலவே, வகுப்பினருக்குள்ள சிறு வித்தியாசங்களையும் விவகாரங்களையும் சீர்படுத்தி வைத்துக்கொள்வதும் முன்னேற்றத்தின் குறியேயாகும். இந்த வகையில் செங்குந்தர்கள் முற்காலத்தில் அதிக மேன்மைபெற்றிருந்தார்கள். ஆங்காங்கு பெரியதனம், நாட்டாண்மை, மகாநாடுபோன்ற அதிவிமரிசையான திட்டங்கள் அமைக்கப்பட்டிருந்தனவென்று தெரிகிறது. ஆனால் எக்காரணங்களாலோ அவைகளெல்லாம் இப்போது போலிப் பழக்கங்களாயும் பட்டங்களாயுமே நிற்கின்றன. இக்காலத்திற் குரியவைகளாகப் புது முறையில் அமைக்கப்படின் அவைகள் இன்னும் பயன்தரக் கூடியவைகளாக விருக்கும்.

**ஒழுக்கம் நிறைந்த கல்வியின் அவசியம்.**

இச்சீர்திருத்தங்களைச் செய்வதற்கும், மூக்கியமாக அவைகளை ஏற்றுக்கொள்வதற்கும் நம்மவர்களிடையே கல்வி பரவவேண்டும். கல்வி அவசியம்.

உலகப்போக்கு, உயிர் இயக்கம், ஒழுக்கத்தின் உண்மை, அதன் அமைப்பு, இவைகளைப் பற்றி யறிந்துகொண்டால் தான் நமக்குள்ள விபரீத, அல்லது குருட்டு, கொடிய ஆசாரங்கள், விவகாரங்கள் தொலையும். அதற்குக் கல்வி இன்றியமையாதது. ஆனாலொன்று, ஒழுக்கமில்லாக் கல்வி வேண்டாம். ஒழுக்கத்திற்குத் துணையா யிருக்கும் கல்வியே வேண்டுவது. ஒழுக்கமற்ற கல்வி பெரும் கொடிய விஷமே யாகும். கெட்டதை நல்லதென்றும், பொய்மையை மெய்மையென்றும் சாதிக்கும். ஆகையால் ஒழுக்கக் கல்வியே ஆரம்ப கல்வியாக இருக்கவேண்டும். நம்மவர்களுக்கு இம்மாதிரி கல்வி ஏற்படாத வரையில்—நம்மவர்களிடையே இம்மாதிரி கல்வி பரவாத வரையில் நம் குல முன்னேற்றத்தைப் பற்றி வேறு வகையில் நினைப்பது கனவாகவே யிருக்கும்.

**கல்வியின் நோக்கம்.**

கல்வி கற்பது அரசாங்கத்தில் அலுவல் செய்வதற்கல்ல அரசாங்க அலுவலானது ஏனைய தொழில்களைப்போல ஒரு தொழில்தான் என்பதை நன்றாய் மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். இப்போது அம்மாதிரியான எண்ணம் கல்வி கற்பவர்களிடமுமில்லை, கற்பிப்பவர்களிடமுமில்லை யென்பது நன்றாக விளங்குகிறது. சாக்ஷியம் வேண்டுமா? சொல்லுகிறேன்.

**பெண்கல்வியின் அத்தியாவசியம்.**

இந்தக் கோணலான, தப்பான அபிப்பிராயத்தினாலேதான்,—அதாவது கல்வி கற்பது அரசாங்கத்தில் அலுவல் பெறுவதற்கே என்னும் அபிப்பிராயத்தினாலே தான்,—பெண் கல்வியை நாம் கவனிக்காமலிருக்கிறோம். இதுவே சாக்ஷி, 'படித்துவிட்டென்ன! அலுவல் பார்க்கப் போகிறாளா?' என்கிறோம். இவ்விஷயத்தில் நன்றாய்க் கவனித்துப் பாருங்கள்.

எங்கே பெண்மணிகள் முன்னேற்ற மடையாமலிருக்கிறார்களோ, அந்தக் குலத்தவர்கள் தாழ்ந்தவர்களாகவே இருப்பார்கள். இது ஞாயமே.

ஒழுக்கமென்பது இருபாலாருக்கும் பொதுவாகவிருக்க, ஒழுக்கத்தினிடையே அறியாமையால் ஏற்படும் இழுக்குகள் இருபாலர்களிடமும் காணப்பட, ஒழுக்கத்தின் சிறப்பையும், அதனிடை யுதிக்கும் விபரீதங்களையும் நன்குணர வேண்டியது ஆண்மக்களுக்கு மாத்திரந்தான் அவசியமா? உசிதமானதா? சொல்லுங்கள்.

கல்வியானது ஒழுக்கத்தை நிலைநிறுத்தி உயர்த்துகின்ற வழியென்றும், அது அலுவல் செய்வதற்கல்லவென்றும் உணராத குற்றத்தால் தான் ஸ்திரீகளுக்குப் படிப்பு வேண்டியதில்லையென்று நினைக்கிறோம்,

ஒரு சாதியாரில் பகுதியான பெண்மக்கள் நீங்க, ஏனைய ஆண்மக்கள் மாத்திரம் அந்தச் சாதியை முன்னுக்குக் கொண்டுவர முயலுவதும், முடியுமென்பதும், காலில்லாத ஒருவன் காததூரம் நடப்பேன் என்பதுபோலாகும்.

அன்றியும், முன்னேற்றத்திற்கு வேண்டிய சில நற்குணங்கள் பெண்மக்களிடம் அமைந்துள்ளன. இயற்கையாகவே உணர்ச்சி அவர்களுக்கதிகம்; பொறுமை, அதாவது கஷ்டத்தைத் தாங்கி நிற்கும் இயல்பு, இரக்கம், தியாகம் அவர்களிடம் அதிகமுண்டு. வாழ்க்கைப் போரில் அவர்களுடைய உதவியின்றி எவனும் குடும்பம் நடத்த முடியாதென்பது எல்லோருடைய அனுபவமல்லவோ? இம்மாதிரியான குணங்களமைந்த பெண்மக்கள் அவர்கள் வழியில் பொதுக் காரியத்திற்கு, பொது அபிவிருத்திக்கு ஒத்துழைக்காவிடில் வெற்றி பெறுவது எங்ஙனம்? முடியுமா சொல்லுங்கள்! இக்காரணங்களை முன்னிட்டுப் பெண்களுக்கும் கல்வி அவசியமென்பதைக் குறிப்பிட்டேன்.

**உண்மையும், நாணயமும், நம்பிக்கையும், புத்தி நுட்பமும் நிறைந்த தொழில்முறைகள் அவசியம்.**

ஒழுக்கமில்லாக் கல்வி எப்படி சிறக்காதோ, தீங்காக முடியக்கூடுமோ, அதுபோலவே ஒழுக்கமும் கல்வியும் அமைந்திராத தொழில் முறைகள் சீரடைவதில்லை.

உண்மை, நாணயம், நம்பிக்கை, ஒத்துழைத்தல், நுண்ணறிவாராய்ச்சி—இவைகளில்லாத எத்தொழிலும் விருத்திக்கு வருகிறதைப் பார்க்கிறோமில்லை. காலங்களுக்குத் தக்கவாறு, புத்தி நுட்பத்தால் தொழில்களையும் தொழில் முறைகளையும் சீர்படுத்தவேண்டும். தேகப் பிரயாசையைக் குறைப்பதும் ஊதியத்தைப் பெருக்குவதுமான நல்ல வழிகளில் தொழில்கள் நடைபெறவேண்டும். இங்கும் அநேக பண்டைப் பழக்கங்கள் தடைகளாக விருக்கும். அவைகளை விலக்கிக் கொள்ளவேண்டியதும் முன்னேற்றத்தின் நற்குறியாகும்.

தொழில் முறைகள் சிறந்து நடந்தால்தான் குலமானது செழிக்கும்; நன்மதிப்புப் பெறும்; வருவாய்கள் அதிகப்படும்.

**குலமுன்னேற்றத்திற்கென ஒரு பொதுநிதி வேண்டும்.**

இங்குக் கவனிக்கவேண்டியது: ஒவ்வொருவரும் தமது வருவாயில் பாதாகிலும் தன் சக்திக்கமைந்த பகுதியைப் பொதுவிற்கு வைத்தல் வேண்டும். இம்மாதிரியான பொது நிதிகள் ஆங்காங்கு ஏற்படுத்துவதோடு குல முன்னேற்றத்திற்காக மேல் நிதியொன்று அவசியம் சேர்க்கவேண்டும். இதைப் பரிபாலிப்பதற்கும், குலமுன்னேற்றப் பிரசார வெளியீடு முதலிய வேலைகளுக்கு உபயோகப்படுத்தவும், நிர்வாக சபையிருப்பதும் அவசியம். இவ்வகையாகக் காரியங்கள் நடைபெறுமானால் முயற்சிகளும், பொருள்களும் வீணாகச் சிதறுண்டு போகாமல், கூடிய நற்பயனை யளிக்கும்.

**மூன்று துறைகளில் திருத்தங்கள் அவசியம்: ஒழுக்கம், கல்வி, தொழில்.**

இவைபோன்ற ஏற்பாடுகளும் திருத்தங்களும் செங்குந்த குலத்தினருக்கு வேண்டற்பாலன. இத்துறைகளைச் சுருக்கமாகச் சொல்லின், ஒழுக்கம், கல்வி, தொழில் என்ற மூவகையிலடங்கும். இதில் ஒழுக்கத்தைப் பற்றியே அதிகமாகவும், அதன் சம்பந்தமாகவே கல்வி, தொழில் இவைகளைப்பற்றிச் சில குறிப்புகளாகவும் கூறிவந்தேன். வேறு நண்பர்கள் கல்வியையும் தொழிலையும் பற்றி விரிவாகப் பேசுவார்கள். ஆங்குக் கண்டுகொள்க. அன்றியும் இப்போது நடைபெறும் மகாநாடும் இவ்வகையாகவே விரிந்து தோன்றுகிறது.

**நம்மவரது மூன்று மகாநாடுகள்.**

ஒழுக்கமுறை எதற்கும் எல்லோருக்கும் பொதுவானதால் அதைப் பற்றிப் பொதுநாடு விசாரித்து ஏற்பாடுகள் செய்யவும், கல்வியானது இளைஞர்களுக்கு முக்கியமானதால்வாலிப நாடானது அதைப்பற்றியே ஆலோசனைகள், முடிவுகள் செய்யவும், இவை நற்பயனளிப்பதற்குப் பொருள் வேண்டியிருப்பதால், அப்பொருள் வருவாயைப்பற்றியும் அதை யுபயோகிக்கும் நல் வழிகளைப்பற்றியும் கலந்து சீர்திருத்தங்கள் செய்ய வர்த்தக மகாநாடும் கூட்டப்பட்டிருக்கின்றன.

**அரசியல் விஷயமாக அபிப்பிராயம்.**

அரசாங்க விஷயமாக எந்த முறையையும் என்னிடமிருந்து நண்பர்கள் எதிர்பார்க்கமாட்டார்களென்று நம்புகிறேன். யான் வேற்றரசாங்க எல்லையில் இருப்பவனென்பது வெளிப்படை. ஆங்கே எங்களுக்குள்ள உரிமைகளை மாத்திரம் குறிப்பிடுகிறேன். வகுப்புப் பிரதிநிதித்துவம் கிடையாது. இந்த இந்த ஜாதியார்களுக்கு இத்தனை அரசியல் இடங்கள் என்ற நியமமும் இல்லை. எந்த வகுப்பினர்கள் அதிக எண்ணுடையவர்களோ அவர்களுடைய வாக்குகளே தேர்தல்களில் வெற்றி பெறுகின்றன என்பதேயாகும். அன்றியும், அரசாங்க வியலில் அமைக்கப்படுவார்கள் பொதுநோக்குடையவர்களாகவும் சிரமம் பார்க்காமல் உழைப்ப



வர்களாகவும் இருக்கவேண்டும். எனவே, யான் இப்பொழுது சொல்லக்கூடியது ஒன்றே. அரசாங்கத்தாரிடமிருந்து யாதொன்றையும் ஐயம் கேட்டு வாங்குதல் முன்னேற்றத்திற்கு முரண் என்பதே. உள்ள உரிமைகளைக் கேட்பதும், அவைகளுக்காக வாதாடுவதும் நியாயமே எனினும், கெஞ்சிக் கேட்டல் என்ற நிலையானது கேட்பவர்களுடைய பலவீனத்தையும் தாழ்மையையும், கொடுப்பவர்களென்று கருதப்படுகின்றவர்களுடைய பலத்தையும் உயர்வையும் குறிப்பிடுவதுடன், அவைகளை அதிகப்படுத்துகின்றது என்ற இந்த முறையில் எங்கள் எல்லையின் அனுபவத்தை நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொண்டேன். இதைப்பற்றி விரிந்த ஆலோசனை செய்யவேண்டியது மகாநாட்டின் பொறுப்பேயாகும்.

**மதசம்பந்தமாக அபிப்பிராயம்.**

மதசம்பந்தமாகவும் யானொன்றும் சொல்லத் துணிகின்றேனில்லை. கோயில் குளங்களை அமைப்பதிலும் புதுப்பிப்பதிலும், விழாக்கள் ஆடம்பரங்களை அதிகப்படுத்துவதிலும் நம்மனோர் பொருள்கள் அளவின்றிச் செலவாகின்றனவென நான் சொல்வது மிகையாகும். எதற்காகஇவைகளில் பொருட்களைப் புகுத்துகிறோம் என்பது புலப்படவில்லை. யோசித்துப் பாருங்கள். தற்பெருமை, தற்புகழ்ச்சி என்னும் மயக்கத்தாலன்றி அறிவுடையோர்கள் இச் செலவுகளைச் சுருக்கியே வைப்பார்கள். செய்யாமல் அறவே விடினும் நிகழ்வது யாதோ குற்றம்? தெய்வ பயமோ? பயப்பிக்கும் கடவுளும் கடவுளாமோ? அருளுருவனன்றோ இறைவன்? அன்பே சிவமென்பதும் பொய்யாமோ? ஆங்காங்குச் சுற்றிலு மெலிந்து நலிந்து கிடக்கும் நடமாடும் கோயில்களை கவனியாதார் பொருள்கள் படமாடும் கோயில்களில் யாதொரு பலனையும் கொடாது. இந்த உண்மையை நிதானித்து ஆராய்ச்சி செய்யவேண்டும். அதிகமாக எடுத்துக் கூறுவது பல நண்பர்களுக்கு விபரீதமாகப் படுமென வெண்ணி விடுக்கின்றேன்.

**முடிவுரை.**

ஆகையால் இப்போது துவக்கும் வேலையானது எல்லா வகையிலும் நமது செங்குந்த குலமக்களுக்கு அதி முக்கியமானது.

இதன் உட்பிரிவுகளைப்பற்றி நன்கு ஆராய்ச்சி செய்யுங்கள்.

பொதுவாக யான் குறிப்பிட்ட வழிகள் சரியென ஏற்றுக்கொள்ளவேண்டாம்; ஆனால் சரியல்லவென்றும் தள்ளிவிடவேண்டாம். அவைகளைப்பற்றி நன்றாய்ப் பரிசீலனை செய்யுங்கள், சரியாயுள்ளதைக் கொள்ளுங்கள்; சரியில்லாததைத் தள்ளிவிடுங்கள்.

இவைகளுக்கெல்லாம் ஆதாரங்களும் சாத்திரங்களும் காட்டவில்லையே யென்று தயங்கவேண்டுவதில்லை. நமது சொந்த யோசனையாலேயே புத்தி தெளிவடைகிறது. ஒவ்வொருவரும் நமதறிவிற்கு நிச்சயப்படாத வொன்றை நம்பிக் கைக்கொள்வது பிசகேயாகும்; அப்படி கொள்ளும் நம்பிக்கையும் நிலைக்கிறதில்லை; ஆபத்து சமயத்தில், அவசியமான நேரத்தில் சந்தேகம் உதித்துவிடும்; மனம் கலங்கி நிற்கும். அதற்காகத்தான், நன்கு பரிசீலனை செய்யுங்களென்று நண்பர்களை யான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இவ்வளவு ஆர்வத்துடனும் ஒரு மனதுடனும் கூடியிருக்கும் நண்பர்கள் முன்னின்றால் முடியாத தொன்றுமிராது.

செயற்கரிய செய்தோர்கள் நம் குலத்தோர்கள் என்பதை மறக்கவேண்டாம்.

இம்மாதிரியான ஒற்றுமையும் அன்பும் எங்குள்ளதோ, அந்த மகாநாட்டினிடையே நம்மிறைவனுடைய அருளும் அமைந்து நிற்கும் என்பதில் எனக்குச் சந்தேகமே யில்லை.

யாமோ தியகல் வியுமெய் யறிவுந்
தாமே பெறவே லவர்தந் தனரால்
பூமேன் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே நடவீர் நடவீ ரினியே.

குமரகுருபரன் கழல் நமதுறு துணை.

---

தலைவருரை முடிந்தவுடன் ஜே கோஷ்டங்களும், கரகோஷமும் வானையும் பிளக்குமாறு மகாநாட்டுப் பந்தலில் ஆர்ப்பரித்தன. பிரதிநிதிகள் தலைவரின் அருமை வசனத்தைக் கேட்டு அதனை நம் குலமுய்யவந்த அமிர்த வாரியெனப் பாராட்டி மகிழ்ந்தனர்.

முதலாவது செங்குந்தர் மகாநாட்டுப்

# பொருட்காட்சித் திறப்பு

இதன் பிறகு மகாநாட்டுப் பொருட்காட்சிகளைக் 'குடி அரசு' பத்திராதிபர் திரு. ஈரோட்டு ஈ. வி. இராமசாமி நாயக்கர் அவர்கள் பின்வரும் சொற்பொழிவினை நிகழ்த்தித் திறந்து வைத்தனர் :—

## திரு. ஈ. வி. இராமசாமி நாயக்கர் அவர்கள் பொருட்காட்சித் திறப்புரை

அன்புள்ள சகோதரர்களே! இன்று தென்னிந்திய செங்குந்தர் முதலாவது சமூக மகாநாட்டின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட இப்பொருட் காட்சியைத் திறந்துவைக்கும் பெருமையை எனக்கு அளித்ததற்காக என் மனப் பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். வெகுசொற்ப கால முன்னறிவிப்பில ஏற்பாடு செய்யப்பட்ட பொருட்காட்சியானாலும், இதில் ஏராளமான சாமான்கள் வந்து குவிந்திருப்பது போற்றத் தக்கதாகும்.

பொருட்காட்சிகள் என்பன மக்களின் முன்னேற்றத்திற்குரிய சாதனமாகும். வியாபாரம், கைதொழில, சிக்கனம் ஆகியவைகளின் முன்னேற்றம் பெரிதும் பொருட்காட்சியினாலேயே ஏற்படும். ஒவ்வொரு நாட்டாருடையவும் கைத்தொழில், பொருள் வரவு, மனோபாவம், தொழில் திறம், செய்யும் மாதிரி ஆகியவைகள் தெரியவும், மற்றவர்கள் அதைப் பின்பற்றவும், இன்னும் இம்மாதிரி எத்தனையோ விஷயங்களுக்கு இப்பொருட்காட்சிகள் பயன்படுகின்றன.

எவ்வளவோ கைத்தொழில்களுக்கு நமது நாடு மிகப் பழமையானதும், பெயர் போனதுமாயிருந்தாலும், நாம் கைத்தொழில் முறையில் ஒரு சிறிதும் முற்போக்கடையவில்லை என்பதைத் தெரிவிப்பதற்காக நீங்கள் வருத்தப்படக் கூடாது. பொருட்காட்சி என்பது கண்டுபிடித்தல் (இன்வென்ஷன்) மேலும் மேலும் முற்போக்கடைதல் என்கின்ற தத்துவம் அடங்கியது.

### நமது நாட்டில் பழைய முறைகளின் ஆதிக்கம்

ஆனால் நமது நாடு பழமையைக் கெட்டியாய்க் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருப்பதில் உலகத்திலேயே பேர்போனது என்று சொல்லவேண்டும். மேல்நாட்டார், அவர்கள் கண்டுபிடிக்கும் விஷயங்கள் எவ்வளவு மேலானதாயிருந்தாலும், மேலும் மேலும் அதிலிருந்து சீர்திருத்தம் கண்டுபிடிப்பதிலேயே கவலை கொள்ளுவார்களேயொழிய, ஓய்வெடுத்துக்கொள்ள சம்மதிக்கவே மாட்டார்கள். உதாரணமாக, ரயில் வண்டி, இரண்டு சக்கரவண்டி, மோட்டார்கார், ஆகாயவிமானம் ஆகிய வாகனசம்பந்தமானவைகள் ஒவ்வொருநாளும் புதுப்புது சீர்திருத்தங்களுடனே வெளிவந்துகொண்டிருக்கின்றதைப் பார்க்கிறோம். நாளுக்குநாள் விலை குறைவு, செலவு சுருக்கம், காலம் சுருக்கம், சாமான்கள் கெட்டி ஆகிய துறைகளில் ஆராய்ச்சி செய்து கொண்டே இருக்கின்றார்கள். இதுபோலவே ஒவ்வொரு துறையிலும் அற்புதங்களைக் கண்டு பிடித்துக்கொண்டே இருக்கின்றார்கள். இவற்றைத் தாராளமாய்த் தங்கள் நாடு முழுவதும் பயனடையும்படி பரப்பிக்கொண்டே வருகின்றார்கள். ஒவ்வொரு தொழிற்சாலைக்காரரும் வியாபாரியும் ஆராய்ச்சிக்காகவும் புதியமுறைகள் கண்டுபிடிப்பதற்காகவும் தங்களது வரும்படிகளிலும் சொத்துக்களிலும் தக்க பாகத்தை ஒதுக்கிவைத்து வருகின்றார்கள். நமது நாட்டிலோ ஆராய்ச்சி என்பதோ, புதியமுறைகள் என்பனவோ, மக்களின் காதுகளுக்கு வெறுப்பாகவும் கண்களுக்கு கோவாகவும் கருதப்படுகின்றன.

சாதாரணமாக நம் ஊர்களிலுள்ள ஒற்றைமாட்டு வண்டி, இரட்டைமாட்டு வண்டிகளை எடுத்துக்கொண்டால், எனக்குத் தெரிய 40,50 வருஷகாலமாக இதேமாதிரியாகத்தான் இருக்கின்றது. வண்டிக்குள் உட்கார்ந்து ஒரு பத்து மைல் பிரயாணம் செய்துவிட்டால் இடுப்பு ஒடிந்துவிடும், முதுகு வளைந்துவிடும், உடல் வலி நிற்க ஒரு வாரமாகும். கெர்ப்ப ஸ்திரீயாயிருந்தால் வண்டியிலேயேபிரசவமாகிவிடும். இது 50 அல்லது 100, 200 வருஷம் என்று கூடச் சொல்லலாம். இது வரையில் ஒரு கடுகளவு கூட அவைகள் முன்னேற்ற மடைந்திருப்பதாய்ச் சொல்லமுடியாது. பணக்காரர்களாயிருந்தால், வெள்ளியில நுகத்தடி போட்டுத் தகத்தில் பூண்கட்டி, இரண்டு வைரமோ கெம்போ



புதைத்துவிட்டால் அதுவே விசேஷ வண்டியாக மதிக்கப்படுகின்றது.

இம்மாதிரியோ நூல் நூற்பதிலும் கூட சுமார் 100, 200 வருஷங்களுக்கு முன் செய்த ராட்டினம் எதுவோ, அதுதான் இன்றும் பூஜிக்கப்படுகின்றது. 200 வருஷத்திற்கு முன் ஒரு நாளைக்குப் பத்து ரூபாய் எடை பஞ்சு நூற்று முக்காலணா அல்லது ஒரு அணா கூலி பெற்றிருந்தால், இன்றைக்கும் 9 அல்லது 10 ரூபாய் எடை பஞ்சுதான் நூற்று 8 அலலது 9 காசு கூலிதான் வாங்கவேண்டும். இந்த முறையைச் சற்றும் மாற்றாமல் குரங்குப் பிடிவாதமாய்ப் பிடித்துக்கொண்டிருப்பது தான் இப்போது நமது முன்னேற்ற வேலை, விடுதலை வேலை, ஏழைகளைக் காப்பாற்றும் வேலை என்று மதிக்கப்படுகின்றது.

### மகாநாட்டில் பொருட்காட்சி வைத்திருப்பதின் அவசியம்

இன்னும் நெசவுத் துறையிலும் இதுபோலவே நமது நாட்டில் பெரும்பாலும் 100 வருஷத்திற்கு முன் இருந்த முறைகளே தான் கையாளப்பட்டு வருகின்றன. பொதுவில் கொஞ்சமும் மாறுதல் இல்லை. தென்னிந்தியாவில் உள்ள செங்குந்த சமூகம் ஒரு மதிக்கத்தகுந்த ஜன சங்கியை உடையதாக இருந்தும், இவ்வளவு பேருக்கும் 100-க்கு 99 பேருக்கு மேலாக நெசவுத்தொழிலாக இருந்தும், இது வரையில இச்சமூகம் எவ்வளவு முன்னேற்ற மடைந்திருக்கின்றது என்று பார்த்தால், செங்குந்தர்கள் என்பவர்கள் யார், நமது ஜனத்தொகை என்ன, என்கின்ற விஷயம் தெரிந்து கொள்ளவே இத்தனை காலம் ஆயிற்று என்று தான் சொலலவேண்டி இருக்கின்றது. மேலும் ஏதாவது முற்போக்கடைந்து இருக்கின்றோமா என்று பார்த்தால், நாம் எப்படி வந்தோம? நமது ஆதி பெருமை என்ன? என்பதைப் பற்றிய ஆராய்ச்சியில கவலை செலுத்தத் தக்க நிலைமையை அடைந்து, கண்டு பிடித்து விட்டோம் என்கின்ற சந்தோஷந்தான். எனவே இதுவேதான் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு சமூகத்தினுடையவும சமூக மகாநாட்டினுடையவும் கடமையாய இருந்து வருகின்றது. நான் இதுவரை சுமார் நூற்றுக்கணக்கான சமூக நாடுகள் பார்த்திருக்கின்றேன். அநேகமாய் ஒவ்வொன்றும் தத்தம் ஆதிப்பெருமையைப்பற்றி பேசுவதில் கவலை கொண்டிருக்கக் கண்டேனே யல்லாமல், இனிமேல் என்ன செய்வது என்பதை முக்கியமாய்க் கவனிப்பதைக் காணவில்லை. நாட்டின் முன்னேற்றமும், தங்கள் சமூக முன்னேற்றமும், தங்கள் நாடு ஆதியில் எப்படி இருந்தது என்று கண்டு பிடிப்பதிலும், தங்கள் சமூகம் ஆதியில் எப்படி இருந்தது என்று கண்டு பிடிப்பதிலும் ஒரு சிறிதும் அடங்கி யிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயம். இம்மாதிரி பொருட்காட்சிகளும் நூதன தொழில் முறைகளும், சமூக மக்கள் அனைவரும் குறைந்த கஷ்டத்தில் தாராளமாய் நல்ல ஜீவனத்திற்கு ஏற்ற மார்க்கம் ஏற்படுத்திக் கொள்ளுவதற்கும், மானத்துடன் அதாவது ஜீவனத்துக்காக உயிர் வாழுவதற்காக மானத்தையும் மனச் சாட்சியையும் பறிகொடுக்காமல், மனிதத் தன்மையோடு வாழும் நிலைமை உண்டாக்கிக் கொள்வதற்கும், தற்காலம் நமது நாட்டின் முன்னேற்றத்துக்கும் வழி காட்டிகளாகும். ஆதலால் இந்த இரகசியத்தை உணர்ந்து இச்செங்குந்த சங்கத் தலைவர்கள் இம்மகாநாட்டுடன் ஒரு பொருட்காட்சி ஏற்பாடு செய்தது மிகவும் அறிவுடைமையும் பொருத்தமானதுமாகும் என்று சொல்லி நான் அவர்களைப் பாராட்டுவதுடன் இதைத் திறந்து வைக்கும் கௌரவத்தை எனக்குக் கொடுத்ததற்காக மறுபடியும் ஒரு முறை எனது நன்றி அறிதலை தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

### விஷயாலோசனை சபை

பொருட் காட்சி திறந்துவைக்கப் பெற்றதும், தலைவர் திரு. ஆ. வே முத்தைய முதலியார் அவர்கள் மகாநாடு மீண்டும் மூன்று மணிக்குக் கூடுமென்றும், அதுபோது விஷயாலோசனை சபையைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும், தலைச் சங்கத்தின் சட்டதிட்டங்களின்படி ஜில்லாவிற்கு இரண்டு கனவான்கள் அந்தந்த ஜில்லாப் பிரதிநிதிகளாய்த் தேர்ந்தெடுக்கப் பெறவேண்டுமென்றும், அப்படித் தேர்ந்தெடுக்கப் பெறும கனவான்களின் பெயர்களைத் தலைவரிடம் மூன்று மணிக்கு அந்தந்த ஜில்லாக்காரர் கொடுக்கவேண்டு மென்றும் திட்டஞ் செய்தனர்.

## பிற்பகல் நிகழ்ச்சிகள்

பிரதிநிதிகள் தத்தம் போஜன விடுதிகளுக்குச் சென்று உணவருந்திவிட்டு வந்து மீண்டும் மூன்று மணிக்கு மகாநாட்டுப் பந்தலில் கூடினர். தலைவரவர்களும் எல்லோருக்கும் முன்பு குறித்த காலம் பிசகக்கூடாதென்னும் நியதியுடன் தலைவர் மேடையில் அமர்ந்திருந்தனர். ஜில்லா வாரியாகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துத் தலைவருக்கு உணர்த்துவதற்கு ஒரு மணி நேரமானது. கீழ்க் கண்டவர்கள் விஷயாலோசனை சபைக்கு அங்கத்தினர்களாக அமைக்கப்பெற்றனர் :—

## விஷயாலோசனை சபை அங்கத்தினர்

### உத்தியோக முறையில் அங்கத்தினரானோர்.

#### மகாநாட்டுத் தலைவர்கள்.

திருவாளர் ஆ. வே. முத்தைய முதலியார் அவர்கள், பி.ஏ., பி.எல்., புதுவை.

,, தெ. ப. கு. ஆறுமுக முதலியார் அவர்கள், தென்காசி

,, மா. வே. பீமராஜ முதலியார் அவர்கள், குடியேற்றம்.

#### வரவேற்புச் சபைத் தலைவர்கள்.

,, வா செ. செங்கோட்டைய முதலியார் அவர்கள், சென்னிமலை.

,, தி ஈா. கந்தப்ப முதலியார் அவர்கள், திருச்செங்கோடு.

,, ஈா. மு. சண்முகசுந்தர முதலியார் அவர்கள், ஈரோடு.

#### காரியதரிசிகள்.

,, V. V. C. V. நடேச முதலியார் அவர்கள், திருச்செங்கோடு.

,, ல. சுப்பராய முதலியாரவர்கள், சித்தோடு.

,, மெ. க. குழந்தையப்ப முதலியாரவர்கள், வைத்தூக்குழி.

,, க. பாலசுந்தர முதலியாரவர்கள், சென்னிமலை.

,, வ. மு. மொட்டையப்ப முதலியாரவர்கள், ஈரோடு.

,, ஓ. கோ. சென்னியப்ப முதலியாரவர்கள், ஈரோடு.

,, ம. லட்சுமண முதலியாரவர்கள், ஈரோடு

,, S. சென்னியப்ப முதலியாரவர்கள், ஈரோடு.

,, மு. பழனியப்ப முதலியாரவர்கள், சென்னிமலை.

திருவாளர் கு. வையாபுரிமுதலியாரவர்கள், ஈரோடு,

,, பீ. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள், காஞ்சிபுரம்.

#### தலைச்சங்கத்தின் நிருவாகிகள்.

,, தி. ஈா. சபாபதி முதலியார் அவர்கள், திருவாரூர்.

,, ம. சண்முகசுந்தரமுதலியார் அவர்கள், எம்.ஏ., எல்.டி., சென்னை.

,, மா. அ. கனகசபை முதலியார், அவர்கள், கோடம்பாக்கம்.

,, மா. பா. கந்தசாமி முதலியார் அவர்கள், பி ஏ., பி.இ., திருவல்லிக்கேணி.

,, மு. சரவண முதலியார் அவர்கள், திருமயிலாப்பூர்.

,, சை இரத்தினவேலு முதலியார் அவர்கள், சைதாப்பேட்டை.

,, சை. தே. நடேச முதலியார் அவர்கள், சைதாப்பேட்டை.

,, S. அண்ணாமலை முதலியாரவர்கள், புதுவை.

### ஜில்லாவுக்கு இருவராகப் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப் பெற்றவர்கள்

,, மா. பா. பரமகுருநாத முதலியார் அவர்கள், திருமயிலாப்பூர்.

,, தி. அ. சண்முக முதலியார் அவர்கள், திருவல்லிக்கேணி.

#### செங்கல்பட்டு ஜில்லா,

,, வீ. திருஞானசம்பந்த முதலியார் அவர்கள், காஞ்சிபுரம்.

,, ஆ. பசுபதிமுதலியார் அவர்கள், மாணம்பதி.

#### வடஆற்காடு ஜில்லா.

,, A. R. செல்லப்ப முதலியார் அவர்கள், தக்கோலம்.

,, K. A. சண்முகமுதலியார் அவர்கள், திருப்பத்தூர்.

#### தென்னாற்காடு ஜில்லா.

,, C. P. இரத்தினசபாபதி முதலியார், அவர்கள், பி.ஏ., பி.எல்., திருப்பாதிரிப்புலியூர்.

,, T. L. திருஞானசம்பந்த முதலியார் அவர்கள், திருவெண்ணை நல்லூர்.



#### தஞ்சை ஜில்லா

திருவாளர் சொ. வேலாயுத முதலியார் அவர்கள், திருவாரூர்.

,, ராம. நடராஜ முதலியார் அவர்கள், மன்னார்குடி.

#### திருச்சி ஜில்லா.

,, செ. பெ. வீ. பொன்னுசாமி முதலியார் அவர்கள், மண்ணச்ச நல்லூர்.

,, மு. ச. பொன்னுசாமி முதலியார் அவர்கள், தாத்தையங்கார் பேட்டை.

#### மதுரை ஜில்லா,

,, S. Rm. சுந்தர முதலியார் அவர்கள், மதுரை.

,, K. V. இராமசாமி முதலியார் அவர்கள், வேலாயுதம் பாளையம் புதூர், பழநி.

#### இராமநாதபுரம் ஜில்லா.

,, அ. கு. சி. குழந்தைவேலு முதலியார் அவர்கள், அருப்புக்கோட்டை.

,, இ. முனியப்ப முதலியார் அவர்கள் மண்டலமாணிக்கம்.

#### திருநெல்வேலி ஜில்லா.

,, S. பழநியாண்டி முதலியார் அவர்கள், பி ஏ., திருநெல்வேலி.

,, K. N. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், பி ஏ., அம்பாசமுத்திரம்.

#### மலையாளம் ஜில்லா.

,, கு. முத்துக்குமாரமுதலியார் அவர்கள், சொல்லங்கோடு.

,, R. ஆறுமுக முதலியார் அவர்கள், தாத்தமங்கலம்.

#### கோயம்புத்தூர் ஜில்லா.

,, A. சாமிநாத முதலியார் அவர்கள், காரமடை.

,, சி. அப்பாவு முதலியார் அவர்கள், பொள்ளாச்சி.

#### சேலம் ஜில்லா.

,, T. P. சாமிநாத முதலியார் அவர்கள், தாரமங்கலம்.

,, S. பெரியசாமி முதலியார் அவர்கள், அம்மாபேட்டை.

#### திருவாங்கூர் இராச்சியம்.

,, ப. வேலாயுத முதலியார் அவர்கள், கோட்டாறு.

,, A. S. முத்தையா முதலியாரவர்கள், பி.ஏ., கோட்டாறு.

#### கொச்சி இராச்சியம்

திருவாளர் மூத்தச்சிற்றம்பல முதலியார் அவர்கள்,

,, ரா. வேலாயுத முதலியார் அவர்கள்.

#### பிரெஞ்சு இந்தியா.

,, S. அண்ணாமலை முதலியார் அவர்கள், புதுவை.

#### இலங்கை.

,, K குழந்தைவேல் முதலியார் அவர்கள், யாழ்ப்பாணம்.

### தலைவர்களால் மாதர்களின் பிரதிநிதிகளாக நியமிக்கப்பெற்றவர்கள்.

சௌபாக்கியவதி ம. சுந்தரவல்லி அம்மாள், சென்னை (திரு ம சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., அவர்கள் மனைவியார்).

சௌபாக்கியவதி மீனாக்ஷியம்மாள், சொல்லங்கோடு (திரு. கொ. இராமலிங்க முதலியார் அவர்களின் மனைவியார்).

## தீர்மானங்கள்

விஷயாலோசனை சபை அமைக்கப் பெற்றதும், அரசரின் தேககலம், ராஜவிசுவாசம், நாட்டுத் தலைவர்கள் மரணத்துக்கு அனுதாபம், தலைச்சங்கத்தினர்க்கு நன்றி செலுத்தல் முதலிய சம்பந்தமான பொதுத் தீர்மானங்கள் மகாநாட்டில் அங்கீகரிக்கப் பெற்றன.

### கனம் கிருஷ்ணன் நாயரது மகாநாட்டில் வந்ததனுபசாரம்.

மகாநாட்டைத் திறந்துவைத்த சட்ட அங்கத்தினர் கனம் திவான் பஹதூர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் மாலை ஐந்து மணிக்கு மீண்டும் மகாநாட்டுக்கு விஜயம் செய்தனர். மேற்குறிப்பிட்ட தீர்மானங்கள் நிறைவேறியதும், திரு. ஈ. வே இராமசாமி நாயக்கர் அவர்களின் விருப்பத்தின்படி ஈரோட்டிலுள்ள பல சங்கத்தினரும் மகாநாட்டுப் பந்தலிலேயே கனம் நாயர் அவர்களுக்கு உபசாரப் பத்திரங்கள் படித்துக் கொடுக்கப் பெற்றன.

### தலைவர்களின் உருவப்படம்

இவ்வரவேற்புப் பத்திரங்களுக்குக் கனம் நாயர் அவர்கள் பதில் கூறியவுடன், மகாநாட்டுக்கு விஜயஞ் செய்திருந்த சில தலைவர்களின் உருவப்படம் ஒன்று மகாநாட்டுப் பந்தலுக்கு வெளியே எடுக்கப்பட்டது.

### விஷயாலோசனை சபைக்கூட்டம்

இரவு ஒன்பதரை மணி முதல் காலை 1 மணி வரையில் மகாநாட்டின் விஷயாலோசனை சபைக்கூட்டம். திரு ஆ. வே. முத்தைய முதலியார் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. விஷயாலோசனை சபைக்கூட்டத்தின் துவக்கத்தில தலைவரவர்கள் கீழ்க்காணும் அரிய உபந்யாசத்தைச் செய்தனர் :—

### தலைவர் முகவுரை

அன்பர்களே! இப்போது விஷயாலோசனை செய்வதற்காக இங்கு கூடியிருக்கின்றோமாகையால் இந்த வேலையை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் ஆலோசனை செய்வதில் சில முறைகளைக் கையாளுவது அவசியம். அப்பொழுதுதான் எடுத்துக்கொண்ட வேலை முடிவுபெறும்; முடிவுபெறுவதிலும் இனிது முடிவுபெறும்.


### நமக்கிருக்க வேண்டிய நோக்கம்

முதன் முதலில் விஷயாலோசனை செய்வது எதற்காக? பல நண்பர்களால் கொண்டுவரப்பட்ட பல தீர்மானங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து முடிவாக விஷயங்கள் இப்படியிருப்பது மேல் என்பதாகத் திட்டம் செய்துகொள்ளுவதற்கேயாகும். இதில் நாம் கவனிக்கவேண்டியது. ஆராயப்படும் தீர்மானங்களின் நோக்கமென்ன? நோக்கமெப்படியிருக்கவேண்டும்? என்பதே. மகாநாடு கூடியிருப்பது நண்பர்களுடைய சொந்த அபிப்பிராயங்கள் நிறைவேறுவதற்கல்ல. நம் சமூகம் முன்னேற்றமடைவதற்காகவேயாகும்: நமது குலம் இப்போதிருக்கும் நிலையினின்றும் வெளியேறி மேல் நிலையை யடையவேண்டும்; அதிக நன்மையையும் கீர்த்தியையும் பெற்று விளங்க வேண்டும் என்பதே. இந்த முறையில் நண்பர்கள் எல்லோரும் ஒரே அபிப்பிராயமுடையவர்களாக விருப்பார்களென்று நம்புகிறேன்.


### சொந்த அபிப்பிராயங்களுக்காகச் சமூக ஒற்றுமையையும் நலனையும் கெடுக்கக்கூடாது.

ஆனால், இம்மாதிரி பொதுக்காரியங்களைப் பற்றி விசாரிக்கப்புகும்போது, தனிமையான சில சொந்த அபிப்பிராயங்கள் இடையிடையே புகுந்துவிடுவது வழக்கம். அதாவது, நமக்குப் பிரியமான சில கொள்கைகள், பழக்கங்கள், இவைகளுக்கு எதிராகத் தீர்மானங்கள் வந்தால் நாம் பிடிவாதம் செய்ய முயலுவது, நமதபிப்பிராயங்களே நிறைவேற வேண்டுமென வாதாடுதல் போன்றவைகள் நிகழ்வது சகசம். இந்த விடத்தில் நண்பர்கள் சற்று நிதானித்துப் பார்க்கவேண்டும். இங்கே கூடியிருப்பது விஷயாலோசனைக் கூட்டம். இதில் ஆராய்ச்சி செய்ய வேண்டிய விஷயங்கள் பொதுவாக மகாநாட்டைப் பற்றியதேயன்றிச் சொந்த விவகாரமல்லவென்பதேயாகும். எத்தனையோ விஷயங்களில் நமது நோக்கமும் எண்ணங்களும் வேறுபடலாம் ஆனால் பொதுநலம், குலநலமென்பதாகப் பெருநோக்குடன் வேலை செய்யவேண்டிய விடத்தில், நமது சொந்த அபிமானங்களை விலக்கிவைக்க வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையே யாகும்.


உதாரணமாக, என்னைப்பற்றியே சொல்லுகிறேன். அப்படி செய்வதில் ஏனையோருக்கு மன ஆயாசம் உண்டாகாதல்லவோ? பந்திபோஜன விஷயத்தில் எனக்குத் தீண்டாமை, பார்வை விலக்கு இவை கிடையா. எச்சாதியரேனும் கூடவிருந்து அன்னமருந்துவேன்; சாப்பிட்டுமிருக்கிறேன். இம்மாதிரியான பழக்கம் பரவுவதால் சில நன்மைகள் உண்டு என்பதே எனது சொந்த கொள்கை ஆனால் இங்கே நாம் கூடியிருப்பது குலமுன்னேற்றத்திற்காக அல்லவா? அதற்குத் தக்க முறைகளை ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. இப்போது இதனிடையே எல்லா வருக்கத்தாரையும் சமபந்தியாகச் சேர்த்து அன்னமருந்த வேண்டுமென்றோ, அல்லது அப்படி செய்யாதொழிபவர்களைக் குறைகூறவோ யான் ஆரம்பிக்கும் பக்ஷத்தில், அது பிசகேயாகும். ஏனென்றால் நாமிப்போது கொண்டிருக்கும் நோக்கத்திற்கு அது முரணாகவிருப்பதாலே, குலவிஷயமாக ஒற்றுமை யேற்படவும், அந்த ஒற்றுமை காரணமாக மேன்மை யடையவேண்டுமென்ற நோக்கத்துடனும் கூடியிருக்குமிச்சமயத்தில் அதற்கிசைந்தவைகளை யானும் வந்திருக்க, இங்கே எனது சொந்த கொள்கை காரணமாக, இங்கு ஒற்றுமையைக் குறைக்கக் கூடியதான பலவேறு சாதியாருடன் சமாசபோசனம் செய்வதைப்பற்றி யான் வாதாடுவேனென்றால் காணயமாகாது. அது மாத்திரமல்ல; ஏற்றுக்கொண்டக் கடமைக்கு துரோகமுமாகும் என்ற இந்த உதாரணத்தை நண்பர்களுக்கு வற்புறுத்துகிறேன்.



மகாநாட்டுத் தலைவர்கள் (இரண்டாம் நாள் எடுத்த புகைப்படம்)



வர்த்தகர் மகாநாட்டு வரவேற்புத் தலைவர்
திரு. தி. ரா. கந்தப்ப முதலியார்.



வர்த்தகர் மகாநாட்டுத் தலைவர்
திரு. தெ. ப. கு. ஆறுமுக முதலியார்.



### குலநலமே நமது பெருநோக்கமாக இருத்தல் வேண்டும்

நம்மில் ஒவ்வொருவரும் இதேமாதிரியாக கடமை செலுத்தல்வேண்டும். நமது குலம் சீர்கெட்டிருக்கிறது நன்றாய்த் தெரிகிறது. அதை மேலுக்குக் கொண்டுவரவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் இங்கு ஒன்று சேர்ந்திருக்கிற நாம், இந்த ஒரே உயர்நோக்குடன் விஷய ஆலோசனை செய்யவேண்டுமேயன்றி, நமது சொந்த, அல்லது நமக்கு பிரியமான, வழியிலேயே பிறரையும் புகுத்தவேண்டு மென்பதை நீக்கிவிடவேண்டும் குல முன்னேற்றத்திற்காகச் செய்யும் ஏற்பாடுகள் நமது சொந்தத்திற்குக் கொஞ்சம் கஷ்டமாகவிருப்பினும், பொதுநலத்தைக் கருதி அவைகளை யேற்றுக்கொள்ள வேண்டுமென்பது நண்பர்களுக்குத் தெரியாமற் போகாது.

அது மாத்திரமல்ல. இம்மாதிரியான ஆலோசனை சமயங்களில் பல அபிப்பிராயங்கள் வெளிவரினும், பொதுவிற்கு நலமெனக் கருதப்படும் சில அபிப்பிராயங்களை கொள்ளவேண்டி யிருக்கும். பலரால் குலநலங்கருதி யேற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களை, ஏனைய சில அபிப்பிராய பேதமுள்ள நண்பர்களும், அதே குலநலங்கருதி, ஏற்றுக்கொண்டு நிறைவேற்றி வைக்க வேண்டுமென்பதே எனது கோரிக்கை.

முதன் முதலிலேயே எல்லாவற்றையும் சீர்படச் செய்துவிடுவது கடினம். சில விஷயங்களில் குறைவுகளிருக்கலாம். அதற்காகப் பிளவுகள் செய்வதானால் நம் குலத்திற்கே கேடு விளைவிப்பதாகும்.

இப்போது ஆராயப்போகும் தீர்மானங்களில் அனேகம் நமது குலத்திற்குள் ஒற்றுமையையும், உயிரொழுக்கத்தையும், பலத்தையும், சுயமரியாதையையும் உண்டுபண்ணுவதாக அமைத்துள்ளன ஆகையால் அந்த நோக்கோடு அவைகளை நண்பர்கள் விசாரித்துச் சிறு மாறுதல்கள் வேண்டின் அவைகளைச்செய்து ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன் நன்றாக ஆலோசியுங்கள். நமது குலத்தின் மேன்மை, குலத்தின் முன்னேற்றம், நண்பர்களுடைய தீர்மானங்களைப் பொருத்து நிற்கின்றன. சுலபமாகவும் தாமதமின்றியும் சில திருத்தங்கள் ஏற்பட்டால் முன்னுக்கு வந்துவிடலாம். இவைகளிடையே, முதற்படியிலேயே நம்மிடம் ஒற்றுமை யுண்டென்பதை உலகிற்கு விளக்கிக் காட்டவேண்டும். குலத்தின் புகழும்,குலத்தின் நலமும், குலமுன்னேற்றமுமே நமது உயர் நோக்கமாக விருக்கவேண்டும்.

---

## இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்

### முற்பகல்

### முதலாவது செங்குந்த வர்த்தகர் மகாநாடு

தை மாதம் 8ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குத் தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டின் ஒரு பிரிவாகிய முதலாவது செங்குந்த வர்த்தகர் மகாநாடு கூடிற்று, இம் மகாநாட்டினைத் திருவாரூர் முனிசிபல் வைஸ் சேர்மனும், நமது தலைச் சங்கத்தின் அமைச்சர்களுள் ஒருவரும், சிரிய செங்குந்த வள்ளலுமாகிய திருவாளர் தி. நா. சபாபதி முதலியார் அவர்கள் திறந்து வைத்தனர். அவர்கள் திறப்புப் பேருரையின்சாரம் கீழ்வருமாறு :—

### முதலாவது செங்குந்த வர்த்தகர் மகாநாட்டைத் திறந்துவைத்த

### திரு. தி. நா. சபாபதி முதலியார் அவர்களின்

# திறப்புரை

எனதருமைச் சகோதர சகோதரிகாள்! இன்று இங்குக் குழுமி இருக்கும் செங்குந்த வர்த்தகர் மகாநாட்டைத் திறந்துவைக்கும் பெரும் பாக்கியம் பெற்றதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இங்குக் கூடியிருக்கும் இக்கூட்டத்தில் என்னைவிட வயதிலும், கல்வி அறிவிலும், ஆற்றலிலும், வர்த்தக முறையிலும் பன்மடங்கு சிறந்தவர்கள் அனேகரிருக்க, இம் மகாநாட்டைத் திறந்து வைக்கும்படியான பாக்கியத்தை எனக்கு அளித்தது நான் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் ஓர் சமூக ஊழியனாக இருந்து பெரியோர்கள் இட்ட பணியைச் சிரமேற்கொண்டு கடனாற்றி வரும் காரணத்தினாலேயோ, அல்லது வேறு எக்காரணத்தினாலேயோ எனக்குத் தோன்றவில்லை. என்றாலும், இம்மகாநாட்டைத் திறந்து வைக்கும்படி தாங்கள் எனக்கு இட்ட கட்டளையானது தங்களைப்போன்ற வர்த்தக சீமான்களிடையே உறவாடவும், வியாபாரப் பெருக்கிற்கு அனுகூலமான வழிகளை யான் உணர்ந்து மேனிலைக்கு வரவும், தங்கள் உற்சாகமானது என்னை மென்மேலும் இத்தொண்டில் ஈடுபட்டுழைக்கத் தூண்டவும் எனக்கு அநுகுணமாதலால் சிறிதும் தயக்கமின்றி இம்மகாநாட்டைத் திறந்து வைக்க ஒப்புக்கொண்டேன்.

இன்று வர்த்தகர் மகாநாட்டைக் கூட்டவேண்டிய அவசியமென்ன என்பதை நான் விளக்கிக் கூறவேண்டியதில்லை. ஒரு சமூகமாவது, தேசமாவது, பொருளாதார நிலையில் விருத்தியடைந்து, செல்வாக்கும் அந்தஸ்தும் பெற்று விளங்கவேண்டுமானால், அது வர்த்தகம் ஒன்றினாலேயே பெறக்கூடும். அதிலும், நமது சமூகம் கைத்தொழிலையேமேற்கொண்டிருப்பதால், அதற்கு வியாபாரமே முக்கியமானது. எவ்வகை வியாபாரத் துறைகளிலும் பிற்போக்கடைந்திருக்கும் நமது சமூகம் நன்கு பயின்று முற்போக்கடைய வேண்டுமானால், புதிது புதிதாக நூதன முறையில் நமது வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டும். நமது சமூகம் நெடுநாளாக வியாபாரத் துறையில் அதிகம் ஈடுபடாமல் கைத்தொழிலையே விருத்தி செய்து கொண்டிருப்பதானது, நாம் முன்னேற்றமடையப் போதுமான வழியல்லவென்று நான் கருதுகிறேன். வியாபாரத் துறையில் நாம் விருத்தியடைய வேண்டுமானால் பலர் ஒன்றுசேர்ந்து ஐக்கிய நாணய முறையில் வியாபாரம் செய்ய வேண்டும். தனித்தனியே வியாபாரம் செய்து வருவதனால் ஒருவர்க்கொருவர் போட்டியுண்டாகி விலைகளைக் குறைத்து விற்றோடு, சரக்குகளை விலைகுறைபக் கேட்கவும் நேரிடுகிறது. அதனால் உற்பத்தி செய்கிறவர்களும் வியாபாரிகளும் லாபம் பெற முடியாமலிருக்கிறது. ஆதலால், முடிந்தமட்டும் கூட்டுறவு வியாபாரத்தை விருத்தி செய்வதோடு, அயல் நாட்டாருடன் கலந்து புதிய முறையில் அவ்வியாபாரத்தை நடத்தவேண்டுமென்றும், எத்துறையிலும் இவ்வர்த்தகர் மகாநாடு மேன்மையையடைய வேண்டுமென்றும் எல்லாம் வல்ல நமது முருகப் பெருமானைத் துதிசெய்து இவ் வர்த்தகர் மகாநாட்டைத் திறந்து வைக்கிறேன்.

### வரவேற்புத் தலைவர் சொற்பெருக்கு

இம்மகாநாடு திறந்து வைக்கப்பெற்றதும், இதன் வரவேற்புச் சபைத் தலைவர் சேலம் ஜில்லா போர்டு அங்கத்தினரும் சங்ககிரி தாலூகா போர்டு அங்கத்தினருமான திருச்செங்கோடு திரு தி ரா. கந்தப்ப முதலியார் அவர்கள் தமது வரவேற்புச் சொற்பெருக்கை நிகழ்த்தினர் :—



### முதலாவது செங்குந்த வர்த்தகர் மகாநாட்டு வரவேற்புச் சபைத்தலைவர்

### சேலம் ஜில்லாபோர்டு அங்கத்தினர்

### திருச்செங்கோடு தி. ரா. கந்தப்ப முதலியார் அவர்கள்

# சொற் பெருக்கு.

அவைத்தலைவர் அவர்களே!

சகோதர சகோதரிகளே!!

நமது செங்குந்த ஜனசமூகத்திலே சிறந்த கல்வியறிவுடையோர்களும், தனவந்தர்களும், வர்த்தக நிபுணத்துவம் வாய்ந்தவர்களும், உலகானுபவம் கைவரப்பெற்றவர்களுமான பல அறிஞர்களிருக்க என்னை இந்த வர்த்தக மாகாண மகாநாட்டின் வரவேற்புத் தலைமையை வகிக்குமாறு தேர்ந்தெடுத்து விட்டீர்கள். நான் இப்பெரியதொரு காரியத்தை வகிக்கத் திறமையற்றவனாயிருப்பினும் உங்கள் கட்டளையை மறுத்தற்கஞ்சி அதனை ஏற்றுக்கொண்டு எனது மனமார்ந்த வந்தனத்தை உங்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

இந்தச் 'செங்குந்த நகரிலே' இன்று உங்களனைவரையும் வரவேற்கும் பாக்கியம் எனக்கேற்பட்டிருத்தலைக் குறித்து மகிழ்ச்சியுறுகின்றேன்.

### பிற சமூகங்களும் நம்முடையதும்

நமது தேசத்தில் சொற்ப தொகையினராயுள்ள ஒவ்வொரு ஜாதியினருங்கூடத் தமது முன்னேற்றத்தின் பொருட்டு ஆங்காங்கே பல வருடங்களாக மகாநாடுகளைக் கூட்டியும், பத்திரிகைகளை வெளியிட்டும், பல அரிய பெரிய காரியங்களைச் செய்தும் படிப்படியாய் ஸ்தல ஸ்தாபனங்களிலும் பிற வகையிலும் மேன்மையை யடைந்து வருகின்றனர். நமது செங்குந்த ஜன சமூகமோ, ஆறுலட்சங்களுக்கு மேற்பட்ட பெருந்தொகையினரை யுடையதொன்றாயிருந்தும் இதுநாள் வரை முன்னேற்றத்திற்குரிய முயற்சியிலெதையும் கைக்கொள்ளாது வாளாவிருந்துவிட்டதை இந்தச் சமயம் வருத்தத்துடன் உங்கள் ஞாபகத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

### நாம் குழுமியிருப்பதின் நோக்கம்

கல்வி, வர்த்தகம் முதலான பல துறைகளிலும் சீரும் சிறப்பும் வாய்ந்திருந்த நமது ஜன சமூகம், தற்போது அவற்றிற் றாழ்வடைந்து, அரசாங்கத்தாராலும் பிற்போக்குடைய கூட்டத்திற் சேர்ந்ததெனக் குறிக்கப்படலாயிற்று. இதனையுணர்ந்த திருவாரூர் உயர்திரு. தி. நா. சபாபதி முதலியார், சென்னை உயர்திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி., முதலானவரை யுள்ளிட்ட பல அறிஞர்கள் ஒன்றுகூடி இச்சமூகத்திற்குப் புத்துயிரளிக்கக் கருதித் 'தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்' என்னும் சங்கத்தினைச் சென்னையில் நிறுவி, அதன் வாயிலாகச் "செங்குந்த மித்திரன்" என்னும் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகையை வெளியிட்டு வருவதோடு, வேறு பல அரிய காரியங்களையும் விடாமுயற்சியோடு செய்து வருகின்றனர். அவர்களது பெரு முயற்சியே இம்முதலாவது மாகாண மகாநாடு கூடுதற்குக் காரணமாயிருந்ததெனக் கூறுவது மிகையாகாது. அதன் பொருட்டு இச்சமூகம் அவர்கள் பால் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றது. ஆகவே, நாம் வர்த்தக முதலான எல்லா வகையிலும் மேம்பாடடையும் நோக்கத்துடனேயே இங்குக் கூடியிருக்கின்றோமென்பதையும், இதனாலேயே பல வேறிடங்களிலேயுள்ள நமது குலத்தவர்களொன்று கூடிப் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் நட்பினராவதற்கும், சமத்துவம், சகோதரத்துவம், ஒற்றுமை யாதிய மேலான உணர்ச்சியைப் பெறுவதற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிற தென்பதையும் உங்கள் முன்னிலையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

### கைத்தொழிலும் வாணிபமும்.

நமது ஜன சமூகம் எவ்வெவ்வகையிற் றாழ்வுற்றிருக்கிற தென்பதையும், அதற்குரிய காரணங்களையும், இனி முன்னேற்ற மடைதற்கான வழிகளையும் முன் கூடிய நமது சமூக மகாநாட்டிலே ஷை தலைவர்களது பிரசங்க வாயிலாக நன்குணர்ந் திருப்பீர்களென்றே கருதுகின்றேன். இனி இந்த வர்த்தக மகாநாட்டிலும்,

இதன் சார்பாக நாம் அறிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் பலவிருக்கின்றன.

"உழவு தொழிலே வரைவு வாணிபம்
வித்தை சிற்பமென் றித்திறத் தறுதொழில்
கற்று நடையது கரும பூமி"

யெனப் பண்டைய இலக்கியங்களிலே நமது நாட்டிற்குக் கரும பூமி யென்னும் பெயர் குறிக்கப்பட்டிருத்தலையும் இதன் பொருளையும் ஊன்றி நோக்குவார்க்கு, வேறெந்தத் தேயமும் பெறாத பெருமையை நந்தேயம் பெற்றிருந்த தென்பது வெள்ளிடைமலைபோற்றெளிவாகும். இங்கே குறிக்கப்பட்டிருக்கிற அறுவகைத் தொழிலும் எந்த நாட்டிற் சிறப்புற்றிருக்கின்றனவோ அது தான் நாடென்னும் பெருமைக் குரியதாகும். இதனை,

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு"

என்னும் பெரியாரின் திருவாக்காலும் உணரலாம். அவைகளில் ஒவ்வொன்றும் மற்றொன்று பெருகி உயர்வதற்குக் காரணமாமென்பதை நான் உங்களுக்கு விரித்துரைக்க வேண்டுவதில்லை யெனவே நினைக்கின்றேன். மேற்காட்டிய இலக்கியத்தே கைத்தொழிலிரண்டாவதாகவும், வாணிபம் நான்காவதாகவும் குறிக்கப்பட்டிருக்கின்றன. கைத்தொழில் வளம் மிகுந்திருக்கும் இடத்திலே தான் வியாபாரமும் சிறப்படைதல் கூடும். ஒன்றை விட்டொன்று பெருகுதல் எவ்வாற்றானும் கூடுவதன்று. இவ்விரண்டுந் தான் ஒரு நாட்டைப் பெரிதும் முன்னேற்றமடையச் செய்வன. சுகஜீவனம் செய்யு நெறியு மிதுவேயாகும். கைத்தொழில் பெருகினால் மோரீஸ், சிங்கப்பூர், கெட்டால் முதலான விடங்களில் நமது நாட்டவர்கள் அடிமைகளைப் போலிருந்து வாழுநாளை வருத்தத்துடன் கழிக்கும்படி நேரிடாது.

## ஜப்பான் தேசத்தின் அபிவிருத்தி.

சமீபகாலத்தில் முன்னேற்றமடைந்த ஜப்பான் தேசத்தைக் கவனித்துப் பாருங்கள். அங்கே பாய் பின்னுதற்றொழிலைப் பற்றிக் கி. பி. 1888-ல் அவ்வரசாங்கத்தினரால் கணக்கெடுக்கப்பட்டது. அத்தொழில் அப்பொழுது சாதாரண நிலையிலிருந்தது. கி. பி. 1907-ம் வருஷத்தில் வேற்று நாடுகளுக்கு ஐம்பத்தெட்டாயிரத்து நானூறு பவுன்களா மதிப்புள்ள பாய்கள் ஏற்றுமதியாயின. அதற்கெனத் தனிக்கை செய்ய உத்தியோகசாலைகள் ஏற்படுத்தப்பட்டன. பின்னும் அத்தொழில் பெருக வாரம்பித்தது. பிறநாட்டார் பிரியத்துடனும் மதிப்புடனும் ஏற்றுக்கொள்ளும் தரமல்லாதவைகள் மேற்காட்டிய உத்தியோகஸ்தர்களால் அங்கேயே தவிர்க்கப்பட்டன. துணிகளை யுண்டாக்குவதிலும் சமீப காலத்திற்றான் அத்தேயம் ஆச்சரியப்படத்தக்க விதமாய் மேன்மை பெற்றிருக்கின்றது.

## நெய்தற் றொழிலின் பெருமை

நம் சமூகத்தார் மேற்கொண்டுள்ள நெய்தற்றொழில் மிகவும் மேலான தொன்றாகும்; "செய்யுந் தொழிலே யெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கின் —நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை" என்று வழங்கப்படும் சிறப்பினை யுடையதுமாகும். விவசாயத்திற் கடுத்தபடியாகப் பெரும்பான்மையான ஜனங்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் கைத்தொழில் நெசவு ஒன்றே யாகும். நீதிநூலாசிரியராகிய திருவள்ளுவர் ஆராய்ந்து கைக்கொண்டு நடாத்திய உத்தமமான தொழிலுமிதுவே இத்தொழில் வெறும் தேகபலத்தால் மட்டும் செய்யக்கூடியதன்று. நுண்ணிய அறிவாற்றலும், முதிர்ந்த அனுபவமும், உற்றுணரும் வன்மையும், பொறுமையுங்கொண்டு செய்யப்படுவதொன்றாம். இத்தகைய பெருமையினையுடைய தொழிலைக் கைக்கொண்டொழுகும் குடும்பத்தேயுள்ள எல்லோரும் உழைப்பாளிகளாக வழி யேற்படுகின்றது. பெண்களும் சிறுவர் சிறுமியருங்கூட நெய்தற்குபயோகமான நூல் நூற்றல் முதலிய தொழிலில் ஈடுபட வேண்டியவர்கள் ஆகின்றனர். இதனால் அக்குடும்பம் எக்காலத்திலும் வறுமையெய்தாமற் சிறப்புடன் வாழும் நிலையைப் பெறுகின்றது. அன்றியும், பிறரை எதிர்பார்த்துத்தான் ஜீவிக்க வேண்டுமென்ற இழிவுக்குட்பட வேண்டுமென்பதில்லை. இதைத் தாலே தற்காலத்திய சிறந்த தேசாபிமானிகளும் "குடிசைத் தொழில, வீட்டுத் தொழில" (Cottage Industry) எனப் போற்றி யாதரிக்கின்றனர்.

பண்டைக் காலத்திலே நூல் நூற்றலென்பது வீட்டுத் தொழிலா யிருந்து வந்தது. அதனை மகளிரே பெரும்பான்மையும் கைக்கொண்டிருந்தனர். இதனை

"பஞ்சுதன் சொல்லாப் பனுவலிழையாக
செஞ்சொற் புலவனே சேயிழையா."

என்னும் இலக்கண நூலானும் உணரலாம்.



சங்ககாலந்தொட்டு மதுரை, காஞ்சி, சேலம், தஞ்சை, கோழிக்கோடு முதலிய விடங்கள் நூல் நூற்றல், சாயமேற்றல், பட்டு சரிகைத் தொழில், கம்பளம் ஆடை நெய்தல் முதலியவற்றிலே இன்றளவுங்கூட மேம்பாடடைந்து வந்திருக்கின்றன. இஃதிவ்வாறு பெருகியிருந்தமையாற்றான் பிற நாட்டார்களாலும் விரும்பியேற்றுக்கொள்ளத் தக்க துணிகள் பிறதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

இங்கிலாந்திலே எலிஜபெத் மகாராணியின் அரசாட்சிக் காலத்தே நம் தேசத்தில் நெய்யப்பெற்ற 'டக்காமஸ்லின்' என்னும் அழகிய துணி ஒரு கெஜம் ஒரு பவுனுக்குமேற்பட்ட விலையில் விற்கலாயிற்று. அங்குள்ள சீமாட்டிகள் யாவரும் இதனையே விரும்பி யணிந்து வந்தார்கள். பிறதேசத்தவர் பலரும் மகிழ்ந்தேற்றனர் என்றாற் கைத்தொழிலின் மேலான நிலைமையும், வியாபாரத்தின் பெருக்கமும் தேசத்தின் செல்வநிலையும் அக்காலத்தே எவ்வாறிருந்திருந்ததென்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள். எலி மாரிறனும் கம்பளங்கள் நெய்யப்பட்டனவெனச் சங்க விலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. எத்தொழிலையும் கைத்திறத்தால் யாவரும் வியக்குமாறு செய்து வந்தனர் அந்தந்த வகைகளுக்கான நூற்களையும் நன்குணர்ந்திருந்தனர். இதனாலன்றோ "நிறைந்த அழகும், மிகுந்த பிரதாபமும், வாரிந்த திரவியமும் ஓங்கப் பெற்றதும், பூலோகமோக்ஷம் போன்றதுமான தேசம் யாதெனக் கண்டுபிடிக்கப் பிரயத்தனப் படுவேனாகில், இந்தியாவைத்தான் பார்க்கமுடியும்" என மாக்ஸ்முல்லர் என்னும் ஐரோப்பிய பண்டிதரும், "மானிட சிருஷ்டி எவ்வளவு மனோசக்தியை அடையக் கூடுமோ அவ்வளவையும இந்தியர் அடையக் கூடியவர்" என மிஸ் மானிங் என்னும் பெண்மணியும், "சர்வ சாஸ்திரங்கட்கும் தாய் இந்தியா" என பிலான் என்பவரும் மனதாரப் புகழ்ந்துரைத்திருக்கின்றனர்.

## நெய்தற்றொழிலின் தற்கால நிலையும் அதனை விருத்திசெய்யும் வழியும்

இப்படிப்பட்ட சீரும் சிறப்பும் வாய்ந்த நெய்தற்றொழிலையே நமது குலத்தொழிலெனக் கொண்டொழுகும் நமது ஜன சமூகமானது பல்லாண்டுகளாக வறுமை வாய்ப்பட்டும், இதிலனேகர் பிழைப்புக்காகக் கூலித்தொழிலை பேற்று இலங்கை முதலிய வெளியிடங்களில் உரிமையிழந்து வசித்தும் வர நேரிட்டது. இதற்குக் காரணம் ஆலைத்தொழில் பிரபலப்பட்டதேயாகும். இதனோடு போட்டிபோட நம்மால் முடியாமற் போனமையானும், நமது ஜனங்களால் நெய்யப்படும் துணிகளை உபயோகிக்காமற் பிறநாட்டுத் துணிகளை நம்மவர் நாகரிகமெனக் கருதி அணிய முற்பட்டு விட்டமையாலும் நாளடைவில் அத்தொழில் க்ஷீணிக்கலாயிற்று சென்று போனவைகளுக்காக இன்று கவலையுற்றுச் சோம்பி வாளாவிருப்பது சமூகத்திற்குச் சிறிதும் இனிப்பொருந்தாத செயலாகும். ஆகவே அதனை நிவர்த்தி யைத்தேட முற்படுதலவசியமாம்.

இதன்பொருட்டு ஒவ்வொரு ஊரிலுமுள்ள செல்வர்கள் ஆங்காங்கே சக்திக்கியன்றவாறு தனி க்ஷேமநிதி ஸ்தாபனங்களை ஏற்படுத்தி எளிமையால் வாடும் நம்மவர்க்குப் பொருளுதவி புரிதல் மிகவும் முக்கியமாம். கைத்தொழிற் சாமான்களை மொத்தமாய் வரவழைத்து நல்லது செய்வித்துச் சில்லறையில் உதவவும், நூற்களைக் கொடுத்து வாங்கவும் நெய்த துணிகளை வாங்கி வெளியிடங்களுக்கனுப்பி விசேட ஆதாயங் கிடைக்கும்படி செய்யவும், துணிகள் நயமாயும், மட்டாயும், பிறர் மதித்து ஏற்றுக் கொள்வனவாயு மிருக்க முயற்சி செய்யவும் சங்கங்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

இவைகளுக் கெல்லாம் கல்வி யாதாரமாயிருத்தலால் சமூக மகாநாட்டுத் தலைவர்கள் தமது பிரசங்கத்திற் குறித்தபடி, நமது சிறுவர் சிறுமியர்கள் போதுமானதும் அவசியமானதுமான கல்வியிற் றேர்ச்சி யடையச் சிரத்தை கொள்ளுதல் மிகவும் அவசியமானதொரு கடமையாம். வயது வந்த வாலிபர்களை வெளிநாடுகளுக்கனுப்பி நவீன முறையிலேற்பட்டுள்ள தொழிற் பயிற்சியை அவர்கள் பெறும்படி செய்வித்தல்வேண்டும்.

உள்நாட்டிலே கைத்தொழிற் பெருமுயற்சி கொள்ளும்படி தொழிலாளருக்குப் போட்டிப் பரிசு வழங்கல் முதலானவைகளாலே ஊக்கமுண்டாக்குதல் வேண்டும். ஜில்லாக்கள் தோறும் வருடாவருடம் நமது மாகாண மகாநாட்டைக் கூட்டுவித்துக் கைத்தொழில் சம்பந்தமான எல்லா விஷயங்களையும், வேண்டிய பிறவற்றையும் தெளிவு படுத்தல் வேண்டும். அரசாங்கத்தின் உதவி பெரிதும் உண்டாகும்படி பாடுபடுதலும வேண்டும். இங்கே காட்

டியபடி கைத்தொழில் பெருகினாலன்றி வியாபாரம் சிறப்படைய மாட்டாது. வியாபாரத்தால் மேம்பட்ட தேசந்தான் உலகத்தே முன்னணியில் நிற்கும் தகுதியை யுடையது. இதனாலன்றோ மேனாடுகள் சிறப்புற்று விளங்குகின்றன!

## தமிழ் நாட்டின் பண்டைய வாணிபம்.

ஒரு காலத்தே நமது நாடு எல்லாத் தேசங்கட்கும் வழிகாட்டியாக விருந்ததென்று கூறுவது மிகப் பொருத்தமானதேயாம். இதனாற்றான் உரோம், கிரீஸ், பாரஸீகம், அரேபியா, பிரான்ஸ், போர்த்துகல், இங்கிலாந்து முதலிய தேசத்தவர்கள் இந்தியாவை நாடி வரலாயினர். ஒரு ரூபாயிக்கு இங்கே வாங்கப்படும் பொருள்கள் மேனாடுகளிலே பதினாறு ரூபாய்களுக்கு விற்கப்பட்டன. கொலம்பஸ் இந்தியாவுக்குப் புதிய வழியைக் கண்டு பிடிக்க முயற்சித்ததும் வர்த்தக சௌகரியம் ஏற்படுத்திக் கொள்ளும் பொருட்டேயாம். மதுரை முதலிய விடங்களிலே காணப்படும் உரோம நாணய முதலியவைகளே பிற தேசத்தார் வியாபார நோக்கமாக நம் தேசத்தை நாடி பெருமுகமாக வந்தனரென்பதற்குப் போதிய சான்றாகும். இங்கிலாந்தின் செழுமைக்கும் இந்தியாவே காரணமென்பதை அறிஞர்களெவரும் மறுக்கத்துணியார். நமது தேச வர்த்தகரும் சுமாத்திரா ஜாவா முதலிய தீவுகட்கும், சீனாவுக்கும், பிற விடங்களுக்கும் கடல் மூலமாகச் சென்று வியாபாரத்தைப் பெருக்கி வந்தனர். கி. மு. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மரக்கலங்கட்டுந் தொழிலிலும், கடல் யாத்திரை செய்தலிலும் தமிழர் வல்லவரா யிருந்தனரெனச் சரித்திராசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

'பரிமுகவம்பியும் கரிமுகவம்பியும் அரிமுகவம்பியும் அருந்துறை யியக்கும் பெருந்துறை' என்னும் சிலப்பதிகார வடிகளால் நமது நாட்டவர்கள் குதிரை, யானை, சிங்க மிவற்றின் முகங்களைப்போற் சித்திரிக்கப்பட்ட மரக்கலங்களைக் கட்டிவந்தனரென்பது நன்கு புலனும். கி. பி. பன்னிரண்டாவது நூற்றாண்டிலே இந்திய அரசரிடமிருந்து பண்டங்கள் நிறைந்த மரக்கலங்கள் காணிக்கையாக வந்ததாகச் சீன வரசாங்க தஸ்தாவேஜுகள் குறிப்பிடுகின்றன. சீன வியாபார முறையிலே அவ்வாறு காணிக்கை கொண்டு வருபவர்கள் தூதர்களென்று கூறப்பட்டனர். அக்காலம் வியாபார உடன் படிக்கையிற் செய்வதிலும் அக்காணிக்கை கொண்டு வருபவர்களுக்கு அக்காலத்தே யளிக்கப்பட்ட வெகுமதி யுயர்ந்ததாயிருந்தது. ஏழாவது நூற்றாண்டு முதலே வியாபாரத்துக்கென அரசாங்கத்தாரால் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் பட்டிருந்தனர். அன்னிய நாட்டு வியாபாரங்க ளெல்லாம் அரசாங்கத்தாராலேயே நடைபெற்று வந்ததாகவும் தெரிய வருகின்றது. சங்க நூல்களிலே முசிரி, தொண்டி, காவிரிப்பூம்பட்டினம் முதலான கடற்றுறை முகங்களிலே அன்னிய தேசத்து வியாபாரிகளது மரக்கலங்கள் பரிசோதிக்கப்பட்டு அரச முத்திரை பொறிக்கப் பெற்றன வெனவும், அவைகள் கடற்றுறைமுகங்களை யுணர்ந்து இடையூறின்றி வருவதற்கு ஆங்காங்கே 'கலங்கரை விளக்கங்கள்' (Light Houses) அமைக்கப்பட்டிருந்தன வெனவும் காணப்படுகின்றது. அன்றியும் கடல் வழியாகவரும் பொருள்களுக்கு அங்கே தீர்வையும் விதிக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது. தாம சாசனங்களிலே சமுத்திர நஷ்டத்திற் கீடு (Marine Insurance) செய்வதைப்பற்றிய பிரஸ்தாபங் கூடக் காணப்படுகின்றது. சோழவரசர்களிலே ஒரு சாராருக்குச் 'சீனத்திரைய'ரென்ப பெயரிருந்ததும் நம தேசத்தவர் நெடுந்தூரம்வரை கடல் மூலமாகவும் வர்த்தகம் புரிந்துவந்தனரென்பதைக் காட்டும். பாண்டியவரசர்களிலொருவன் உரோமாபுரியரசனுக்கு ஸ்தானாதிபதியை அனுப்பியிருக்கிறானென்றால், நமது தேசத்தவர்கள் கடல்மூலமாகச் செல்லும் இயல்பிற்றூராள நோக்கமுடையாரென்பது தெளிவாகின்றதன்றோ? அன்னியநாட்டு வர்த்தக பேய்பாடு, தமிழ்நாட்டில் ஆரியர்களின் கூட்டுறவு விசேடமாக வேற்பட்டதன் பின்னரே கப்பலேறுதல் அனாசாரமாகக் கருதப்பட்ட நாள் தொடங்கி, நாளடைவிலே குறைவுபட்டொழிந்தது. வியாபார முறைக்கு மிகவும் அவசியமாக வுணர்ந்திருக்க வேண்டுவதாகிய 'அர்த்த சாஸ்திரம்' (Political Economy) கி. மு. முந்நூறு வருடங்களுக்கு முன்னரே சாணக்கியர் என்பவரால் எழுதப்பட்டு அனுபவத்திலிருந்திருக்கிறதாகவும் தெரிய வருகின்றது.

## கூட்டுறவு வியாபாரத்தின் அவசியம்

தற்காலம் நமது தேசத்தின் வர்த்தகம் மிகவும் தாழ்ந்த நிலைமையிலிருக்கிற தென்பதை யெடுத்து நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. வருடா வருடம் அறுபத்தைந்து கோடி ரூபாய் பெறுமான வெளிநாட்டுத் துணி



கள் நந்தேயத்தே இறக்குமதியாகின்றன. ஏற்றுமதியோ சிறிதுமில்லை. நல்லாடை யுடுத்தறியாத அநாகரீக மனிதவர்க்கங்களுக்கெல்லாம் அதனைக் கொடுத்து மானத்தை நிலை நிறுத்திய நமது தேசம், தனது மானத்தைக் காப்பாற்றிக்கொள்ளப் பிறநாட்டை யெதிர்பார்க்கின்ற தென்பதை யுங்கள் முன்னிலையிற் கூறவும் நாண முறுகின்றேன். தற்காலத்தே மேனாட்டு வர்த்தகர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக எத்துணைப் பெரிய வியாபாரத்தையும் சிரமமின்றி நடத்தி வருகின்றார்கள். அதனால் அவர்களுக்கு எவ்வளவோ சாதகங்கள் ஏற்பட்டிருக்கின்றன நமது நாட்டிலேயுள்ள பிரபல வியாபாரப் பகுதிகளெல்லாம் அன்னியர் கைவசமே யிருக்கின்றன. அவைகளால் அவர்களடையும் ஊதியம் மிகப் பெரிதென்றே நீங்களெவ்வொருவரும் நன்கறிவீர்கள். அவர்களிற் பலர் ஒன்றுகூடி ஒரு வர்த்தகத்திற்கு மூலதனமாகப் பெருந்தொகையைச் சேர்த்துக்கொள்வதோடு, அதற்கான சட்டதிட்டங்களையும் வரையறுத்து வேண்டிய சாதனங்களைத் தாராளமாகவும் ஒழுங்காகவு மமைத்துக்கொண்ட பின்னரே தொழிலை யாரம்பிக்கின்றனர். அதற்காக வேற்படும் செலவுகளைப்பற்றியும் நஷ்டங்களைப் பற்றியும் கவலைப்படுவதில்லை. விளம்பர மூலமாக வியாபாரத்தைப் பெருக்குவதிற் பின் வாங்குவதில்லை. சில வருடங்கள்வரை அப்படியே யானாலும் எப்பொழுதுங்கூடத் தளர்ச்சியடைவதில்லை. பலர் கூடித் தொகை சேர்ப்பதால் நஷ்டம் வரினும் அவர்கள் சகிப்பதற் கேதுவில்லாம லிருக்கிறது.

நம்முடைய நாட்டிலே 'கொள்ளைக்குப் போனாலும் கூட்டாகாது' என்னும் பழமொழியைப் பெரிதும் ஆதரிக்கின்றனர். கூட்டுறவு நாட்டமே நமது வர்த்தகர்களிடமில்லை. செல்வந்தர்களாயுள்ள ஒரு சிலரும் தம்மிடமுள்ள தொகையை விளைபூமி வாங்குவதிலும், வட்டிக்குக் கொடுப்பதிலும், வேறு பல ஆடம்பரமான வகையிலும் உபயோகிக்க முற்படுகின்றனர். ஏனைய மதிநுட்ப முடையோர் பொருளில்லாமையாற் றமது நுண்ணறிவை அடிமைத்தனமான பணியிலுபயோகிக்க நேருகின்றது. இதனால் மேனாட்டு வர்த்தகர்களோடு நமது வியாபாரிகள் போட்டிபோடச் சிறிது மியலாமற் போவதோடு, தொழில் முறையிற் றாழ்வடையவும் இடமுண்டாகின்றது. சில பிரபல வர்த்தகர்களுங்கூட ஏதோ ஒரு சமயத்தே எதிர்பாராதபடி ஏற்படுகின்ற நஷ்டங் காரணமாக அடியோடு வியாபாரத்தையே ஒழிக்கின்றவர்களாகவுமிருக்கின்றனர். வேறு சிலர் தனித்தனி வர்த்தகம் புரிகலால், அப்படியேற்படும் நஷ்டத்தால் மனமுறிந்து வியாபாரத்தைச் சுருக்கி யுட்கார்ந்து கொள்ளுகின்றனர். மற்றுஞ் சிலர் கடனுக்காளாகி வருந்துவதோடுள்ளவற்றையு மிழந்து பரிதவிக்கின்றனர். என தன்பார்ந்த வர்த்தக சகோதரர்களே! கூட்டுறவின்மையா லேற்படும் தீமைகள் அளவிறந்தனவாகும். நம்மி லொருவரை யொருவர் நம்புவதில்லை. இதனால் அன்னியோன்னிய பாவகமில்லாமற் போவதோடு தேச நலத்தையும் அது பாதிப்பதாகவாகின்றது. ஒரு காலத்தே நமது நாட்டில் ஒருவருக்கொருவர் கொண்டிருந்த அன்னியோன்னியம் மிகச் சிறந்ததாயிருந்தது; நாட்டின் க்ஷேமலாபத்திற்கு நிரம்பவும் ஒத்தாசையாகப் பாராட்டப்பட்டு வந்தது. ஒரு பாகத்தே சம்பத்தும் மற்றொரு பாகத்தே தரித்திரமும், ஒரு கூட்டத்தார் மேலான நிலைமையிலும் மற்றொரு கூட்டத்தார் எளிமையான நிலைமையிலுமிருந்ததேயில்லை. ஒவ்வொருவரது சக்தியும் ஆண்மையும் பொதுஜன உபகாரமென்ற தொன்றை மாத்திரம் இலக்காக வைத்துக்கொண்டிருந்தன. நமது நாட்டு வர்த்தகரின் தாராளமும், கபடின்மையும், நேர்மை சத்தியமும், ஆண்மை யுடைமையும், நாகரிகமும், புத்தி நுட்பமும், வியாபார தந்திரமும் ஜெகத் பிரசித்தமானவை. மனிதனென்னும் மொழியின் அர்த்தபுஷ்டிக்குரியவர் நம் நாட்டவரேயா யிருந்தனர். 'உண்மையிற் கொண்டாடப் பட்டவர்கள், நேர்மையுள்ளவர்கள், நாணயத்திற் சிறந்தவர்கள், ஒப்பந்த முதலான ஆதாரங்களை வேண்டாதவர்கள்' என ஸ்ட்ராபோ வென்னும் மேனாட்டறிஞரொருவர் புகழ்ந்துரைத் திருக்கின்றனர். அன்றியும், பதினொன்றும் நூற்றாண்டிலே யிருந்த இத்ரிசி யென்னும் மேனாட்டுப் புலவரொருவர், இந்தியர் எவ்வித சங்கடத்திலும் நீதிக்கு மாறுபடாதவரென்றும், எந்த வேலையையும் சமயோசித மதி நுட்பத்துடன் புரிபவரென்றும், நேர்மை சத்திய மிவற்றிற்கு உலகத்தாரால் மெச்சப்பட்டவர்களென்றும், இவர்க ளிவ்வித மிருந்ததே இத்தேசத்தை நாடிப் பலர் வருவதற்குக் காரணமாயிற்றென்றும் கூறியுள்ளார்.

### நமது தாழ்வுக்கு நாமே காரணம்

ஆகவே, வர்த்தக முறைக்கு வேண்டுவன வாயுள்ள நாணயம், செல்வப் பெருக்கம், கலைஞானம், குன்றாத முயற்சி, கூட்டுறவு, தளர்ச்சியில்லாமை, நேர்மை, கடின்மை யாதிய குணங்களிற் சம்பூரணமான நமது நாடு தற்காலப அவைகளி லெல்லாம் தாழ்வடைந்து பிறர் ஏளனம் பண்ணும்படியான நிலைமையிலிருக்கின்றது. அந்தோ! இதனாலன்றோ ஆங்கில வர்த்தகசாலைக்கென்றால் வியாபாரத்தின் பொருட்டுத் தாராளமாகச் செல்கின்றவர்கள், இந்திய வர்த்தகர்களிடம் அவ்வளவாக நெருங்குவதில்லை; அவ்வர்த்தகர்களிடம் சொன்னவிலை கொடுத்து வேறு பேச்சில்லாமற் பொருளை வாங்குபவர்கள், நம்மிடம் குறைந்த விலைக்கென்றாலும் சந்தேகத்தால் வாங்கத் துணிவதில்லை. நமது நாட்டில் வர்த்தகர்களாயுள்ளவர்களே மேனாட்டு வர்த்தகர்களை நம்புவது போல் உள்நாட்டு வியாபாரிகளை நம்புவதில்லை யென்றால் மற்றவர்களைப்பற்றிக் கேட்பானேன்?


### இனிச் செய்யவேண்டுவது யாது?

நாம் இதுவரையி லிருந்தது போ லினிமேலிராமல், நம்மிற் பல வர்த்தகக் கூட்டுறவுச் சங்கங்களைப் பிரபலமான வியாபார ஸ்தலங்கள் தோறும் நியமித்தலோடு, கிராமங்கள் தோறும் ஆங்காங்குப் பல கிளைச்சங்கங்களையும் ஸ்தாபிக்க வேண்டும். நம்மவர் வர்த்தக மகாநாடு பிரதி வருடந்தோறும் கூட்டப்படுதல் முக்கியமாகும் அங்கே வியாபாரத்திற்கான குறைகளை நிவர்த்திக்க வழிதேடவும், ஐக்கிய நாணயச் சங்கங்களை (Co-operative Credit Societies) நமது சமூகத்திற்கென்றே நியமிக்க அரசாங்கத்தினரைக் கேட்டுக் கொள்ளவும், வியாபாரத்திற்கெனச் சட்ட சவுகரியம் ஏற்படும் பொருட்டு ஸ்தல ஸ்தாபனங்களிலே நம்மவர்க்குத் தனியிடம் ஒதுக்கப்பட முயற்சி புரிதலும் வேண்டும். பெரிய வர்த்தகர்களாயுள்ளவர்கள் சாதாரண வர்த்தகர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து தர முன்வருதலவசியமாகும் பல அநுபவசாலிகளைத் தேர்ந்தெடுத்து வெளி நாடுகளுக்கு அனுப்பி, அங்கே நடைபெறும் வியாபார முறைகளைத் தெரிந்து வரும்படியான ஏற்பாட்டைச் செய்வது மிகவும் உத்தமமான தொன்றாம். நமது நாட்டிலே இறக்குமதியாகும் பொருளினும் ஏற்றுமதியாகும் பொருள்கள் மிகவாயிருக்கும் முறைகளைக் கையாள ஒருப்படுதல் நலமாம். பிறநாட்டுப் பொருள்களைவிட நம் நாட்டுப் பொருள்கள் நயமாயிருக்க வேண்டுமாயின், அங்கு உற்பத்தியாகும் அளவைவிடப் பன்மடங்கு நமது நாட்டிலே உற்பத்தியாக்கத் தாராள ஊக்கம் வேண்டும். அப்பொழுது தான் வர்த்தக நிலை உயர்வடையும்; மேலும் பண்டைப் பெருமைகளையெல்லாம் பெற்று வியாபாரத் துறையிலே நம்மவர் முதன்மை பெறுதலுங்கூடும். "பழமை பாடிச் செழுமை தேடு" என்பது ஒரு சிறந்த பழமொழியாதலின், நமது சமூகத்தின் பூர்வீக தற்கால நிலைமைகளைச் சீர்தூக்கி யாராய்ந்து, உள்ள வேறுபாட்டை யுள்ளவாறுணர்ந்து, முன்னேற்றமடையத் தக்க வழிகளில் உழைத்துச் சிறப்படைய் வேய்துதல் நமது கடமையாகுமென்பதை வற்புறுத்திக் கூறுகின்றேன்.

சகோதரர்களே! இனி இங்கே கூடியுள்ள வர்த்தக மகா நாட்டிலே நடைபெற விருக்கும் விஷயங்களிற் கலந்து யோசித்து வேண்டுவனவாகிய நன்மைகள் பலவற்றையும் புரிய முற்படுவீர்களென நம்புகின்றேன். எல்லாம் வல்ல இறைவன் திருவருள் முன்னின்று இனிது முடிப்பதாக. சுபம்! சுபம்! சுபம்!


### தலைவரை உபசரித்தல்.

வரவேற்புத் தலைவருரை முடிந்ததும், வர்த்தகர் மகாநாட்டுத் தலைவராகத் தென்காசி பாங்கர் திருவாளர் தே. ப. கு. ஆறுமுக முதலியார் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அவருக்குப் பூமாலை சூட்டிய பிறகு, திரு. எஸ். மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்கள், பி.ஏ., எல்.டி., வரவேற்புச் சபையின் சார்பாகவும் தலைச்சங்கத்தின் சார்பாகவும் கீழ்வரும் பாமாலையை இசையுடன் கம்பீரமான தமது குரலில் பாடித் தந்தனர் :—



தொண்டர்படைத் தலைவர்


திரு. S. மீனாக்ஷிசுந்தர முதலியார், பி.ஏ., எல்டி.



மகாநாட்டுப் பொதுக் காரியதரிசி

திரு. V. V. C. V. நடேச முதலியார்.

மகாநாட்டுப் பொக்கிஷதார்



திரு. S. இராமசாமி முதலியார்.

மகாநாடு கூடுவதற்கு மூலபுருஷராகிய



திரு. வ. மு. மொட்டையப்ப முதலியார்.
முனிசிபல் கவுன்சிலர், ஈரோடு.

ஈரோட்டில் விபவளு தைமீ 7, 8, தேதிகளில் கூடிய
தென்னிந்திய செங்குந்தர் முதலாவது வர்த்தக மகாநாட்டுத் தலைவர்
திருவாளர் T. P. K. ஆறுமுக முதலியாரவர்கட்கு
வரவேற்புச் சபையினரும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தினரும் சேர்ந்து
வாசித்துக்கொடுத்த

## வரவேற்புப் பத்திரம்.

எழுசீர்கழிநெடிலடி விருத்தம்.

சீராருஞ் செங்குந்த குலத்துதித்த குற்றால
 லிங்கனெனுந் திருப்பே ராளன்
பேராரப் புரிந்ததவப் பயனாக வந்தசுத
 னாறுமுகப் பெரியோய்! தென்றற்
றேரூருமவனிக்க ணெழிலானே வர்த்தகமா வுத்திபெலாந்
 தெரிந்தோய்! வெற்றித்
தாராரு மரசர்புக ழாங்கிலமு முணர்ந்தநப
 சற்குணனே! வருக வீங்கே.

மானிலத்துப் பஞ்சமெலாம் நானூற்ற லாலகனு
 மௌனவுணர்ந்த நலத்தா லிந்த
மேனிலத்துப் பஞ்சாலை தனிற்றலைமை தனைவகித்து
 விளங்கியநன் னிபுணா! பின்னும்
வானிலத்தும் பெறவரிய வின்பமெலா மொருங்களிக்கும்
 வாணிபச்சீர் பெறுவான் வேண்டித்
தானிலைத்த கூட்டுவணி கச்சாலைப் புகழ்தரித் தோய்!
 வருகவிந்த நகரிற் றூனே.

உரைத்தவகை தனிற்பலவாம் நன்மையெலாஞ் செய்தபினு
 முலகினிடை யாசாங் கத்தே
பருத்தியுட னுட்புகுந்து தென்காசி யூனியன் போர்
 டதன் தலைவ ராக வாங்கே
விருத்திபெற மும்முறைவீற் றிருந்தசன மதிப்படைந்து
 குலப்பெருமை விரிக்க வேண்டுங்
கருத்துடனோர் தனிச்சேம நிதியமைத்த கருணையவிந்
 நகர்காணக் கருது வாயே.

இத்தகைய பெருங்குணத்தோய்! நின்னரிய
 வுடற்சிரம முதலெதையு மெண் ணாரும
லுத்தமமா நெறியிதுவென் றெமதுமொழிக் கிணங்கியிவ
 ணுவப்பாலே யெழுந்து போந்த
வித்தகநின் னல்வரவா லெங்கள்மனங் களிப்படைந்த
 விதத்தினையா மென்ன சொல்வோம்
அத்தனரு ளாற்றிருவும் வாணாளு முடனலமு
 மிகவாக வமைக மாதோ.

தலைவர் பேருரை.

வரவேற்பு உபசாரம் முடிந்ததும் திரு.தே. ப. கு. ஆறுமுக முதலியாரவர்கள் அனுபவ சாரந் ததும்பும் தமது அரிய சொற்பெருக்கை நிகழ்த்தினார்கள் :—

வர்த்தகர் மகாநாட்டுத் தலைவர்
தென்காசி பாங்கரும் பிரபல வியாபாரியுமான

# திரு. தே. ப. கு. ஆறுமுக முதலியார் அவர்களின்
# சொற்பெருக்கு

சகோதர சகோதரிகளே!

நமது செங்குந்த மகாஜன சமூகத்தில் தனவந்தர்களும், கற்றறிந்த பெரியோர்களும், வர்த்தக நிபுணர்களும் அநேகர் இருக்க, என்னை இவ்வர்த்தக மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கத் தேர்ந்தெடுத்து விட்டீர்கள். நான் இம்மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கச் சக்தியற்றவனாக இருந்தபோதிலும், உங்கள் சார்பாகவே நான் அதை ஏற்றுக்கொண்டு உங்களுக்கு என் மனமார்ந்த வந்தன மளிக்கிறேன்.

நான் சொல்லும் விஷயங்களில் குற்றம் குறைகளிருப்பினும் பொறுத்து என்னை ஆதரிக்க வேண்டுகிறேன்.

இங்கு ஒற்றுமையுடனும் ஊக்கத்துடனும் சிரமம் பாராட்டாது வந்து கூடியிருக்கும் நமது வகுப்பினரனைவருக்கும் என் வந்தனத்தை தெரிவித்துக்கொள்கிறேன். நமது குலத்தவர்கள் இவ்வளவு ஒற்றுமையுடனும் ஊக்கத்துடனும் இங்கு கூடியது எனக்கு மனமகிழ்ச்சியை உண்டுபண்ணுவதுடன், நமது குல முன்னேற்றத்துக்கு இது ஒரு சிறந்த அடையாளம் என்றே நான் உறுதியாகக் கூறுகிறேன்.

நாம் இங்கு நமது செங்குந்த சமூகத்தின் முன்னேற்றத்தைக் கருதியே கூடியிருக்கிறோம். இங்குக் கூடியிருப்பதின் நோக்கங்களையும், கைத்தொழில் வாணிபச் சிறப்பு, நமது குலத்தொழிலின் பெருமை, நமது தற்கால நிலைமை, பண்டைய வாணிபத்தின் முறை, நாம் தாழ்வு பட்டதற்குக் காரணம் முதலியவைகளையும் இதற்குமுன் பேசிய வர்த்தக மகாநாட்டு வரவேற்புத் தலைவர் ஸ்ரீமான் தி.ரா. கந்தப்ப முதலியாரவர்கள் அதிவிவரமாகப் பேசிவிட்டதனால், அதைவிட விசேஷமாகப் பேசவேண்டிய தொன்றுமில்லை என நினைத்து நிறுத்திக் கொண்டேன்.

## நன்றி செலுத்தல்

சீரும்சிறப்பும் பெற்று வாழ்ந்திருந்த நமது குலம் இப்போது அவைகளை இழந்து மிகப் பிற்போக்கான நிலைமையிலிருந்து வருவதை உணர்ந்து, நமது முன்னேற்றத்தைக் கருதிச் சென்னையில் "தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்" என்ற பெயருடன் ஒருசங்கம் ஸ்தாபித்து, அதன் வாயிலாக அநேக இடங்களில் பிரசாரம் செய்து ஆங்காங்கு கிளைச்சங்கங்களை ஸ்தாபிக்கச் செய்தவர்களும், முன் "செங்குந்தன்" என்ற மகுடமிட்டுக் காஞ்சி ஸ்ரீநாகலிங்க முனிவரவர்களால் நடத்தப்பட்டு வந்த பத்திரிகை நின்றுவிடவே, "செங்குந்த மித்திரன்" என்ற பெயருடன் அந்தச் சங்கத்தின் ஆதரவில் ஒரு மாதப்பத்திரிகை வெளியிட்டு, அதில் நம் ஜன சமூகத்தின் பூர்விக சரித்திரங்களையும், இப்போது நாம் அடைந்திருக்கும் நிலைமைகளையும், இன்னும் நமது குலம் முன்னேற்றமடைவதற்கு வேண்டிய விஷயங்களையும் விளக்கி, நம் ஜன சமூகத்திற்கு நல்லுணர்ச்சி, ஊக்கம், ஒற்றுமை முதலியவைகளை உண்டு பண்ணி வருகிறவர்களுமான நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க அங்கத்தினர்களுக்கும், அதின் அமைச்சர்களுக்கும், அதில் விசேஷ சிரத்தை பூண்டு அருந்தொண்டியற்றி வருகிற டாக்டர் திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ., எல்.டி. அவர்களுக்கும், இம்மகா நாட்டை இங்கு நடத்த இசைந்துள்ள நமது நண்பர்களுக்கும், வரவேற்புச் சபைத் தலைவர்களுக்கும் அங்கத்தினர்களுக்கும், நமது செங்குந்த ஜன சமூகத்தினர் அனைவரும் என்றும் மறவாத நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அவர்களுடைய நன் முயற்சியினால் முதல் முதலாக இம்மகாநாடு இங்கு கூட்டுவிக்கப்பட்டிருக்கிறதென்பதும், நாம் ஒருவருக்கொருவர் அறிமுகமில்லாமல் பல பாகங்களிலும் வசித்து வந்திருக்க, இம்மகாநாடு மூலமாய் நாம் ஒன்று கூடவும், நமக்குள் சமத்துவத்தினையும், ஒற்றுமை உணர்ச்சியினையும் உண்டு பண்ணவும் அவர்களே தூண்டுகோலாக இருந்து வருகிறார்கள் என்பதும் மிகவும் பாராட்டத்தக்கன.

## இயந்திரங்களும், நூல் நூற்றலும், நேசவும்

நம் ஜன சமூகத்தினர் பெரும்பாலோர் தொன்று தொட்டு நெசவுத் தொழிலையே கை



யாண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நூல் முற்காலத்தில் கை இராட்டினங்களில் தயாரிக்கப்பட்டு வந்திருந்தது. இயந்திரங்களில் நூல் தயார் செய்ய ஆரம்பித்ததிலிருந்து கை இராட்டினத்தொழில் குறைவு பட்டு வந்து வரவர நூல் நூற்கும் இயந்திரசாலைகள் அதிகரிக்கவே, கை இராட்டினத்தொழில் முற்றிலும் நின்று விட்டது. இப்போது கொஞ்ச காலமாக ஏற்பட்டுள்ள கதர் இயக்கத்தினால் மறுபடியும் கை இராட்டினத் தொழிலில் சிலர் முன் வந்திருப்பது மிகவும் புகழத்தக்கதே.

இப்போது புதிதாக நெசவு செய்வதற்குரிய இயந்திரத் தறிகள் நமது நாட்டிற்கு வரவே கைத்தறி நெசவுத்தொழில் நசிக்கப்பட்டு வருகிறது. ஆனாலும் விலையுயர்ந்த துணிகளும், ஏழைகள் உபயோகிக்கக் கூடிய மலிவான துணிகளும், பட்டாடை முதலியவைகளும் கைத்தறிகளில் தான் தயாரிக்கப்பட்டு அன்னிய நாடடுத் துணிகளுக்கிடையே விற்பனையாகிக்கொண்டு வருகின்றன. கைத்தறி நெசவுத் தொழிலில் விசேஷ வருமானமில்லாமை காரணமாக நம குலத்தவர்களில அநேகர் இத்தொழில் நடத்துவதற்குக்கூடப் பொருள வசதியின்றிக் கஷ்டப்படுவதைக் காண நமக்கு வருத்த மேலிடுகின்றது.

நாமும் நமது இந்திய சகோதரர்களும் அன்னிய நாட்டுத் துணிகளை விரும்பாமல கைத்தறித் துணிகளையே உபயோகித்து வருவோமானால், வறுமை நீங்கி, நாமும் நம் நாடும் செல்வமுற்றிருக்கலாம்.

## கைத்தொழில் இலாகாவும் நேசவும்.

தற்காலம் அரசாங்கத்தார்களும் கைத்தொழில் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி அவைகளில் முதன்மையாக நெசவுத் தொழிலைக் கற்பித்து வருகிறார்கள். தவிர இதர பள்ளிக்கூடங்களிலும சிறுவர்களுக்கு நெசவுத்தொழில் கற்பிக்கவேண்டுமென்ற ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. புதிதாய் இத்தொழிலை பயிற்சி செய்விப்பதை விட, நெசவுத் தொழிலில் பழமையாய் ஈடுபட்டவர்களுக்கு நவீன முறையில் சுலபமான வழிகளில தொழில் செய்ய பயிற்சி செய்விப்பார்களானால், அது மிகவும நன்மையைத் தரும். துலாத்தனத்தாரும் இந்த இலாகா சம்பந்தமாய் எவ்வளவோ தொகை செலவு செய்கிறார்கள்.

## கூட்டுறவு சங்கங்களின் இன்றியமையாமை.

ஆங்காங்கு கூட்டுறவு சங்கங்கள் ஏற்பட்டிருப்பதில் பல தொழில் நடத்துபவர்களுக்கும் அநேக சௌகரியங்களிருந்தபோதிலும், நெசவுத் தொழிற் செய்பவர்கள் ஒருவித பயனுமடையவில்லை. இன்னும் நம்மவர்கள் தயார் செய்யும் துணிகளை வெளியூர்களுக்குச் சென்று மிகக் கஷ்டத்துடன் விற்பனை செய்ய வேண்டியிருக்கிறது அதில் லாபமும் இல்லை. ஆகையால் இத்தொழில் செய்வோருக்கெனத் தனிமையாகக் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தி, ஷை சங்கங்களிலிருந்து, நாம் தயார் செய்து கொடுக்கும் துணிகளை விற்பனை செய்வதற்கு வேண்டிய வசதிகளும் செய்து, நம் தொழிலை ஆதரிக்காவிடில், நம்மரபினர் இன்னும் வறுமை என்னும் பிணியினால் பீடிக்கப்படுவார்கள் என்பதற் கையமில்லை.

## வர்த்தகத்தின் மேன்மை

நமது குலத்தினரில் பெரும்பாலோர், கைத்தறிகளில் தயாரிக்கப்படும் துணிகளை வெளி நாடுகளில் விற்பனை செய்யும் தொழிலை மேற்கொண்டு வர்த்தகம் நடத்தி வருவதுடன், நெசவுத் தொழிலுக்கு வேண்டிய நூல், பட்டு, பருத்தி முதலியவைகளிலும் இன்னும் பல வகைகளிலும் வர்த்தகம் நடத்தி வருவது பற்றி நாம் மகிழ்ச்சியடைகிறோம். உலகத்தில் வர்த்தகத்தால் விருத்தியடைந்தவர் அநேகர்.

அமெரிகாவிலும் இன்னும் அநேக இடங்களிலும் தொழிற்சாலை ஏற்படுத்தியவர்களில் சிலர்கள் சரித்திரத்தை கூறுகிறேன்:—

ஹென்ரி போர்டு (Henry Ford) என்பவர் ஆதியில் 1 டாலர் சம்பளத்தில் கொல்ல வேலை பார்த்து வந்தார். இவருக்குப் பால்யத்திலிருந்தே ஒவ்வொரு சாமானும் குறைந்த விலையுள்ளதாக இருந்தால் அதிக சீர் ஏற்படும். அதனால் அதிகச் சரக்குகள் உற்பத்தி செய்யலாமென்ற எண்ணமே இவர் மனதில் குடிகொண்டிருந்தது. அவருடைய யோஜனையினால் நீராவியினால் தள்ளப்படும் எஞ்சின்போலவே தானாகவே ரோட்டில் தள்ளப்படும் வண்டி ஒன்று தயாராக்க நினைத்தார். இப்படி இருக்கும்போது அவருக்கு ஒரு இயந்திரசாலை மானேஜர் உத்தியோகம் கிடைத்தது. அதிலிருந்துகொண்டே ஒழிந்த நேரங்களில் மேலே கண்டபடி வண்டி நிர்மாண விஷயத்திலே இடைவிடாது சிந்தித்து ஓட்டுங்கருவி எஞ்சின் ஒன்று உண்டு பண்ணினார். அதில் (Steering) வைத்துத் தயாரித்

து தன் அநுபவத்தை மேலும் விருத்தி செய்தார். பின் டாஜ் பிரதர்ஸ் முதலியவர்களையும் பங்காளிகளாகச் சேர்த்து ஒரு கூட்டுக் கம்பெனி ஏற்படுத்தி வேலை நடத்த எத்தனித்தார். அதிகமான சாமான்களை உற்பத்தி செய்து குறைந்த விலைக்கு விற்கவேண்டுமென்ற இவருடைய நோக்கம் மற்றவர்கள் நோக்கத்துக்கு மாருக இருந்ததினால் விலகிக் கொண்டனர். பின் 3 லக்ஷரூபா மூலதனத்துடன் ஹென்ரி போர்டு கம்பெனி என்று ஒரு கம்பெனி ஆரம்பித்து 1903-ல் ரிஜிஸ்டர் செய்து, 1908ஆம் வருஷத்துக்குள் அதேமாதிரியாக 25,000 கார்கள் உற்பத்தி செய்தார். 1916-க்குள் ஒரே மாடலில் 10,00,000 (பத்து லக்ஷம்) கார்கள் உற்பத்தியாயிற்று. 1919ல் எல்லாப் பங்காளிகளுடைய பங்குகளையும் விலைக்கு வாங்கி 30 கோடி ரூபா மூலதனத்துடன் போர்டு கார்பொரேஷன் கம்பெனி (Ford Corporation Co.) என ஸ்தாபித்து அதின் ஸ்டாக்கு முதலியவைகளுக்கு இவரும் இவருடைய மகனும் சொந்தக்காரராக இருந்து நடத்தி வருகிருர்கள் இப்போது இந்த கம்பெனியின் மொத்த ஆஸ்தி 236 கோடி ரூபாய். இந்தக் கம்பெனியில் தினம் 1-க்கு 2லக்ஷம் கூலியாட்கள் வேலைசெய்கிருர்கள். ஒவ்வொரு நாளும் 6000 கார்கள் வேலைமுடிந்துவருகின்றன. இவர்தான் உலகத்தில் சிறந்த பணக்காரரெனவும் அதிக கார்கள் உற்பத்தி செய்யப்பட்டவர் என்றும் தெரியவருகிறது.

இதே மாதிரி இன்னும் அனேகர் சரித்திரங்களைச் சொல்லப்புகின் விரியுமென நினைத்துச் சுருக்கிக்கொள்கிறேன்.

எத்தனையோ ராஜ்ஜியங்கள் வர்த்தகத்தால் செழித்து மேன்மை யடைந்திருக்கின்றன. தொழில் அல்லது வர்த்தகந் தான் மனிதர்களுக்குச் சுயேச்சையை உண்டு பண்ணக்கூடியது.

### வர்த்தகர்க்குரிய லக்ஷணங்கள்

நாம் ஒரு தொழிலை அல்லது வர்த்தகத்தை ஆரம்பித்தால் அதில் வரும் இடைஞ்சல்களுக்கெல்லாம் மனங்கலங்காமல் ஆரம்பத்தில் நஷ்டம் ஏற்பட்ட போதிலுங்கூட, நம் முயற்சியே நம் செல்வத்திற்கெல்லாம் காரணமென நினைத்து ஊக்கத்துடன் நடத்தி வருவோமானல் வெற்றிபெறலாம். நாம் முயற்சித்தால் தான் தெய்வம் நம் முயற்சியைக் கைகூட்டுவிக்கும். எல்லாம் தெய்வத்தாலாகுமென நினைத்து முயற்சியைக் கைவிட்டால் அது நமக்குக் கேட்டை விளைவிக்கும்.

வர்த்தகம் செய்வதற்குப் பொருள், கல்வி, பழக்கம், சாமர்த்தியம், இவைகளுடன் ஒழுக்கம், அடக்கம், பணிவு, வாய்மை முதலிய குணங்களும் வேண்டும். பொருமையை அறவே அகற்ற வேண்டும். மனமானது ஒருவழியில் நிற்றல் அருமையாயிருத்தலால் அதன் வழி விடாமல் நன்ருய் ஆலோசனை செய்து நமது ஸ்திதியை அறிந்து ஒரு தொழிலை ஆரம்பிக்க வேண்டும்.

வர்த்தகத்தில் தனவந்தராக இருப்போரும், தனம்தேட விரும்புவோரும், வர்த்தகத்தை நாடி வருபவர்களிடம் அடங்கி யொழுகவேண்டும். அடங்கி யொழுகும் குணம் அமையுமாயின் அது அவர்க்கு மேலும் மேலும் செல்வம் நிறைந்த சிறப்பினை விளைக்கும். மனம் பொருந்திய வாய்மை, அஃதாவது மெய்யைப் பேசுவாராகில், அவரை உலகம் போற்றுவதுடன், அவர் தானமும் தவமும் ஒருங்கே செய்பவரினும் சிறந்து விளங்குவார். ஒழுக்கமுடையவராக இருப்பின் அவர் பிறப்பில் இழிந்தவராக எண்ணப்பட்டாலும் உயர்ந்தவராக மதித்துப் போற்றப்படுவார். அடக்கமுடனிருப்பவர் தம்மை வெளிப்படுத்திக்கொள்ளா திருப்பினும் உலகம் அவரை அறிந்து போற்றும்.

வர்த்தகத்தால் ஊதியத்தைக் கருதிய போதிலும் மேற்கண்ட குணங்களை உடையவர்கள் தாம் உலகத்தில் போற்றப்படும் புகழுடன் மேன்மைபெற்று வாழ்வார்கள்.

பொருமையுடைய ஒருவரைப் பாவமும் வறுமையும் பற்றுமாதலால் அதை அகற்ற வேண்டும்.

ஒரு தொழில் நடத்திக்கொண்டிருக்கும் போது லாபமில்லை யென நினைத்துப் புதிதாக மற்ருேர் தொழிலைச் செய்யின் லாபம் வந்துவிடும் என வேறொன்றைச் செய்யப்புகின், ஒரு தொழிலிலும் அநுபவமின்றி முடிவில் கேட்டை விளைவிக்கும்.

வர்த்தகம் செய்பவர்கள் தாங்களே எல்லா வற்றையும் செய்துகொள்வ தென்பது முடியாத காரியம். அதனை அநுபவஸ்தர் பார்த்துத் தனித்தனி மேல்பார்வையிட வைத்து நடத்தச் செய்து நாம் மேற்பார்வையிடும் வரவேண்டும். அப்படியானலதான் தொழில் விருத்தியாவதற்கு வேண்டிய வழிகளை ஆழ்ந்த யோசனையால் யோசனை செய்யவும், காலத்துக்குத் தக்கவாறு சீர் திருத்தம் செய்து கொள்ளவும் முடியும். அவ்விதம் செய்து கொள்ளாவிடின் வியாபாரம் விருத்தியாவதற்கு இதுவே ஒரு தடையாகும்.

### கூட்டுறவு வியாபாரத்தின் அவசியம்

வர்த்தகம் செய்பவர்களில் சிலர் முன்னேற்றமடைந்தும் சிலர் பின்னடைந்து மிருக்கிருர்கள். பின்னடைவதற்கு முக்கியமாய் ஒற்றுமைக் குறைவு, ஒருவர் செய்யுந்தொழிலையே மற்ருெருவரும் செய்தல், வர்த்தகத்தில் போட்டி, தன் ஸ்திதிக்குத் தக்கவாறன்றி அதிக வியாபாரம் செய்தல் முதலியவைகள் காரணம் என்பதை நாம் அறிகிருேம். அன்னிய நாடுகளிலோ அவ்விதமன்று. அவர்கள் ஒற்றுமையுடன் முக்கியமாய்க் கூட்டுறவு வியாபாரங்களையே நடத்தி வருகிருர்கள். எத்தனையோ ஆயிரக்கணக்கான கூட்டுறவு கம்பெனிகள் பெருந்தொகைகளை மூலதனமாகக் கொண்டு பலவித வர்த்தகத்தைச் செய்து வருகிறதை நாம் நேரில் பார்க்கிருேம். இவ்வித வியாபாரத்தைத் தேர்ச்சியுள்ளவர்கள்தாம் நடத்தி வருவார்கள். வியாபாரத்தில் பிரியமில்லாதவர்களும் தனவந்தர்களும் தங்கள் பொருளைக் கூட்டுறவு வியாபாரம் செய்பவர்களிடம் பங்கு சேர்ந்து கொடுத்து உதவி, அதில் வரும் லாபத்தைப் பங்கிட்டுக் கொள்ளுகிருர்கள். அவர்களின் முன்னேற்றத்துக்கு இதுவே முக்கிய காரணமாகும்.

தனிமையாக ஒருவர் ஒரு பொறுப்பான பெரிய வியாபாரத்தைச் செய்யின், அதில் அவருக்குச் சொற்ப நஷ்டம் ஏற்படுமாகில் அந்த வர்த்தகத்தில் அதிருப்தி யேற்பட்டு நாளடைவில் ஊக்கம் குறைந்து அது நின்றுவிடுவதற்கே ஏதுவாகும். இதுவும் தவிர, வர்த்தகம் செய்ய முன் வருபவர்களில் சிலருக்கு வாரீஸ்களில்லாதது பற்றியும் சிலருக்குத் தம் ஆயுளுக்குப்பின் வர்த்தகத்தைக் கவனிக்கத்தக்க வயதுவந்தவர்களில்லாதுபற்றியும், வியாபாரத்தில் தன திரவியங்களை வெளியே கொடுத்தால் வசூலாகமாட்டாதென்ற பயத்துடனும், இன்னும் இதுபோன்ற பல காரணங்களினுலும், வியாபாரம் நீடித்து நடைபெறுவதற்கில்லாமல் போகிறது.

கூட்டுறவு வியாபாரம் செய்யின் இவ்வித தடைகள் ஒன்றும் ஏற்படாததுடன் நாம் வர்த்தகத்தில் போட்டி பணம் மூலதனமும் சுதந்தரர்களுக்கு கிடைக்கும். அதனுலேயே கூட்டுறவு வியாபாரம் உலகில் நீடித்து நடைபெறுகின்றது.

ஆகவே, தனிமையாக ஒரு வர்த்தகத்தைச் செய்வதைவிட, கூட்டுறவாக நடத்தினால், போட்டி நீங்கி, வர்த்தகமும் முயற்சியுடன் நீடித்து நடைபெறும்.

நமது நாட்டில் கூட்டுறவு வியாபாரம் அதிகமாய்ப் பரவாததற்குக் காரணம் நமக்குள் ஒற்றுமை, நம்பிக்கை, கல்வி இவைகளின்மையே.

### உண்மைக் கல்வியின் நோக்கம்.

நம் நாட்டில் கல்வி கற்பதெல்லாம் உத்தியோகத்தை நாடியேயன்றி வேறன்று. இந்நோக்கத்துடன் கல்வி கற்பவர்கள் எவ்விதம் செல்வந்தராகக் கூடும். உத்தியோகத்தை நாடி வாசிப்பவர்களில் சிலர் தவிர எத்தனையோ ஆயிரக்கணக்கானவர்கள் வேலையின்றி வருந்துவதை நாம் காண்கிருேம். உத்தியோகத்திலமர்ந்தவர்களும் சரீர சக்தியுள்ளவரை வேலை செய்தால்தான் கூலி கிடைக்கும். உத்தியோகத்தில் சொற்ப தொகையைச் சம்பளமாகப் பெறுபவர்கள் வேறு வழிகளில் பணம் சேகரித்தாலன்றிச் செல்வந்தராக முடியாது. ஆனால் தொழிலும் வர்த்தகமும் அவ்விதமன்று. படிப்படியாய் மேலோங்கித் தலைமுறை தலைமுறையாக நீடித்து நடைபெறக் கூடியவை.

உத்தியோகத்திற்குக் கல்வி எவ்வளவு அவசியமோ, அதுபோல வர்த்தகத்துக்கும் கல்வி அவசியமே. கல்விதான் பல துறைகளிலும் துணையாக நின்றுதவுகின்றது.

நம் மரபினர் கல்வியில் மிகக் குறைவுபட்டவர்கள் என்பதையும், ஆரம்பக் கல்வியிலேயே பிற்போக்கடைந்திருக்கிருர்கள் என்பதையும் உணர்ந்த அரசாங்கத்தார் நம் மரபினர் வசிக்கும் ஒவ்வொரு கிராமங்களிலும் நம் மரபினருக்கென்றே தனிமையாக ஆரம்பப் பாடசாலைகளை ஏற்படுத்தி இலவசமாகக் கல்வி கற்பித்து வருகிருர்கள். இதனால் நாம் கல்வியில் தற்போது எவ்வித நிலைமையிலிருக்கிருேம் என்பதை உணர்கிருேம்.

நம் ஜனசமூகம் கல்வியில் பிற்போக்கடைந்திருந்த [illegible] ... [illegible] "[illegible]" [illegible] ... [illegible] தொழில், [illegible] ... [illegible]

அத்துடன் நமது ஜன சமூகத்தின் பிற்போக்கை யுணர்ந்து ஆங்காங்கு கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு வியாபாரங்கள் இவைகளை ஆரம்பித்து, நம் தொழிலை ஆதரித்து அவர்களுக்கு இருந்துவரும் குறைகளை நிவர்த்தி செய்ய முன் வருவதுடன், நமது வர்த்தகங்களையும் காலத்துக் கேற்றவாறு சீர்திருத்தி ஊக்கத்துடன் நடத்தி வருவோமாகில் நாம் இன்னும் சுயேச்சை யடைந்து நன்கு மதிக்கப்படுவோம்.

ஈஸ்டு இந்தியா கம்பெனியும் நம்மவர்களும்.

முதல் முதல் ஐரோப்பியர்கள் நம் தேசத்திற்கு வியாபாரத்தை நாடியே வந்தார்கள் என்பதை நாமெல்லோரும் உணர்வோம். இங்கிலீஷ்காரர்களுக்கு வியாபாரம் நிலைத்ததினின்று கொஞ்சங்கொஞ்சமாய் நமது தேச ஆட்சியும் அவர்கள் கைக்கு வந்தது. ஆகையால் இங்கிலீஷ்காரர் வியாபார விருத்தியே அவர்கள் தற்போது பெற்றுள்ள சாம்ராஜ்ஜியத்திற்குக் காரணமாயிருந்ததென்று விளங்குகிறது. அவ்வாறாயின அவர்கள் வியாபாரம் நமது நாட்டில் நிலைத்ததற்கு முக்கியமான காரணம் என்னவென்று பார்ப்போம்.

நம் நாட்டில் விசேஷமாய்க் கிடைக்காத கம்பளி, கண்ணாடி முதலிய சாமான்களை ஐரோப்பாவிலிருந்து கொண்டு வந்து விற்று, மேல் நாடுகளில் கிடைக்காத பருத்தித்துணி, அரிசி, தேங்காய், சுக்கு மிளகு முதலியவற்றை இங்கிருந்து தங்கள் நாடுகளுக்குக் கொண்டு போவதே அவர்கள் வியாபாரமாகவிருந்தது. கப்பல் மூலமாய் வந்த இவர்கள் தங்கள் வியாபாரத்தின் சௌகரியத்திற்காக நெசவுக்காரர்களைத் துறைமுகங்களாகிய சென்னை, மயிலாப்பூர், கூடலூர், மசூலிபட்டணம், புதுச்சேரி, காரைக்கால் முதலிய இடங்களில் குடியேற்றினார்கள். அதனால் நம்மவர்கள் மேற்கண்ட இடங்களில் சுமார் 250 வருஷங்களுக்கு முன் வந்து குடியேறி ஈஸ்ட் இந்தியா கம்பெனி காலத்தில் பருத்தித் துணிகளை நெய்து ஐரோப்பியர்களுக்குக் கொடுத்ததன்றிக் கம்பெனியாரால் நமக்கு மதிக்கப்பெற்ற பிரபல வியாபாரிகளாயுமிருந்து வந்தனர். தற்போது மான்செஸ்டர் இயந்திரங்களோடு போட்டிபோட இயலாது நம்முடைய தொழில் நாளுக்கு நாள் க்ஷீணித்துக்கொண்டே வருகிறது.

அரசாங்கமும் நமது சமூகமும்

ஆகையால் இங்கிலீஷ்காரர்கள் நம் நாட்டில் சாம்ராஜ்ஜிய மேற்படுத்துவதற்குக் காரணமாயிருந்த அவர்கள் வியாபாரமானது நிலைபெறுவதற்கு

மிகவும் உதவியாயிருந்தவர்கள் நம்மவர்களென்றே சொல்லவேண்டும். ஆனால் இப்போது கம்பெனி காலத்தில் தங்கள் ஆட்சியை இங்கு நாட்ட உதவியாயிருந்த நம்மவர்கள் தொழிலை விருத்தி செய்யாமலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும், சட்ட சபை முதலியவற்றிலும், பிரதிநிதித்துவம் தராமலும் ஏறிய ஏணியைத் தட்டிவிடுவது போல் விட்டுவிட்டனர். என்றாலும், தவறு நம்மிடத்திலுமிருக்கிறதென்று சொல்ல வேண்டும். தொழில் விருத்தியைப் பற்றியும், பிரதிநிதித்துவத்தைப் பற்றியும் இது வரையில் நாம் யாதொரு கிளர்ச்சியும் செய்தோமில்லை. இத்தகைய மகாநாடுகள் முன்னரே கூடித் தீர்மானங்கள் செய்தனுப்பியும், நம்மினத்து அறிஞர்கள் கூடிய டெபுடேஷன் ஏற்பாடு செய்து கவர்னர் முதலிய அதிகாரிகளைக்கண்டு நம் குறைகளை எடுத்துரைத்தும் இருப்போமாயின் அவைகள் அரசாங்கத்தாரால் கவனிக்கப் பெற்றிருக்குமென்பதிற் சந்தேகமேயில்லை. இனியாவது அத்தகைய முயற்சிகளையும் நாம் செய்ய வேண்டும்.

செங்குந்தர் கல்வி நிதி

நெசவேயன்றி மற்றைய தொழில் வியாபார முறைகளையும் கற்றுவர பிறதேசங்களுக்கு வியாபாரத்திலும், தொழில்களிலும் தேர்ந்த அறிஞர்களையும், மாணவர்களையும் அனுப்புதல் அவசியமாகும். இதற்கென மாபெரும் நிதியொன்று திரட்டி வைத்தல் வேண்டும். பொதுவாய் நம்மவர்கள் விசேஷ காலங்களிலும், சிறப்பாய்த் தனவந்தர்களும், சந்ததி யில்லாதவர்களும், வியாபாரிகளும (மகமை மூலம்) கோயில் முதலிய தர்மங்களுக்கும், மறுபிறப்பில் பயன் தருவதாகச்சொல்லப்படும் புண்ணியங்களுக்குத்தாராளமாய்ப் பொருள் வழங்குவதைச் சிலகாலமாவது நிறுத்தி, மறுமைக்கு ஆதாரமயுள்ள இம்மை வாழ்க்கையில் நம முன்னேற்றத்திற்காக நமது கல்விச்சங்கம நிறுவக் கருதியுள்ள நிதிக்கு வழங்குவாராயின், அதனிலும மேம்பட்ட புண்ணியத்தைப் பெறுவார் என்பதிற் சந்தேகமில்லை. ஈண்டு குழுமியுள்ள செல்வந்தர்கள் இம்மகாநாட்டுப் பந்தலிலேயே அவரவர்கள் சக்திக் கியன்றவாறு பெருந்தொகை கொடுத்து மற்றுமையாருக்கு வழி காட்டுவாராயின் சில நாட்களுக்குள்ளாக இலக்ஷக்கணக்கான பொருள் சேருமென நம்புகின்றேன்.

முடிவுரை

நூற்றாண்டுகளுக்கு முன் செய்திருந்த முறையிலேயே இக்காலத்திலும் தொழிலைச் செய்ய



லாகாது. நவீனமானதும் அதிக வருவாய் தரக்கூடியதுமான தறிகளையும், அவசியமாயின் இயந்திரங்களையும் கொண்டு அப்போதைக்கப்போது புது மாதிரியான துணிகளை நெய்தல் வேண்டும்.

நமது சங்கங்கள் இனிது நடைபெற்று நம் ஜன சமூகத்திற்குள் ஒற்றுமையும், உணர்ச்சியும், ஊக்கமும் ஏற்பட்டு, நமது சமூகம் முன்னேற்றமடைந்து என்றும் சிறப்புற்றோங்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

## முதலாவது செங்குந்த வாலிபர் மகாநாடு

வர்த்தகர் மகாநாட்டுத் தலைவர் பேருரை முடிந்ததும் கரகோஷமும் ஜே கோஷ்டமும் வானையும் பிளக்குமாறு பந்தலில் அதிர்ந்தன. அச்சமயம் காலச் சுருக்கத்தை யுத்தேசித்து வர்த்தகர் மகாநாட்டுத் தீர்மானங்களையும் வாலிபர் மகாநாட்டுத் தீர்மானங்களையும் சமூக மகாநாட்டுத் தீர்மானங்களோடு சேர்த்து அன்று மாலை கொண்டுவரலாமெனத் தலைவர்கள் முடிவு செய்தனர். உடனே வாலிபர் மகாநாடு துவக்கப்பட்டது.

வாலிபர் மகாநாட்டுத் திறப்பு

மலையாளம் ஜில்லாவிலுள்ள கொல்லங்கோட்டின்கண் பிரபல தனிகராகவும், அரச குடும்பத்துக்கு இணையாகச் சொல்லக்கூடிய அந்தஸ்தினை யுடையவராகவுமுள்ள பெரிய வீட்டார் என வழங்கப்பெறும் ஒரு சிறிய செங்குந்த குடும்பத்தினரைச் சேர்ந்த தமிழ்மொழி வல்லுநரும் வடமொழி வியாகர்ண பண்டிதருமாகிய திரு. கு முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள் நம்மவர் முதலாவது வாலிபர் மகாநாட்டைத் திறந்துவைத்தனர். அதுசமயம் அவர்கள் நிகழ்த்திய பேருரையின்சாரம் கீழ்வருமாறு :—

முதலாவது செங்குந்த வாலிபர் மகாநாட்டினைத்

திறந்து வைத்த சமயம்

### கோல்லங்கோடு திரு கு. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்களின்

## சொற் பெருக்கு

நமதிறைவனாகிய ஆறுமுகப்பெருமானுடைய திருவடிகளை மனம்பூண்டு தியானித்துக்கொண்டு, இம்மகாசபையில் தலைமைபூண்டு விளங்கும் பெரியாருக்கும், மற்றைய சகோதர சகோதரிகளுக்கும் என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்திக்கொள்ளுகிறேன். இப்பொழுது நமது தென்னிந்திய செங்குந்த மகாஜனங்களாலே கொடுக்கப்பட்ட கட்டளையை நான் என் சிரசின்மீது தாங்கிக்கொண்டவனாகி இங்கு இந்த வாலிபர் மகாநாட்டைத் திறந்துவைக்க முன்வந்துள்ளேன். நானோ உங்களுக்கு அதிக அறிமுகமில்லாத மலையாளதேசத்திலே வசிப்பவன். நீங்களோ எனக்கு அதிக அறிமுகமில்லாத தமிழ் தேசத்திலே வசிப்பவர்கள். இந்தியாதி நிலைமைகளையெல்லாம் எண்ணித் துணியாமல், எவ்வாறிருந்தபோதிலும் பெரியோர்கள் உத்திரவை மறுக்கச்சக்தியற்றவனாகி முன்வந்ததேயன்றி, வேறொன்று நிலைமையாலும் வந்தவனல்லவென்பதை உங்களுக்கு அறிவித்துக்கொள்ளுகிறேன்.

நான் இந்த வாலிபர் மகாநாட்டைத் திறந்து வைப்பதை நினைக்கும் பொழுதே என்னுடைய மனத்தில் ஒருவிதத் திகிலேற்படுகிறது. இந்தத் திகிலை தீர்த்துவைக்க வேண்டியவர்கள் இங்கே குழுமியிருக்கும்செங்குந்த குலமணிகளாகிய வாலிபர்களே. எதெவ்வாறென்னில், நாங்கள் இம்மகாநாட்டினுள்ளே பிரவேசித்து நமது குலம் முன்னேறிச் செல்லப் பற்பல ஊழியங்களைப் புரிவோமென்றும், நடுவிலே வரும் எவ்வித இடையூறுகளையும் அலட்சியஞ் செய்து விடுவோமென்றும், எத்தகைய துன்பம் வரினும் இன்பமாய்க்கருதி முன் வைத்த காலைப் பின் வைக்காமல் நங்குலத்திற்குள்ளே நுழைந்திருக்கும் ஊழல்களாகிய சத்துருக்களை யெல்லாம் வேரறக்களைந்துவிட்டு நன்கு செழித்தோங்குவதற்காகிய பேரூழியஞ் செய்வோமென்றும், உங்களுடைய மனோஊக்கத்தையும் உற்சாகத்தையும் கரகோஷ மூலமாகக் காண்பித்துச் சஞ்சலந்தவிர்க்கிச் சந்தோஷத்தை யுண்டுசெய்யுமாறு வாலிபர்களாகிய உங்களைக்கேட்டுக் கொள்ளுகிறேன். (கரகோஷம்).

இப்பொழுது இவ்விடத்தில் பொதுவாக செங்குந்தர் மகாநாடு என ஒன்றை யேற்

படுத்தி வைத்துவிட்டு வாலிபர் மகாநாடென்னொன்றைத் துவக்குவதென்னேயெனில், இப்போது விளங்கும் பொதுமகாநாட்டிற்கு ஜீவநாடிகளாக நின்று விளங்குவதும், பிற்காலத்தில் சுயவாட்சிவரையிலுங் கொண்டுபோய்ச் சேர்க்கக் கூடிய திறமையுடையதும் இந்த வாலிபர் மகாநாடேயென்பதை நீங்கள் உங்கள் கருத்தில் நன்கு பதித்து வைத்துக்கொள்ளவேண்டும். உலகத்திலே உங்களைப் போலவே பிறந்து வளர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கும் பற்பல சமூகங்கள் எந்த மார்க்கத்தைக் கடைப்பிடித்து உன்னத நிலைமையை யடைந்தார்கள், இப்பொழுதும் அடைந்து கொண்டிருக்கிறார்கள் என்கிற விஷயத்தை உங்களுடைய புத்தியைக் கூர்மைசெய்து யோசித்துப் பார்த்தால், கல்வி கற்குந் துறையிலே சென்று சிறிய சிறிய கஷ்டங்களை யனுபவித்துப் பிறகு விவேகசாலிகளாகி, உலகத்திலுள்ள பற்பல நுட்பமான விஷயங்களையும் அறிந்துகொள்ளுகிறார்களே யன்றி வேறு வழியில்லை யென்பது உள்ளங்கைக் கனிபோல் நன்கு விளங்கும். அப்பொழுது உங்களுக்கும் கல்வி கற்கவேண்டுமென்னும் அவாவுண்டாகும். பின் கல்வி கற்பீர்கள். அதற்குப் பின் நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து உங்களுடைய இச்செங்குந்த சமூகத்தை முன்கொண்டுவருவதற்கு எக்காரணத்தாலும் பின்னடையாமல், உடல் பொருளாவிகளைத் தத்தஞ் செய்தேனும் அதி சீக்கிரமாக முயற்சி யெடுத்துக்கொள்ள வேண்டுமென்னும் ஊக்கம் பிறக்கும். இவ்வூக்கம் பிறந்தாலன்றி முன்னெறிச் செல்லுவது சாத்தியமல்லவென்பதை நான் உங்களுக்குப் பன்முறையும் வற்புறுத்தி வற்புறுத்தி உறுதியாகக் கூறுவேன். இந்த மார்க்கங்களிலே ஊக்கமில்லாமல் பழைய ஆசாரக் கொள்கைகளை வைத்துக்கொண்டு காலதேச வர்த்தமானங்களை யறிந்து கொள்ள மாட்டாது அடாத பிடிவாதஞ் செய்யுஞ் சில வயோதிகர்களை முன்னே நடத்திக்கொண்டு, இது பெரியோர்கள் போனவழியென்று நாமும் அந்த வழியாகவே சென்றுகொண்டிருப்போமானால், நமது இலட்சியமாகிய மேன்மை நிலையை யடையத் தவறிப் போனவர்களாய் விடுவோமேயன்றி ஒருகாலும் முன்னேற்றமடையமாட்டோமென்பதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை. ஆகையால் நமது குலோத்தாரணத்திற்கு முக்கிய ஆதாரமாக விளங்கும் இளஞ்சிங்கங்களாகிய வாலிப சகோதரர்களே, மிகப்பெருமைசான்ற நல்ல ஊக்கமென்னுங் கங்கணத்தை யுங்கள் கரங்களிலேயணிந்து உண்மையென்னுந் திருநாணியைக் கெட்டியாய்ப் பூட்டிக்கொண்டு வெளியிலே புறப்படுங்கள். அப்பொழுதுதான் நீங்களும் உங்கள் வம்சமும் நல்ல உன்னத நிலைமையையடைந்து வாழ முடியும். ஆனால் இப்பொழுது உங்கள் மனத்தினுள்ளே புகுந்து நிரம்பியிருக்கும் பத்துணர்ச்சியால் இங்ஙனஞ் செல்லத் துணிந்து விட்டீர்களென்பது எனக்கொருவாறு விளங்குகிறது. ஆனபோதிலும் சற்றும் அச்சமில்லாது புத்தி விசாலத்தோடு ஷை இந்த மார்க்கத்திலே சென்று நங்குலத்தை முன்னேற்றி வைக்கத் தகுந்ததாகிய தேச ஊழியங்களைச் செய்ய எக்காரணத்தாலும் எப்பொழுதும் சற்றும் பின் வாங்கமாட்டோமென்கிற உறுதியின் வலிமையை இங்கே வந்து குழுமியிருக்கும் பெரியோர்களைவருங்கண்டு களிக்குமாறு நீங்கள் இன்னொரு முறை கரகோஷஞ் செய்து அறிவித்துக்கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன் (கரகோஷம்). இப்படிப்பட்ட அரிய பெரிய விஷயங்களை யெல்லாம் மிகவெளிதில் நிறைவேற்றிக்கொடுத்துத் தற்காத்து இரக்ஷிக்கவல்ல வரும் நமது குலத்திற்கு அதிதேவதையுமாகிக் கச்சிமாநகரின் கண் எழுந்தருளி விளங்கும் சர்வேஸ்வரியான காமாக்ஷியம்மனுடைய இரு சரணாரவிந்தங்களை மனம் வாக்கு உடல் என்னு முக்கரண சுத்தியோடு பணிந்துய்ந்து கொள்ளுவோமாக.

தென்னிந்திய செங்குந்த வாலிபர்களாகிய எனதருமைச் சகோதரர்களே, நான் இனியும் இந்த விடத்திலே நின்று இவ்வாறு பிரசங்கித்துக்கொண்டே யிருப்பேனாகில் பெரியோர்களால் எனக்குக் கொடுத்த மிகவுஞ் சுருக்கமாகிய காலவளவைக் கடந்து செல்பவனாகி விடுவேனாகையால், எல்லாம் வல்ல இறைவனை யிறைஞ்சிக்கொண்டு இந்தத் தென்னிந்திய செங்குந்த வாலிபர் மகாநாட்டை இதோ திறந்து வைத்துவிட்டு இன்னுமொருமுறை என்னுடைய மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்திக் கொள்ளுகிறேன்.

### வரவேற்புத் தலைவர் சொற்பெருக்கு.

வாலிபர் மகாநாடு திறந்துவைக்கப்பெற்றதும், அதன் வரவேற்புச் சபைத்தலைவர் பூந்துறை நாட்டின் நாட்டாண்மைக்காரரும், பிரபல வியாபாரியுமாகிய ஈரோடு திரு. நா. மு. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் தமது வரவேற்புச் சொற்பெருக்கை நிகழ்த்தினர்:—



ஈரோட்டில் விபவ௵ தை௴ 7, 8, தேதிகளில் கூடிய

தென்னிந்திய செங்குந்தர் முதலாவது வாலிபர் மகாநாட்டு வரவேற்புத் தலைவர்

திரு. நா. மு. சண்முகசுந்தர முதலியார் அவர்கள்

## சொற் பெருக்கு.

அவைத்தலைவரவர்களே!
வாலிப சகோதரர்களே!

பல்லாண்டுகளாக நமது குலமணிகளாகிய இளைஞர்களனைவரையும் ஒருங்கே பெருந்திரளாகச் சந்திக்க வேண்டுமென்ற பேரவா எனதுள்ளத்தே ததும்பி நிறைந்திருந்ததற்கேற்ப, இன்று உங்களெல்லோரையும் அப்படிச் சந்திக்கும் பாக்கிய மேற்பட்டதற்குப் பெருமகிழ்ச்சியெய்துவதோடு, இத்தென்னிந்திய செங்குந்தர் இளைஞர் மகாநாட்டு வரவேற்புக் கமிட்டியின் சார்பாக உங்களனைவருக்கும் பணிவுடன் நல்வரவு கூறுகின்றேன். உங்கள் வரவு நல்வரவாகுக!

நமது வாலிபர் மகாநாட்டுக்குத் தகுந்த தலைவராகக் குடியாத்தம் முனிசிபல் கௌன்சிலர் திரு. M. V. பீமராஜா முதலியார் அவர்கள் இசைந்ததே பெரும்பாக்கிய மாகும்.

தற்கால மாந்தரின் மனப்பான்மையை நோக்குங்கால் எத்தேசங்களிலும் சுதந்திர தாகமும், சுயமரியாதை யுணர்ச்சியும், சமூக சீர்திருத்தமும் தோன்றி நிற்கின்றன. நமது நாட்டிலும் அவ்வாறே ஒவ்வொரு வகுப்பினரும் முற்போக்கான தங்கள் இலக்ஷியங்கள் கைகூடும் பொருட்டுச் சங்க ஸ்தாபனங்களை யேற்படுத்தியும், மகாநாடுகளைக் கூட்டியும், அவற்றின் பயனாகிய பிரசாரங்களைச் செய்தும் வருதல் கண்கூடு. ஆனால் இத்தென்னிந்தியாவிலே புராண காலந் தொட்டுப் புகழ்வாய்ந்த வீரர்களையும், கலாநிதிக்களஞ்சியங்களையும் தோற்றுவித்த நமது செங்குந்த மரபோவெனில், இதுகாறும் அதி மௌடீகத்தோடு சொந்த அலுவல்களிலேயே ஈடுபட்டுச் சமூகவுணர்ச்சி சிறிதுமின்றி, நாட்களை வீணே கழித்து வந்திருக்கின்றதென்பதை உங்கள் முன்னிலையிலறிவிக்க வருந்துகின்றேன். இப்படியாயினும், அது தற்காலத்தே ஒவ்வொரு மரபிலும் எழுந்து ஆர்க்கும் பேரொலிக்குச் செவிசாய்க்காம லிருக்கவில்லை யென்பதைத் தெரிவிக்க மகிழ்ச்சியுறுகின்றேன். உயர் திருவாளர்களாகிய திருவாரூர், தி. ந. சபாபதி முதலியார், சென்னை ம. சண்முகசுந்தர முதலியார் M.A., L.T., அவர்கள் போன்ற பெரியார்கள் மாகாணத்தின் பிரதான பட்டணமாகிய சென்னையில் "தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்" என வொன்றை நிறுவிக் குலப்பற்றென்னுந் தொண்டையே மேற்கொண்டு, தென்னாட்டிற் குமரி வரை சுற்றுப் பிரயாணஞ்செய்து, ஆங்காங்கு கிளைச்சங்கங்களை ஸ்தாபித்து நம்மரபின் முன்னேற்றமே இலக்காகக் கொண்ட "செங்குந்த மித்திரன்" என்னும் மாதாந்தப்பத்திரிகை யொன்றைப் பிரசுரித்து நடத்திச் சொற்ப காலத்திற்குள்ளாகவே இப்பெரியதொரு மகாநாட்டைக் கூட்டுவித்ததே அதற்குப் போதிய சான்றாகும். இனி நமது சமூகம் மேன்மையடையு மென்பதற்கு இதுவே நற்குறியுமாகும். நமது ஜன சமூகம் முன்னேற்றமடைவதற்கான சாதனங்கள் பலவற்றை இம்மகாநாடு அறிவுறுத்த விருக்கின்றது. இவ்வாறு கிடைக்கப்பெற்ற சாதன முறைகளை யன்புடனேற்று அனுபவ வாயிலாக நடத்திக் காட்டவேண்டியதே நம்போன்ற வாலிபர்களது கடமையாகும். இதுமுதற்கொண்டே நமதியக்கமும் ஆரம்பமாகின்றது.

### வாலிபர் இயக்கம்

ஒருதேசமோ, நாடோ, சமூகமோ, பிரிவோ முன்னேற்ற மடையவும், சுயமரியாதையுடன் வாழவும் விரும்பினால் இளைஞர்களது இயக்கமே தலைசிறந்திருத்தல்வேண்டும். சமீபகாலத்திலே விடுதலைபெற்று மகோன்னதமான நிலைமையை யடைந்திருக்கும் சீனம், துருக்கி, எகிப்து, ஐர்லந்து முதலிய தேசங்களுக்கு வாலிபர்களது பெருங்கிளர்ச்சியே அடிப்படையாக இருந்ததெனக் கூறுவது மிகையாகாது. உலகெல்லாம் மதிக்கும் போர்வீரர்களாயிருந்து பெருங்காரியங்களைச் செய்து முடித்த 'நெப்போலியன்', 'நெல்சன்' என்பவர்களும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மந்திரியாகவிருந்து காரியங்களை நடத்திப் புகழ்வாய்ந்த 'பிட்' என்பவரும் வாலிபரேயாவர். இதனாலன்றோ 'ஆபிரஹாம் லிங்கன்' என்னும் மேதாவியொருவர்

"உலகத்திலே செய்து முடிக்கப்பட்ட மாபெருங்காரியங்களுக்கெல்லாம் வாலிபர்களது இயக்கமே காரணமாயிருந்திருக்கிறது" எனக் கூறியுள்ளார். எல்லாத் தேசங்கட்கும் எல்லாவகையிலும் வழிகாட்டியாய் முன்னணியிலே நின்ற நமது தேசம், அதனையிழந்து வறுமை வாய்ப்பட்டு வருந்துகின்ற இச்சமயத்திலே, முன்போலவற்றையெல்லாம் பெறும்படியான வழியினுழைப்பதற்கு முக்கியமாக நம்போன்ற இளைஞர்களே தேவையென்பது பேரறிவாளர்களின் றுணிபாகும்.

### சமூக முன்னேற்றம்.

எந்நாடு விடுதலை பெற்றுச் சுகவாழ்வை யெய்தவேண்டுமென விரும்புகின்றதோ, அந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு ஜன சமூகமும் எல்லாத் துறைகளிலும் முன்னேற்ற மடைந்திருத்தல் மிகவும் அவசியமாகும். அப்படியிருந்தாலன்றி அந்நாடு விடுதலையைப்பெற வியலாது. எனவே ஜனசமூக முன்னேற்றமே ஒரு நாடு விடுதலை பெறுவதற்கு ஏற்ற சாதனமாகுமென்பதை நீங்களொவ்வொருவரும் மனதிற் றரிக்க வேண்டும். ஆகவே வாலிபர்களாகிய நாம் நமது சமூகத்தொண்டியற்றுதல் வேண்டுமென்பது பெறப்பட்டது. சமூகத்தொண்டாற்றுவதிலே நாமெவ்வளவு ஈடுபட்டிருந்தபோதிலும் அது குற்றமாகமாட்டாது. விவாதமான அரசியற்றுறையிலிறங்கிப் புரட்சி, குழப்ப முதலான தீயவழியிலிழுக்கப்பட்டுப் பேராபத்தை விளைவித்துக்கொள்வது பயிற்சியைப் பின்பற்றும் நம் போன்ற இளைஞரியக்கத்திற்குச் சிறிதும் ஏற்றதாகாது. அது முதிர்ந்த அனுபவமுடையவர்களாலேயே கொள்ளத்தக்கதாகும். ஆதலால் நாம் சமூகத் தொண்டாற்றுவதி லிறங்கினால் அது மென்மேலும் உழைப்பதற்குக் காரணமாயிருக்கும். அதிலும் நமது செங்குந்த சமூகமடைந்திருக்கும் சீர்கேடான நிலை எனது சில வார்த்தைகளால் விளக்கக் கூடியதன்று. அதனுள் தீமைகள் பலவாக விருக்கின்றனவென்று மட்டும் சுருக்கமாகக் கூறுகின்றேன். ஆதலாற்றான் இளைஞர்களாகிய நாம், இந்தத் துறையிலே நமது மனதைப் பூரணமாகச் செலுத்தி, உள்ள குறைகளை நன்காராய்ந்து கொள்வதுடன், அவற்றை நிவர்த்திக்க உட்புகுந்து வேலையு மிடைவிடாது செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். சமூக விடுதலை அல்லது சமூக சமரசமில்லையாயின் தேசம் விடுதலையைப் பெறவியலாதென்பது தேசிய ஞானிகளின் முடிவான சித்தாந்தமாகும். ஒரு காற் பெற்றாலும் அது நீண்டகாலம் நிலைத்திருக்காது. பல ஜன சமூகங்களைப் படைத்த நமது நாட்டிலே ஏதேனுமொரு திரளான ஜனங்களையுடைய சமூகம் பிற்போக்கான நிலைமையிலிருக்குமாயின் அது சுயராஜ்யம் பெறும் வழியிலே தேசம் தாராளமாகச் செல்லக்கூடாதபடி குறுக்கே யிடப்பட்ட வழியடைப்பாகவேயிருக்கும். சமூகத்திலே பல ஊழல்களைப் போற்றி வைத்துக்கொண்டே சுயராஜ்யம் பெற விரும்புவதெவ்வாற்றானுங் கூடியதன்று. முன்னேற்றத்திற்குத் தடையாயுள்ள எல்லாவற்றையுங் களைந்தெறிய முற்படவேண்டும். இவ்வகையிலே வயது வந்தவர்களது மனஸ்தாப முண்டாகாமற்போகாது. அதன் பொருட்டுப் பின்னடைதல் அறிவும் ஆண்மையுமுள்ள செங்குந்த வாலிபருக்குச் சிறிதும் அடுக்காது. சமூகம் தேசமிவற்றின் நிலைமையையும், காலத்தின் போக்கையும் தெரிந்து அவற்றிற்கேற்றவாறு நமது கல்வியறிவையும், செயலையும், பிறவற்றையும் பயன் படுத்தத் துணிதல் வேண்டும். இல்லையேல் நாம் பிற சமூகங்களின் முன் எந்த விதமான பெருமையையுமடையமாட்டோம். பிற சமூகங்களின் பெரு முயற்சியால் நமது தேசம் தான் விரும்பும் சுயராஜ்யத்தைப் பெற்ற பொழுதுகூட நம் சமூகம் சரியானபடி கவனிக்கப்படமாட்டாதென்பது திண்ணம். பிற்போக்கான பழைய கொள்கைகளையே கைக்கொண்டு பழமை பாராட்டும் வயது வந்தவர்களெல்லாம் "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவலகால வகையினானே" என்ற புறனடையைக்கொண்டு சமாதானமடைந்து கொள்ளட்டும்.

### சீர்திருத்தத் தலைவர்கள்.

ஒவ்வொரு ஜன சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் சுயமரியாதையுடன் வாழ்வதே நாடு விடுதலை பெறுவதற்கு வழியாகுமென விசேடமாகத் தென்னாட்டிலே பறையறைவித்து ஒவ்வொரு வாலிபனுடைய உள்ளத்திலும் அது பசுமரத்தாணிபோற் பதியும்படி செய்து வந்த ஆண்சிங்கங்கள் திருவாளர்களாகிய தியாகராயரும், நாயரும், பனகாலரசருமேயாவர். அந்தோ! அப்பெரியார்களின் பெயர் எனது ஞாபகத்திற்குவரும் பொழுதே மனமடையும் துயர் மிகப் பெரிதாகின்றது. உங்களொவ்வொருவருள்ளமும் அவர்களது பிரிவை உள்ளவாறு விசேடவுணர்ச்சியுடன் உணருமென்றே நம்புகிறேன். அவர்களிலும் திரு. பனகாலரசர் பிரிவு வெண்ணெய் திரண்டுவரும் சமயம் தாழியுடைந்ததே போலாயிற்று. சைமன் கமிஷன் முன் சாக்ஷியங் கூறி நமதிலக்ஷியங்களை யெல்லாம் அவர்கள்பால் நிலைபெற நாட்டித் தாம் செய்து வந்த மகத்தான சேவையின் பயனை முற்றுப்படுத்துந்தறுவாயில் அவர் நம்மை விட்டுப் பிரிந்து போயினரென்பதே பிராமணரல்லாத ஒவ்வொரு சமூக வாலிபனது நெஞ்சையும் பிளப்பதாகவிருக்கின்றது. ஆயினும், தற்போது அம்மூவர் காரியங்களையும் ஏற்று வீரகர்ஜனை முழக்கத்துடன் பலபேர் தொடுக்கும் ஆற்றல் வாய்ந்த சொல்லம்புகளுக்கும் பிறவற்றிற்கும் சிறிதும் தளர்ச்சியடையாது எதிர்த்து நின்று போராடிவரும் நமது மாபெருந்தலைவர் வைக்கம் வீரர் திரு. E. V. இராமசாமி நாய்க்கரேயாவர். இவர் திடகாத்திரத்துடனும் நீண்ட வாணாளுடனும், என்றும் மாறாதகொள்கையுடனும். தமது திருப்பணியைச் செய்து வெற்றி பெறுமாறு எல்லாம் வல்ல இறைவனை மனமார இறைஞ்ச நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்.

### கல்வி.

சமூகத் தொண்டாற்றுவதற்கோ, சீர்திருத்தம் புரிவதற்கோ, அதன் முன்னேற்றத்திற்கோ அடிப்படையாக விருப்பது கல்வி. இக்கல்வியறிவு போதுமான அளவு இல்லையாயின் முன் கூறிய காரியங்களிலெதனையும் செய்யவியலாது. இம்மாகாணத்தில் நமது மரபினர் அரசாங்கத்தினர் எண்ணிக்கைப்படி ஆறிலக்ஷங்களுக்கு மேற்பட்ட தொகையினராயிருந்தும் ஒருசிலரே கல்வியறிவுடையவர்களாயிருக்கின்றனர். அவர்களிலும் உயர்தரக்கல்வி கற்றவர்கள் விரல்கொண்டெண்ணுந் தொகையினராயிருக்கின்றனர். இக்காரணமொன்று பற்றியே அரசாங்கத்தார் நமது சமூகத்தையும் பிற்போக்கான சமூகங்களோடு (Backward Classes) சேர்த்தெண்ணுகின்றனர். மண்டலாதிபர்களும் பிறரும் புகழும்படியான ஒட்டக்கூத்தர், இரட்டையர்கள், படிக்காசுப்புலவர் முதலான பல பிரசித்திபெற்ற தமிழ் வாணர்களைப் பெற்றிருந்த நமது சமூகத்தில் தமிழறிவுதானும் நிறைந்தார் விசேடமாக இல்லை. இதற்குக் காரணம் நமது சமூகத்தில் பெரும்பான்மையினர் வறிஞர்களாயிருப்பதும், செல்வமுள்ள சிலரும் தம்மக்கள் எழுதப்படிக்கத் தெரிந்து கொண்டால் அதுவே தமது குடும்ப வாழ்க்கைக்குப் போதுமானதென நினைப்பதும், ஒருசிலர் மக்களைப் பெறுவது பிற்காலத்தே தமக்கு உணவாதியவைகளுக்காகக் கூலிவேலை செய்து சம்பாதிப்பதற்கென நினைப்பதுமேயாம். முக்கியமாகக் கல்வியின் அவசியத்தைத் தெரிந்து கொள்ளாமையும், சமூக முன்னேற்றவுணர்ச்சி சிறிதுமில்லாமையுமே யென்று கூறலாம். பிற்கூறியவிரண்டையும் நம்மரபினர் நன்கறிந்திருப்பாராயின் "கற்கைநன்றே, கற்கை நன்றே-பிச்சைபுகினுங் கற்கைநன்றே" என்றபடி கூடியவரையெந்த வகையிலாவது கல்விகற்க முற்பட்டிருப்பார்களன்றோ? ஆகையால், நம்மவர்களிற் பலரும் கிராமந்தோறும் ஆங்காங்கே சிறுவர்களெல்லாம் கட்டாயப் படிப்பை யடையும்படியான ஏற்பாட்டை விரைவிற் புரிதல்வேண்டும். மக்கள்வாழ்க்கைக்குக் கல்வி இன்றியமையாததென நம்மரபினர் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளும்படி பிரசாரம் செய்தல் வேண்டும். தத்தம் பிள்ளைகளுக்கு அவசியமாய் உயர்தரக் கல்வியைக் கற்பிக்கும்படி ஒவ்வோரிடத்திலுமுள்ள செல்வர்களைத் தூண்டுதல் வேண்டும். ஆங்காங்கே சங்கங்களை ஸ்தாபித்துப் பொருள் சேர்த்து அவற்றின் மூலமாய் ஏழைப்பிள்ளைகளுக்குக் கல்விப்பயிற்சி யுண்டாகும்படி முயற்சிப்பது மிகவும் முக்கியமாகும். நமது மரபிலே ஆயிரக்கணக்கான வாலிபர்களிருந்தும் அங்கங்கே போதுமான செங்குந்த வாலிபர் சங்கங்களமைக்கப்படாம லிருப்பது விசனிக்கத் தக்கதொன்றும். இப்படிச் செய்வதுடனமையாமற் பலவாகிய தொழிலுக்குரிய கல்வியையும் பயிலும்படி செய்தலும் கடமையாகும். கூடுமானால் மேனாடுகளுக்குச் சென்று அக்கல்விப் பயிற்சி பெறத்தகுதியுடைய வாலிபர்களை அங்கு செல்லுமாறு ஏவுதல் வேண்டும். கப்பலேறுதலும் வெளி நாடுகளுக்குச் செல்லுதலும் ஆசாரத்திற்குக் கூடாதென்ற கொள்கைபோன்ற மூடாசாரப் பழக்கங்களைத் தவிர்த்தல்வேண்டும். நம்மிற் சற்றுப் பிரபலமான தனவந்தர்களைக் கொண்டு பலவிடங்களிலும் தொழிற்சாலை நியமிக்கும்படி பிரயத்தனம் செய்யவேண்டும். எதற்கும் தெய்வசெயல் ஊழ்வினை யென்றெண்ணிக்கொண்டு சோம்பியிருத்தலை யறவே தொலைக்கவேண்டும். இதனால் தெய்வ சிந்தனையையொழித்துவிட வேண்டுமென நான் சொல்ல வரவில்லை. "பிறவுயிர்

களிடத்து வெறுப்புறுதவனும், அவைகளை நேசிப்பவனும், அவற்றினிடத்துக்குக் கருணையும் பொறுமையுமுடையவனும் ஈசனுடைய அன்புக்குப் பாத்திரனாகின்றான்'' எனவும், "எல்லா வஸ்துக்களிடத்தும் சிறிது பெரிது கருதாமல் அன்புபாராட்டுபவனே ஈசனை யுண்மையிற் றியானிப்பவனாவா" னெனவும் மேலான தத்துவங்களுடன் கூறிய நமது பெரியார் அமுத மொழியை யூன்றி யாலோசியுங்கள். அப்பொழுது உண்மையான தெய்வ வணக்கமென்பது தாழ்ச்சியடைந்து வறுமையால் வாடும் நமது சமூக முன்னேற்றத்தின் பொருட்டு அன்பு பூண்டு தொண்டியற்றலே யாமென்பது புலனாகும். எல்லாப் பிராணிகளிடத்தும் திடீரென்றன்பு செலுத்த இளைஞர்களாகிய நம்மால் இப்பொழுதாவதன்று. நம்முடன் பிறந்தார், உறவினர், குடும்பத்தைச் சேர்ந்தவர் முதலானவர்களிடத்துப் பெருகிய அன்பு நமது சமூகத்தார்பாற் செலுத்துவதற்கே காரணமாகிப் பின் அது முதிர்ந்து எல்லாரிடத்துஞ் செலுத்தக்கூடிய அருளைத் தோற்றுவிக்கும். "அருளென்னு மன்பீன் குழவி" எனப் பெரியோர் கூறியிருத்தலுங் காணத்தக்கதாம். அன்பு, அருள் வடிவே கடவுளின் உண்மை யுருவென நமது உண்மை நூற்கள் முறையிடுகின்றன. இதனைக் கடைப்பிடித்து முற்கூறிய தொண்டாற்றுவதில் முனைந்து நிற்பவர்கள்பால் ஊழ்வலியுஞ் செல்ல மாட்டாது.

## பெண்கல்வி.

சகோதரர்களே! நமது சமூகச் சிறுவர்கள் மட்டும் மேற்காட்டியபடி கல்வி முதலிய வற்றிலே பயிற்சிபெற்று விட்டாலும் போதுமானதாக மாட்டாது. சிறுமியர்களு மவ்வாறே பயிற்றப்படுதல் வேண்டும். இவர்களே பிற்காலத்திற் சிறந்த வாலிபர்களைத் தோற்றுவிக்கும் தாய்மார்களாக வேண்டியவர்கள், "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்பது ஒரு அனுபவ மொழியாதலின், அவர்கள் பிற்காலத்தே சரியான வீரத் தாய்மார்களாக விளங்காமற் போவார்களானால் நாமும் நம்மிற் பெரியோரும் செய்தவைகளும், செய்பவைகளுமான சமூக முன்னேற்றத்தொண்டு முதலியவையாவும் ஒரு பயனுமின்றி நாளடைவில் அழித்துப் போய்விடும். இதனை யொவ்வொரு வாலிபனும் நன்றாக வுணர்ந்து வேண்டியவற்றைச் செய்ய முற்படவேண்டும்.

## விவாக சம்பந்தம்.

ஓரே வகுப்பினர்களாய்ப் பெருங் கூட்டமாயுள்ள ஜனத்தொகையைக் கொண்ட நமது சமூகம் தென்னிந்தியாவிலேயே வெவ்வேறிடங்களில் வசித்துவந்த காரணமொன்றினாலேயே பலவுட்பிரிவுகளைக் கற்பித்துக்கொண்டு, விவாக சம்பந்தங்கொள்வதில் மட்டும் வேறுபட்டிருப்பதானது சமூகச் சீர் திருத்தத்திற்கும் அந்த வகையிலேற்படும் மாறாத ஒற்றுமைக்கும் பெருந்தடையா யிருக்கின்றது. இதனை நான் சொல்வதாற் பலர்க்கும் குழப்ப முண்டாவதோடு வெறுப்புமேற்படலாம். இடையில்வந்த அர்த்தமில்லாத பழக்க வழக்கங்க ளொல்லாமொழிந்து போகவேண்டியனவே. காலத்திற்கும் தேசத்திற்கும், அவற்றினிடையே வசிக்கும் ஜனங்களுக்குப் ஏற்பட்ட பழக்க வழக்கங்களும், ஆசாரங்களும், மதக்கொள்கைகளுங் கூட அவ்வப்போது ஏற்றவாறு மாறுதலடைந்தே வந்திருக்கின்றன. இதுவே உலகத்தின் போக்குமாகும். அறிவு முதிர்ந்து பக்குவமாகின்ற பொழுது உண்மையைத்தா னுணரமுற்படும் இதுவே அதனியல்பு நம்தேசத்தேயுள்ள கொள்கைகளிற் றவறானவைகளெல்லாம் வெகுகாலந்தொட்டே அப்போதைக்கப்போது அவற்றின் தீமையையுணர்ந்த உண்மையறி வாளிகளாற் றக்கவாறு கண்டிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் இதுவரை ஒரு சிலர்க்கே தோன்றுவனவாயிருந்தன இப்போது அவற்றையே வைக்கம்வீரர் பாமரரும் உணரும்படி தேசத்தின் நெருக்கடியான நிலையைக்கருதிச் சற்றுக் கடினமான வகையிற் றெளிவாக்க முற்பட்டிருக்கிறார். சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே "யார் யார்வாய் எப்பொருள் கேட்பினுமப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற பெரியார் மேலான வுரையை இதுவரை சிந்தித்துப்பார்க்காமலே விட்டுவிட்டனர். இப்பொழுதுதான் தமிழுலகம் அதன் உண்மையை உணரும்படியான பக்குவத்திற்கு வந்துகொண்டிருக்கிறது அதிலும் நம்போன்ற இளைஞர் மனதிலே வேரூன்றிவருகின்றது. ஆகவே நன்றாக ஆலோசித்துப் பார்த்தால் அவ்வித விவாகசம்பந்தம் சரியானதாகுமென்ற வுண்மை உங்களுக்குத் தோன்றாமலிருக்கமாட்டாது. நமது சமூகத்திலேயுள்ள பிரிவுகள் பலவற்றிலும் ஜனங்கள் நிறைந்தும் குறைந்து மிருக்கின்றனர். குறைவாயுள்ள ஒரு பிரிவிலே தேசவிடுதலைக்கே காரணமா



யுள்ள பல வாலிபர்கள் தோன்றலாம். அப்படிப்பட்டவர்களுக்கு அப்பிரிவினுள் பிற்காலத்தே அவர்களினுஞ் சிறந்த வீரர்கள் தோன்றுதற்குக் காரணமான பெண்மணிகள் கிட்டாமலிருக்கலாம். இதுபோலவே கன்னிகைகளுக்கு மாகலாம். இவற்றாற் சமத்துவமில்லாத குடும்ப வாழ்க்கையே யேற்படும். அதன் பயனாக அப்பிரிவுமுன்னேற்ற மடைவதற்குரிய சந்ததிகளைத் தோற்றுவிக்க முடியாதபடி ஒவ்வொரு வகையிலும் தாழ்வையே யடையநேருகின்றது நாளடைவிலே யெல்லாப் பிரிவுகட்கு மப்படிப்பட்ட நிலைமை யேற்பட்டுச் சமூகமே தாழ்வினை யெய்துவதாகும். அப்படியாயின் நமது சமூகத் தொண்டும் இப்படிப்பட்ட மகாநாட்டுக் கூட்டங்களும் ஒரு பயனையும் தரமாட்டா. ஆதலாற்றான் ஓர் குலத்தினராயுள்ள நமது சமூகத்தில் விவாக சம்பந்தமிருத்தல் எவ்வகையிலுங் குற்றமாகா திருத்தலோடு சமூக முன்னேற்றத்திற்குங் காரணமாகுமெனக் கூற முன்வந்தேன். இவ்வாறு நாம் ஒற்றுமைப்படுவது அவசியமானதேயாகும்.

## விதவா விவாகம்.

நமது சமூகம் பாலிய விவாக நிபந்தனையை மேற்கொள்ளா திருப்பது போற்றத் தக்கதாகும். ஆனால் பெண்களுக்கு விவாக வயதை வரையறுத்து ஏகாதசமுறை முன்னிட்டும் அதற்கு முன் விவாகமியற்றல் கூடாதென்ற நியமத்தை நம சமூகம் மேற்கொள்ளுமாறு செய்வித்தல் வேண்டும். விதவாவிவாகம் கூடாதென்ற கொள்கையைக் கைவிடுவது இக்காலத்திற் கேற்றதல்லவென் றுணர்தல் அவசியமாகும். ஆண்களெல்லாம் ஒன்றுக்கு மேற்பட்ட விவாகம் செய்துகொள்ளலா மென்ற விதியைத் தமக்குச் சாதகமாக வைத்துக்கொண்டு பெண்களுக்கு விதவா விவாகத்தைக்கூட அனுமதிக்க மனமொப்பாம லிருப்பது எத்துணை பாதகமான செயலாகு மென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். நமது நாட்டில் விதவாவிவாகத்தைச் சிறந்த தேசாபிமானிகளும், சீர்திருத்தக் காரர்களும் போற்றி யாதரிப்பது நீங்களறிந்த விஷயமே. மாதர்களெல்லாம் மக்களைப் பெறுதற்கு மட்டுமே உபயோகப் பட்டவர்களென்று கருதி அவர்களுக்குள்ள விசாலமான அறிவை யோங்கவொட்டாமல் ஒடுக்கப் பார்ப்பதும் கூடாத காரியமாகும்.

இவைகளிலெல்லாம் முன்னின்று நன்னிலையைப் பெறுவது இனி நம்போன்ற இளைஞர்கள் பொறுப்பாகவே யிருக்கின்றதென்பதை நீங்கள் மறக்கலாகாது.

## ஒழுக்கம்

இப்படிப்பட்ட மேலான காரியங்களில் இறங்கும் நாம் நடக்கையிற் பரிசுத்தரா யிருத்தல் வேண்டும். நடக்கையே சிறந்தது. இதுவே நம்மாற் கைக்கொளளப்படவேண்டிய முக்கிய தருமம். வாணாளை யழகுபடுத்திச் சிறப்பிப்பதும் சந்தோஷ வாழ்க்கையைப் பயப்பிப்பதும், பிறருக்கும் நமக்கு மின்பமளிப்பது மிதுவே. "ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க-முயிரினு மோம்பப்படும்" என்ற பெரியார் வாக்கானுமதன் பெருமையை நன்குணரலாம். அமைதியுங் கீழ்ப்படியுந் தன்மையு முடையவராயிருத்தல் மிகவும் முக்கியமாகும். நற்காரியங்களையே செய்யும்படியான பழக்க முடையவராதல் வேண்டும். அது சிறியோர், வலி குறைந்தோர் சமவயதல்லாத சிறிய நண்பர்கள் மாட்டும் காட்டப்படுதல் வேண்டும். செய்வனவற்றை யறியாதார்க்கு நல்லது செய்ய வியலாது. செய்பினும அஃதவர்களுக்குத் தீமையாகவே தோன்றும், அதனால் பொருட்படுத்த வேண்டியதில்லை சத்தியம், சாந்தம், சுயநலங்கருதாமை முதலிய தன்மையராயிருத்தல் அவசியமாம். பொய்யை யகற்றி யுண்மையைக்கொள்ளவும் பிறர்க்குத் தீங்கு செய்யாமலிருக்கவும் நாம முயலுதல் வேண்டும். பிறர் மனம் வருந்தக் கோபமான வார்த்தைகளையும் உபயோகியாமல் அடக்கமுடையவராய்ப் பேசப்பழகுதல் வேண்டும். 'அடக்க மமரருளுய்க்கு மடங்காமை யாரிருளுய்த்து விடும்,'' என்பது அதன் மேன்மையை யுணர்த்தும்.

உள்ளபடி ஜீவிப்பதென்பது ஊக்கத்துடன் முயற்சிப்ப தென்பதேயாகும். தவ சொந்த முயற்சியே வேண்டும். பிறர் உதவியை யாதரித்து வைக்கப்படுவது கூடாது. தனக்கும் தன் செயலுக்கும்தானே தலைவன் உயர்வும் கௌரவமான துடான தீர்மானத்தால் தூண்டப்பட்டு ஒவ்வொரு வாலிபனும் தனதுடைய ஸ்தானத்தில் நிலைபெறவேண்டும். நமக்களிக்கப்பட்டிருக்கும் மனோசக்தி சிறிதாயினும் பெரிதாயினும் சரி அதனை உபயோகிக்கமையாற் கெடும்படி விடவும இழிவான வகையிற்

செலுத்துவதால் மாசுபடுத்தவுங் கூடாது. "தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று" என்றபடி புகழைப் பெறுதலவசியமே யாயினும் சொந்த வினயம், பெருமை, ஆக்க முதலானவற்றைத் தேடுவதால் உண்மையான புகழேற்படாது. ஒவ்வொரு வாலிபனும் தனக்குரிய கடமையைச் செலுத்தல் வேண்டும். அப்பொழுதே யதனை யடையலாம். ஆகவே கடமையைப் பற்றி நீங்கள் நன்குணர்ந்திருக்கவேண்டும்.

### கடமை.

அதனைச் செலுத்த இடையூறா யிருப்பவை தீர்மான புத்தியின்மையும் கொள்கையிற்றளர்ச்சியும் சஞ்சல புத்தியுமேயாம். இவற்றை யொழிக்கப் பிரயத்தனப்படுதல் வேண்டும். நன்மை செய்யும் வழக்கம் வருவதற்கும் தீயவற்றைத் தடுப்பதற்கும், தகாத இச்சையுடன் போராடுதற்கும், சுயாபிமானத்தை வெல்லுதற்கும், நீண்டகாலம் விடாமுயற்சியுடன் உழைத்தல் வேண்டும். கடமையின் பழக்க முணரப்பட்டால் அது வழக்கத்துடன் ஒன்றுபட்டு இலகுவாக விருக்கும். உபயோகிக்க அல்லது செலுத்துவதற்குச் சக்தி யெங்கே யிருக்கிறதோ அங்கேதான் கடமையு மிருக்கிறதென்பதை யொவ்வொருவரு முணர்ந்திருத்தல் வேண்டும்.

நாம் நமது சொந்தமானவைகளும் பிறருக்குரியவைகளுமான நன்மைக்காக நம்மிடத்தே யொப்படைக்கப் பட்டிருக்கிற ஸாதனங்களை உபயோகிப்பதற்கு நியமிக்கப்பட்ட பணியாளராகத் தானிருக்கிறோ மென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். கடமையானது நன்னெறியென்னு மழகிய கட்டடத்தை யுறுதிப்படுத்த வுபயோகிக்கும் சாந்து போலாகும். இதனையுடையவன் பலமற்றவனாயினும் தைரியமுள்ளவனாகின்றான். இஃதில்லாமல் மேலே கூறிய உண்மை சந்தோஷம். அன்பு முதலியவை நிலைபெறமாட்டா, கடமைபற்றிய சிறந்த அறிவை யொருவன் வகித்திருப்பதுவே ஒழுக்கத்திற்குச் சிறப்பணியாகும். நமது அந்திய காலம் வரை வலிமை முதலானவற்றில் உயர்வு தாழ்வு ஒப்புடையார்க்கெல்லாம் செய்யத்தக்க கடமைகள் நம்மைச்சூழ்ந்தே யிருக்கின்றனவென்பதை மனதிற்கொள்ளுதல் வேண்டும். கடமையானது நன்னீதியையுணரும் அறிவினின்றுமுண்டாகின்றது. அந்த நீதியானது நன்மையின் முழுவடிவமாய் அன்பினின்றும் பிறக்கின்றது. இதுவெறும் மனக்கொள்கையன்று. வாணுளில் நுழைந்து பரவுகின்றவோர் ஒழுக்கமாக விளங்கும். அது மனிதனுடைய மனச்சான்றுக்கும் தன் வசப்பட்டவுள்ளத்திற்கும் விசேடமாக உத்தரவளிக்கும் செய்கை முதலானவற்றிற் பிரகாசிக்கின்றது. மனச்சான்று சரியான எண்ணத்தையும் பூரண நம்பிக்கையையும் ஒழுக்கத்தையும் ஆள்கின்ற தலைவனாக விருக்கின்றது. அதனுடைய அதிகாரவன்மையாற்றான் மேன்மையும் நேர்மையுமான நல்லொழுக்கமானது முற்றும் பக்குவ மடைகின்றது. மனச்சான்றுக்குக் கீழ்ப்படிய மனதைப் பழக்க வேண்டும். அது அற்பசுபாவமான இச்சையடக்குந் திறத்தையும் மேலான ஒழுக்கத்தையும் நல்ல மாதிரியில் உருப்படுத்த இன்றியமையாததாகும்; மனமானது நன்மை தீமைகளைப் பகுத்தறியுஞ் சுவாதீனமுள்ளது. அப்படியறியப்பட்ட நலலவைகளும் தீர்மான புத்தியுடன் செலுத்தப்பட்டாலன்றிப் பயன்படமாட்டா. கடமையின் உணர்ச்சி பலமுள்ளதாயும் செய்முறை தெளிவாயுமிருக்குமானால் ஊக்கமுள்ள மனமானது, மனக்காட்சியாற் பெரிதுமாதரிக்கப்பட்டு ஓர் மனிதனை அவன் கொண்டிருக்கிற கொள்கையைத் தைரியமாய்ச் செலுத்தவும் நேரிடும். இடையூறுகளை யெல்லா மெதிர்த்துத் தனது காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளவும் செய்யும்படியான திடத்தைப் பெறும் ஒரு கால அவைகள் முடிவு பெறுவிடினும் கடமைக்காகச் செய்யப்பட்ட தென்கிற திருப்பணியையாவது தரும், நல்லொழுக்கங்களிற் றலைசிறந்தவரெனப் பிறராற் போற்றப்பட்டவர்கள் தாங்கள் மதித்து விரும்பிய வண்ணத்தையடையாவிடினும் தங்கள் கடமையிற் றவறமாட்டார்கள். கௌரவமான ஒழுக்கமுடையவன் கண்ணியத்துடன் வெற்றிபெறுதல் வேண்டும். தன் உயிரைக் காக்கும் வகையினுங்கூட இழிவான வழியை யுபயோகித்தல் கூடாதென்பது அறிஞர்கள் நல்லுரையாகும்.

இவற்றை யெல்லாம் விட வாலிபர்கள் கவனிக்க வேண்டிய முக்கியமான தொன்று. தகாதவகையிற்றுங்கள் இச்சை கொள்ளாமையே யென்றுணர்தல் வேண்டும். அவ்வுணர்ச்சி நம்மிலெல்லோருக்கு முண்டாகும்படி பெரிதுமுழைத்தல் வேண்டும். அது உணரப்படாவிடின உலகிலெந்த நல்ல காரியத்தையும் செய்யத் தகுதியற்றவராய்ப் பிறரால் அவமதிக்கப்பட்டு வாணுளுங்குன்றி பயனற்றவர்களாகவே



யாவர். அன்றியும் நமது சந்ததிக்கும் சமூகத்திற்குமே அழிவைத் தருபவர்களாவார். நேயர்களே! இந்தவகையில் நமது சமூகப் பெண்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் விதிகளைவிடப் பன்மடங்கு நமக்கு விதிக்கப்பட வேண்டுமென்பதே யெனதபிப்பிராயம்.

### தேகப்பயிற்சி.

இவைகளுக்கெல்லாம் மனமானது நல்ல முறையிற் பக்குவப்பட்டிருக்கவேண்டும். அது பக்குவமடைவதற்குச் சரீர திடமே காரணமாகின்றது. உடலுமுள்ளமும் ஒத்து முதிர்ந்த விடத்திலே தான் வாழ்க்கை சிறப்பெய்தும். நீடித்த வாழ்வுமுண்டாகும். இதன் பொருட்டுத் தேகப்பயிற்சி புரிதலவசியமாகும். பண்டைக் காலத்திலும் முன்னோர்களால் இது ஆதரிக்கப்பட்டே வந்திருக்கிறது. தற்காலத்தே கல்வி பயிலும் மாணவர்க்கு அவசியம் தேகப்பயிற்சி யிருக்கவேண்டு மென்பதைக் கல்வியிலாகா வதிகாரிகளும் வற்புறுத்தி வருகின்றனர். இப்பயிற்சி சரீரம், மனம், குணமென்னும் மூன்றையும் விருத்தி செய்யவல்லதாகின்றது. இதனால் ஒவ்வோருறுப்பும் திடம் பெற்றுப் பொலிவுறும் அழகும் உயர்வான தோற்றமும் வலிமையு மேற்படுவதாற் சரீரவிருத்தியும் நல்லதொழிலைச் செய்வதற்கேற்ற கலையும் உள்ளக்கிளர்ச்சியும், நன்கு தொழிலை முடிக்குந் தன்மையும் சோம்பலை யொழிக்குமியல்பு முண்டாவதால் மனவிருத்தியும, சமமான தொகையினர், பலத்தினர், வயதினராமென்ற சட்டத்தினேற்பாடறிதலும், வெற்றி தோல்விகளைக் குறித்த உண்மையாராய்ச்சியும், தமது பலத்தில் நம்பிக்கையும் பிறர்பலத்தினளவறிதலும், அதற்கேற்ப வொழுகுதலும், காண்போரது புகழை யெதிர்ப்பார்த்தலும், மற்றவர்களால் விசேடமாக மதிக்கப்படுதலும், நட்பில் மேம்படுதலுமமைவதாற் குணவிருத்தியுமாவது பிரத்தியக்ஷமாம். மேலும் அது மருந்துக்கனுபானமும் உணவுக்குப் பதார்த்தமும் போல் தொழிற்கு ஊக்கத்தையு மளிக்கின்றது. இதற்காகப் பற்பல விளையாட்டுகளும் அப்பியாசங்களும் உலாவப் போதலும் விதிக்கப்பட்டிருக்கின்றன. முற்காலத்திலே சிலம்பம பயிலுதல் விற்றொழில் குதிரையேற்ற முதலியவை கொள்ளப் பட்டிருந்தன. விளையாட்டுகளிலே பந்தாடல் போன்றவை யெல்லாம் வெள்ளிடை விளையாட்டெனப்படும். இவற்றாற் சரீரம் உறுதிப்படுகின்றது. உட்கார்ந்த விடத்திலேயே விளையாடக் கூடியனவாயும் மகிழ்ச்சி ஆழ்க்கசெக்கனை, புக்கிநுட்பம், ஞாபகவுணர்ச்சி மக்களியல்பறிதல் முதலானவற்றைத் தருவனவாயுமுள்ள விளையாட்டுகளுமுள அவற்றை யறிஞர் உள்ளிடை விளையாட்டென்பர். இவைகளிலே தீமையைத் தருவனவாயுள்ளவற்றை யகற்றுதல் வேண்டும். உக்கமானவைகளேயாயினும் அளவாகவே கொள்ளப்படவேண்டும். இல்லாவிட்டால் "பீலிபெய் சாகாடுமச்சிறு மப்பண்டம்—சால மிகுத்துப் பெயின்" என்றபடி கெடுதலுக்குக் காரணமாகுமென்றுணர்தல் வேண்டும். ஆகவே அவரவர்க்கேற்ற வகையில் தேகப்பயிற்சி செய்து வருவது மிகவும் அவசியமாகும்.

### முடிவுரை.

வாலிபர்களே! மேலே காட்டப்பட்டவைகளோடு நமது தலைவர்கள் கூறும் நல்லுரைகளையும் கவனித்து மேல் நடைபெறவிருக்கும் நமது மகாநாட்டுக் காரியங்களிலே கலந்து இனிச் செய்யவேண்டியவைகளைப்பற்றி யாலோசித்து முடிவுசெய்து அவைகளை யநுபவத்திற் காட்ட வேண்டியது நமது முதற்கடமையாகு மென்பதை வற்புறுத்தி யெனது சொற்பெருக்கைச் சுருக்கியிக்குடன் பூர்த்தி செய்கின்றேன்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஈசன்றிருவருள் நிறைவதாக!

---

வரவேற்புரை முடிந்தவுடன் குடியேற்றம் மாஜி முனிசிபல் சேர்மனும் வட ஆற்காடு ஜில்லா போர்டு மெம்பரும், திருப்பத்தூர் தாலூகா போர்டு மெம்பருமான தனிகர் திரு. மா. வே. பீமராஜா முதலியார் அவர்கள் வாலிபர் மகாநாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அவருக்கு பூமாலை சூட்டியதும், கீழ்வரும் உபசாரப் பத்திரத்தை வரவேற்புச் சபையினர் சார்பாகவும் தலைச்சங்கத்தின் சார்பாகவும் ஈரோடு திரு. S. சென்னியப்ப முதலியார் அவர்கள் வாசித்துத் தந்தனர். பின்னர் தலைவர் தமது பேருரையை நிகழ்த்தினர்.

ஈரோட்டில் விபவஹு தை மீ 8-உ கூடிய
தென்னிந்திய செங்குந்தர் முதலாவது
வாலிபர் மகாநாட்டுத் தலைவர்
குடியேற்றம் உயர் திரு.
மா. வே பீமராஜா முதலியார்
அவர்களுக்கு
டி மகாநாட்டு வரவேற்புக் கழகத்தினரும்
சென்னைத் தலைச்சங்கத்தினரும்
வாசித்துக் கொடுத்த

## உபசாரப் பத்திரம்.

*செங்குந்தர் குல விளக்கே!*

சீரும், சிறப்பும், செல்வமும், கல்வியும், ஆண்மையும், ஆற்றலும், ஒருங்கே அமையப்பெற்ற தாங்கள், ஜீவநதிகளில் ஒன்றாகிய பொன்னி என்னும் காவேரி ஆற்றினைத் தன்னகத்தே பெற்றும் பல்வளமும் நிறைந்து வியாபாரச் சீர்பெற்றிலங்கும் இவ்வீரோடென்னும் மயிலையம்பதியில் கூடிய நம் இளைஞர் மகாநாட்டிற்குச் சபாநாயகராக இசைந்தமைக்கு நாங்கள் மனமுவந்து வரவேற்று நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளதோடு, அடையும் மகிழ்ச்சி அளவிடற்பாலதன்று. தற்காலத்தில் பிறசமூகங்கள் அடைந்திருக்கும் முற்போக்கான நிலைமையை ஒரு சிறிதும் பொருட்படுத்தாது அந்தகாரத்திலாழ்ந்திருந்த நம்வாலிபர் சமூகத்திற்கு அதனை அகற்றி, அஞ்சேல்! என ஆண்மை கூற முன்வந்த தர்மராஜனுக்கிளையோன் போன்ற பீமராஜனே! தும் வரவு நல்வரவாகுக!

*தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளா!*

சுயநலமும் உடல் நலமும் கருதாது குடியேற்ற நகராட்சியின் அங்கத்தினராகவும், பின்னர்ப் பல்லாண்டு அப்பரிபாலன சபையின் சபாநாயகராகவும் வீற்றிருந்து தொண்டாற்றி வந்தது தாங்கள் மக்கள்மாட்டுப் பூண்டொழுகும் அன்பின் பெருக்கையும், அவர்களால் போற்றப்பட்டு வருவதையும் விளக்கப்போதிய சான்றாகும்.

ஜனசமூக ஊழியமே இறைவன் திருவருளைப் பெறுதற்கு ஏற்றவழியெனும் மேலான தத்துவத்தை நன்குணர்ந்து, அவ்வழி முனைந்து சேவை புரிந்துவரும் தியாக மூர்த்தியே!

தாங்கள் தற்போழுது தாலுக்கா போர்டு ஜில்லா போர்டு ஆகிய ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அபேட்சகராக நின்று வெற்றிபெறுது அங்கத்தினராக இருப்பதால் தாங்கள் ஜனங்களால் போற்றப்பட்டு எத்துணை புகழ்வாய்ந்தவர் என்பதை அத்துறையில் உழைத்துவரும் நம் சமூகத்தினரும், ஏனையோரும் நன்கு அறிவார்கள்.

*பேரன்பு வாய்ந்த பெரியீர்!*

தாங்கள் இதுகாறும் பரோபகார சிந்தையோடு தன்னலங்கருதாது உழைத்து வருவது போல் என்றும் தளரா ஊக்கத்துடன் சேவை புரிய எல்லாம் வல்ல ஈசன் தங்களுக்கு நீண்ட வாயுளும், குன்றா ஊக்கமும், மங்காப்புகழும், தந்தருள அவன் திருவருளைப் பிரார்த்திக்கின்றோம்.


சுபம்! சுபம்!! சுபம்!!!

ஈரோட்டில் விபவஹு தைமீ 8உ கூடிய
வாலிபர் மகாநாட்டுத் தலைவர்
குடியேற்றம் மாஜி முனிசிபல் சேர்மன்,
திரு மா. வே. பீமராஜா முதலியார் அவர்களின்


## சொற் பெருக்கு

*எனது அன்பார்ந்த செங்குந்த வாலிப சகோதரர்களே! சகோதரிகளே!*


என்னை இம் மகாநாட்டிற்குத் தலைவனாக இருக்கும்படி கேட்டுக்கொண்டு கௌரவப்படுத்திய உங்களுக்கு முதலாவது என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். வயதிலும் கல்வியிலும் அனுபவத்திலும் மெம்பட்டவர்களே இத்தகைய கூட்டங்களுக்குத் தலைமை வகிக்கவேண்டும். அத்தகையோர் நம்மரபினருக்குள்ளேயே பலரிருக்க வாலிபர்களாகிய நீங்கள் என்னைத் தேர்ந்தெடுத்தது, நானும் ஒரு வாலிபன் என்ற எண்ணத்தாலும், என்பால் வைத்துள்ள அன்பாலுமென்றே நினைக்கிறேன். இப்பெருங் கூட்



வாலிபர் மகாநாட்டு வரவேற்புத் தலைவர்
திரு. மா. பூ. சண்முகசுந்தர முதலியார்.



வாலிபர் மகாநாட்டுத் தலைவர்
திரு. மா. வே. பீமராஜா முதலியார்.



'செங்குந்தர்கள்', ஈரோடு.



மகாநாடு கூடிய 'கலைஞர் மாளிகை', ஈரோடு.



டத்தைச் சரிவர நடத்தி வைக்கும் ஆற்றல் எனக்கு உண்டென்று நம்பி நான் இப்பொறுப் பினை ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும், மக்களுள் முதற்கடமையாகக் கருதப்படும் சமூக சேவைக்கு நீங்கள் என்னை அழைப்பதை மறுக்க என்னால் இயலவில்லை. நமது குல தெய்வமாகிய ஸ்ரீ முருகப்பெருமானது திருவருளாலும் உங்கள் ஒத்துழைப்பாலும் இம்மகாநாட்டை நடத்திவைக்க இயலுமென நம்புகின்றேன்.

### சமூக இயக்கம் அவசியமா?

தேசிய உணர்ச்சிமட்டும் நாடெங்கும் பரவி வருவதாகக் காணப்படும் இக்காலத்தில் அதற்கு விரோதமானதென்று சிலரால் சொல்லப் படும் சமூக உணர்ச்சியை வளர்ப்பதாகிய சமூகச் சங்கங்களும் மகாநாடுகளும் ஏன் கூடவேண்டுமெனச் சிலர் எண்ணுகிறார்கள். அது, சுருங்கக் கூறுமிடத்து, நம்தேசத்துத் தற்போதைய நிலைமையை நன்குணராதாரும், உணர்ந்தும் இத்தகைய இயக்கங்களால் தமக்குப் பெருநஷ்ட முண்டாகுமெனக் கருதியோரும் ஆகிய இவ் விருதிறத்தாரது கூற்றேயாகும். நம் நாட்டில் சில சமூகங்கள் போதிய முன்னேற்ற மடைந்திருக்கின்றன வென்றாலும், பல பின்னணியில் கிடக்கின்றன. நமது பரத கண்டமானது உலகத்திலுள்ள மேன்மைபெற்ற பிற தேசங்களிடையே நன்மதிப்பும் சமத்துவமும் பெறக்கூடிய நிலைமைக்கு வரவேண்டுமென்ற எண்ணம் உண்மையிலேயே முன்னேற்ற மடைந்துள்ள சமூகத்தாருக்கு இருந்திருக்குமேயாயின், நம் சமூகம் இப்போதுள்ள கேவலமான நிலைமையில் இருந்திருக்கவே முடியாது; அநேக வருஷங்களுக்கு முன்னரே முன்னுக்கு வந்திருப்போம். அப்படியில்லாமைக்குக் காரணம் மக்கள் வாழ்க்கைக்கு அவசியம் வேண்டப்படுவதாகிய கல்வி, கடவுள் வழிபாடு முதலியவற்றிலும் ஒருவர்க்குரிய சுதந்திரம் மற்றொருவர்க்கில்லை யெனச் சுயநலவாதிகளால் கடவுளோடும் சமயத்தோடும் இணைத்து அமைக்கப்பட்டுள்ள சாதி வித்தியாசமேயாம். 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்: சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்' என்னும் ஆன்றோர் மொழியை மறுக்கவல்லார் யார்?

கனடா ஆஸ்ட்ரியா முதலிய பலநாடுகளிலும் பல பிரிவினர் இருக்கின்றனரேயெனில் நம் தேசத்திலுள்ள கொடுமைகள் எத்தேசத்திலுமில்லை. ஆங்கு ஒவ்வொரு மனிதனுக்கும் எல்லா வகையிலும் சம உரிமையும் சந்தர்ப்பமும் கொடுக்கப்படுகின்றன. அறிவை விளக்கும் கல்வியிலும் சம உரிமை மறுக்கப்படும் இந்நாட்டில் முன்னேற்றமடைந்துள்ள சமூகங்களிடையே முன்னேற்றமடையாத சமூகங்களுக்கு நன்மதிப்பும் செல்வாக்கும் எவ்வாறு உண்டாகும்? நம் நாடு மேன்மையடையவேண்டுமாயின் அதன் அங்கங்களாகிய ஒவ்வொரு சமூகமும் மேன்மையடைந்தே தீரவேண்டும். அஃதில்லாதபோது பேசும் தேசியப்பேச்சு பயனற்றதாகவே முடியும். நமது சமூக முன்னேற்றத்திற்கு அரசாங்கத்தார் உதவியும், ஏனைய சகோதர இனத்தாரது ஒத்தாசையும் வேண்டுமாயினும், நம்முடைய முயற்சியே மிகுதியுமிருக்க வேண்டும். 'முயற்சி திருவினையாக்கும்', 'முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்' என்பதை நாம் மறக்கலாகாது. எல்லாச் சமூகங்களைக்காட்டிலும் முன்னேற்றமடைந்துள்ள பிராமணர்களே 'பிராமண சபை' ஸ்தாபித்துள்ளாரெனின், நம்மியக்கத்தின் அவசியம் சொல்லாமலே அமையும். ஆகையால் நமக்குச் சமூக முன்னேற்றத்தின் பொருட்டுச் சமூக உணர்ச்சி அவசியமாக இருத்தல்வேண்டும்.

### வாலிபர்களே சமூகத்தின் உயிர்

நமது முன்னேற்றத்திற்குச் சமூக இயக்கம் மாத்திரம் போதாதா என்று சிலர் நினைக்கக் கூடும். போதாது; நம் குல முதியோருடன் வாலிபர்களும் சமூக இயக்கத்தில் ஒத்துழைக்க வேண்டுமாயினும், முன்னேற்றத்திற்குப் பாதகமாக விருக்கும் சில பழைய பழக்கவழக்கங்களைப் 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே' என்பதற்கிணங்க ஒழித்துப் பயன்தரக்கூடியவற்றைக் கைக்கொள்ளும் தைரியம் முதியவர்களுக்கு அமையாது. இம் முறையில் வயோதிகர்களைக் காட்டிலும் நாளைய வாழ்க்கையில் புகவிருக்கும் வாலிபர்களுக்கே அதிகமான பொறுப்பிருக்கின்றது. ஏனையோரைக் காட்டிலும் மனோதிடமும் திடகாத்திரமும் பொருந்திய வாலிபர்களே எண்ணியவற்றை எண்ணியவாறு செய்து முடிக்க வல்லவர். எச்சமூகத்து அல்லது எத்தேசத்து வாலிபர்கள் தம் சமூக அல்லது தேச முன்னேற்றத்தில் ஊக்கம் குன்றி யிருக்கின்றார்களோ, அச்சமூகம் அல்லது அத்தேயம் சீர்கேடுறுமென்பதில் சந்தேகமே இல்லை. ஆகையால் நம் வாலிபர்களே சமூகத்திற்கு உயிர்போன்

திருக்கிறார்கள். சமூக முன்னேற்றத்தின் பொருட்டு நாம் ஆங்காங்கு செங்குந்த வாலிபர் சங்கங்கள் நிறுவியும், மகாநாடுகள் கூட்டியும் நமக்குள் சகோதர வாஞ்சையையும், பரஸ்பர உணர்ச்சியையும் உண்டாக்கவேண்டும்.

இதன் பயனை நீங்கள் இப்பொழுதே பிரத்தியக்ஷத்தில் தெரிந்துகொள்ளலாம். இன்று நாம் முதன் முதலாக மகாநாடு கூடியுள்ளோம். இக்கூட்டத்தில் முன்னிருந்ததைக் காட்டிலும் இப்போது நமக்குள்ள ஒற்றுமையும், நாமெல்லோரும் ஒரே குலத்தைச் சார்ந்த சகோதரர்கள் என்கிற உணர்ச்சியும், மனவெழுச்சியும், பிற எண்ணங்களும் எவ்வளவு அதிகரித்திருக்கின்றனவென்று நீங்களே உணர்வீர்கள். நமது தலைச்சங்கம், பிரசாரகர் மூலமாகவும், 'மித்திரன்' மூலமாகவும் சென்ற இரண்டு வருஷங்களாக முயன்றும், இன்னும் பல முக்கியமான இடங்களில் செங்குந்தர் சங்கங்கள் நிறுவப்படாமலிருக்கின்றன என்றாலும், தலைச்சங்கத்தின் முயற்சி யின்றியே பலவிடங்களில் வாலிபர் சங்கங்கள் மாத்திரம் நிறுவப்பெற்றிருக்கின்றன என்பதே நம்குலம் கூடியசீக்கிரம் விருத்தியடையு மென்பதற்கு அறிகுறியா யிருக்கின்றது. நம் வாலிபர் இயக்கத்தின் அவசியம் இப்போதுதான் நமக்குத் தோன்றியிருக்கிறதென்று சொல்லவேண்டும். ஆகையால், இனி நாம் விடா முயற்சியோடும் ஊக்கத்தோடும் ஒவ்வொரு செங்குந்த கிராமத்திலும் வாலிபர் சங்கங்கள் ஏற்படுத்தித் தக்கால ஊனமுறையில் நம் சமூக முன்னேற்றத்திற்கு உழைத்து வருவோமாயின், நாம் சில வருஷங்களுக்குள்ளாகவே போதிய முன்னேற்ற மடைவோ மென்பதிற் சந்தேகமில்லை. இவ்விஷயத்தில் நமது தலைச்சங்கமும் வேண்டிய உதவிபுரியத் தயாராயிருக்குமென நம்புகிறேன்.

எனது அரிய குலச் சகோதர சகோதரிகளே!

உலகத்தில் சமீபகாலத்தில் முன்னுக்கு வந்துள்ள துருக்கி, சீனு முதலிய தேசங்களைப் பாருங்கள். நூற்றுண்டுகளாக முயன்றும் முன்னேற்றமடைய முடியாதென்று எண்ணியிருந்த அத்தேசங்கள் சில வருஷங்களுக்குள்ளாகவே யாவரும் பொருமைபடக்கூடியவாறு எவ்வளவு மேன்மையடைந்திருக்கின்றன! அதற்குக் காரணம் யாதென்பதைப் பலர் அறிந்திருக்கலாம். ஒருகாலத்தில் ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளைச் செயித்து ஆண்டதன்றி அந்நாட்டவர்க்குக் கல்வியையும் நாகரீகத்தையும் புகட்டிற்றாயினும், சமீபகாலத்தில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அபிவிருத்தியடைந்துவரும் ஐரோப்பியர்களோடு போட்டிபோட முடியாது பின்னடைந்து, செயலற்று, அந்நாடுகளின் மத்தியில் பிழைப்பதாம் அரிதென எண்ணும்படிக் கிடந்த துருக்கிக்குப் புத்துயிரளித்துக் காப்பாற்றி இப்போதுள்ள நிலைமைக்குக் கொண்டுவந்ததார்? அத்தேசத்து வாலிபர்களல்லவா?

மதவைராக்கியமும் முரட்டுத்தனமும் உடையவர்கள் என்று கருதப்பட்டவர்கள் நிறைந்துள்ள ஆப்கானிஸ்தானம் சில வாரங்களில் அடைந்த மாறுதல்களைப் பாருங்கள்! ஆப்கானிஸ்தானத்தில் திடீரென உண்டான மாறுதல்களை நோக்குங்கால், இது ஒரு இந்திரஜாலவித்தையோவென எண்ணவேண்டியதாயு மிருக்கிறது. இவ்வளவும் அந்நாட்டு அரசாகிய வாலிபரது செய்கையன்றே? ஒற்றுமையோடும் ஊக்கத்தோடும் வாலிபர் முனைவாராயின் எதைத்தான் அவர்கள் சாதிக்க முடியாது? ஆனால் அவர்களைச் சரியான நெறியில் நடத்த ஒரு தலைவர் வேண்டும். 'தங்கு சிறப்புகழ் வீரர் தம்மை யெண்ணில் தாமே முன் எண்ணவரும் தலைமையாளன்' என்று யாவராலும் போற்றப்பட்ட வீரவாகுவாதி நவவீரர் பரம்பரையிற் றேன்றிய நம் வாலிபர்களுக்கு நம் குலத்தை மேன்மைக்குக் கொண்டுவரும் ஆண்மையும் ஆற்றலும் இல்லையென்று சொல்லுவது அறியாமையேயாகும். நம் குல வாலிபர்களின் நாயகமணியாகிய திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ. எல். டி, அவர்கள் ஒருவர் சில மாதங்களிற் செய்த முயற்சியால் நம்குலத்தவரிடையே எவ்வளவு ஊக்கமும் புத்துணர்ச்சியும் உண்டாயிருக்கிறது! இவரைப்போல் பல வாலிப சிகாமணிகள் குலத்தொண்டு செய்ய முன் வருவாராயின் நம் சமூகம் முன்னணியில் நிற்கும் சமூகங்களுள் ஒன்றாய்ச் சில வருஷங்களுக்குள் விளங்குமென்று சொல்லவும் வேண்டுமோ?

### நமது தாழ்விற்குக் காரணங்கள்.

ஆயினும், நம் சமூகம் இப்போது பரிதாபகரமான தாழ்ந்த நிலைமையில் இருப்பதற்குக் காரணமென்னவெனில், நம் வாலிபர்களின் சூழல், கல்வியின்மை, உலக அநுபவமின்மை, பிறரோடு அளவளாவலின்மை, மதசம்பந்தமான பிடிவாத முதலியனவாம்.



### நம் வாலிபர்களின் சூழல் முதலியன.

நம் தாய் தந்தையருக்குத் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பவேண்டுமென்ற எண்ணமே பெரும்பாலும் கிடையாது. பிள்ளைக்கு 5 அல்லது 6 வயதானதும் நெசவுசம்பந்தமான கோத்துவாங்கல் முதலிய கூலிவேலைகளில் விடுகிறார்கள். 10 அல்லது 11 வயதானவுடன் தறிவேலையில் பழக்கிப் பின்னர் இரண்டொரு வருஷங்களுக்குள், தாமிருக்கும் பொழுதே கண்ணுக்கழகாய்ப் பார்க்கவேண்டுமென்று சொல்லி, அண்டை வீட்டிலோ எதிர்வீட்டிலோவுள்ள மைத்துனனுடைய பால்மணமாருத குழந்தைப் பெண்ணைப் பேசிமுடித்துக் கலியாணம் செய்துவிட்டுக் குடும்பபாரத்தை அவன்மேல் சுமத்துகிறார்கள். இளமையில் பள்ளிக்கனுப்பப்பட்ட சில சிறுவர்கள் கற்றவற்றையும் மறந்து போகிறார்கள். இவர்களுக்கு உலகமென்பதே தாங்கள் வாழுமூரும், பாவடியும், கடைவீதியுந்தான். காலையிலிருந்து மாலைவரையில் தொழில் செய்யவேண்டியிருப்பதால் பிற இனத்தவரோடும் அயல் கிராமத்தாரோடும் அளவளாவும் பழக்கமே கிடையாது. தெருவுக்கொரு கோயில் கட்டி உற்சவங்கள் செய்து காசையும் வீண் வியாச்சியங்களையும் விருத்தி செய்வார்கள். ஒரு தெருவிலுள்ள கோயிலுக்கு மற்றொரு தெருவான் வரக்கூடாது. ஒரு தெருவிலுள்ள சுவாமி மற்றொரு தெருவுக்கு வரலாகாது; வந்தால் அடிதடி. இதற்காக ஆயிரக்கணக்காகப் பொருள் செலவு செய்வார்கள். பொருள் அறியாது தேவார திருவாசகங்கள் ஓதுவதும், விபூதி உருத்திராக்க வினாவிடைகளைக் குருட்டுப்பாடம் செய்வதுமே இவர்களுக்கு மதக் கல்வியாகும். சரியோ தப்போ முன்னோர் நடந்தபடியே நாமும் நடக்கவேண்டு மென்பார்கள். இன்னும் விரிக்கிற் பெருகும். இவைதான் நம வாலிபர் முதியோரிடத்தில் கற்றுக்கொள்ளும் கல்வியும், சமய ஒழுக்கமும், உலக அநுபவமுமாம். கைநாட்டும கையெழுத்தும் போடும கல்வியும், அர்த்தமற்றதும் விளங்காததுமான சமயஒழுக்கமும், ஊரையும் பாவடியையும் அறிந்த உலக அநுபவமும், 12வயதிலேயே மணம செய்துகொண்டு இனி நாம் சிறுவர்களோடு கூடலாகாது என்ற எண்ணமும், ஒவ்வொரு அவயவமும் வளரவேண்டிய காலத்தில் போதிய தேகப்பயிற்சி யின்மையால் சிறுத்த கைகால்களுமுடைய நம் வாலிபர்களுக்கு என்ன குலாபிமானமும், ஊக்கமும், ஒற்றுமையும், ஆற்றலும் உண்டாகுமென்று நீங்களே தெரிந்துகொள்ளுங்கள்.

### கல்வி.

இவ்வளவிற்கும் காரணம் கல்வி யின்மையென்றே சொல்லவேண்டும். கல்வியில்லாதவர்கள் நடத்தும் இல்வாழ்க்கையும், மேற்கொள்ளும் துறவறமும் முற்றும் பயனற்றவையேயாகும். நமது ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் குறைந்தது 12வயது வரையில் பள்ளிக்கூடங்களுக்குக் கட்டாயம் அனுப்பப்படல்வேண்டும். தங்கள் குழந்தைகளின் கல்வியிற் சிரத்தை இல்லாத பெற்றோரை வாலிபர்கள் வற்புறுத்திப் பிள்ளைகளைப் பள்ளிக்கனுப்பச்செயவேண்டும். நம் குல இளைஞர்கள் கூடியவரையில் உயர்தரக் கல்வியைப் பெற முயலவேண்டும். சுமார் 6 லக்ஷம் ஜனத்தொகையுள்ள நம் மரபினரிடையே 30 உயர்தரக்கல்விகற்ற பட்டதாரிகள்தான் இருக்கிறார்கள் என்பதை நினைக்குந்தோறும் நான் மிகுந்த வருத்தமடைகிறேன். கற்றலிலும் 'கற்கக் கற்பவை' என்றபடி வாழ்க்கையில் பயன்தரத்தக்கவற்றையே கற்கவேண்டும். அடியார் சரித்திரங்களையும் கடவுள் திருவிளையாடல்களையும் மாத்திரம் கற்றறிதலே கல்வியென எண்ணுதல் கூடாது. உத்தியோகம் பெறுதற்பொருட்டுக் கற்கவேண்டுமென எண்ணுதலும கூடாது. விஷயங்களைக் கூர்ந்துணரும் நுண்ணறிவும் பரந்த நோக்கமும் பெறுதற் பொருட்டே கற்கவேண்டும். உத்தியோகம் பெறுதல் கூடாதென்று சொல்வதாக எண்ணலாகாது. அதையே குறியாகக்கொண்டு கற்றலாகாதென்பதே எனது கருத்து. உலக வாழ்க்கைக்கும், மக்கள் சேவைக்கும், கடவுளைச் சரியான வழியில் வணங்குதற்கும அவசியமான எல்லாவற்றையும் கற்றல் நன்று.

'கற்றபின் நிற்க அதற்குத்தக' என்றபடி, கற்றவற்றை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வருதல் வேண்டும். உலக அநுபவம் பெறுதல் கல்வியின் மற்றொரு பாகமாகும். வாலிபர்கள் வாழ்க்கையில் புகுமுன்னரே உலக அநுபவம் நிரம்பப் பெறுதல அவசியமாகும். இவ்விஷயத்தில் பல முக்கியமான இடங்களுக்குப் பிரயாணஞ் செய்தலும் பலரோடு பழகுதலும் மிக்க நலந்தரும். வாலிபர்கள் கலாசாலைகளை

விட்டதும் தங்கள் கல்வி முற்றுப்பெற்றதென எண்ணுதலாகாது. கலாசாலைகள் நாம் கற்க வேண்டிய முறைகளைக் கற்பிக்கும் பொருட்டே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. உண்மையான கல்வி அவற்றை விட்டபிறகே ஆரம்பிக்கிறது. ஆகையால் நாம் ஆயுள்காலம் வரையில் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். ஒவ்வொரு வாலிப சங்கத்திலும் ஒரு வாசகசாலை ஏற்படுத்தி, நமது 'மித்திர'னேயன்றி, வேறு பல பத்திரிகைகளையும் தருவித்துப் படிக்கவேண்டும். விடுமுறை காலங்களில் வாலிபர்கள் கல்வி சுகாதாரம் முதலியவற்றைக் குறித்துப் பிரசாரம் செய்தல் வேண்டும். "பொன் மலர் நாற்றமுடைத்து" என்றபடி, கற்றலோடு நில்லாது, கற்றவற்றை வாலிபர் சங்கங்களின் மூலமாய்ச் சொற்பொழிவுகளில் பிறர்க்கு அறிவித்தும், கற்றவற்றின் உண்மை கசடற மனதில் ஊன்றும்படியும், தெளிவுறும்படியும், கற்றவர்களோடு உண்மையான வாதங்கள் நிகழ்த்தலும் அவசியம். அபிப்பிராய பேதங்களுக்கு இடந்தராது சிநேகபான்மையில் உண்மையை உணர வேண்டும் என்ற எண்ணத்தோடு வாதஞ்செய்தலே சால்புடைத்தாம். கல்வியோடு தேகப் பயிற்சியும் கவனிக்கப்படவேண்டு மென்பதை நான் உங்களுக்கு ஞாபகமூட்டுகிறேன்.

உயர்தரக் கல்வியை நாடும் ஏழைச் செங்குந்த மாணவர்களுக்கும், அந்நியதேசம் சென்று தொழிற்கல்வி முதலியவற்றில் தேர்ச்சி பெற விரும்புவோருக்கும் உதவி புரியும் பொருட்டுப் பெரிய நிதியொன்று நாம் சேர்க்க வேண்டும். வருஷா வருஷம் கோயில்களுக்கும், உற்சவங்களுக்கும், மடங்களுக்கும், மற்றைய அநேக பொதுக் காரியங்களுக்கும் நம்மவர்களால் செலவிடப்படும் தொகையை அளவிட்டுப் பார்ப்போமாயின் லக்ஷக்கணக்காயிருக்கும். இவ்வளவு தொகை ஒவ்வொரு வருஷமும் செலவழிக்கும் நம்மவர்கள் விருப்பினால் இப்போது நிதியைச் சேர்ப்பது ஒரு அரிய காரியமல்ல. நாட்டாண்மைக்காரர்கள் பொதுப்பணங்களை இத்தகைய விஷயங்களுக்கு உதவுமாறு தூண்டப்படுதல் வேண்டும்.

### ஆராய்ச்சி.

உயர்தரக் கல்வியில் தேர்ச்சியடைந்த மாணவர்கள் அறிவுநூல், சரித்திரம் முதலிய பல துறைகளிலும் ஆராய்ச்சி செய்தல் மிகவும் நல்லது. மேல் நாட்டார் அறிவு நூலாராய்ச்சியினால் அடைந்து வரும்பயனை யாவரும் உணர்வீர்கள். நமது குலத்தின் வரலாற்றைப் புராணங்களிலும், ஈட்டி யெழுபதுபோன்ற சில நூல்களிலும் ஒருவாறு உணர்வோமாயினும், எவரும் ஒப்புக்கொள்ளக்கூடியவாறு ஆராய்ச்சி முறையில் இதுவரையில் எழுதிவைத்தாரில்லை. சோழ அரசர்களிடத்துப் போர்வீரர்களாக இருந்த நாம் நெசவுத் தொழிலையும் விவசாயத் தொழிலையும் ஏன், எக்காலத்தில மேற்கொண்டோம் என்பது அநேகருக்கு விளங்காது. சரித்திர ஆராய்ச்சியிற் றேர்ந்த நம் வாலிபர்களே இவ்விஷயங்களை ஆராய்ந்து முடிவு கட்டுவார்கள் என நம்புகிறேன். எழுதிவைத்துள்ள நூல்களைப் படித்தலும், உரை சொல்லுதலுமே போதுமென அமையாது, சுய ஆராய்ச்சியிற்றேன்றும் பல அரிய விஷயங்களையும் புதிய நூல்களாக வெளியிடுதல் வேண்டும்.

### தொழிற் கல்வி.

சகோதர சகோதரிகளே!

இயந்திரங்களோடு போட்டிபோட வேண்டியிருக்கும் இக்காலத்திலுங்கூட, நெசவுத்தொழிலில் பல நூற்றாண்டுகளுக்கு முன் செய்திருந்த முறைகளையே பின்பற்றி வருவதனாலன்றோ அது நாளுக்கு நாள் க்ஷீணித்துக்கொண்டே வருகிறது. நம்மினத்தவருள் பெரும்பாலர்க்கு ஜீவனோபாயமாயிருந்து வரும் இத்தொழிலை விருத்தி செய்வது அவசியமல்லவா? நெசவு சம்பந்தமான சாயந்தோய்த்தல் முதலிய பலவிதத் தொழில்களையும், நுண்ணறிவுடைய நம் வாலிபர்கள் பலர், அரசாங்கத்தார் அமைத்துள்ள நெசவுச் சாலைகளுக்கும் அந்நிய நாடுகளுக்கும் சென்று கற்றுவந்து, நம்மவர் போதிய ஊதியம் பெறக்கூடிய முறையில் தொழிற் செய்யுமாறு கற்பிக்கவேண்டும். ஆங்காங்கு ஐக்கிய நாணய சங்கங்களும் கூட்டுறவுச் சங்கங்களும், நெசவுக்காரர் சங்கங்களும் ஏற்படுத்தல் மிகவும் அனுகூலமானது. இயந்திரங்களின் போட்டியால் நம் நாட்டுக் கைத்தறி நெசவுக்கு ஆபத்து வந்திருக்கிற இச்சமயத்தில், நெசவை மேற்கொண்டுள்ள நம்மவர்களும், ஏனைய சகோதர இனத்தவராகிய தேவாங்கர், சாலியர், சௌராஷ்டிரர் முதலிய எல்லோரும் நெசவுக்காரர் சங்கங்கள் அமைத்து அவற்றின் மூலமாய் அறிஞர்களைக் கொண்டு தொழிலுக்கு உண்டாயிருக்கும் ஆபத்தை நிவர்த்திக்க முயலுதல் மிகவும் நன்று. இவ்விஷயமாக நெசவுக்



காரர் மகாநாடுகளும் கூடவேண்டியிருக்கும். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாய் ஒவ்வொரு கிராமத்திலும் நெசவுச்சாலை ஏற்படுத்தி, மொத்தமாய் நூல் வரவழைத்து, நெய்த துணிகளை மொத்தமாய் விற்போமாயின், நெசவுக்காரர்களுக்கு இப்போது கிடைப்பதைக் காட்டிலும் அதிக ஊதியங் கிடைக்கும். நெசவுத்தொழிலே நமக்குரியதென்னும் தப்பு அபிப்பிராயத்தை ஒழித்து அவரவர்க்குத் தகுதியானதும் அநுகூலமானதுமான ஏனைய பல தொழில்களிலும் இறங்க வேண்டும். நெசவுத்தொழில் ஒன்றை மட்டுமே நம்பியிருப்பது தான் நமது சமூகத்தின் தற்கால வறுமை நிலைமைக்கு முக்கியமான காரணமென்று சொல்லலாம். ஒரு தொழில் உயர்ந்ததென்றும், மற்றொரு தொழில் தாழ்ந்ததென்றும் நினைத்தல் கூடாது. ஒரு தொழிலைக் கற்கப்புகும் நம் வாலிபர்கள் தொழிலாளர்களிடம் வேலை வாங்க மாத்திரம் கற்றுக்கொள்ளல் போதாது. அத்தொழிலைத் தாங்களே செய்யும் பழக்கமும் பெறவேண்டும்.

### அளவளாவல்.

நம்மவர்களுக்குள்ள குறைபாடுகளுள் பிற இனத்தவரோடும், சமயத்தவரோடும், நாட்டவரோடும் அளவளாவுத லின்மையும் ஒன்று. பிறரோடு அளவளாவுதல் இல்லாவிடில், நம்மிடத்துள்ள குற்றங்களைக் கண்டுபிடித்துக் களைதலும், பிறரிடத்துள்ள நன்மைகளை அறிந்து அவற்றைக் கொள்ளுதலும் எவ்வாறு கூடும்? பிறரோடு கலவாமலும், பொதுவிஷயங்களில் தலையிடாமலும் இருத்தலே சிறந்ததெனக் கருதுவார் பலருண்டு. சுயநலத்தையே பெரிதெனக் கருதியிருக்கும் இவர்கள், தாம் பெறவிருக்கும் நன்மையை இழப்பதன்றிப், பிறர்க்கும் பயனற்றவர்களாகிறார்கள். ஆயினும், 'இணக்க மறிந்திணங்கு' என்னும் முதுமொழியையும் மறக்கலாகாது. இச்சந்தர்ப்பத்தில் நான் உங்களுக்குச் சொல்ல விரும்பும் மற்றொரு விஷயமுண்டு. மக்களாய்ப் பிறந்த நாம் பொதுஜன சேவை செய்தலையே முக்கிய நோக்கமாகக் கருதல் வேண்டும். பிறரது உதவியும் ஒத்துழைப்புமின்றி எவரும் உலகில் வாழ இயலாது என்னும் உண்மையை உணரவேண்டும். எத்துணைச் செல்வமுடையாரும் பிறரது உதவியின்றி அச்செல்வத்தை மாத்திரம் கொண்டு வாழ முடியாது. உழவன், நெய்வோன், வணிகன் முதலியோர் தத்தம் தொழிலைச் செய்யாதிருப்பாராயின் வாழ்தல் எங்ஙனம் கூடும்?

ஆகையால், பொது நன்மை கருதித் தொழில் முதலியவற்றில் முயலுதலையே முதற் கடமையாகவும், பொருள் வருவாயை இரண்டாவதாகவும் கொண்டு நடத்தல்வேண்டும். அவ்வாறன்றிப் பொருளை முதன்மையாகக் கருதிச் செய்தால், உலகவாழ்க்கை துன்பமாகவே இருக்கும். வாழ்க்கையின் சௌகரியத்தை முன்னிட்டு ஒவ்வொருவரும் தத்தம் பாகமாகிய பணியை அன்பினோடு ஆற்றுவாராயின் வாழ்க்கையில் அன்பும் சுகமும் ததும்புமல்லவா? அன்பும் சுகமுமே சிவமாதலால், உலகம் அந்நிலைமையில் சிவமயமாயிருக்குமல்லவா? இவ்வாறு அன்பாற் செய்யும் பொதுச் சேவையே நாம் சிவத்திற்குச் செய்யும் பெரும்பணியாகும். இக்கருத்துக் கொண்டே நமது அப்பர் சுவாமிகளும் 'தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான் றன்கடன் அடியேனையும் தாங்குதல், என் கடன் பணிசெய்து கிடப்பதே' எனத் திருவாய் மலர்ந்துள்ளார். இவ்வகையில் நாம் இறைவன் திருவருளுக்குப் பாத்திரராவோமென்பதிற் சந்தேகமில்லை.

### செங்குந்த தொண்டர் படை.

நமது மகாநாடுகள் கூட்டங்களிலும், உற்சவம் முதலிய விசேஷகாலங்களிலும் தொண்டாற்றும் பொருட்டும், குலத்தொண்டு செய்தற் பொருட்டும், நமது வாலிப சங்கங்களின் அங்கத்தினர்கூடிய தொண்டர் படை (Scouts) ஒன்று ஸ்தாபித்தலை அவசியமென எண்ணுகிறேன். இத்தொண்டர்கள் விடுமுறை நாட்களில் நம்மவர்கள் வதியும் கிராமங்களுக்குச் சென்று 'கல்வி,' 'ஒற்றுமை,' 'சுகாதாரம்,' 'சமூக சீர்திருத்தம்' முதலிய விஷயங்களைப் பற்றிப் பிரசாரஞ் செய்ய வேண்டும். மக்களுக்கு நீரினாலோ, நெருப்பினாலோ, வேறு எந்த விதத்தினாலோ ஆபத்துண்டாகுமாயின், அச்சமயங்களில் உதவி செய்யவும் தயாராயிருக்க வேண்டும்.

முன்னொரு காலத்தில், இம்மைசயே உருவமாயிருந்த சூரபதுமனை ஸ்ரீ முருகப்பெருமானுக்குப் படைத் துணைவராயிருந்து எவ்வாறு வாள் கொண்டு வீசினார்களோ அவ்வாறே, அவ்வீரர்கள் வழியிற்றோன்றிய நீங்களும் நமக்கு இமைசதரும் மூடப் பழக்க வழக்கங்களை நியாயம் பொருந்திய தைரியமென்னும் வாள் கொண்டு வீசி எறிவீர்களாக.

ஒரு கிராமத்திலுள்ள செங்குந்த வாலிபர்கள் சங்கமொன்று ஸ்தாபித்து அவ்வூருக்குச் சுகாதார விஷயமாய்ச் செய்துவரும் அரிய தொண்டைப்பற்றி ஈண்டு உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். சங்கத்தைச் சேர்ந்த செங்குந்த வாலிபர்கள் அனைவரும் வாரத்திற்கு ஒரு முறையோ இரு முறையோ ஒன்றுகூடி ஒரு தலைவரை ஏற்படுத்திக்கொண்டு ஆங்காங்குச் சென்று, சில சமயங்களில் வீடுதோறும் சென்று, 'பக்திக்கடுத்தது பரிசுத்தம்', 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்னும் வாக்கியங்களைச் சொல்லிக் கொண்டு, நாம் சுவாசிக்கும் காற்றும், பருகும் நீரும், உண்ணும் உணவும், உடுத்தும் உடையும் அசுத்தமாயிருப்பின் என்னென்ன தீங்கு விளையும் மென்பதைப்பற்றியும், அவற்றைச் சுத்தமாக வைத்துக்கொள்ளும் முறைகளைப் பற்றியும் பிரசாரம் செய்து வருவார்கள். வீட்டுவாயில்களையும் தெருக்களையும் சுத்தமாய் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்துவார்கள். ஆரம்பத்தில் கிராம வாசிகளில் சிலர் சோம்பலால் தெருக்களிலும் புறக்கடைகளிலும் கூட்டிச் சேர்த்த குப்பைகளை அப்புறப்படுத்தாது வைத்திருப்பதைக் கண்ட வாலிபர்கள், கூடைகளைக் கையிலெடுத்துக்கொண்டு தெருத்தெருவாய்ச் சென்று குப்பைகளைத் தாங்களே வாரி அப்புறப்படுத்தத் தொடங்கினார்கள். அதுமுதல் அவர்கள் வெட்கி வாலிபர்கள் பார்வையில் படாதபடிக் குப்பைகளை அப்புறப்படுத்தத் தொடங்கினார்கள். அக்கிராமத்தில் வாந்திபேதி முதலிய கொடிய வியாதிகள் தலைகாட்டுவதே கிடையாது. இத்தகைய தொண்டர்களை நன்குமதித்து அக்கிராமத்தார் பொன்னைப் போல போற்றி வருகிறார்கள் என்று சொல்லவும் வேண்டுமோ?

தொண்டர்கள் கிராமத்திற்கு வேண்டிய எல்லாச் சௌகரியங்களையும் மனோவாக்குக் காயங்களால் கூடியவரையில் செய்யவேண்டும். விளையாட்டுத்தனமாகவும் எவர்க்கும் யாதொரு தீங்கும் எவ்வகையிலும் செய்யலாகாது. இதனால் நமது வாலிபர்களுக்கு ஒழுக்கமும், ஒற்றுமையும், உலக அனுபவமும், பிறரோடு அளவளாவலும், பரோபகார சிந்தையும் உண்டாகும். சுத்தவீரர்களான நவவீர பரம்பரையினர்களாகிய நம்மவர்கள் தற்போது அளவுகடந்த பலவீனர்களாக இருப்பது மிகவும் வெட்கத் தருந்ததாகும். தேகவலிமையுடையவர்களே மனோதிடமுடையவர்களாயிருக்கமுடியும் என்பதையுணர்ந்து ஒவ்வொரு நாளும் குறைந்தது அரைமணி நேரமாவது தேகாப்பியாசம் செய்ய வேண்டும்.

### இளமை விவாகமும் வீண் செலவும்.

நம் வாலிபர் இளமையில் விவாகம் செய்து கொள்ளச் சம்மதிக்கலாகாது. இளமை விவாகமானது வாலிபர்களின் கல்வியையும் தேக வலிமையையும் கெடுப்பதன்றிப் பிற்காலத்தில் அவர்கள் விருத்திக்குத் தடையாய் நின்று பலவிதத் துன்பங்களையும் உண்டாக்குகிறது. வாழ்க்கையில் புகுந்து குடும்பத்தைச் சௌகரியமாய்ப் பிறருதவியின்றிக் காப்பாற்றக்கூடிய நிலைமையும் வயதும் அடைகிறவரையில் ஒவ்வொருவரும் மணம் செய்துகொள்ளக்கூடாதென்று தீர்மானஞ் செய்துகொள்ளவேண்டும். இளமை விவாகத்தால் உண்டாகும் தீமைகள் பல. அவற்றுள் இரண்டொன்றை ஈண்டு எடுத்துக் காட்டுகிறேன். தானே பிறருடைய கையை எதிர்பார்த்திருக்கும் இளமைப் பருவத்தில் மணஞ்செய்து கொண்டு குடும்பத்தைப் பெருக்கிக் கொள்ளும் வாலிபன பிற்காலத்தில் எவ்வாறு ஈடேற முடியும்? இவனுடைய தேகமும், இவன் மணக்கும் பெண்ணினுடைய தேகமும் வளர வேண்டிய அளவு வளராமுன்னம் பெறும் பிள்ளைகள் பலவீனமுடையவைகளாய் அநேகம் அகால மரணமடைகின்றன. பிழைத்திருப்பவையும் சமூகத்திற்குப் பெரும் பாரமாயிருக்கின்றன. குழந்தைப்பருவம் மாறாத தாய்மார்களுக்குக் குழந்தைகளை வளர்க்கும் ஆற்றலும் அனுபவமும் தேகவலிவுமிருப்பதில்லை.

பெண் கொள்ளும்போது, தாய்விட்டு வழி போய்விடுமே, வழக்கமாய்க் கொண்ட குடும்பத்திலேயே கொள்ள வேண்டும், வெளியூர் கூடாது என்கிற பழம் பாட்டிகளின் அறியாமைச் சொற்களைக் கேட்டு நெருங்கிய இரத்தக் கலப்பில செய்யும் சம்பந்ததால் குடும்பம் விருத்தியாகிறதில்லை என்பதை உங்கள் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இத்தகைய இரத்தக் கலப்புள்ள தம்பதிகளுக்குத் தோன்றும் சந்ததிகள் தீவிரமான மூளை வலிவில்லாமலும், உடல்வலி குன்றியும், புத்தகச் சேர்ப்பில்லாமலும் இருந்து, நாளடைவில் அக்குடும்பத்தைக் க்ஷீணிக்கச்செய்யும் என்பது அறிவி



யல் நூல் வல்லார் ஆராய்ச்சியில் தோன்றிய துணிபு என்பதையும் உங்களுக்கு நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடன்பட்டு அநாவசியமாய் ஆடம்பரத்தோடு கலியாணம் செய்தல்கூடாது. செலவை மிகவும் சிக்கனமாய்ச் செய்யவேண்டும். கலியாணத்துக்காகப் பட்ட கடனைத் தங்கள் ஆயுள்பரியந்தம் தீர்க்கமுடியாது துன்பப்படுவோர் அநேகர். ஈண்டு பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை என்பதை நான் உங்களுக்கு ஞாபகமூட்டுவது மிகையாகாது. செங்குந்த வாலிப சகோதர சகோதரிகளே! 'ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை போகாறு அகலாக்கடை' என்ற அருமருந்தன்ன உபதேசத்தை என்றும் நீங்கள் மறக்கலாகாது. தம்மக்களுக்குக் கலியாணம் செய்து வைப்பதே பெற்றோருடைய முதற்கடமை எனக் கருதும் முதியோர்களுக்குக் கீழ்க்கண்ட அமுதம் போன்ற குறட்பாக்களை விளக்கிக் காட்டுவீர்களாக:

*தந்தை மகற்காற்று நன்றி அவையத்து*
*முந்தி யிருப்பச் செயல்.*
*மகன்தந்தைக் காற்று முதவி இவன்தந்தை*
*என்நோற்றான் கொல் என்னும் சொல்.*

### கோவிலும் கடவுளும்.

நம்மவர்கள் வருஷா வருஷம் கோவிலுக்காகவும், உற்சவங்களுக்காகவும் அளவிறந்த பொருள் செலவிடுகிறார்கள் என்பதை யாவரும் உணர்வீர்கள். இது விஷயமாக இரண்டொரு விஷயங்களை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். சகோதர பான்மையையும், ஒற்றுமையையும், சாந்தியையும் உண்டாக்க வேண்டிய கோயில்களின்மூலமாக நாம் விரோதத்தையும், வீண் வழக்குகளையும் உண்டாக்கிக் கொள்ளுகிறோம். கோயில்களால் அநேக ஊர்களில் உண்டாகும் கக்ஷிக்கொடுமைகளும் பொருள் நஷ்டமும் அளவிறந்தன. சில சில சமயங்களில் இவர்கள் கடவுளுக்குச் செய்யும் மரியாதையைப் பார்த்தால் கடவுள் பக்தர்களென ஒருபோதும் சொல்லமுடியாது. இதை விரிக்கிற் பெருகுமென இதனோடு விடுக்கிறேன்.

### ஆராய்ச்சியின் அவசியம்.

இவற்றிற்கெல்லாம் காரணம் கல்வியின்மையென்றே சொல்லவேண்டும். ஆகையால் எல்லாவற்றிற்கும் அடிப்படையாயுள்ள கல்வியை விருத்திசெய்து கொள்ளத் தொடங்குவோமாயின் பொருள் செலவின்றியே உண்மைப் பக்தர்களாவோம். எல்லா மதங்களும் மக்கள் நன்மைக்காகவே ஏற்பட்டிருக்கின்றன என்ற பரந்த நோக்கமும், எவ்வெவ்விதத்தில் நம்முடைய மதம் மேன்மையுற்றதென்றும், அதை எவ்வெவ்விதத்தில் காலப் போக்கிற்கிணங்க அவசியமாயின் சீர்திருத்தி நம் வாழ்க்கையில் பயன்படுமாறு செய்துகொள்ள வேண்டுமென்றும் அறிந்து கொள்ளும் உண்மை அறிவும் நமக்கு உண்டாகவேண்டும். விஷயங்களை சுய அறிவோடு கூர்ந்து நோக்கும் விரிந்த ஆராய்ச்சியும் மேக்குவேண்டும். 'எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்ற பெரியோர் வாக்கியத்தைப் பின்பற்றி, நம்முன்னோர்கள் எல்லாமறிந்தவர்கள், நம்மினும் மேம்பட்டவர்கள் என்றும், முற்காலத்தில் எழுதிவைத்துள்ளயாவும் மறுக்கப்படாத உண்மைகளே என்றும் நம்பி, நம் அறிவை மழுங்கவிடாது, துர் அபிப்ராயமின்றி, அதாவது நடு நிலைமையோடு, விஷயத்தைச் சுய அறிவோடு கூர்ந்து நோக்கும் உண்மை ஆராய்ச்சித் திறன் நமக்குச் சேர வேண்டும். சாத்திரம் என்னும் பொதுப்பெயர் கொண்டவற்றுள் சுய நலக்கருதியோ, அல்லது எக்காரணங்கொண்டோ உண்மைக்கு மாறாக எழுதிவைக்கப்பட்டவையும் உண்டென்பதும், அவற்றை நாம் ஆராய்ச்சி செய்தே அறிந்து கொள்ள இயலும் என்பதும், 'யாம் மெய்யாகக் கண்டவற்றுள் இல்லை' என்றும், 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்றும் கூறியருளிய பெருநாவலரால் அறிகிறோம். ஆனால், வீண்குதர்க்கம் பேசுதலை யான் முற்றிலும் கண்டிக்கிறேன். நாம் செயற்பாலது உண்மை ஆராய்ச்சியே. அபிப்பிராய பேதமுடையவர்களை வெறுத்தலும் கேவலமாக நினைத்தலும் கூடாது. மதவிஷயத்தில் சில முரட்டுத் தனமான நம்பிக்கைகளை நாம் விட்டு விடவேண்டும். நம்முன்னோர்கள் மிகுந்த அறிவாளிகள், அவர்கள் எழுதிவைத்த உயரிய உண்மைகள் நமது புத்திக்கு எட்டாதவை என்று நினைத்து மூடபக்தர்களாயிருத்தலாகாது. பின் வருவோர்க்கு உபயோகப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் நூல்கள் எழுதிவைக்கப்படுகின்றன. நமக்கு விளங்காது என்று சொல்லக்கூடியவை நமக்கு வேண்டாம். நமக்குச் சரியென்று தோன்றாதவற்றை ஒருபோதும் நம்பக்கூடாது; நம்பினும் நிலையா. இதனால்


நம்முன்னோர்களை மூடர்களென்றும், அறிவில்லாதவர்களென்றும் சிலர் சொல்வதைப்போல் பழித்தல் கூடாது. அக்காலத்தில் அவர்களுக்கமைந்திருந்த சூழல் சந்தர்ப்பம், காலப்போக்கு முதலியவற்றிற்கேற்ப அவர்கள் ஒழுகிவந்தார்கள் அன்னோர் சேகரித்து வைத்தவற்றைக் கொண்டே நாம் இப்போது அவர்களைக் கண்டிக்கிறோம் இதைப்போலவே நம்மையும் நம்பின்னோர்கள் நம் குற்றங்களைக் காட்டிக் கண்டிக்க இயலும் என்பதை யுன்னி, நமக்குச் சரியெனத் தோன்றியவற்றை எடுத்துக்கொண்டு பிறவற்றை நீக்குதலே நன்று. தம் நாட்டவர்க்குக் குறுகிய நோக்கம் உண்டானதற்குக் காரணம், நம் சமயத்தில் சொல்லப்பட்டவையே மாறாத உண்மைகள், மற்ற யாவும் பொய் என்றெண்ணி நம் அறிவை மங்கவைத்ததேயாம். ஒவ்வொருவருக்கும் மதாபிமானம் இருக்க வேண்டியதுதான். ஆனால் உண்மையான மதாபிமானிகள் ஆதியிலிருந்தோ, அல்லது மத்தியிலிருந்தோ, சுயநலவாதிகள் சூழ்ச்சியாலோ, அல்லது வேறு எவ்விதத்தாலோ நம் மதத்தில் தற்போது இடம் பெற்றிருக்கும் ஆபாசங்களை ஒழித்து மதத்தைப் பரிசுத்தமான நிலையில் வைக்கப் பின்வாங்கமாட்டார்கள்.

### வாலிபரும் ஆசியலும்.

பிற்காலத்தில் புருஷார்த்தத்தை அடைதற்குச் சாதகமான கல்வியைப் பெறுதற்குரிய வாலிபர்கள் அரசாங்க விஷயத்தில் தலையிடுதல் பொருந்தாது தலையிட்ட அநேகர் தங்கள் வாழ்நாளை வீழ்நாளாக்கிக் கொண்டனர். செங்குந்த வாலிபர்களாகிய உங்களுக்கு ஒரு முக்கியமான விஷயம் சொல்ல விரும்புகிறேன். 'என்னை எல்லோரும் பெரிய மனிதனாக மதிக்க வேண்டும்' என்ற எண்ணத்தோடு கற்றலும் உழைத்தலும் கூடாது. நம் கடமையைத் தவறாது செய்துகொண்டு வருவோமாயின், அவற்றால் பெருமைக் குரியவை யிருப்பின் அது தானே வரும்.

### பெண்களின் நிலைமை.

புகழ்பெற்ற நவவீரர் குலச் சிகாமணிகளே! எக்குலத்து அல்லது எத்தேசத்துப் பெண்மணிகள் மேன்மையோடும் மரியாதையோடும் நடத்தப்படுகிறார்களோ அக்குலம் அல்லது அத்தேசமே நாகரீகமும் மேன்மையும் உடையதென்று சொல்லப்பெறும். இது தற்காலத்தில் புதிதாய்த் தோன்றிய உணர்ச்சியென்று கருதலாகாது. இது எக்காலத்தவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய உயரிய தேரர் கொள்கையாகும். ஆனால் நாம் இப்போது அக்கொள்கையோடு நமது பெண்மக்களை நடத்தாமலில்லை அவர்களைத் தாழ்ந்தவர்களென்று நினைக்கிறோம். ஆண் பிள்ளைகள் இல்வாழ்க்கையின் ஒரு பாகமாகிய கடமைகளைச் செலுத்துகிறார்கள். மற்றொரு முக்கிய பாகமாகிய கடமையைப் பெண்கள் செலுத்தி வருகிறார்கள். வாழ்க்கை ஆதலும் அழிதலும் பெண்களின் அறிவையே பொருத்திருக்கிறது. குழந்தைகளை வளர்ப்பதாகிய மிக முக்கியமான வேலையை அவர்களே செய்கிறார்கள். ஒழுக்கம், கற்பு, சாந்தம், மருத்துவம், குறிப்பறிதல், சிக்கனம் முதலியவை அவர்களுக்கு இன்றியமையாதனவா யிருக்கின்றன. பெண்களுக்குக் கல்வி இல்லையாயின் இவை எவ்வாறு அமையக் கூடும். குழந்தைகளை வளர்க்கும் முறையில் வளர்த்தல் மிகுந்த நுண்ணறிவினர்க்கே கூடும். குழந்தைப் பருவத்தில் படியும் ஒழுக்கம் பாஷை முதலிய யாவும் ஆயுள்காலம் வரையில் நிலைத்திருக்குமல்லவா? பிள்ளைகளை வளர்க்கும் முறைகளைப்பற்றிச் சொல்ல இஃதிடமல்லவாகையால் அதனை விரித்துரைக்காது விடுகிறேன். தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டுமன்றோ? ஆகையால், நுண்ணறிவுடையோரே செய்யக்கூடிய இவற்றை யாவும் செய்ய வேண்டியவர்களாயிருக்கிற பெண்களுக்குக் கல்வி கூடாதென்பது பேதமையே யாகும். மற்றவைகளிலும் நாம் அவர்களைப் பரிதாபகரமான நிலைமையில் வைத்திருக்கிறோம். பெரிய பணக்காரர் வீட்டிற் பிறந்து செல்வாக்கோடு வளர்க்கப்பட்ட பெண்களுக்குக் கலியாணமானதும், அப்பெண்கள் தாய்தந்தையரின் செல்வத்திற்கும், அநதல்திற்கும் அருகதை யற்றவர்களாய்த் தாம் மணந்துகொண்ட கணவரது அந்தஸ்து முதலியவை மிகத் தாழ்ந்தவையாயினும் அவற்றிற்கே உரியவர்களாகிறார்கள். இஃதேயன்றிப் பிறவகைகளிலும் பெண்கள் மரியாதை என்பது சிறிதுமின்றி நடத்தப்படுகிறார்கள். ஒரு பெண்ணினது தாய் தந்தையரும் கணவனும் எத்துணைச் செல்வமுடையர்களாயினும் அப்பெண்ணிற்கு எவர் செல்வத்திலும் யாதொரு உரிமையும் இல்லையென்றால், இதைவிடக் கொடுமை வேறென்றும் வேண்டுமோ?



முதலாவது செங்குந்தர் மகாநாட்டுத் தலைவர்கள் ஊர்வலம், ஈரோடு.



'செங்குந்தர் பிரபந்தத்திரட்டின் பதிப்பாளர்' கருணைவள்ளல்
திரு. தி. நா. கல்யாணசுந்தர முதலியார்.



'செங்குந்தர் பிரபந்தத்திரட்டின் பதிப்பாசிரியர்' 'வண்ணக்களஞ்சியம்'
ஸ்ரீலஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர்.



### ஒழுக்கம்.

உயிரைக்காட்டிலும் உயர்ந்ததென்று சொல்லப்படும் ஒழுக்கத்தை இளைஞர்கள் நன்குணர்ந்து அதை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டும். உண்மை யுணர்த்தல், இனியவை கூறல், கடுநிலைமை, பெண்களைத் தாயெனக் கருதல், பெருமையின்மை, ஈகை, கள்ளுண்ணாமை, தம்பொருள்போல் பிறர் பொருளைப் பார்த்தல் முதலிய நற்குணங்கள் இளமையிலேயே அமையப்பெறல் வேண்டும். தாழ்ந்தவரென எவ்விதத் தவரையும் மதிக்கலாகாது. தாக்ஷண்யத்தின் பொருட்டும், சுயாலத்தின் பொருட்டும் உண்மையைக் கூறப் பின்வாங்கலாகாது. ஒழுக்கமுடையவர் நிறைந்த குலத்தையே உலகம் உயர்குலமென்று சொல்லும். இளமையில் உயரிய ஒழுக்கங்களை மேற்கொண்டவருள் சிலர் வாழ்க்கைக் களம் புகுந்தபோது, எதிர்த்துப் போராடப் போதிய மனோதிடமும், ஆண்மையும், ஆற்றலும் குன்றிப் புறமுதுகிட்டோடிப்பொய்ம்மை, சுயநலம் முதலியவை அடர்ந்த அடவியினுள் அடைக்கலம் புகுதலும் உண்டு. அவ்வாறு தோல்வியுற்றழியாதபடி உங்கள் மனமாகிய கோட்டையைத் திடஞ்செய்து கொள்ளுங்கள்.

சகோதர சகோதரிகளே! நம்குல முன்னேற்றத்திற்கானவற்றை முதியோர்கள் செய்வார்களென எதிர்பார்த்திருத்தல் கூடாது. அவர்கள் 10 வருஷத்தில் செய்யக்கூடியவற்றை 10 நாட்களில் செய்து முடிக்கவல்லவர்கள் நீங்களே என்பதை நான் மறபடியும் உங்களுக்கு ஞாபக மூட்டுகிறேன். உங்கள் முயற்சிகள் நற்பயனளிக்குமாக.

### மகாநாட்டுத் 'திரும்பும் ஸ்பெஷல்.'

இதோடு வாலிபர் மகாநாடு முடிந்தது. பகல் மணி 12-30க்கு மேலாகிவிட்டதால், மகாநாடு மீண்டும் மாலை மூன்று மணிக்குக் கூடித் தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டுமெனத் தலைவர்கள் முடிவு செய்தனர். இம்முடிவினையும், ஈரோட்டிலிருந்து சென்னைக்கு இரவு 10-30 மணிக்குச் செங்குந்தர் மகாநாட்டுத் 'திரும்பும் ஸ்பெஷல்' புறப்படுமென்னும் செய்தியையும் திரு. ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல்.டி., அவர்கள் மகாநாட்டினருக்குத் தெரிவித்தனர். அதே சமயம் அவர்கள் நமது 'மித்திரன்' சார்பாகவும், தலைச்சங்கத்தின் சார்பாகவும், கல்வி நிதியின் சார்பாகவும், மகாநாட்டினருக்கு ஒரு விண்ணப்ப உரை நிகழ்த்தினர். அதன் சாராம்சம் பின்வருமாறு :—

### 'செங்குந்த மித்திரன்' பத்திரிகாசிரியர்

## திரு. ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., அவர்கள் ஈரோடு மகாநாட்டில் 2-ம் நாள் பகல் நிகழ்த்திய அரும்பெரும் விண்ணப்ப உரையின் சாராம்சம்.*

சகோதர சகோதரிகளே! நான் முக்கியமாக உங்களுக்குச் சொல்லவேண்டிய விஷயமொன்றுண்டு. தென்னிந்தியாவிலும், இலங்கை, பர்மா முதலிய வெளிநாடுகளிலும் பரவி, பழைய கட்டுப்பாடுகள் பெரும்பாலும் மழிந்து, கல்வியிலும் பொருளாதாரத்திலும் மிகவும் பிற்போக்கடைந்திருக்கும் நம்மவர்கள், ஒற்றுமையுணர்ச்சியும் சகோதர வாஞ்சையும் பெற்று, எல்லாத்துறைகளிலும் முன்னேற்றமடையுமாறு நமது தலைச்சங்கத்தாரால் பிரசுரிக்கப்பெற்றுவரும் 'செங்குந்த மித்திரன்' என்னும் பத்திரிகையைக் குறித்து நீங்கள் எல்லோரும் அறிவீர்கள்.

நான் பத்திராசிரியர் பதவியை ஏற்றுக்கொண்டபோது நமது மித்திரனுக்கு 1200 சந்தாதார்களே யிருந்தனர். இப்போது 3500 சந்தாதார்கள் இருக்கிறார்கள். எனினும் அவர்களுள் சுமார் 1500 பேர்களே சென்ற வருஷத்

---

* இவ்வுபந்நியாசத்தின் சாராம்சம் மட்டுந்தான் பிரசுரிப்பதற்கு அனுப்புகிறேன். பல ரசங்களும் ததும்பி வழிந்த இச்சொற்பொழிவினைச் செய்தவரோ அச்சமயம் பரவசப்பட்ட ஆசுகவியைப்போல் விளங்கினமையின் நாம் பேசியதின் சாராம்சத்தையேனும் குறித்துத் தரமுடியவில்லை. கேட்டவர்களோவெனின் அவரினும் பரவசப்பட்டு மந்திரவாதியின் கட்டுக் குட்பட்டிருந்தவர்களைப் போன்று தமது கொடிய பசியையும் மறந்து, அவர் பேசி முடியும்வரை ஸ்தம்பித்து நிற்கும் பதுமைகளைப்போன்றிருந்தமையால், அவர்களுள் ஒருவராலும் அதைச் சுருக்கித் தர இயலவில்லை. ஆகவே, அமிர்தவாரியெனக் குளிர்ந்துவந்த அப்பெருமானின் சொன்னயமும், பொருள் நயமும், குரல் நயமும் கொழித்துக் காட்டவல்லன அல்லவென அம்முயற்சியை விடுத்து, அதன் சாராம்சத்தை மட்டும் நமது பத்திரிகையில் வெளிவருமாறு குறிப்பிடுகிறேன்.—மா. அ. கனகசபை முதலியார்.

திய சந்தாதொகையை இதுவரையில் செலுத்தியுள்ளவர்கள். இத்தனை நண்பர்கள் தாம் செலுத்தவேண்டிய தொகையை வருஷம் முடிந்தும் செலுத்தவில்லையென்றால் பத்திரிகை எவ்வாறு நடைபெறுமென்பதை நீங்களே யோசிக்கவேண்டும். ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் நமது 'மித்திரனை' வரவழைத்து வாசிக்கவேண்டும். 6 லக்ஷம் ஜனத்தொகையுள்ள நம்மில் 10,000 பேர்களாவது நமது 'மித்திர'னுக்குச் சந்தா நேயர்களாகவேண்டும். அப்போது நாம் இதை வாரப்பத்திரிகையாகவும் மாற்றிக்கொள்ளலாம். பதினாயிரம் சந்தாதார்கள் இருப்பாராயின்பத்திரிகையின் அச்சுக்கூலிமுதலியவைபோக வருஷத்தில் 5000 ரூபாயாவது மிச்சமாகும். இந்தத் தொகையைக்கொண்டு அநேக ஏழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளமேயன்றி, உண்டி உடை முதலியவைகள் கொடுத்தும் உதவலாம். ஆகவே இங்கு குழுமியுள்ள ஒவ்வொருவரும் சந்தாதார்களாகச் சேர்வதன்றி உங்கள் நண்பர்களையும் சேரும்படித் தூண்டவேண்டும்.

நான் ஏதோ பணவருவாய் கருதி உங்களைப் பத்திரிகை வாங்கச் சொல்வதாகக் கருதக்கூடாது. இதனால் எனக்கு யாதொரு வருமானமும் கிடையாது. இதைப்பற்றி நீங்கள் சந்தேகங்கொள்ள வேண்டியதேயில்லை. இனியும் என் ஆயுள்காலம் வரையில் ஒரு காசும் எதிர்பாராது உழைக்கத் தயாராயிருக்கிறேன் என்பதை இம்மகாநாட்டில் பல்லாயிரக்கணக்காகக் குழுமியுள்ள உங்கள் முன்னிலையில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அநேக வருஷங்களாகப் பத்திரிகை மூலமாகப் பொது ஜனங்களுக்குத் தொண்டு செய்யவேண்டுமென்ற எண்ணம் எனக்குண்டு. இப்போது நம் 'மித்திரன்' வாயிலாக எனது குல சகோதரர்களுக்காக உழைப்பதையே எனது முக்கிய கடமையாகக் கொண்டுள்ளேன்.

இவ்விஷயத்தில் எனது தந்தைபோன்ற சபாபதி வள்ளலாரும்* துணையாயிருந்து இதுவரையில் செய்து வந்தது போலவே உதவி செய்யத் தயாராயிருக்கிறார்கள். இப்பத்திரிகையும் நமது சங்கமும் நடைபெறுவதற்கும் ஈண்டு மகாநாடு கூடியதற்கும் காரணபூதராயிருப்பவர் இச்சபாபதி வள்ளலேயாகும். இதற்காக நான் மிகுதியும் உழைத்து வருவதாகச் சொன்னார்கள் நான் நங்குல முன்னேற்றத்திற்காகச் செய்துவருவதற்கு இவரது ஊக்கமும் வள்ளன்மையுந்தான் காரணமாகும். ஆகையால் எல்லாக் காரியங்களும் இவராலேயே நடைபெற்று வருகின்றன. பத்திரிகை ஆரம்பித்து ஒரு வருஷம் வரையில் அதைத் தங்கள் சொந்த செலவிலேயே நடத்தி வந்தார்கள். முதல் வருஷத்தில் இரண்டாயிரம் பிரதிகள் வரையில் அச்சிட்டுப் பணம் வந்தாலும் சரி வராவிட்டாலும் சரி பத்திரிகையைப் படிக்கட்டும் என்ற பெரு நோக்கத்தோடு நம்மவர்கள் பெயரும் விலாசமும் கிடைக்குந்தோறும் பணத்தை எதிர்பாராது அனுப்பிக்கொண்டேயிருந்தனர் எந்த பத்திரிகையையும் முன்பணம் வந்த பிறகு தான் அனுப்புவது வழக்கம் ஆனால் நமது பத்திரிகையைப் பணத்தை எதிர்பாராமலே அனுப்பி வந்தோம். பணத்தைப்பற்றி எங்களுக்கு கவலையே கிடையாது. முயற்சி வீணாகாது என்ற நம்பிக்கையும், சந்தா தொகையில் ஒரு சிறிதும் கிறகாது என்கிற தைரியமும் எங்களுக்குண்டு. இதுவரையில் இவர்கள் இதற்காகச் சுமார் 5000 ரூபாய் செலவிட்டிருக்கிறார்கள். 150 பேரில்லை, ஒருவருமே சந்தாதொகை செலுத்தாவிடினுங் கூட பத்திரிகையைத் தடையின்றி நடத்துவதாகவே தீர்மானித்திருக்கிறோம். இதில் ஒருகாலும் பின் வாங்கமாட்டோம். சென்ற இரண்டு வருஷங்களாக வெளியாகி வந்த பத்திரிகையினால் நமக்கு எவ்வளவு புத்துணர்ச்சி உண்டாயிருக்கிறதென்று யோசித்துப் பாருங்கள்.

முடிவில், நம்மவர் கிளைச்சங்கங்கள் ஒவ்வொரு ஊரிலும் இருக்கவேண்டிய அவசியத்தைப் பற்றியும், நம்மவர்க்கிடையே கல்வியறிவை பரப்புவதற்கு ஒரு மாபெரு நிதியைத் திரட்டி வைப்பதின் அவசியத்தைப் பற்றியும், அந்நிதிக்கு அஸ்திவாரக் கல்லினை இம்மகாநாட்டுப் பந்தலிலேயே நமது குலப் பிரமுகர்கள் நாட்டித்தர வேண்டுமென்றும், யாவர் மனமும் கரையும் வண்ணம் பேசி முடித்தனர்.

இவ்வுபந்யாசம் முடிந்ததும் நூற்றுக்கணக்கான பெயர்கள் நமது 'மித்திர'னுக்குச் சந்தாதாராகச் சேர்ந்தனர்.

* திரு. சபாபதி வள்ளலாரின் பெயரை யுச்சரித்ததும் உபந்யாசகர் சில நொடிப்பொழுது மெய்ம்மறந்த ஆனந்த பரவசமுற்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். கேட்டிருந்தவர்களனைவரும் அப்போது மெய்ம்மறந்து உருகினர். அச்சமயம் திரு. சபாபதி வள்ளலார் தான் செய்தது சிறிதேயென்றும், எல்லாவற்றிற்கும் காரணபூதராயுள்ளவர் நமது பத்திராதிபரே என்றும், அவர் பெருமைதானது தன்னைப் புகழச் செய்ததென்றும் சொன்னார்.—மா. அ. க.



# மகாநாடுத் தீர்மானங்கள்

## RESOLUTIONS

*Resolutions passed by the First Sengunthar Conference opened by the Hon'ble Dewan Bahadur M. Krishnan Nair, B.A., B.L., Law Member to the Government of Madras, at Erode, and held under the presidency of M.R.Ry. A. V. Muthiah Mudaliar Avl., B.A., B.L., Secretariate-General, Pondicherry, on the 19th and 20th January, 1929 :—*

### 1. Political

1. *Loyalty Resolution* :—This Conference expresses its loyalty to His Majesty the King Emperor, and fervently prays to the Almighty that His Majesty may speedily recover from his ill-health.

2. *Welcome to the Simon Commission : a Deputation to wait on the Commission* :—This Conference welcomes the Royal Statutory Commission on Indian Reforms, and constitutes the following Committee consisting of two leading members of the community from each district with Mr. V. S. Sengottian Mudaliar as the President and Mr. M. Shunmukhasundara Mudaliar, M.A., L.T., as the Secretary, to represent the disabilities and needs of our community before the Commission.

**Names of Members of th. Committee.**

**Coimbatore District.**

M.R.Ry. V. S. Sengottian Mudaliar Avl.,
*Municipal Councillor and Cotton Merchant, Coimbatore (President).*

M.R.Ry. S. Meenakshisundara Mudaliar Avl., B.A., L.T.,
*Headmaster, Rajah's High School, Sivagangu, Erode.*

## தீர்மானங்கள்

சென்னை அரசாங்கத்தின் சட்டமெம்பர் கனம் திவான் பஹதூர் எம். கிருஷ்ணன் நாயர், பி.ஏ. பி.எல்., அவர்களால் ஈரோட்டில் திறந்துவைக்கப்பெற்று, 1929ஆம் ஜனவரி மீ 19—20 தேதிகளில் புதுவை அரசாங்கத்தின் அமைச்சர் திரு. ஆ. வே. முத்தைய முதலியார், பி.ஏ. பி.எல்., அவர்களின் தலைமையின் நடைபெற்ற தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டின்கண் நிறைவேற்றிய தீர்மானங்கள் :—

### 1. இராஜீயம்

1. இராஜ விசுவாசம் :—நமது சக்கரவர்த்தி [illegible] அசௌக்கியமாயிருப்பதால் அவர் மிக விரைவில் குணமடையுமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவதோடு தனது ராஜவிசுவாசத்தை அரசர் பெருமானுக்கு இம்மகாநாடு தெரிவித்துக் கொள்ளுகிறது.

2. சைமன் கமிஷனுக்கு வரவேற்பு :—* ராயல் கமிஷனை இம்மகாநாடு மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்பதுடன், அக்கமிஷன் சென்னை மாகாணத்திற்கு வரும்போது நமது சமூகத்தின் குறைகளையும் அவைகளை விலக்கல் [illegible] வழிகளையும் அக்கமிஷன் முன்பாக எடுத்துரைத்து விவாதிக்க நமது சமூகத்து முக்கியஸ்தர்களில் ஜில்லாவிற்கு 2 பேர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டி [illegible] அக்கமிட்டி ஒரு [illegible] திரு. வி. எஸ். செங்கோட்டைய முதலியார் அவர்களைத் தலைவராகவும், திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி., அவர்களை அமைச்சராகவும் அமைத்து இம்மகாநாடு நியமிக்கிறது :—

**கோயமுத்தூர்.**

திரு. வி. எஸ். செங்கோட்டைய முதலியார்,
முனிசிபல் கவுன்சிலர், கோயமுத்தூர். (தலைவர்).

திரு. எஸ். மீனாக்ஷிசுந்தர முதலியார், பி.ஏ.,எல்.டி.,
தலைமை ஆசிரியர், சிவகங்கை ராஜா ஹைஸ்கூல்.

*இத்தீர்மானத்தைத் திருநெல்வேலி ஜில்லா [illegible] சபைத் தலைவர் திரு. S. பழனியாண்டி முதலியார், பி.ஏ., அவர்களும், [illegible], குடியேற்றம் திரு. ப. [illegible] முதலியார் அவர்களும் தவிர மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்த ஏனைய பிரதிநிதிகள் அனைவரும் அங்கீகரித்தனர்.

**Salem District.**

M.R.Ry. T. R. Kandappa Mudaliar Avl.,
*District and Taluk Board Member and Yarn Merchant, Tiruchengode.*

M.R.Ry. M. Ramaswamy Mudaliar Avl.,
*Municipal Councillor, Salem.*

**Trichinopoly District.**

M.R.Ry. A. Annamalai Mudaliar Avl.,
*Municipal Councillor, Karur.*

M.R.Ry. T. S. V. Sabapathy Mudaliar Avl.,
*Mirasdar, Turaiyur.*

**Tanjore District.**

M.R.Ry. T. N. Sabapathy Mudaliar Avl.,
*Vice-Chairman, Municipal Council, Tiruvarur.*

M.R.Ry. V. Ratna Mudaliar Avl., B.A., B.L.,
*Advocate, Mayavaram.*

**Madura District.**

M.R.Ry. S. Salai Mudaliar Avl.,
*Ex. Municipal Councillor, Madura.*

M.R.Ry. K. V. Ramasamy Mudaliar Avl.,
*Mirasdar, Palani.*

**Ramnad District.**

M.R.Ry. A. K. S. Sivasubramania Mudaliar Avl.,
*Land-lord, Aruppukottai.*

M.R.Ry. M. Padampiriya Mudaliar Avl.,
*Land-lord, Mandalamanikkam.*

**Tinnevelly District.**

M.R.Ry. T. P. K. Arumuga Mudaliar Avl.,
*Banker and Land-lord, Tenkasi.*

M.R.Ry. V. S. Sankarasubramania Mudaliar Avl., B.A., B.L.,
*Tinnevelly.*

**South Arcot District.**

M.R.Ry. V. K. Munisamy Mudaliar Avl.,
*District Board Member, Kallalampundi.*

M.R.Ry. C. P. Ratnasabapathy Mudaliar Avl., B.A., B.L.,
*Vakil, Cuddalore.*

**North Arcot District.**

M.R.Ry. M. V. Bhimaraja Mudaliar Avl.,
*Taluk Board Member and Ex-Municipal Chairman, Gudiyattam.*

M.R.Ry. S. Thangavelu Mudaliar Avl.,
*Taluk Board Member, Panappakkam.*

**சேலம்.**

திரு. டி. ஆர். கந்தப்ப முதலியார்,
சேலம் ஜில்லா போர்டு மெம்பர்,
சங்ககிரி தாலூகா போர்டு மெம்பர், திருச்செங்கோடு.

திரு. எம். ராமசாமி முதலியார்,
முனிசிபல் கவுன்சிலர், சேலம்.

**திருச்சி.**

திரு. ஏ. அண்ணாமலை முதலியார்,
முனிசிபல் கவுன்சிலர், கரூர்.

திரு. டி. எஸ். வி. சபாபதி முதலியார்,
மிராஸ்தார், துறையூர்.

**தஞ்சாவூர்.**

திரு. டி. என். சபாபதி முதலியார், துணைத்தலைவர்,
முனிசிபல் கௌன்சில், திருவாரூர்.

திரு. வி. ரத்தின முதலியார், பி.ஏ., பி.எல்.,
வக்கீல், மாயவரம்.

**மதுரை.**

திரு. எஸ். சாலை முதலியார்,
மாஜி முனிசிபல் கௌன்சிலர், மதுரை.

திரு. கே. வி. ராமசாமி முதலியார்,
மிராஸ்தார், பழனி.

**இராமநாதபுரம்.**

திரு. ஏ. கே. எஸ். சிவசுப்பிரமணிய முதலியார்,
மிராஸ்தார், அருப்புக்கோட்டை.

திரு. பதம்பிரிய முதலியார்,
மிராஸ்தார், மண்டலமாணிக்கம்.

**திருநெல்வேலி.**

திரு. டி. பி. கே. ஆறுமுக முதலியார்,
பாங்கர், மிராஸ்தார், தென்காசி.

திரு. வி. எஸ். சங்கரசுப்பிரமணிய முதலியார்,
பி.ஏ., பி.எல்., வக்கீல், திருநெல்வேலி.

**தென்னார்க்காடு.**

திரு. வி. கே. முனிசாமி முதலியார்,
ஜில்லா போர்டு மெம்பர், கள்ளலம்பூண்டி.

திரு. சி. பி. ரத்னசபாபதி முதலியார், பி.ஏ., பி.எல்.,
வக்கீல், கடலூர்.

**வட ஆர்க்காடு.**

திரு. எம். வி. பீமராஜ முதலியார்,
மாஜி முனிசிபல் சேர்மன்,
தாலூகா போர்டு மெம்பர், குடியேற்றம்.

திரு. எஸ். தங்கவேலு முதலியார்,
தாலூகா போர்டு மெம்பர், பனப்பாக்கம்.



**Chingleput District.**

M.R.Ry. M. Sammada Mudaliar Avl.,
*Municipal Councillor, Conjeevaram.*

M.R.Ry. S. Ratnavelu Mudaliar Avl.,
*Taluk Board Member and Vice-Chairman, Municipal Council, Saidapet.*

**Malabar District.**

M.R.Ry. K. Muthukumarasami Mudaliar Avl.,
*Mirasdar, Kollengode.*

**Madras.**

M.R.Ry. P. V. Nataraja Mudaliar Avl., B.A., B.L.,
*Commissioner, Hindu Religious Endowment Board, Madras.*

M.R.Ry. M. Shunmukhasundara Mudaliar Avl., M.A., L.T.,
*Secretary, South Indian Sengunthu Mahajana Sangam, and Editor, "Sengunthu Mitran", Madras (Secretary).*

**சேங்கல்பட்டு.**

திரு. எம். சாமிநாத முதலியார்,
முனிசிபல் கவுன்சிலர், காஞ்சிபுரம்.

திரு. எஸ். ரத்னவேலு முதலியார்,
தாலூகா போர்டு மெம்பர், சைதாப்பேட்டை.

**மலபார்.**

திரு. கே. முத்துக்குமாரசாமி முதலியார்,
கொல்லங்கோடு.

**சென்னை.**

திரு. பி. வி. நடராஜ முதலியார், பி.ஏ., பி.எல்.,
தேவஸ்தான போர்டு கமிஷனர்.

திரு. எம். சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,
'செங்குந்த மித்திரன்' ஆசிரியர் (அமைச்சர்).

3. *How the Government should help the Community*:—This Conference regrets that the Government of Madras has not sufficiently helped the community by employing its members in the various services under its control, or in any way materially furthering its advancement and progress in trade and industry, and requests that, at least in future, the Government will adequately

(1) protect the hand-loom industry and the trades connected with it,

(2) financially and otherwise support all business enterprises started with the object of improving the lot of the community,

(3) spread free and compulsory elementary education in each and every village where Senguntnars live,

(4) arrange for more efficient and intensive propaganda on the part of the Textile and Co-operative Departments, particularly in localities occupied by the members of the community,

(5) award special scholarships to enable the students of the community to attain higher collegiate and technical

3. துரைத்தனத்தார் ஒத்தாசைவேண்டும் :— —அரசியல் உத்தியோகங்களிலும், பொருளாதார அபிவிருத்தியிலும், கைத்தொழில் வர்த்தக அபிவிருத்தியிலும், நமது சமூகத்துக்கு வேண்டிய அளவு அரசாங்கத்தார் உதவி புரியாமைக்கு வருந்துவதோடு, இனிமேலும்

(i) கைத்தறி நெசவுக்கும் அது சம்பந்தமான வர்த்தகத்திற்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றும்,

(ii) சமூக நலத்தின் பொருட்டு ஆரம்பிக்கப்படும் வியாபாரங்களுக்கெல்லாம் பொருள் முதலிய எல்லா உபகாரமும் செய்யவேண்டுமென்றும்,

(iii) செங்குந்தர்கள் வசிக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் கட்டாய இலவச ஆரம்பக்கல்வியை பரவச் செய்யவேண்டுமென்றும்,

(iv) கைத்தொழில் நிலையை அபிவிருத்தியின் பொருட்டும் நமது பொருளாதார நிலைமை மேலும் மேலும் அபிவிருத்தியடையும் பொருட்டும் கூட்டுறவு சங்கங்களை ஸ்தாபிப்பதன் பொருட்டும் அவசியமும் அவசரமுமான பிரசாரஞ் செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்றும்,

(v) நமது சமூகம் கல்வியில் பிற்போக்குள்ளதாயிருப்பதைக் கருதி உயர்தர கல்வியிலும், கைத்தொழிற் கல்வியிலும், நமது சமூகத்து மாணவர்கள் தேர்ச்சிபெற அடைப்படி அர

education in India, and in foreign countries,

(6) employ English educated members of the community in various departments of the Government in proportion to the population strength of the community.

4. *Representation of the Community in the Legislative Council and other Democratic Bodies:*—This Conference, while regretting to point out to the Government of Madras that so far it has disregarded the right of representation of this community in the Legislative Council, District, Taluk and Union Boards, Municipalities, District Educational Councils, Temple Committees, etc., requests that in the above bodies, a certain number of seats proportionate to the population of the community be reserved and members of the community be nominated to them so that this disability of non-representation may be removed at an early date,

5. *Government Publications and the Sengunthar Community :*—

(a) This Conference strongly condemns certain sentences appearing in some of the books published by the Government of Madras, which, besides being far from the truth, unreasonably discredit and dishonour our community.

(b) This Conference requests the South Indian Senguntha Mahajana Sangam to appoint a committee to press before the Government of Madras the urgent need for the deletion or alteration of such objectionable passages from their publications.

6. *The Next Elections* :—As the population of this community is large in the districts of Coimbatore, Salem, North Arcot, South Arcot, and Chingleput, this Conference is of opinion, that in each of these districts a candidate of the community can be selected to stand for the next general elections to the Legislative

சாங்கத்தாரால் உபகாரச்சம்பளம் அளிக்கப்பட வேண்டுமென்றும்

(vi) நமது சமூகத்தின் ஜனத்தொகையின் அளவிற்கேற்ப அரசாங்கத்தின் பலவகைத் துறைகளிலும் நமது சமூகத்தில் தக்கவர்களைத் தகுந்த உத்தியோகத்தில் அமர்த்தவேண்டுமென்றும்,

இம்மகாநாடு அரசாங்கத்தை வேண்டிக் கொள்ளுகின்றது.

4. பிரதிநிதித்துவம் :—சட்டசபைகளிலும், ஜில்லா தாலூகா யூனியன் போர்டுகளிலும், முனிசிபாலிடிகளிலும், ஜில்லா கல்விக்கழகங்களிலும், தேவஸ்தான கமிட்டிகளிலும் நமது பிரதிநிதிகளை இதுவரை நியமிக்காது நமது உரிமைகளைப் புறக்கணித்து வந்தமையைச் சென்னை அரசாங்கத்தாருக்கு எடுத்துக்காட்ட வருந்துவதோடு, இந்த ஸ்தலஸ்தாபனங்களில் ஜனத்தொகை விகிதம் ஏற்படுத்தொகைக்கு நமது சமூகத்திற்குச் சில ஸ்தானங்களை ஒதுக்கிவைத்து நமது சமூகத்தில் சிலரை நியமனம் செய்து இக்குறைகளை விரைவில் நீக்கவேண்டுமென்று இம்மகாநாடு அரசாங்கத்தை வேண்டிக்கொள்ளுகிறது.

5. சென்னை அரசாங்கப் பிரசுரங்களும் செங்குந்தர்களும்.—சென்னை அரசாங்கம் வெளியிட்டுள்ள சில புஸ்தகங்களில் இந்தத் தொல்குலத்தவரின் புகழுக்கும் நன் மதிப்பிற்கும் பங்கம் விளைக்கத் தக்கவையும், உண்மையற்றவுமாயிருக்கும் சில வாக்கியங்களைப் பலமாகக் கண்டிப்பதுடன், அத்தகைய ஆக்ஷேபகரமான வாக்கியங்களை உடனே நீக்கும்படி சென்னை அரசாங்கத்தாரிடம் சென்று வாதாட ஒரு சபையை நியமிக்குமாறு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தை இம்மகாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

6. அடுத்த தேர்தல்.—கோயமுத்தூர், சேலம், வட ஆற்காடு, தென்னாற்காடு, செங்கல்பட்டு ஜில்லாக்களில் நமது சமூகவாக்காளர்களின் தொகை அதிகமாயிருப்பதால், இந்த ஜில்லாக்கள் ஒவ்வொன்றிலும் நமது சமூக அபேக்ஷகரை அடுத்த சட்டசபைத் தேர்தலில் நிறுத்தவும், அதற்குத் தகு



Council, and it empowers the South Indian Senguutha Mahajana Sangam to appoint for each district a committee of not less than five members to select the candidates and to work wholeheartedly for the success of these candidates without any consideration of political or other differences.

7. As it is felt, in the very backward state of our community, indulgence in personal differences of opinion on the part of individual members of our community at the time of the elections, will lead to the ultimate ruin of the community, this Conference requests every member of our community to set aside such differences having in view only communal feeling, and work for the success of our candidates who aspire for seats in each and every elective body.

8. This Conference desires that members of our community, at the time of the elections and at other times, should so conduct themselves as not to create misunderstandings with other communities and as far as possible work in harmony with them.

9. *Voting Strength* :—This Conference requests our people to try to increase the number of voters of our community in all possible ways before the next Council elections.

10. *Temperance* :—This Conference deeply regrets that the Finance Member to the Government of Madras has obstructed the provision of Rs. 4 lakhs which the Hon'ble Mr. Muthiah Mudaliar wanted to set apart for carrying out propaganda in favour of prohibition.

11. *Irrigation* :—This Conference requests the Government of Madras to provide irrigation facilities to the neighbouring districts of Salem and Coimbatore from the Metur Reservoir,

ந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்துச் சமூக ராஜிய அபிப்பிராய பேதங்களை ஒரு சிறிதும் பாராட்டாமல் நமது அபேக்ஷகர்கள் வெற்றி பெறுமாறு முழுமனதுடன் உழைக்க ஐந்து பேர்களுக்குக் குறையாமல் இருக்க ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு கமிட்டியை நியமிக்கச் சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு இம்மகாநாடு அதிகாரமளிக்கிறது.

7. கட்சி பேதங்களைத் தவிர்த்தல்.—தற்போது நமது சமூகம் உள்ள பிற்போக்கான நிலையில், நமது சொந்த அபிப்பிராய பேதங்களைப் பாராட்டிக்கொண்டிருப்போமானால் அவை சமூகத்தையே பெரிதும் பாழ்படுத்துமாதலால், அவற்றை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல் குலாபிமானத்தையே பெரிதாகப் பாராட்டி ஒவ்வொரு ஸ்தல ஸ்தாபனத்திலும் நமது அபேட்சகர்கள் வெற்றி பெறுமாறு உழைக்கவேண்டுமாய்ச் செங்குந்தர் ஒவ்வொருவரையும் இம்மகாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

8 பிறசமூகத்தாருடன் ஒற்றுமை.—எலக்ஷன் காலங்களிலும், மற்ற சமயங்களிலும் இதர சமூகத்தினருக்குச் சிறிதும் மனஸ்தாபம் விளைக்காமல் பார்த்துக் கொள்ளுவதோடு, முடிந்த வரையில் அவர்களோடு சேர்ந்துழைக்க வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

9. ஓட்டர் தொகை.—நம்மவர்கள் அடுத்த சட்டசபை தேர்தலுக்குள் வோட்டர் தொகையைப் பலவழிகளிலும் பெருக்கிக்கொள்ள முயற்சி செய்ய வேண்டுமென இம்மகாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

10. மதுவிலக்கு.—அமைச்சர் கனம் முத்தைய முதலியார் அவர்கள் மதுவிலக்குப் பிரசாரத்திற்காக நான்கு லட்சம் ரூபாய் ஒதுக்கி வைக்க விருந்ததைப் பொக்கிஷதார அரசாங்கம் தடுத்து விட்டதற்காக இம்மகாநாடு மிகவும் வருந்துகின்றது.

11. நீர்ப்பாய்ச்சல் வசதி.—மேட்டூர் தேக்கத்தால் சமீபத்திலுள்ள சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்களுக்கு நீர்ப்பாய்ச்சல் வசதியைச் செய்துதர வேண்டுமென அரசாங்கத்தை இந்த மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

12. As large tracts of wet lands depending upon the Palar River remain barren for years owing to the failure of floods in the river and in consequence several families of farmers have become ruined, this Conference requests the Government of Madras to inquire into the causes of this failure and to devise early measures for the relief of such farmers.

13. *Age of Consent*:—This Conference requests the Government of India to pass a law fixing the age of consent of girls at 16 and boys at 20.

14. This Conference requests the South Indian Senguntha Mahajana Sangam to appoint a committee to make known to the Government of Madras the aims and wishes of this Conference and the resolutions passed during its session.

## II. Commercial and Industrial.

15. *Help from the Co-operative and Textile Departments*:— As most of the merchants of our community carry on the same trade in one and the same place, which practice leads to unhealthy competition and deterioration in the quality of the articles vended, and consequently results in discrediting the business, decreasing the profits of the traders, and bringing poverty upon the weavers at the handlooms, this Conference, with a view to remedy such a deplorable state of things, resolves to request the Government

(i) to offer sufficient aid and encouragement to co-operative commercial enterprises that may be started in suitable places by members of our community,

(ii) to arrange for an intensive propaganda on the benefits of co-operative societies and banks in localities peopled by members of our community,

12. பாலாற்றில் அநேக வருடங்களாக வெள்ளமில்லாமையால் அதனால் நீர் பாயக் கூடிய நிலங்கள் சாகுபடியாகாமல் அநேக குடித்தனக்காரர்கள் கடன் வாய்ப்பட்டிருக்கிறபடியால், பாலாற்றில் ஜலம் உண்டாகு முயற்சியை கவர்மெண்டார் எடுத்துக்கொள்ளுமாறு இந்த மகாநாடு வேண்டுகின்றது.

13. இணக்க வயது.—பெண்களுக்கு வயது 16-ம் ஆண்களுக்கு வயது 20-ம் ஆக விவாக சம்பந்த வயதாக இருக்கும்படி ஓர் சட்டமியற்ற அரசாங்கத்தாரை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

14. அரசாங்கத்தாரிடம் தூது.—நமது குலத்தைப்பற்றிய இக்க மகாநாட்டின் நோக்கங்களையும், கோரிக்கைகளையும், தீர்மானங்களையும், சென்னை அரசாங்கத்தாரிடம் எடுத்துக் கூறுவதற்காக ஒரு சபையை நியமிக்குமாறு சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தை இம்மகாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

### 2. கைத்தொழிலும் வியாபாரமும்.

15. கூட்டுறவு நெசவு இலாக்காக்களின் உதவி.—நம்மவரில் ஒருவர் செய்யும் வியாபாரத்தையே பலரும் செய்ய முற்படுவதால் போட்டி யேற்பட்டு அதன் காரணமாகத் துணியின் நாணயம்கெட்டு நம்பிக்கைக் குறைவு, வியாபாரலாபம், மூலதனக்குறைவு முதலியவை யுண்டாவதோடு, தொழிலாளர்களுக்கும் கஷ்டமேற்படுகின்றதாதலின், அவற்றை நிவர்த்திக்க,

(i) ஐந்து மைல் வட்டமும் போதுமான ஜனத் தொகையுமுள்ள ஒவ்வோரிடத்திலும் வியாபாரக் கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபித்து அவற்றில் அங்கங்குள்ளவர்களைப் பங்குக்காரர்களாகச் சேர்த்தது திறமையுடன் நடத்திவரவும்,

(ii) பணச் சௌகர்யத்தின்பொருட்டு அரசாங்க மூலமாகத் தனிப்பட்ட ஐக்கிய நாணயச் சங்கங்களையும் சமூக க்ஷேம நிதிகளையும் ஏற்படுத்தி அவைகளை நடத்தும் மாதிரியைப் தெளிவு படுத்தும்பொருட்டு ஒரு பிரசாரக் கூட்டத்தை நியமிக்கவும்,



(iii) to establish textile institutes in villages with a large population and arrange to educate weavers to produce newer and more varied patterns by frequent lectures and pamphlets issued in Tamil to enable them to understand such subjects,

(iv) to award scholarships to intelligent young men of our community to enable them to acquire specialised knowledge in textiles in India and elsewhere.

## III. Educational.

16. *Sengunthar Education Fund*: As education is the prime factor in the advancement of a country or community and as our people are backward in that respect, this Conference resolves that a "Sengunthar Education Fund" under the management of the South Indian Sengunthar Mahajana Sangam, Madras, be raised in the following ways, with a view to grant scholarships and free boarding, etc., to deserving young men of our community seeking higher education, and to enlighten by propaganda the illiterate and ignorant adults of our community:—

(i) Every Sengunthar merchant should agree to pay regular Mahamai to the "Education Fund" in the manner in which the merchants of Madras and Saidapet are now doing.

(ii) Each and every Sengunthar should make it his duty to contribute what he can afford to the "Education Fund."

(iii) போதுமான ஜனத்தொகையுள்ள கிராமந்தோறும் நெசவுப் பள்ளிக்கூட மேற்படுத்திப் பல மாதிரி திணுசுகளை உற்பத்தி செய்யும்படியான கல்வியைத்தரவும், அவ்விஷயங்களை எளிய நடைத்தமிழ்ப் பிரசுரங்களின் மூலமாய் யாவரும் உணரும்படிச் செய்யவும்,

(iv) அவற்றில் தேர்ச்சிபெற்ற அறிவாளிகளை வெளிநாடுகளுக்கு உயர்வான நூல்களை நூற்கும்படியான பயிற்சியையும், நூதன நெசவு முறைகளில் ஞானத்தையும் பெறும்படி யனுப்பி அவர்களுக்கு அவசியமான உதவிபுரியவும் வேண்டுமென இம்மகாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறது.

### 3. கல்வி.

16. செங்குந்தர் கல்வி நிதி:—ஒரு நாடும், ஒரு சமூகமும் முன்னேறுவதற்குக் கல்வியே பிரதான காரணமாய் இருந்தும், நம்மவர் அதனில் மிகவும் கீழ்ப்பட்டிருப்பதால் அவர்கள் கல்வியறிவு பெற்று உயர்ந்த நிலைக்கு வருமாறு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் ஆதரவில் கீழ்க்கண்ட வழிகளில் ஒரு கல்வி நிதி சேகரித்து நமது மாணவர்களுக்கு உபகாரச்சம்பளம் உணவு முதலிய அளிக்கவும், வயது வந்தவர்களிடையே பிரசார மூலமாக அறிவுச் சுடர் கொளுத்தவும் வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது:—

(i) சென்னை சைதாப்பேட்டை முதலிய விடங்களிலுள்ள செங்குந்த வர்த்தகர்கள் மகமை ஏற்பாடு செய்து உதவிவருவது போன்று ஒவ்வொரு செங்குந்த வியாபாரியும் மகமை ஏற்பாடு செய்தல்.

(ii) தத்தம்மால் இயன்ற அளவிற்குச் செங்குந்தர் ஒவ்வொருவரும் நன்கொடை வழங்குதல்.*

---

* இப்பகுதியில் கண்ட முறையை மகாநாட்டுப் பந்தலிலேயே அமுலுக்குக் கொண்டுவர அனுமதிக்கத் தலைவரைத் தலைச்சங்க அமைச்சர் திரு. ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., அவர்கள் வேண்டிக்கொள்ள, அவரும் அன்புடன் மனமகிழ்ந்து அப்பொழுதே கல்விநிதிக்கு நன்கொடை வசூலிக்க அனுமதித்தனர். தலைவர் அனுமதி பெற்ற அமைச்சரவர்கள் மகாநாட்டின்கண் குழுமியிருந்த கனவான்களுக்கு விண்ணப்பஞ் செய்துகொள்ள, உடனே திருவாளர் திருவாரூர் தி. நா. சபாபதி முதலியாரவர்கள் ரூ. 1001-ம், திருவாளர் ஆரணி சைதாப்பேட்டை ஆலாலசுந்தர முதலியாரவர்கள் ரூ. 500-ம், திருவாளர் ஐயங்கார்குளம் S லக்ஷ்மண முதலியார் அவர்கள் ரூபாய் 100-ம், கல்விநிதிக்கு வாக்களித்தனர். மண்ணச்சநல்லூர் திரு. பொன்னுசாமிமுதலியார் அவர்கள் ரூபாய் 20-ம், பரமக்குடி திரு. வேலுசாமி முதலியார் ரூபா 2-ம் அக்ஷணமே அமைச்சர் கையில் கொண்டுவந்து கொடுத்தனர்.

இத்தருணத்தில் மகாநாட்டின் வரவேற்புச்சபைத் தலைவர் திருவாளர் செங்கோட்டையா முதலியார் அவர்கள் கோயம்புத்தூர் சேலம் ஜில்லா வாசிகள் ஏற்கனவே மகாநாட்டைக் கூட்டிவைப்பதற்குப் பல்லாயிரக்கணக்காகச் செலவழித்திருப்பதால் அவர்கள் கல்விநிதிக்கு மீண்டும் பெருந்தொகை வழங்குதலை

(iii) The surplus funds of every Conference of our community should be added to the Education Fund.

(iv) A portion of the common fund in each and every village of our community should be added to the Education Fund.

(v) Fixed fees should be regularly collected on ceremonial occasions in every Sengunthar family as donations to the Education Fund.

(vi) A lottery should be instituted in aid of the "Education Fund" as early as possible.

17. *Help from the Government*:—So that every member of this community, young and old, man and woman, may attain sufficient vocational and general education this Conference requests the Government

(i) to bring into immediate and universal force the Elementary Education Act of 1920, so that every village of ours with a population of 500 may have a free school in the near future,

(ii) to establish a textile institute in every centre within a radius of 5 miles of which at least 500 weavers live,

(iii) to send more frequently than at present demonstrators of the textile and dyeing industries to teach new methods and improvements in the industries, to the very villages where our people live,

(iii) ஆண்டுதோறும் கூட்டப்படும் மகாநாடுகளுக்காக வசூலிக்கப்படும் தொகையில் மிகுதியை நிதியில் சேர்த்தல்.

(iv) செங்குந்தர் வசியும் கிராமங்களிலுள்ள ஊர்ப் பொதுப்பணத்தில் ஒரு பாகம் இதற்கென ஒதுக்கிவைத்தல்.

(v) நமது குடும்பங்களில் நடைபெறும் எல்லாவித சடங்குகளிலும் கிராமத்துக்குச் செலுத்தும் கட்டணத்தோடு கல்வி நிதிக்கு ஒரு கட்டணம் ஏற்படுத்தல்.

(vi) லாட்டரி ஒன்று ஆரம்பித்து அதில் பெருந்தொகை மிச்சப்படுத்துதல்.

17. அரசாங்கத்தார் உதவி வேண்டும்.—நமது சமூகத்தில் ஆண்பெண் இருபாலருள்ளும், இளைஞர்கட்கும், வயது முதிர்ந்தவர்கட்கும் கல்வியறிவும் கைத்தொழிற்றிறமையும் உண்டாகுமாறு,

(1) 500 ஜனத்தொகையுள்ள ஒவ்வொரு கிராமத்திலும், உடனே கட்டாய இலவச கல்வி சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்றும்,

(2) 500 நெசவு தொழிலாளர்கள் வசிக்கும் 5மைல் சுற்றளவுள்ள ஒவ்வொரு இலாகாவின் மத்திய ஸ்தானத்திலும் ஒரு கைத்தொழில் பாடசாலை ஆரம்பிக்கவேண்டுமென்றும்,

(3) நமது கிராமங்கட்கு அத்தொழிற் போதிப்பவர்களை (Demonstrators) அதிகமாகவும் அடிக்கடியும் அனுப்பி நூதன முறைகளைப் புகட்டவேண்டுமென்றும்,

---

எதிர்பார்க்கக் கூடாதென்றும், தங்களை விடுத்து ஏனைய ஜில்லாவாசிகள் மட்டும் பெருந்தொகை வழங்குவரேல் அதனால் தங்களுக்கு (கோயம்புத்தூர் சேலம் ஜில்லாவாசிகளுக்கு)த் தாழ்வேற்படுமென்று, அதனால் கல்வி நிதிக்குப் பணம் வசூலிப்பதைத் தற்போது நிறுத்திக்கொள்ளுதல் சிறந்ததாகுமென்றும் கூற, அமைச்சரவர்கள் அங்ஙனமே நிறுத்திக்கொண்டு தலைவர் அவர்களை மேல் தீர்மானங்களுக்குச் செல்லுமாறு வேண்டிக்கொண்டனர்.

பல பிரமுகர்கள் கல்வி நிதிக்குப் பணம் வாக்களிக்கவும் நேரில் வழங்கவும் தயாராக இருந்ததாகவும், அவர்களெல்லாம் இக்காரியம் நின்றுவிட்டதற்காக மிகவும் வருந்தி தாம் கொண்டுவந்த தொகைகளைத் திரும்பவும் எடுத்துக்கொண்டு போனதாகவும் பின்னர் தெரியவந்தது. திருவாளர்கள் சின்னகாசி ஆறுமுக முதலியார் அவர்களும், குடியேற்றம் பீமராஜா முதலியார் அவர்களும் கல்வி நிதிக்குப் பெருந்தொகைகளை வழங்குவதாகத் தாமே பிறகு அமைச்சருக்குத் தெரிவித்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் பரமக்குடி திரு. இருளாண்டி முதலியாரும், இலங்கை திருவாளர்கள் சின்னசாமி முதலியாரும், பச்சையப்ப முதலியாரும் முறையே 100 ரூபாயும், 10 ரூபாயும், 10 ரூபாயும் சங்கக் கல்வி நிதிக்கு மகாநாட்டுப் பந்தலில் வந்துசேரும் வண்ணம் தந்தி மூலமாகவும், தபால் மூலமாகவும் நன்கொடையனுப்பி யிருந்ததைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறோம். கல்வி நிதிக்குப் பொருள் வழங்க விருப்பமுள்ள இதர கனவான்கள் தத்தம் நன்கொடையைத் தலைச்சங்க அமைச்சர் திரு. ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., அவர்களுக்கு அனுப்பிவைக்க வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர்.



(iv) to start everywhere adult night schools to increase literacy among grown up men.

18. *A Scheme of Adult Education to be worked out by the Head Sangam*: To further the last-mentioned course, this Conference requests the South Indian Sengutha Mahajana Sangam, Madras, to formulate a scheme of adult education for grown up illiterates in our community and work it out on an extensive scale throughout the Presidency through its propagandists and lecturers, meeting its expenses from out of the proceeds of the Education fund.

### IV. Pertaining to Youths.

19. This Conference is of opinion that in our community bands of young social workers be formed in every village who should practice in serving the community by working for the Sanitation and Health of the village and helping in general meetings and conferences and keeping themselves physically and morally fit for such work by undergoing regular disciplinary exercises.

20. This Conference is of opinion that youths of our community should associate themselves in all meetings convened by enlightened men, engage themselves in periodical competitions to improve their knowledge, and also strive to discontinue such of the customs and conventions which tend to lower their self-respect, even though they may be ancient in their origin, and avoid other practices and habits which weaken their manhood.

21. This Conference is of opinion that the youths of our community should learn to respect all that is good and great, serve good causes, and show respect and consideration to women.

### V. Exposing Impostors.

22. This Conference strongly condemns the action of some people living in the Ramnad district called "Naga-

(4) வயது முதிர்ந்தோரது கல்வியபிவிருத்தியின் பொருட்டு ஆங்காங்கே இராப்பாடசாலைகள் ஆரம்பிக்கவேண்டுமென்றும், அரசாங்கத்தை இம்மகாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகின்றது.

18. வயது முதிர்ந்தோர்க்குக் கல்வியறிவு வுண்டாக்குதல்.—நம்மில் வயது வந்தவர்களது கல்வியபிவிருத்தியைக் குறித்து ஒரு திட்டம் தயாரித்து அதனைச் சென்னை இராஜதானி முழுதும் தனது பிரசாரகர் மூலமாக நடத்துமாறும் அதற்காகும் செலவினைக் கல்வி நிதியினின்றும் தாங்குமாறும் சென்னைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தை இம்மகாநாடு வேண்டிக் கொள்ளுகிறது.

### 4. வாலிபர்க்கான தீர்மானங்கள்.

19. நமது சமூகத்திலே தொண்டர்கள் படை கிராமந்தோறும் நியமிக்கப்பட்டு அது சமூக சேவை செய்யும்படி பழகுதலும், சுகாதாரங்கருதல், பொதுக்கூட்டத்திற் குதவிசெய்தல் ஆகியவற்றிலே ஈடுபடும்படி முயற்சித்தலும், ஏற்ற தேகாப்பியாசங்கள் கொள்ளுதலும் வேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

20. இளைஞர்கள் அறிஞர்கூடிய கூட்டங்களிற் கலந்து விஷயங்களை யறிதல், போட்டி போடுதல் முதலான பலவகையிலும் அறிவு விளக்கமாகும்படி புரிதலும், சுயமரியாதை அல்லது தன் மதிப்புக்குக்* குறைவான பழக்க வழக்கங்கள், பண்டை வழக்கங்களேயாயினும் அவைகளையும், தேக வன்மையைக் குறைக்கும் தீயபழக்கங்களையும் தவிர்த்தலும் வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

21. நன்னடக்கை, நல்லவர்கள் பாற் பணிவு முதலிய நற்குணங்களை வாலிபர்கள் கைக்கொள்ளுதலும், பெண்கள்பாற் பரிவு மரியாதை காட்டுதலும் வேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

### 5. போலிகளுக்கு மறுப்பு.

22. இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள நாகபாசத்தார் என்பவரும், கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள மேளக்காரர் என்பவரும் இதுபோல

---

*தஞ்சை ஜில்லா வாசிகளுள் சிலரால் 'அல்லது தன் மதிப்புக்கு' என்னும் சொற்கள் சேர்க்கப்பட்டன.

basathars" and others in the Coimbatore district called "Melakkars," and some others in some other districts, who have been recently, and for some time past, appropriating for themselves the name of Sengunthars and making the Government and the public believe that the practice of dedicating girls is prevalent in the Sengunthar community as a whole from ancient times, and openly publishing in the news-papers their new-fangled theories and resolutions, and thus bringing discredit and dishonour to the Sengunthar community (the very community they want to pass by the name of) in a very ungrateful manner, and emphatically and openly declares that such people are not Sengunthars, and that the practice above referred to has never existed in the Sengunthar community.

### VI. Social.

**23.** *Status of Women*:—As the education and social status of the women of our community are neglected owing to the selfishness and laziness of the men, this Conference resolves that their education and rights to property and self-respect should hereafter at least be cared for and safe-guarded.

**24.** *Periodically Elected Kariakkars*;—This Conference wishes that all minor disputes and irregularities in our villages should be settled as per rules framed with the common consent of the villagers as suited to the occasion, by periodically elected Kariakkars, who should be intelligent and influential members of the community in the village, capable of rising above all factions.

**25.** *Unity-Marriages*:—As this ancient and homogeneous community of Sengunthars, though inter-dining with one another, has become unconsciously divided into narrow groups of mutually intermarrying families which do not countenance inter-marrying with other groups by reason of their having colonised in

வேறு ஜில்லாக்களிலுள்ள சிலரும், நூதனமாகவும் சில வருஷங்களாகவும் செங்குந்தர் என்னும் பெயரைப் புனைந்துகொண்டு தம்மிடையேயுள்ள பொட்டுக்கட்டும் பழக்கம் செங்குந்த சமூகத்திற்கு நெடுங்காலமாக உண்டெனச் சாதித்துச் சென்னை துரைத்தனத்தாருக்கு மகசர் மூலமாகவும், பத்திரிகைகளில் பகிரங்கமாகவும் தமது தீர்மானங்களையும் அபிப்பிராயங்களையும் தெரிவித்து வெளியிட்டு அவர்கள் ஒட்டிக்கொள்ளத் தேர்ந்தெடுத்த நமது செங்குந்த சமூகத்திற்கு அபகீர்த்தியையும் அவமானத்தையும் மிகவும் நன்றியற்ற முறையில் உண்டாக்க முயல்வதை இம்மகாநாடு மிகவும் அழுத்தமாகக் கண்டிப்பதோடு, அன்னோர்கள் செங்குந்தர்கள் அல்லவென்றும், செங்குந்த மரபிலேயே அத்தகைய தீயபழக்கம் யாதொன்றும் எக்காலத்திலும் இருந்ததில்லை யென்னும் உண்மையையும் பகிரங்கமாக வற்புறுத்துகின்றது.

### 6. சமூக சீர்திருத்தம்.

**23.** பெண்கள் நிலை:—நமது சமூகப்பெண்களுக்கு ஆண்களின் சுயநலங்கருதல், சோம்பலாதியவற்றால் மரியாதைத்தாழ்வும், சிறப்பின்மையு முண்டாவதோடு, அவர்களுக்குச் சிறந்த அறிவும் விகாசப்படுதலின்றி மலினமடைந்து போவதால், அவர்களுக்கு மரியாதை, மேன்பாடு, சொத்துரிமை முதலியவை வழங்கப்பட வேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

**24.** தேர்ந்தெடுக்கப்பெறும் காரியக்காரர்கள்:—பண்டைக் காலந்தொட்டு நமது சமூகத்திற்கு நம்மவர்களாலேயே ஆங்காங்கு வழங்கப்பட்டுவரும் ஜாதிய சம்பந்தமான நியாயங்களெல்லாம் கட்சிபேதங்கள் உண்டாவதற்குக் காரணமாகாத முறையில் அறிவும் ஆற்றலுமுள்ளவர்களைத் தேர்தல் மூலியமாய்க் காரியக்காரர்களாக நியமித்துக்கொண்டு பொதுவாக வரையறுக்கப்பட்ட விதி கால நியதிபோடு நமக்குள் தீர்த்துக்கொள்ளும்படி இம்மகாநாடு விரும்புகிறது.

**25.** ஒற்றுமை விவாகங்கள்:—ஒரே வகுப்பினரான நமது செங்குந்த சமூகத்தார் பல்வேறிடங்களில் குடியேறினதாலும், இடமாறுதலாலும், மேற்கொண்டிருந்த கைத்தற்றொழில் வேறுப்பட்டாலும், நெருங்கிய பழக்கமின்மையாலும், இதுவரை சமபந்தி போஜனம் தவிர விவாக விஷயத்தில் மாறுபாடு கொண்டிருப்



the past different places at different times from different quarters, and therefore by lost constant touch with others elsewhere, and as the observance of such narrow-minded prejudices, is now felt to be not at all conducive to the progress of the community, because it is now known that marriages between blood relations do not promote a healthy progeny but one deficient in intellect and weak in body, this Conference wishes that in future marriages between these artificially formed groups should be freely performed.

**26.** *Brides' Fees and Dowries*:—This Conference further wishes that in marriage contracts brides' fees and dowries should play no part, and that extravagant expenditure on marriage and other ceremonies, which often reduce whole families to poverty, should be avoided.

**27.** *To Prevent Wastage of Communal Funds*:—This Conference regrets that several members of our community, while acknowledging that it is crushed by poverty, spend unnecessarily large sums of money on marriages and temple festivals, consecration of new temples, and law suits arising out of factions, and requests each and every member of our community to perform marriages in future without extravagant expenditure, to avoid constructing new temples where already many exist, to cease spending unnecessarily large sums of money on the existing temples on festive occasions, and to settle all disputes by panchayats constituted within the community without resorting to law courts and thus ruining large fortunes.

### VII. Religious.

**28.** *Against Animal Sacrifices*:—This Conference is of opinion that the cruel practice of sacrificing live animals as offerings to deities should be abandoned by members of our community.

**29.** *Priests and Self-respect*:—This Conference is of opinion that the temple priests and family priests acknowledged

பது சமூக முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பதாலும், ஒரே யிரத்தக்கலப்புள்ள விவாகத்தால் சிறந்த சந்ததி தோன்றுமை, தோன்றிய சந்ததிக்கு அறிவு குன்றுதல், உடல் மன வலிமையில்லாமை யாதிய தீமைகளிருப்பதனாலும், பொருளாதாரம், வேடிக்கை, சம்பந்தம் தவிர்ந்து போகுமேனுமெண்ணம் முதலானவற்றைக் கருதுவதால் பெரும்பான்மையும், பொருந்தாத குடும்ப வாழ்க்கையுண்டாவதாலும் நமது சமூகத்திலே ஒன்றுபட்ட விவாகம் நடத்தப்பட வேண்டுமென இம்மகாநாடு பிரியப்படுகின்றது.

**26.** மணமக்களுக்குள் பரல்வர வொற்றுமைக்குமாறான பரியம் வரதட்சிணை முதலியவையின்றியும், ஏழ்மைக்குக் காரணமான ஆடம்பரமின்றியும், நமது சமூகத்தினர் விவாகம் முதலிய சடங்குகளை நடத்த வேண்டுமென இம்மகாநாடு அபிப்பிராயப்படுகின்றது.

**27.** சமூகச் சிக்கனம்.—நமது சமூகம் வறுமையால் நலிவதாகக் கூறிக்கொண்டே கலியாணங்கட்கும், ஆலய திருமாண உற்சவங்கட்கும், கட்சிச்சண்டைகளால் ஏற்படும் வழக்குகட்கும் அனாவசியமாகப் பெருந்தொகைகளைச் செலவழித்து வருவதைக் கண்டு வருந்துவதோடு, இனி ஆடம்பர செலவின்றிக் கலியாணங்களை நடத்தவும், ஏற்கனவே பலவாலயங்கள் இருப்பதால் இனிய புதியன திருமாணிக்காதும,* அவ்வாறுள்ளவற்றின் உற்சவங்கட்கு அபரிமிதமான தொகை செலவிடாதிருக்கவும், நம்மவர்க்குள்ளேயே பஞ்சாயத்து மூலமாக வழக்குகளைத் தீர்த்துக் கொண்டு நியாயஸ்தலங்கள் மூலம் அளவற்றுச் செலவதை அழிக்காதிருக்கவும் நம்மவர் ஒவ்வொருவரையும் இம்மகாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

### 7. மதசம்பந்தமானவை:

**28.** உயிர்ப்பலி விலக்கு.—நமது செங்குந்த சமூகத்தின் தூயவொழுக்கத்திற்கு மாறாகத் தெய்வங்களுக்கு உயிர்ப்பலியிடுதல் முதலியவைபோன்ற தீயவழக்கங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

**29.** குருக்கள்மார்களும் சுயமரியாதையும்:—நம்மினத்தவரால் அங்கீகரிக்கப்பெறும் கோவிற்

---

* தஞ்சை ஜில்லா வாசிகளுள் சிலரால் 'புதியன திருமாணிக்காமலும்' என்னும் தொடர்மொழி ஆக்ஷேபிக்கப்பட்டது.

by the members of our community should be such as would conduct themselves in a way not in the least derogatory to our sense of self-respect.

30. *Senguntkar Matams*:—This Conference is of opinion that the 'Matams' of our community which have sufficient means to maintain themselves should be brought under an efficient management so that they might be more carefully managed as per the needs of the times.

### VIII. Condolence.

31. This Conference expresses its sorrow for the sudden death of the truthful and courageous Lala Lajapathi Rai, the Lion of the Punjab, who worked unceasingly for the country, and particularly for the backward communities, and that of the Raja of Panagal, who fought bravely with the Government with the object of advancing the cause of the Non-Brahmin communities, and conveys its sympathy to the families of the deceased.

32. This Conference deeply regrets the death among members of the Sengunthar community of C. S. Sabapathy Mudaliar, B.A., Manager, Egmore Police Court, Madras, V. V. C. R. Chinnappa Mudaliar, an influential merchant of Erode, M. P. Ramasami Mudaliar of Paramakudi, and T. Arunachala Mudaliar of Manjakollai, every one of whom cared greatly for the welfare of our community, and conveys its sympathy to the families of the deceased.

### IX. Thanks.

33. This Conference expresses its gratitude

(i) to Messrs. T. N. Kalyanasundara Mudaliar and T. N. Sabapathy Mudaliar of Tiruvarur, the noble brothers who have printed and published the "Sengunthar Prabandathirattu," and conducted out of a spirit of philanthropy

குருக்கள், குலகுருக்கள் முதலானவர்களெல்லாம் நமது சுயமரியாதைக்குப் பங்கமற்ற வழியில் நடப்பவர்களாய் இருக்க வேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

30. செங்குந்தர் மடங்கள்.—பொருளாதாரம் நிறைந்து விளங்கும் நம்மவர் மடங்கள் திறமையுடையோர்களால் காலத்திற்கேற்றவாறு உபயோகமான வழியில் பரிபாலிக்கப்படுதல் வேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

### 8. இறந்தவர்க் கிரக்கம்.

31. பொதுவாக இந்திய தேசத்திற்கும், சிறப்பாகப் பிற்பட்ட வகுப்பினருக்கும் இடைவிடாதுழைத்து வந்தவரும், உண்மையும் தீரமும் வாய்ந்தவருமாகிய பாஞ்சால சிங்கம் திரு. லாலா லஜபதிராய் அவர்களும், பார்ப்பனரல்லாத சமூகங்களனைத்தும் முன்னேற்ற மடைவதற்குத் தைரியத்துடன் அரசாங்கத்தாருடன் வாதாடி வந்த கனம் பனகாலரசர் அவர்களும் திடீரென இறந்துவிட்டமைக்கு இம்மகாநாடு மிகவும் வருந்துவதோடு, அவர்கள் குடும்பத்தினருக்குத் தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

32. செங்குந்தர்களில் முக்கியஸ்தர்களும், நமது முன்னேற்றத்திற்கே பெரிதும் கவனம் செலுத்தி வந்தவர்களுமாகிய திருவாளர்கள் சென்னை எழும்பூர் போலீஸ் கோர்ட்டு மானேஜர் சி. எஸ். சபாபதி முதலியார், பி.ஏ., அவர்களும், பிரபல வியாபாரிகள் திருச்செங்கோடு வி. வி. சி. ஆர். சின்னப்ப முதலியார் அவர்களும், பரமகுடி ம. ப. இராமசாமி முதலியார் அவர்களும், மஞ்சட்கொல்லை தி. அருணாசல முதலியார் அவர்களும் காலகதி படைந்தமைக்காக இம்மகாநாடு மிக வருந்துவதோடு, அவர்கள் குடும்பத்தினருக்குத் தனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

### 9. நன்றி செலுத்தல்.

33. (i) தங்கள் சொந்த செலவில் 'செங்குந்தர் பிரபந்தத்திரட்'டையும், முதலாண்டு 'செங்குந்த மித்திரனை'யும் அச்சிட்டு வெளிப்படுத்தி நமது சமூகத்திற்குப் பெருந்தொண்டு ஆற்றினதற்குத் திருவாளர்கள் திருவாரூர் நா. கல்



the monthly "Sengunthа Mithran" during the first year at their own expense, thus doing a great service to our community;

(ii) to the South India Sengunthа Mahajana Sangam, Madras, which is doing meritorious service to our community by rousing us, by its incessant propaganda, to a sense of our present condition, establishing branch Sangams in several villages and infusing in them an enthusiasm to work for the welfare of our community, providing scholarships, boarding and lodging to deserving students of our community seeking higher education, and conducting the journal "Sengunthа Mithran" and thereby spreading the light of knowledge among the members of our community throughout the Presidency.

(iii) and to Mr. M. Shunmukhasundara Mudaliar, M.A., L.T., for ably conducting the work of the Sangam and for having undertaken the editorship of the journal at great personal sacrifice at a time when it had very few subscribers and brought it to the present-prosperous condition.

### X. "Sengunthа Miththran" and the Head Sangam.

34. This Conference enjoins every member of the Sengunthа community to support the journal "Sengunthа Mithran" so that it may at an early date attain a high standard of journalistic efficiency and grow from a monthly into a weekly.

35. This Conference requests the South Indian Sengunthа Mahajana Sangam, Madras, to establish hundreds of more Branch Sangams all over the Presidency and outside, and strive in all possible ways for the advancement of the community in education, economic condition, employment in the Government services, and representation on the Local bodies, etc.

யாண சுந்தர முதலியார் அவர்களுக்கும், அவர் சகோதரர் சபாபதி முதலியாரவர்களுக்கும்,

(ii) வெளியிற் கிராமந்தோறும் பிரசாரகர் மூலமாக நம்மக்களுக்குள் புத்துணர்ச்சியைத் தோற்றுவித்தும், ஆங்காங்குக் கிளைச்சங்கங்களை ஸ்தாபித்தும், நமது இளைஞர்கள் கல்வியில் மேன்மையடையுமாறு உபகாரச்சம்பளம் உணவு முதலியவை வழங்கியும், 'செங்குந்த மித்திரனை' வெளியிட்டுப் பரவும்படி செய்தும் சமூகத்தொண்டாற்றி வருவதற்காகச் சென்னையிலுள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கும், அதன் கிளைச்சங்கங்களுக்கும்,

(iii) தலைச் சங்க காரியங்களைத் திறமையுடன் நடத்திய அமைச்சரும், எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களுக்கிடையே மிகச் சொற்பமான சந்தாதாரர்களை நமது 'மித்திரன்' பெற்றிருந்தபொழுதே அதனாசிரிய பதவியை யேற்றுத் தற்போதுள்ள நல்ல நிலைமைக்கு அதனைக் கொண்டுவந்த ஆசிரியருமாகிய திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி., அவர்கட்கும்,

இம்மகாநாடு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

### 10. 'செங்குந்த மித்திர'னும் தலைச்சங்கமும்.

34. நமது செங்குந்த சமூகத்தைச் சார்ந்தவர்களெல்லொவ்வொருவரும் 'செங்குந்த மித்திர'னைப் பெரிதும் ஆதரித்து அதை விரைவில் மிகவுயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவரவும், பக்ஷவெளியீடாக மாற்றவும் முயலுமாறு வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர்.

35. சென்னை ராஜதானியிலும், வெளியிலும் இன்னும் நூற்றுக்கணக்கான செங்குந்தர் சங்கங்கள் ஏற்படுத்தித் தன்னோடு இணைத்துக் கொண்டு கல்வி அபிவிருத்தியிலும், செல்வ நிலையிலும், அரசியற்றுறையிலும் நமது சமூகம் முன்னேற்ற மடைவதற்குத் தலைச் சங்கம் எல்லா வழியிலும் மேலும் முயற்சி புரியவேண்டுமென இம்மகாநாடு வேண்டிக்கொள்ளுகின்றது.

மகாநாட்டின் மீதிப் பணத்தைக் குறித்த தீர்ப்பு.

தீர்மானங்கள் முடிந்ததும் மாலை 5-30க்குத் தலைவர்கள் புகைப்படமொன்று எடுக்கப்பட்டது. தலைவர் மீண்டும் மகாநாட்டுக்குத் திரும்பியதும் திரு. வா. செ. செங்கோட்டையா முதலியார் அவர்கள் தமது ஜில்லாவாசிகளின் சார்பாக மகாநாட்டின் மிகுதிப்பணம் தமது ஜில்லாவிலே இருக்கவேண்டுமென வேண்டிக் கொண்டனர். ஆனால் இதற்கு மகாநாட்டில் நிறைவேறிய 16-வது தீர்மானமும் தலைச்சங்கத்தின் சட்டதிட்டங்களில் 10-வது விதியும் இடந்தராமலிருப்பதைத் தலைச்சங்க அமைச்சர் எடுத்துக் காட்டினர். மீண்டும் வரவேற்புத் தலைவர் தமது அபிப்பிராயத்தை வற்புறுத்திக் கூற, அமைச்சரவர்கள் இது விஷயமாக மகாநாட்டுத் தலைவர் அவர்களைத் தீர்ப்புக்கொடுக்கும்படி கேட்டுக்கொண்டனர். தலைவரவர்கள், இது விஷயமாக ஏற்கெனவே சட்டதிட்டங்களும் தீர்மானமும் ஏற்பட்டிருப்பதனால் அவற்றிற்கு விரோதமாகத் தான் தீர்ப்புச்சொல்ல முடியாதென்றும், அடுத்த மகாநாட்டில்தான் இவ்விஷயத்தைக் குறித்து முடிவுசெய்துகொள்ளவேண்டுமென்றும், அடுத்த மகாநாடு கூடும்வரையில் இம்மகாநாட்டின் மிகுதிப் பணத்தை எவரும் கையாளக்கூடாதென்றும், அதுவரைக்கும் அது பத்திரமாகச் சேமித்து வைக்கப்பெறவேண்டுமென்றும் தீர்ப்புச்சொன்னர்.

தலைவர் முடிவுரை.

இதன் பிறகு தலைவர் கீழ்வரும் தமது முடிவுரையை நிகழ்த்தினர்:—

## தலைவர் திரு. ஆ. வே. முத்தைய முதலியார் பி.ஏ., பி.எல்., அவர்களின்

# முடிவுரை

நண்பர்களே,

அநேக காரணங்களால் காலதாமதமாய் விட்டது. போய்வருகிறேனென்று தங்களிடம் விடைபெற்றுக் கொள்ளவேண்டிய இது சமயம் என்னிடமிருந்து விரிவான முடிவுரையெதிர்பார்க்கமாட்டீர்களென்று நம்புகிறேன். அன்றியும் அதிகமாகப் பேசுவதால் பலன் அதிகம் உண்டாகிறதில்லை. அநுஷ்டானத்திலேயே, செய்கைகளினலேயே, பலன் விளையக் கூடியதாக விருக்கிறது.

இப்போது மகாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டன. இரண்டொன்று தவிர மற்றவைகளெல்லாம் முழுமனதுடனே ஆக்ஷேபணைகள் யாதொன்றுமின்றியே ஏற்கக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இது சந்தோஷிக்கத்தக்க விஷயமாகும்.


போதுநலமும் அபிப்பிராய பேதமும்

இனி இவைகள் நிறைவேறுவதற்காக வேலை செய்யவேண்டியது எல்லோருடைய கடமையாகும். அபிப்பிராய பேதத்தால் வேறுபடும் நண்பர்களும் ஒத்துழைப்பது அவர்களுடைய பொதுநலநோக்கைக் காட்டும் அல்லது ஒத்துழைப்பதற்கு மனமில்லையென்பதாக வைத்துக் கொண்டாலும், அதிக வாக்குகளால் ஏற்கக் கொள்ளப்பட்ட தீர்மானங்களை நிறைவேருத விதம் அந்த நண்பர்கள் இடையூறு செய்யாமலிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அபிப்பிராய பேதம் காரணமாகப் பொதுநலத்தைக் கெடுப்பது நன்றல்ல. யோசிக்கவும். இப்போது முதன் முதல் மகாநாடு கூட்டி ஏற்பாடுகள் நடைபெற்று வருகையிலேயே பிளவுகள் வேண்டாம். இது நம்மெல்லோருடைய நன்மைக்கேயாகும். நண்பர்கள் இதை மறக்கமாட்டார்களென்று நம்புகிறேன்.


நிற்க, ஏற்கக்கொண்ட தீர்மானங்களெல்லாம் சில திருத்தங்களை யேற்று நிற்கின்றன. இது முதற்படியாகையால் இன்னுமதிகமாகப் போவதற்கு இப்போது அவகாசமில்லை. இதில் சில திருத்தங்களை நிறைவேற்றப்பட்டால் இம் முதல் மகாநாட்டு வேலையைப் பெரும் வேலையாகக் கொள்ளலாம்.

ஞாயத்திற்குக் கட்டுப்பட்டுக் குல ஒற்றுமையையும், ஒழுக்கத்தையும், மேல் நோக்கையும் கருதி யேற்கக்கொண்ட திருத்தங்கள், தீர்மானங்கள், சிற்சில பண்டைய பழக்கங்களால் கட்டுபட்டு நிற்கும் சில முதிய நண்பர்களுக்குக் கஷ்டமாகவே யிருக்குமென்பது எனக்குத் தெரியும். அந்த நண்பர்களுக்கு யான் சொல்வது : ஞாயத்திற்குச் சரியென்றேற்படுவதைப் பண்டைய வழக்கம் கருதி நீக்குவது சரியல்ல. பழயவழக்கங்கள் யாதொரு ஆதாரமுமற்றனவாக விருந்தால் அவைகளை நாம் கெட்டியாகப்






திரு பி. செ. மாணிக்கவாசக முதலியார்.



திரு. ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008. 12809
JL 4592 ... 11, N7 N59.3.1





பிடித்துக்கொண்டிருப்பது ஞாயமாகுமா பாருங்கள். அன்றியும், புராதன பழக்கங்களெல் உயிரற்ற பழக்கங்களேயாகும். அப்பழக்கங்களால் முன்னேற்றத்திற்கு இடையூறுகளுண்டாகின்றனவேயன்றி நன்மை யாதொன்றுங்காணோம். அவைகளை நாம் நன்றாய் யோசித்து பார்க்காததாலேயே இவைகளிடம் நமக்குக் குருட்டு அபிமான மிருக்கிறதேயன்றி, சற்று நிதானித்து நோக்குவோமேயானால் அவைகளெல்லாம் வெறும் வெளித்தோற்றங்களாகவே புலப்படும்.

## 'குடுமி'ப் பிரசங்கங்கள்

உதாரணமாக, யான் பற்பல விடங்களில் "குடுமி"ப் பிரசங்கங்கள் கேட்டிருக்கிறேன். பழய குடுமிகளை யகற்றி நம்மிளைஞர்கள் தங்கள் தங்கள் மயிரைக் கத்தரித்துச் சீர்படுத்திக் கொள்வது ஒரு பெரும் பாதகமாகவும், இது போன்ற பல கேடுகள் உண்டாய்விட்டனவென்றும், தேசமே பாழடைந்து வருவதாகவும், பரிகாசமாகவும் கோபத்துடனும் பேசுவதைக் கேட்டிருக்கின்றேன். பழய குடுமிகள் வந்துவிடுவதாலேயே முன்னேற்ற முண்டாகுமென்பது கனவேயாகும். முன்னேற்றத்திற்கு இம்மாதிரியான வெளிப்பழக்கங்களல்ல அனுகூலம் அல்லது பிரதி கூலமாயிருப்பன. பழக்கங்களுள்ளே உயிரிருக்கவேண்டும். எதற்காக இந்தப் பழக்கங்களென்பதை யறிந்து கைக்கொள்ள வேண்டும் அல்லது அகற்றவேண்டும். அவ்விதமாக உயிரிருக்கிறதா வென்பதை நாம் கவனிக்கிறதில்லை.

## 'இடது கை'

அம்மட்டோ, வேறு விஷயங்களில் அல்லது பிறரிடத்தில் காணும்போது தப்பென்பதாகக் கொள்ளும் பழக்கங்கள் பொதுவாக என்றைக்கும் எல்லோரிடமும் தப்பெனக் கொள்வதில்லை. உதாரணமாகச் சொல்லுகிறேன்: கால்கள் சுத்தம்செய்யாமல் கோயிலுக்குள் போவது குற்றம். ஆனால் கோயில் குளத்திலுள்ள சேற்றுத் தண்ணீரையோ, வெகுதூரம் வீசும் கெட்ட நாற்றம் நிறைந்த கோமுக தீர்த்தத்தையோ எடுத்துத் தலையிலும், வாயிலும்கூட இடுவது குற்றமல்ல. இது எந்த ஞாயத்திற்கு ஒத்திருக்கிறதோ தெரியவில்லை. இடது கையால் பதார்த்தத்தையோ சோற்றையோ தொடுவது, சாப்பிடுவது குற்றம். நமது சொந்த இடதுகையால் தொடுதல் கூடாது; அசுத்தம் மரியாதை, வணக்கம் முதலியவைக்காகவன்றி இடது கையை வலது கையோடு உபயோகிப்பதில்லை. இடது கை சில உபயோகத்திற்காக நீக்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நமது சொந்த இடது கையை அசுத்த மென்பதாக விலக்கிவிட்டுப் பிறருடைய இடது கையைச் சுத்தமாகக் கொள்ளுவது எக்காரணம் பற்றியோ? பந்திபோசனங்களில் பரிசாரகர்கள் தங்களிரண்டு கைகளாலும் சோற்றை யெடுத்துப் பிடித்து நிறுத்தி இலையிலிடுகிறார்கள். இங்கே இடது கை பிறருடைய இடது கை. இது சுத்தமா இல்லையா யோசியுங்கள். இடது கையாலிடப்படும் அன்னம் சுத்தமாயில்லையா இப்போது சொல்லுங்கள். சுத்தமானால் யேன் நமது சொந்த இடது கையில் இடப்படாது? நமக்கு நம் சொந்த இடது கை பிறருடைய இடது கையைவிட அசுத்தமோ?

இம்மாதிரியாக இன்னும் பல பழக்கங்கள், நாம் கவனித்துப் பார்க்காததினாலேயே, வெறும் ஆதாரமற்ற குருட்டுப் பழக்கங்களாகவிருக்கின்றன. முதியவர்களாக விருக்கும் நமக்கு இதுபோன்ற பழக்கங்களின் வேடிக்கையும் விபரீதமும் புலப்படுகிறதில்லை. இளைஞர்களுக்கு நன்றாகத் தெரிந்துவிடுகிறது. அவர்கள் ஆக்ஷேபிப்பார்கள். அவர்களுக்குத் தக்க பதில்களாவது சொல்கிறோமில்லை. என்ன செய்கிறோம்?, மிரட்டி அதட்டி விடுகிறோமேயன்றி ஞாயமான பதில்களளிப்பதில்லை.

## இளைஞர்கட்கு இடுக்கண் விளைவிக்கவேண்டாம்

ஆகையால்தான் முதியவர்களான நம்மால் அம்மாதிரிப் பண்டைப்பழக்கங்களைவிட முடியாவிட்டாலும், புதிய நற்பழக்கங்களை, அல்லது கெடுதியற்ற புதிய பழக்கங்களைக் கையாளும் இளைஞர்களுக்கு இடுக்கண் விளைவிக்காமலிருப்பது நலம். ஒன்று மறந்துவிடவேண்டாம். வருங்காலம் நமதல்ல, இளைஞர்களுடையதேயாகும். நம் காலம் போய்விட்டது. இனி நடைபெறவேண்டியவைகளெல்லாம் இளைஞர்களைப் பொறுத்து நிற்கின்றன. அதாவது அவர்களுடைய ஒழுக்கத்தையும், சீர்திருத்தங்களையும் பொறுத்தது. வாழ்க்கைப் போரில் அவர்கள் நுழையும்போதே நாம் ஏன் அவசகுனம் சொல்லவேண்டும்? அவர்களுக்கு இடைஞ்சல்களை யுண்டுபண்ணி அவர்கள் முன்னேற்றத்தைக் கண்டிப்பது சரியாகுமா? நாம்

சொல்லவேண்டிய முறையில் சொல்லிக்காட்டி நாமும் நடந்துக் கொண்டால் அவர்கள் நல்வழி வாராமல் போவார்களா?

"ஐயா, நாங்களா உங்களைக் கேட்டுக்கொண்டோம்? நீங்களாகவே எங்களைப் பெற்றுவிட்டு, யாங்கள் இன்பமான வாழ்க்கையில் நுழைவதற்கில்லாமல் அல்லல் விளைவிக்கின்றீர்களே, இது ஞாயமா?" வென்று கேட்டால், இளைஞர்களுக்கு என்னபதில் சொல்லமுடியும்?

எத்தனை குடும்பங்களில் பிள்ளைக்கும் பெற்றோருக்கும் மனத்தாங்கல், சண்டை சச்சரவுகள் இருக்கின்றன? எதற்காக?

**முதலில் நம்மைத் திருத்திக்கொண்டு இளைஞர்களைத் திருத்த முயலவேண்டும்**

குற்றங்களைக் கண்டிக்கையில் பெற்றோர்களிடம் அதே குற்றங்கள் வைத்திருப்பது.

இப்போது இளைஞர்களிடம் பரவி வருகின்ற கொடிய பழக்கம் பீடி, சிகரட் பிடித்தலேயாகும். அறியாமையாலும், ஒருவரை யொருவர் பார்த்துச் செய்தல் என்னும் முறையாலும், வேடிக்கையாகவும், இப்பழக்கம் ஏற்பட்டு வினையாக முடிகிறதென்பதில் சந்தேகமில்லை. இத் தீய பழக்கத்தால் ஏற்படும் கெடுதிகளை ஞாயமான வழிகளால் எடுத்துக்காட்டினால் இளைஞர்கள் திருந்துவார்களென்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்களுக்குச் சொல்லுவதில் நாம் நல்ல வழி காட்டிகளாக இருக்கவேண்டும். அப்படியின்றி நாமும் சுருட்டுப் பிடிக்கும் துர்ப்பழக்கத்தைக் கைக்கொண்டவர்களாக இருந்துகொண்டே இளைஞர்களை மிரட்டுதல், அதட்டுதல் செய்தால் நமது வார்த்தைகளுக்குக் கனமிராது. அவர்களும் திருந்தமாட்டார்கள். சுருட்டு பிடிப்பதால் நமக்கேற்பட்டிருக்கும் கெடுதிகளை நாம் கவனித்தோமா? கவனித்து அப்பழக்கத்தை விட்டோமா? அதொன்றுமில்லையானால், நாமும் சுருட்டு பிடித்துக்கொண்டே, 'அடே தம்பி சிகரட் பிடிப்பது மகா கெட்டது. நீ யேதாகிலும் அப்படி செய்தால், பார்' என்று கோபிப்பதால் என்னபலன்? ஒன்றுமில்லை. அன்றி நாமும் அப்பழக்கத்தைவிட்டு அதனால்ஏற்பட்ட காசம் இருமல் முதலியவற்றால் வருந்துபவர்களாக, 'அப்பா தம்பி, இதோ பார் சுருட்டு பிடித்த குற்றத்தால் யான் படுகிற கஷ்டத்தையும், அநுபவிக்கிற துன்பத்தையும். ஆகையால் நீயும் அம்மாதிரி செய்யாதே; கஷ்டப்படவேண்டி வரும், உனது இளந்தேகம் மெலியும், முக அழகு போய்விடும், மார்வலி உண்டாகும் என்பதாக நல்லுபதேசம் செய்தால், அதைக் கேட்டு ஏற்றுக்கொள்ளாத இளைஞர்களுமிருப்பார்களோ?

இவைபோன்ற பல விஷயங்களில் நாமே நம்மைத் திருத்திக்கொண்டு இளைஞர்களைத் திருத்தவேண்டும்.

வேறு சில விஷயங்கள். யாதொரு தீமையும் விளைவிக்க கூடாதவைகளில் அநாவசியமாகக் குற்றங் கண்டு அவைகளை யெதிர்த்து இளைஞர்களை வற்புறுத்துதல்.

**'மீசைச் சண்டை'**

தகப்பன் மீசை வைத்திருக்கும்போது மகன் மீசையை யெடுத்துவிட்டான். அல்லது தகப்பன் மீசையை யெடுத்துக் கொண்டிருக்கும் போது மகன் மீசை வைத்துக்கொண்டிருக்கிறான். எவ்வளவு பெரிய அவமானம், எவ்வளவு பெரிய குற்றம் பாருங்கள்? இதனாலேயே, மீசைச்சண்டையினாலேயே, குடும்பத்தில் கலகம். இதுவும் அறிவாளிகளுக் கழகாகுமோ? யோசியுங்கள்; நன்றாய் யோசித்துப்பாருங்கள். நன்றாய் யோசித்துப் பார்க்காத குறையால் எவ்வளவோ தீங்குகள் விளைகின்றன. அம்மட்டோ, நாம் நலமென்று கோருகிறது அதற்கு விரோதமாக முடிகிறது.

**இளமையிலேயே காலுக்கும் கழுத்துக்கும் கட்டு**

நமது இளைஞர்கள் (சிறுவர்கள், சிறுமிகள்) வயது வராததிற்கு முன்னமேயே அவர்கள் காலுக்குக்கட்டுபோடுகிறது, கழுத்திற்குக் கயறு போடுகிறது அதாவது கலியாணம் செய்து வைத்தல் என்கிற பழக்கம். கலியாணமென்பது இன்பவாழ்க்கைக்கல்ல. காலை கழுத்தைக்கட்டி காராக்கிரகமிடுவதற்காம்! அந்தோ பாவம். நமது பிள்ளைகள் இன்னும் வயது வராதவர்கள் என்ன பாவங்களை ஐயா, செய்தார்களோ நம்மிடையிலே வந்து பிறந்து இந்தக்கஷ்டங்களை யனுபவிப்பதற்கு!

பிள்ளைகளைப் படிக்கவைத்து, வயதுவந்த பிறகே மணம் செய்துவைப்பதாக வைத்துக்கொள்வோம் அங்கும் போராட்டந்தான். முதியவர்களாகிற நமது சொந்த அபிமானம், பொருளாசை இன்னும் பலவேறு குருட்டெண்ணங்கள் முன்வந்து நிற்கின்றன.

தகப்பனுக் கடங்கி நடக்கிற பிள்ளையானால், தகப்பனுக்காக, தகப்பனுடைய பிரியத்திற்காக



தனது வாழ்நாள் முழுவதையும் கெடுத்துக்கொள்ளவேண்டும். தகப்பனுடைய ஆசைக்காக அத்தை பெண்ணைக் கட்டிக்கொள்ளவேண்டும். அறியாதபெண் எப்படி யிருந்தாலும் பாதகமில்லை. சொந்தம் போய்விடுகிறதே. மொண்டிப்பெண்ணோ, மூடப்பெண்ணோ; அல்லது மட்டிப்பையனோ, மூரட்டுப்பையனோ அத்தை மகள், அல்லது மகன் கலியாணம் செய்தாகவேண்டும். இம்மாதிரியாக இளைஞர்களை வற்புறுத்திக் கட்டாயஞ் செய்தால் யென்ன செய்வார்கள்? பாவம்! வேறு வழியில்லை. ஒன்று, தங்களைப் பலியிடுக்கொள்ளவேண்டும். வாழ்நாள் முழுவதும் பாழ்நாளாக ஆக்கிக் கொள்வது. இதுபோன்ற பெருந்துறவு பூண்பது இளைஞர்களால் ஆகுமா? அது அவர்கள் குற்றமா?

என்ன செய்கிறான் இளைஞன், குடும்பத்தை விட்டு வெளிபட்டுப் விடுகிறான். வேறு சாதியிலும் நுழைந்துவிடுகிறான். யார் குற்றம் சொல்லுங்கள்? இளைஞன் கோருவது, தேடுவது, தனக்கிசைந்தவளாகவும், குணம் அமைந்தவளாகவும் உள்ளதோர் வாழ்க்கைத் துணைவி. அத்தை மகளையும், அக்காள் மகளையும் விட்டால் வேற பெண்கள் இல்லையா? இருக்கின்றார்கள். அதே குலத்திலே இருக்கின்றார்கள். அந்தப் பெண்மணிகளில் 'அப்பா, உனக்குப் பிரியமானவளைச் சொல்; கலியாணம் முடித்து விடுவோ'மென்று சொல்லுகிறோமா? இல்லை; இல்லை. பழுத்தபாட்டன், பாட்டி அழுகிறார்கள்—மகன் பிள்ளைக்கு யாருமில்லையே யென்று தகப்பன் உடன் பிறந்தான் முகத்தை பார்க்க வேண்டியிருக்கிறது. இவர்களுடைய அசட்டுத்தனத்தின் பாரத்தைத் தாங்கவேண்டியது பையனா? இது என்ன ஞாயம்? நமது கோபம், மிரட்டல் ஒன்றும் பலிக்கிறதில்லை. பிள்ளை பார்க்கிறான். ஓகோ இங்கிருந்தால் நமக்கு நரகப்பிராப்திதான். நம்மை இவர்கள் அநுகாதவண்ணம் செய்துவிட வேண்டுமென் பதாக வேறு சாதிப் பெண்ணையாவது மணந்து விடுகிறான்! இனிமேல் அத்தை மகளும் அக்காள் மகளும் சுகமாயிருக்கலாமல்லவோ? இவ்வகையாகப் பெற்றோர்கள் நடந்து கொள்வதால் அவர்களுடைய குலத்திற்கே தீமை யேற்படுகிறது.

**பெற்றோர் காலத்தின் அறிகுறிகளை அறிந்து நடக்கவேண்டும்**

இதுபோன்ற விஷயங்கள் அதிகமாக வில்லையே என்ற சொல்லக்கூடும். இரண்டொன்றிருந்தால் போதாதோ? இதைப் பார்த்தும், கேட்டும் நாம் கண்களை மூடிக்கொண்டு "உலகத்தில் வெளிச்சமில்லை" யென்றிருந்தோமானால், நாம் வெகுதூரத்தில் பின் நின்றுவிடுவோம். நமதிளைஞர்கள் வெகுதூரம் முன்போய் விடுவார்கள். அவர்களை யணுகுவதற்கு முதலாய் நம்மால் முடியாது. ஆகையால் அம்மாதிரி செய்து கொள்ளாமல், காலத்தின் அறிகுறிகளை நன்றாய்த் தெரிந்துகொண்டு அதற்கொத்தாற்போல நடந்துகொள்வோமே யானால், நமக்குக் கொஞ்சம் மரியாதையாவது மீதியாகும். அன்றேல் நாமும் நம் அநுசாரங்களும் அழிந்துபோய் நமது இளைஞர்கள் தாமாகவே, தெரிந்தோ, தெரியாமலோ, முன்னேறுவார்கள்.

**இறைவன் இளைஞர் கட்சியிலிருக்கிறார்**

அவர்களுக்குச் சகாயம் செய்வதே நமது கடமையாக விருக்கவேண்டும். முன்னேற்றமென்பது இறைவனது வேலை யென்பதை மறந்துவிடாதீர்கள். அந்த வேலைக்கு நாம் இடுக்கண் செய்வது இறைவனுக்கிழைக்கும் குற்றமாகும். முன்னேற்றத்தைத் தழுவிநிற்கும் இளைஞர் கட்சியிலிருக்கின்றார் இறைவன். சந்தேகமில்லை. அவர்களுடைய வேலைக்குத் தடங்கலாக நாமிருந்தால் நமக்கெப்படி துணை புரிவார். நிதானியுங்கள்.

**முன்னேற்றத்துக்கான சீர்திருத்தங்களை இடர்ப்படுத்தாதீர்கள்**

ஆகையால்தான், மேலும் மேலும் யான் சொல்லுவது: முன்னேற்றத்திற்குரிய சீர்திருத்தங்களை இடர்ப்படுத்தாதீர்கள். உங்களுக்குப் பிரியமில்லாவிட்டால் சும்மாயிருந்து விடுவதே மேல். இடர் செய்வது பாதகம்; சேர்ந்துழைப்பது புண்ணியம். நம் மிஷ்டம் எதுவானாலும், நமது பிள்ளைகள் ஒழுக்கம் அடிப்படையாக முன்னுக்கு வரவேண்டிய யேற்பாடு செய்யுங்கள். அப்போதுதான் நமது குலம் மேம்படும். அதைவிட்டுப் பழைய கதைகளும் ஒழுங்குக்கு விரோதமான கொள்கைகளும் நம் முன்னேயே அழிந்து போகட்டும், நம்மோடே மறைந்து போகட்டும்.

நம் இளைஞர்கள் நல்ல காற்றையுட்கொண்டு திட சரீரிகளாய் இன்பவாழ்க்கையி லமர்ந்து ஒழுக்க சிலர்களாயும் தேசத்தொண்டர்களா

யும், குலதிலகர்களாயும் விளங்கவேண்டும். இதற்கு ஒத்தாசை செய்ய வேண்டும். செய்ய வேண்டியது நமது கடமை. இந்தக் கடமையானது நம்மொவ்வொருவருடைய மனதில்பதியவும், நம் குலம் மேன்மைபெற்று விளங்கவும், நம் இளைஞர்கள் இளஞ்சிங்கங்களாக உலாவி வரவும் நாம் இந்தப் பெரும் காஷியை நம் காலத்திலேயே கண்கூடாகப் பார்த்து ஆனந்திக்கவும் எல்லாம் வல்ல நம்மிறை அறுமுகவன் கருணை செய்யும்படியாகப் பிரார்த்திக்கிறேன்.

மகாநாடு முடிவுற்றது.

தலைவர் முடிவுரை முற்றுப்பெற்றதும் கரகோஷத்தினாலும் ஜே சப்தங்களாலும் மகாநாட்டுப் பந்தலில் குழுமியிருந்த அனைவரும் தமது ஆனந்தத்தையும் அங்கீகாரத்தையும் வெளியிட்டனர். தலைவரவர்களுக்கு மாலை சூட்டித் திரு. செங்கோட்டையா முதலியார் அவர்கள் தலைவர்க்கும், மகாநாட்டிற்கு விஜயஞ் செய்தவர்க்கும், மகாநாட்டினை விமரிசையாக நடத்தப் பேருக்கத்தோடு ஒத்தாசை புரிந்தவர்க்கும் வந்தனோபசாரம் கூறினர். அதன் பிறகு திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ. எல்.டி., அவர்கள் செங்குந்த உலகத்தின் சார்பாகவும் தலைச்சங்கத்தின் சார்பாகவும் வரவேற்புச்சபையினர்க்கு வந்தனமளித்தனர்.

இதோடு இரவு 7-30-மணிக்கு மகாநாடு கலைந்தது. இராப்போஜனமானதும் தலைவர்கள் மோட்டார்களில் இரயிலடிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். திரு. முத்தையா முதலியார் அவர்களும் அவர்கள் மனைவியாரும், திரு. கனம் கிருஷ்ணநாயர் அவர்களும் மெயிலில் சென்றனர். திரு. சாமிநாத முதலியார் அவர்களும், திரு. பீமராஜா முதலியார் அவர்களும் மகாநாட்டுத் திரும்பும் ஸ்பெஷலில் சென்றார்கள். இரயில் புறப்படும்வரைக்கும் பல்லாயிரக்கணக்கான செங்குந்தர்கள் தலைவர்களுக்கு மாலையிட்டு விழிவிட்டு விடைபெற்றுக் கொள்வதற்காக இரயிலடியில் குழுமி நின்றனர். மேளவாத்தியங்களின் இன்னிசையும், சின்னங்களின் முழக்கமும், தாரைகளின் பேரொலியும், ஜே கோஷ்டங்களும் தலைவர்கள் வண்டிகளின் முன் வண்டித்தொடர் புறப்படும்வரைக்கும் ஒலித்துக்கொண்டே இருந்தன. வானையும் பிளக்கும்படியான ஜே கோஷ்டத்திடையிலும் கரகோஷத்திடையிலும் வண்டித்தொடர்கள் புறப்பட்டுச் சென்றன. செங்குந்தர் முதலாவது மகாநாட்டின் வைபவமே அன்றெல்லாம் இரயில் வண்டித்தொடர்களிலும் முக்கிய பேச்சாக இருந்தது.

செங்குந்த பெருமக்களின் குதூகலம் அன்று அளவிடற் கியலாததே. மகாநாட்டிற்கு வந்திருந்த செங்குந்தர்களுள் ஒவ்வொருவரும் தமது ஆயுட்காலத்தில் இவ்வளவு ஒழுங்காக நடைபெற்ற மாபெருங் கூட்டத்தினைக் கண்டதில்லை யென அபிப்பிராயப்பட்டனர். இதர குலப் பிரமுகர்களும், மகாநாட்டுக்கு விஜயஞ் செய்திருந்த தேசத் தலைவர்களும், பத்திரிகாசிரியர்களும் தாம் கண்ட சாதிய மகாநாடுகளுள் இதுவே எல்லாவற்றினும் வெகு விமரிசையாக நடைபெற்றதெனக் கூறி மகிழ்ந்தனர். அவ் வபிப்பிராயத்தினைப் பத்திரிகைகளிலும் வெளியிட்டனர். செங்குந்தர்களுக்கு இது ஒரு பெரும் புண்ணிய நாளாகவே இருந்தது.

இரண்டாவது தென்னிந்திய செங்குந்தர் மகாநாடு

செங்கல்பட்டு ஜில்லா வாசிகளால்

காஞ்சீபுரத்தில்

அடுத்த தைமீ கூட்டுவிக்கப்பெறும்.

இதற்குத் திரு. ம. ந. சாமிநாத முதலியார் அவர்கள்.

சகல பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.



# தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

## இரண்டாவது பொதுக்கூட்டம்

நமது தலைச்சங்கத்தின் இரண்டாவது பொதுக்கூட்டம் ஈரோட்டில் நம்மவர் முதலாவது மகாநாடு கூடிய 'செங்குந்த நகரின்' கண் அமைக்கப்பெற்ற 'நவவீரர்' மாளிகையில் தைமீ 9-ம் தேதி திங்கட்கிழமை (21-1-29) காலை 9-மணிக்குச் சைதாப்பேட்டை தாலூகா போர்டு அங்கத்தினரும், நகர பரிபாலன சபையின் துணைத்தலைவருமாகிய திரு. சை. இரத்தினவேலு முதலியார் அவர்களின் தலைமையின் கீழ்க் கூடியது. இதுவே சங்கத்தின் புதுச் சட்டங்களின்படிக் \கூட்டப்பட்ட முதல் பொதுக் கூட்டமாகும். அவ்வமயம் கிளைச் சங்கங்களின் பிரதிநிதிகளோடு, மகாநாட்டு வரவேற்புச் சபைத் தலைவர்களும், அங்கத்தினர்களும, மகாநாட்டிற்கு வந்த டெலிகேட்டுகள் பலருமாகச் சபாமண்டபத்தில் நானூறுபேர்கள் குழுமி யிருந்தனர். செங்குந்தர்களுள் சர்வகலாசாலைப் பட்டம்பெற்று விளங்கும் அறிவாளிகளுள் பலரும் அமைச்சரால் அழைக்கப்பட்டு அக்கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

1. அக்கூட்டத்தின் அறிக்கைப் பத்திரத்தில் கண்ட நிகழ்ச்சி முறைப்படி முதலில் சங்கத்தின் காரிய நிருவாகத்துக்காகப் புதிதாகக் கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றனர் :—

தலைச்சங்கத்தின் புதிய நிருவாக சபை.

தலைவர்.

திரு. ஆ. வே. முத்தைய முதலியார் அவர்கள், பி.ஏ, பி.எல்., பிரெஞ்சு அரசாங்கத்தின் தலைமை அமைச்சர், புதுச்சேரி.

துணைத்தலைவர்

திரு. தெ. ப. கு. ஆறுமுக முதலியார் அவர்கள், பாங்கர், தென்காசி.

திரு. தி. ரா. கந்தப்ப முதலியார் அவர்கள், ஜில்லா தாலூகா போர்டு அங்கத்தினர், திருச்செங்கோடு.

திரு. அரு. சி. தியாகராஜ முதலியார் அவர்கள், மிராஸ்தார், மதராஸ் பாலியகாட் கம்பெனி கூட்டாளி, மஞ்சட்கொல்லை.

திரு. சை. இரத்தினவேல் முதலியார் அவர்கள், தாலூகா போர்டு அங்கத்தினர், நகர பரிபாலன சபைத் துணைத் தலைவர், சைதாப்பேட்டை.

திரு. சு. குழந்தைவேல் முதலியார் அவர்கள், மானேஜர், பிஷப் பிரிண்ட் ஆபீஸ், போலீஸ் இலாகா, திருமயிலாப்பூர்.

அமைச்சர்.

திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள், எம்.ஏ., எல்.டி., ஆசிரியர், முத்தியாலுப் பேட்டை உயர்தர கலாசாலை, சென்னை.

திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள், தமிழ்ப் புலவர், காஞ்சிபுரம்.

பொருட்காப்பாளர்.

திரு. தி. கா. சபாபதி முதலியார் அவர்கள், மிராஸ்தார், நகர பரிபாலன சபைத் துணைத் தலைவர், திருவாரூர்.

இதர நிருவாக அங்கத்தினர்.

திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள், ஜனரல் போஸ்டு ஆபீஸ், சென்னை (கோடம்பாக்கம்).

திரு. மா. பா. கந்தசாமி முதலியார் அவர்கள், பி.ஏ., பி.இ., இன்ஜினியர், திருவல்லிக்கேணி.

திரு. மு. சரவண முதலியார் அவர்கள், தலைமையாசிரியர், கார்ப்பொரேஷன் மாடல் ஸ்கூல், திருமயிலாப்பூர்.

திரு. மா. பரமகுருநாத முதலியார் அவர்கள், சானிடரி இன்ஸ்பெக்டர், திருமயிலாப்பூர்.

மதராஸ் பாலியகாட் கம்பெனி மானேஜர், திரு தி. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள்.

திரு. சி. அருணாசல முதலியார் அவர்கள், காஞ்சிச் செங்குந்த வாலிபர் சங்கக் காரியதரிசி, காஞ்சிபுரம், செங்கற்பட்டு ஜில்லா.

திரு. K. S. குப்புசாமி முதலியார் அவர்கள், அசனம்மாபேட்டை, வட ஆற்காடு ஜில்லா.

திரு. கொரநாடு வீ. இரத்தின முதலியார் அவர்கள், பி.ஏ., பி.எல்., (அட்வொகேட், சென்னை) தஞ்சை ஜில்லா.

திரு. R. மாணிக்க முதலியார் அவர்கள், மிராஸ்தார், உன்னியூர், திருச்சி ஜில்லா.
திரு. S. சாலை முதலியார் அவர்கள், வியாபாரம், மதுரை.
திரு. வா. செ. முருகேச முதலியார் அவர்கள், சென்னிமலை, கோயமுத்தூர் ஜில்லா.
திரு. ஆ. கு. சி. குழந்தைவேல் முதலியார் அவர்கள், வியாபாரம், அருப்புக்கோட்டை, இராமநாதபுரம் ஜில்லா.
திரு. P. A. கணபதி முதலியார் அவர்கள், பி ஏ, அம்பாசமுத்திரம், திருநெல்வேலி ஜில்லா.
திரு. P. வேலாயுத முதலியார் அவர்கள், வியாபாரம், கோட்டாறு, திருவாங்கூர்.
திரு. K. P. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், பி.ஏ., கொல்லங்கோடு மலையாளம்.

தென்னாற்காடு ஜில்லாவிற்கு ஒருவரும் இலங்கைக்கு ஒருவருமாக இரண்டு அங்கத்தினர்களையும், பெண்மக்கள் பிரதிநிதியாக ஒரு அங்கத்தினரையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளுமாறு நிருவாக சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டது.

2. புது உத்தியோகஸ்தர்கள் தேர்தலானதும் சங்கத்தின் அமைச்சர் திரு தி. கா. சபாபதி முதலியார் அவர்கள் சங்கத்துச் சென்ற ஆண்டின் அறிக்கைப் பத்திரத்தைப் படித்தார். அது பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. (இப்பத்திரத்தையும் கிளைச் சங்கங்களின் ஜாபிதாவையும், சங்கத்தின் வரவு செலவு கணக்குகளையும், இன்னும் செங்குந்தர் ஜனத்தொகை கல்விநிலை முதலிய சம்பந்தமான இதர குறிப்புக்களையும் இப்பத்திரிகையின் இறுதியில் அச்சிட்டிருக்கிறோம்.)

3. இதன் பிறகு, சென்ற நிருவாகசபையினரால் சங்கத்துக்கு அமைக்கப்பெற்றுள்ள சட்டதிட்டங்கள் 10-வது பந்தியில் ஒரு திருத்தத்துடன் ஏகமனதாக அங்கீகரிக்கப் பெற்றது. 10-வது பந்தியில் செய்துள்ள திருத்தமாவது : "நமது சங்கத்துச் சட்டதிட்டங்களில் 10-வது பந்தியில் 'மகாநாடு நடைபெற்ற பிறகு வரவேற்புச் சபையாரிடம் மிகுதியாகப் பொருள் ஏதாவது நிற்குமாயின் அதைத் தலை சங்கத்துக்கு அனுப்பவிடவேண்டும்'; என்னும் வாக்கியத்திற்குப் பிறகு 'அல்லது தலைசங்க நிருவாக சபையின் அனுமதியுடன் அம்மிகுதிப் பணத்தை மகாநாட்டை நடத்தியஜில்லாவிலோ ஜில்லாக்களிலோ உள்ள கிளைச்சங்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து அப்பிரதிநிதிகள் சேர்ந்த ஒரு நிருவாக சபையாரிடம் தக்க பாதுகாப்புடன் ஒப்படைத்து, அவர்கள் மூலம் பந்தோபஸ்தான பாங்கியில் வட்டிக்குப் போட்டு ஒரு சாசுவத நிதியாக்கி, அதற்கு வரும் வட்டி வருவாயை அந்த ஜில்லாவிலோ ஜில்லாக்களிலோ வசிக்கும் ஏழைச் செங்குந்த மாணாக்கர்களுக்குத் தலைச் சங்கத்தோடு ஆலோசித்து உபகாரச் சம்பளம் உண்டி முதலிய உதவிகள் புரிவதற்கு உபயோகப்படுத்தலாம்' என்னும் வாக்கியத்தைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்" என்பதாம். இதைத் திரு. மா. பரமகுருநாத முதலியார் அவர்கள் பிரேரேபிக்க, திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள் ஆமோதித்தனர். இத்திருத்தம் வரவேற்புச் சபையினரின் கருத்திற் கிணங்கக் கொண்டுவரப்பட்டது.

இத்திருத்தத்தை மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருவனந்தபுரம் ஜில்லாக்களின் பிரதிநிதிகள் முதலில் ஆக்ஷேபித்தனர். மிகுதிப்பணம் தலைச் சங்கத்தைச் சேருமென்ற நோக்கத்தோடே பலர் மகாநாட்டிற்கு நன்கொடை யனுப்பி இருப்பதாகவும், மேலகண்ட சீர்திருத்தத்தை அங்கீகரிப்பதாக இருந்தால் வரவேற்புச் சபையினர் இஜ்ஜில்லாவாசிகளால் அனுப்பப்பட்டிருக்கும் நன்கொடைகளைத் தலைச்சங்கத்திற்கு அனுப்பிக் கொடுக்க வேண்டுமென்றும் தெரிவித்தனர். வரவேற்புச் சபையின் சார்பாகத் திரு. செங்கோட்டையா முதலியார் அவர்கள் பணம் அனுப்பியவர் அவ்விதம் மனுச்செய்துகொண்டால் அவர்கள் குறிப்பிடும் பணத்தைத் தலைச்சங்கத்திற்கு அனுப்பி விடுவதாக வாக்களித்தார். மேலும், மகாநாடு கூடியது கோயமுத்தூர் ஜில்லாவிலேயேயாயினும், அதன் செலவிற்குச் சேலம் ஜில்லாக்காரர்களும், திருச்சி ஜில்லாகாரர்களும் நன்கொடை அளித்திருப்பதால், அந்த ஜில்லாக்களிலுள்ள கிளைச்சங்கங்களுக்கும் மகாநாட்டு மிகுதிப் பணத்தைப் பரிபாலிக்க ஏற்படுத்தப் போகும் நிருவாக சபையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டுமென உன்னியூர் கிளைச் சங்கத்தினர் கேட்டுக்கொண்டமையும் அங்கீகாரமானது. மகாநாட்டின் காரியதரிசிகளுள் ஒருவரான ஊற்றுக்குழிக் கிளைச்சங்கத்தலைவர் திரு. மொ. க. குழந்தையப்ப முதலியார் அவர்கள் தலைச்சங்கத்தின் சட்டப்படிக்குக் கூட்டப்பட்ட இம்மகாநாட்டிற்குப் பணம் வசூலிக்கும்போதே அநேகர்க்கு மகுதிப்பணம் தலைச்சங்



கத்தைச் சேரவேண்டுமென்னும் கருத்திருந்ததென்று சொன்னார். தலைச்சங்க அமைச்சர் திரு ம. சண்முகசுந்தர முதலியாரும், பொருட் காப்பாளர் திரு. தி. கா. சபாபதி முதலியாரும் தலைச்சங்கத்தின் பாரத்துள் சிலவற்றை ஏற்றுக்கொள்ள முன்வரும் குலாபிமானிகளெல்லாம் தலைச்சங்கத்திற்கு நண்பர்களே என்றும், மகாநாட்டு மிகுதிப்பணமானது சிதறிப்போகாது நம்மவர் கல்வி அபிவிருத்திக்கு உபயோகப்படுமாறு செய்யப்படும் எந்த ஏற்பாடும் குல முன்னேற்றத்திற்கானதே என்றும் கூறி வரவேற்புத்தலைவர் சொன்ன உறுதிமொழிகளுக்குத் தலைச்சங்கத்தின் சார்பாக வந்தனமளித்தனர்.

4. பிறகு இவ்விதம் அங்கீகரிக்கப் பெற்ற சட்டதிட்டங்களில் வேறுமாறுதல்கள் அவசியமா என ஆராய்ச்சி செய்து அபிப்பிராயம் கூறக் கீழ்க்கண்டவர்கள் கொண்ட ஒரு ஆலோசனை சபை ஏற்படுத்தப்பெற்றது:—

திரு. ஆ. வெ. முத்தையா முதலியார் அவர்கள், பி.ஏ., பி.எல், (தலைவர்.)

திரு. வா செ. செங்கோட்டையா முதலியார் அவர்கள்.

திரு. தி. ரா. கந்தப்ப முதலியார் அவர்கள்.

திரு. வீ. எஸ். சங்கரசுப்பிரமணிய முதலியார் அவர்கள், பி ஏ., பி.எல்.,

திரு. வீ. இரத்தின முதலியார் அவர்கள், பி.ஏ., பி எல்.

திரு. மா. பா. கந்தசாமி முதலியார் அவர்கள், பி ஏ., பி.இ

திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள், எம் ஏ., எல்.டி., (அமைச்சர்.)

5. மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் சம்பந்தமாக, அவைகளை நடவடிக்கைக்குக் கொண்டுவரும் முறைகளைத் தலைச் சங்கத்தின் புதிய நிருவாக சபையின் முதல் கூட்டத்தில் வரையறுக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

6. அடுத்த மகாநாட்டினைச் செங்கற்பட்டு அல்லது வட ஆற்காடு ஜில்லாவில் கூட்டுவதற்குத் தலைச்சங்கத்துக்கு உதவிபுரியுமாறு திருவாளர் காஞ்சிபுரம் மா. க. சாமிநாத முதலியார் அவர்களையும், குடியேற்றம் திரு. மா. வே பிமராஜா முதலியாரவர்களையும், அமைச்சர்கள் சங்கத்தின் சார்பாக வேண்டிக்கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

7. முடிவில் சிவகங்கை உயர்தர கலாசாலைத் தலைமையாசிரியர் திரு. S. மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்கள் பி.ஏ., எல் டி., செங்குந்த சமூகத்தில் தோன்றிய பழைய சர்வகலாசாலைப் பட்டதாரிகளுக்கும், புதிய பட்டதாரிகளுக்கும் நல்வரவும் வாழ்த்தும் கூறி இத்தகைய பட்டதாரிகளே பாமரரிடையே கல்வியினைப் பரப்ப முன்வரவேண்டுமென ஓர் உபந்நியாசம் செய்தார் அதற்கு வந்தனங்கூறித் திருவாளர்கள் கோட்டாறு A. S. முத்தையா முதலியார் பி.ஏ, அவர்களும், வீரவநல்லூர் V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார், பி ஏ.பி.எல். அவர்களும் பதிலளித்தனர்.

இக்கூட்டத்திற்கு வந்திருந்த புதுப்பட்டதாரிகள்.

திரு V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் அவர்கள், பி.ஏ., பி.எல்., வீரவநல்லூர்.
திரு. P. A. கணபதி முதலியார் அவர்கள், பி ஏ, அம்பாசமுத்திரம்.
திரு. D. முத்தைய முதலியார் அவர்கள், பி.ஏ திருநெல்வேலி.
திரு. K. P. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், பி.ஏ., கொல்லங்கோடு.
திரு. E. V. சிங்காரவேலு முதலியார் அவர்கள், பி.ஏ, ஈரோடு.

பழைய பட்டதாரிகள்.

திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள், எம் ஏ, எல்.டி, சென்னை.
திரு. மா. பா. கந்தசாமி முதலியார் அவர்கள், பி ஏ., பி.இ, மானம்பதி
திரு. வீ. இரத்தின முதலியார் அவர்கள், பி.ஏ., பி.எல், கொரநாடு
திரு. S. மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்கள், பி.ஏ., எல்.டி., ஈரோடு.
திரு. A. S. முத்தைய முதலியார் அவர்கள், பி.ஏ, கோட்டாறு.

தலைவர் முடிவுரைக்குப்பின் திரு. ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., அவர்கள் வந்தனோபசாரம் கூறக் கூட்டம் இனிது கலைந்தது.

உடனே நமது சங்கத்தின் உபதலைவருள் ஒருவரும், சேலம் ஜில்லா போர்ட் மெம்பருமான திரு. தி. ரா. கந்தப்ப முதலியார் அவர்கள் பட்டதாரிகளுக்கும் இதர அங்கத்தினருக்கும் அறுசுவையுடன் ஒரு விசேஷ விருந்தளித்தனர்,

ம. சண்முகசுந்தர முதலியார்,
அமைச்சர்,

# தலைவர்களின் சரித்திரங்கள்

## மகாநாட்டுத் தலைவர்கள்

### திரு ம. த. சாமிநாத முதலியார்.

நமது முதல் மகாநாட்டில் செங்குந்தக் கொடியை யுயர்த்திய திரு. ம. த. சாமிநாத முதலியார் அவர்கள், சான்றோருடைத்தெனப் பெரியோர்களால் பாராட்டப் பெற்றதும், நமது தமிழகத்திற்கு முகம் போல் விளங்குவதுமாகிய தொண்டநாட்டின்கண், பொதுவாக வைதிகர்களால் சப்த க்ஷேத்திரங்களுள் ஒன்றாகவும், சிறப்பாகச் சைவர்களால் பஞ்ச க்ஷேத்திரங்களுள் ஒன்றாகவும் கொண்டாடப் பெறுவதாகிய காஞ்சிமாநகரில் சுமார் 250 வருஷங்களாக நீடித்துள்ளதும் செல்வாக்குள்ளதுமான ஒரு செங்குந்த குடும்பத்தில் தோன்றியவர். திரு. முதலியார் அவர்கள் 'முத்திமுடிவு, வீட்டுநெறியுண்மை, ஒருபாவுண்மை உபதேசம் முதலிய வேதாந்த சாஸ்திரங்கள் செய்தவரும், திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துச் சீடரும், ஸ்ரீ கச்சியப்ப சுவாமிகள் ஸ்ரீ சிதம்பரசுவாமிகள் மாணவருமான ஸ்ரீமத் சரவண தேசிகர் பரம்பரையிலுதித்தவர். தற்போது இவருக்குவயது ஏறக்குறைய 50 ஆகிறது. தமிழிலும் ஆங்கிலத்திலும் போதிய ஞானமுடையவர்.

ஆழ்ந்த அறிவும் மிகுந்த ஆற்றலும் பொருந்திய திரு. ம. த. சாமிநாத முதலியார் அவர்கள் தமது 19-வது வயதிலிருந்தே பொது நன்மைக்காகச் சென்னை ராஜதானியிலுள்ள பல நாடுகளுக்கும் சென்று நம்மவரிடையே உண்டான கக்ஷி விதண்டாவாதங்களைத் தீர்த்து ஒற்றுமைப்படுத்தி வந்ததன்றி, சென்ற 20 வருஷங்களாகத் தொடர்ச்சியாய்க் காஞ்சிபுரம் முனிசிபல் கௌன்சிலராகவும் இருந்து வருகிறார். 15 வருஷம் பழைய காஞ்சிபுரம் தாலூக்கா தேவஸ்தானக் கமிட்டித் தலைவராகவும், இருமுறை காஞ்சிபுரம் முனிசிபல் சேர்மனாகவும், பல வருஷங்களாகத் தாலூக்கா ஜில்லா போர்ட் மெம்பராகவும் இருந்தவர்.


இவர் காஞ்சிபுரம் முனிசிபல் சேர்மனாக இருந்த காலத்தில் இவரது நடுநிலைமை, உண்மைக்குக் கட்டுப்படுதல், பொது நன்மைக்குழைத்தல் முதலிய பல அரிய குணங்கள் நன்கு விளங்கின. அன்றியும் காஞ்சிபுரத்தில் கட்டாயப் படிப்பைப் பெருமுயற்சி செய்து ஆசாரத்திற்குக் கொண்டுவந்தவர் இவரொன்றே சொல்லலாம். எதிரிகளிடத்தும் பிரியம் காட்டுகிற மற்றொரு உயரிய குணமும் இவரிடமுண்டு. நம் ஜாதி முன்னேற்றத்திற்காக இன்றும் அரும்பாடு பட்டுக்கொண்டு வருபவர். இப்பெரியாரது விடாமுயற்சியினாலேதான் காஞ்சிபுரத்திலுள்ள நமது ஸ்ரீகச்சபேசுரர் ஆலயம் தற்போது பிரபல ஆலயங்களுள் ஒன்றாக விளங்குகிறது. காஞ்சிபுரத்தில் பெருந்தொகையினராக வசிக்கும் நம்மவர்களைத் திறமையுடன் கட்டி ஆளும் ஆற்றல் வாய்ந்தவர் இவரே யாவர். சுருங்கக்கூறின், தமது வாழ்நாள் முழுதும் நம் ஜாதி முன்னேற்றத்திற்காகவும், மற்ற பொதுக் காரியங்களுக்காகவும் உழைத்து வருபவர்.

தற்போதும் மகாநாட்டுக் கொடியுயர்த்திய தாமே தமது அஸ்த விசேஷத்தினால் நமது இயக்கமும் குல முன்னேற்றத் தொண்டுகளும் மேலும் மேலும் விருத்தியடைய வேண்டுமெனும் பெரு நோக்கத்தோடு எப்பொழுதும் வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் இருக்கவேண்டுமென்னும் உண்மையைக் கடைப்பிடித்து நமது முதலியார் ஒழுகுகின்றனர். ஈரோட்டைவிட்டுப் புறப்படும் சமயம் அவரை வழிவிட்டனுப்பிய நமது அமைச்சர் திரு. ம. சண்முகசுந்தா முதலியாரிடம் அவர் "என்னை இனித் தாங்கள் எதற்கும் நம்பியிருக்கலாம்" என உறுதி பகர்ந்து விடைபெற்றுச் சென்றனர். அன்று கூறிய வாக்குக் கிணங்க, அவர் காஞ்சிபுரம் சென்றதும், அவ்வூர் வாலிப சங்கத்தின் ஆண்டு விழாவைத் தலைச்சங்க அமைச்சரை வைத்துக்கொண்டு, நடத்தி அப்பெருங் கூட்டத்திலேயே, அடுத்த மகாநாட்டினைச் செங்கல்பட்டு ஜில்லா வாசிகள் பொறுப்பில் காஞ்சிபுரத்தில் நடத்தவேண்டுமென்றும், நமது தலைச்சங்கத்தின் கல்விநிதிக்குப் பொருள் சேகரஞ்செய்வதில் காஞ்சிபுரத்தாரே வழிகாட்டிகளா யிருந்து ஒரு


தலைச்சங்கப் பிரசாரகர்கள்




திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார். திரு தி. அ. சண்முக முதலியார்.
திரு மா. அ. கனகசபை முதலியார். திரு. ம. சண்முகசுந்தா முதலியார்.




திரு. P. A. கணபதி முதலியார், பி.ஏ., அம்பாசமுத்திரம்.



திரு. K. P. சுப்பிரமணிய முதலியார், பி.ஏ., கோவில்பட்டி.




திரு. V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி.எல்., வீரவநல்லூர்.



திரு. P. முத்தைய முதலியார், பி.ஏ., திருநெல்வேலி.

புதுவருஷத்துச் செங்குந்த பட்டதாரிகள்.



திரு. E. V. [illegible] முதலியார், பி.ஏ., ஈரோடு



சிறந்த எளிய முறையைக் கையாண்டு காட்ட வேண்டுமென்றும் அவ்வேற்பாடானது பிரதி அமாவாசை தோறும் நடக்கிறது ஒரு காலஞ் நமது தலைச் சங்க சல்வி நிதிக்கு ஒவ்வொரு செங்குந்தரும் அளிக்கவேண்டு மென்றும், தீர்மானங்கள் நிறைவேற்றி வைத்தனர் ஈதன்றோ தலைவர்க்குரிய சீரிய நடத்தை!

### திரு. ஆ. வே. முத்தைய முதலியார், பி.ஏ., பி.எல்.

நமது முதலாவது மகாநாட்டின்கண் தலைமை வகித்த திருவாளர் ஆ. வே. முத்தைய முதலியார், பி.ஏ., பி.எல்., அவர்கள் புதுச்சேரி பிரஞ்சு அரசாங்கத்தில் செக்ரிடேரியட் ஜெனரல் (Secretariate-General) என்னும் பிரதம அமைச்சர் பதவியிலுள்ளவர். இப்பெரியார் புதுச்சேரியில் பரம்பரையாய் மிகப் பிரசித்தி பெற்ற ஒரு செங்குந்த குடும்பத்தில் தோன்றியவர். மிகச் சாதுவாகிய இவர் தந்தையார் வேலாயுத முதலியார் பிரஞ்சு அரசாங்க சிவில் உத்தியோகத்திலிருந்தவர். வேலாயுத முதலியார் தந்தையாகிய ஆநந்த முதலியார் என்பவர் புதுவை முத்தியாலுபேட்டையில் முத்தைய முதலியாருக்கு ஸ்ரீ சித்தாந்த சுவாமிகள் என்னும் மஹான் திருவருட்பேற்றினால் புத்திரராகத் தோன்றியவர். ஷை ஆநந்த முதலியார் மிக்க புகழ்வாய்ந்த பெரிய வியாபாரியாகவிருந்து பல புண்ணியங்கள் செய்து செங்குந்த குலத்தை நிரம்ப விளக்கியவர். இவர் புதுவை முத்தியாலுப்பேட்டை, ஆலப்பாக்கம், சிதம்பரம், மயிலம் முதலிய இடங்களில் சத்திரங்கள் கட்டி வைத்ததன்றி ஸ்ரீநடராஜப்பெருமான், வைத்தியநாத சுவாமி முதலிய மூர்த்திகளுக்குக் கட்டளையும் ஏற்படுத்தியுள்ளார். வில்வநல்லூரிலுள்ள சிவாலயத்திற்குத் தர்மகர்த்தராயிருந்து அம்மையாருக்கு ரதம் செய்துவைத்த ஆநந்த முதலியார் அச்சிறுப்பாக்கம் கோயிலிலும் சில திருப்பணிகள் செய்திருக்கின்றனர். இவர்களால் வைக்கப்பெற்ற தர்மங்கள் மேன்மேலும் விருத்தியாய்க்கொண்டே வருகின்றன.

1876ஆ அக்டோபர்௴ 7உ பிறந்த நமது முதல் மகாநாட்டுத் தலைவராகிய உயர் சைவத் திருவாளர் ஆ. வே. முத்தையா முதலியார் அவர்கள் பிரஞ்சு, இங்கிலீஷ், தமிழ் ஆகிய மூன்று பாஷைகளிலும் மிகவும் தேர்ச்சியுள்ளவர். ஹிந்தி, தெலுங்கு முதலிய பாஷைகளிலும் போதிய ஞானமுள்ளவர். சைவாசாரமும் அடியார் பக்கலில் பேரன்பும் உடையவராகையால், அடியார்கட்குத் தவறாது தினந்தோறும் அன்னமளிப்பவர்; பொது நலநோக்கமும், நடுநிலைமையும், தூய பரோபகார சிந்தையும் உடையவராய் நன்னெறிக்கண் வழாது நிற்பவர்; அரசாங்கத்தாராலும், ஜனங்களாலும் நன்கு மதிக்கப்பெற்று வருபவர். பிரஞ்சு அரசாங்கத்தில் தற்போது தமிழர்களுக்குள்ளே பெரிய உத்தியோகத்திலிருப்பவர் இவரே, அடிக்கடி கக்ஷிமாறுகிற புதுச்சேரியில், எக்காரணத்தாலும் இவரைக் கெட்டவரென்று சொல்லுவார் ஒருவருமில்லை யென்றே சொல்லவேண்டும். மிகுந்த குலப்பற்றும், சமயப்பற்றும் உடைய நமது தலைவரவர்கள் ஞானநூல் ஆராய்ச்சியிலும் தேர்ந்தவர்; பிரம்மஞானசங்கத்தில் ஒரு உயர்ந்த பதவியையும் வகித்து வருகிறார்.

### திரு. தே. ப. கு. ஆறுமுக முதலியார்.

நமது முதலாவது வர்த்தகர் மகாநாட்டுத் தலைவர் திரு. T. P. K. ஆறுமுக முதலியார் அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் தென்காசி என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் 1881ஆ ஒரு சிறந்த செங்குந்த குடும்பத்திற் பிறந்தவர். இவர் திரு. குற்றாலலிங்க முதலியார் என்னும் பெரியாரது புதல்வர். திரு. ஆறுமுக முதலியார் அவர்கள் மெட்ரிகுலேஷன் வகுப்புவரையில் வாசித்தவர்; இவர் இளமையிலேயே தமது தந்தையாரோடு வியாபாரம் செய்ய ஆரம்பிக்க, அது இவரது ஊக்கத்தாலும், விடாமுயற்சியாலும், நுண்ணறிவினாலும் நாளுக்குநாள் விருத்தியடைந்து கொண்டே வந்தது. சில வருஷங்களுக்குப் பின்னர் முதலியாரவர்கள் நூல் நூற்கும் சில பஞ்சாலைகளின் (Mills) ஏஜெண்டானார். பின்னும் சில காலத்தில் இவரது வியாபாரம் ஓங்கி வளர, ஐரோப்பாவிலும் இந்தியாவிலுமுள்ள சில பெரிய கம்பெனிகளுக்கு ஏஜெண்டாகித் தற்போது திருநெல்வேலி ஜில்லாவில் பிரசித்திபெற்ற நூல் வியாபாரியாக விளங்கி வருகிறார்.

தென்காசி யூனியன் போர்டிற்கு மூன்று முறை தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றதன்றித் திருநெல்வேலி ஜில்லாவில் பிரபல புராதன கோயில்களுள் ஒன்றாகிய சங்கரநாயனார் கோயிலுக்குச் சிலகாலம் தர்மகர்த்தராகவும் நியமிக்கப் பெற்றிருந்தார். செங்குந்தர் நன்மைக்கென செங்குந்தர்களே பங்குக்காரர்களா

யுள்ள 'தென்காசிச் செங்குந்தர் பாங்கி' என்னும் ஒரு பாங்கையும் ஏற்படுத்தியுள்ளார். இவரே அப்பாங்கிக்கு ஆயுள் காரியதரிசியாகவும் நியமிக்கப்பெற்று அதை நடத்தி வருகிறார். இவர் பெயரை அறியாத வியாபாரிகள் அந்த ஜில்லாவிலும் இதர ஜில்லாவிலும் இல்லையென்றே சொல்லலாம். தேவஸ்தானம், தலஸ்தாபனம் முதலிய எல்லாவற்றிலும் பிற இனத்தவரைப் புகவிடாது தங்கள் வசமாக வைத்திருக்கிற வேளாளர்கள் நிறைந்த திருநெல்வேலி ஜில்லாவில் தென்காசி யூனியன் போர்டின் தலைவராக மும்முறை, தேர்ந்தெடுக்கப் பெற்றதனாலும், சங்கர நாயனார் கோயில் தர்மகர்த்தராக நியமிக்கப்பெற்றதனாலும், இவருக்கு மகம்மதியர்கள் உட்பட்ட பிற இனத்தவரிடத்தும் எவ்வளவு செல்வாக்கும், நன்மதிப்பும் இருக்கிறதென்றும், செங்குந்தர் பாங்கிற்கு ஆயுள் காரியதரிசியாக நியமிக்கப்பெற்றிருத்தலின் இவருக்கு நம்மவரிடத்தும் எவ்வளவு நம்பிக்கையும் நன்மதிப்பும் இருக்கிற தென்றும் தெரிகிறது. இவர் மிகுந்த குலாபிமானமுடையவரென்பது நம் மரபினர் நன்மைக்கெனவே பாங்கி ஏற்படுத்தி இருப்பதனாலும், சங்கர நயினார் கோயில் தர்மகர்த்தா யிருந்தபோதும், யூனியன் போர்டு சேர்மனாயிருந்தபோதும் நம்மவர்களுக்கு அநுகூலமாய் நியாயமான வழியில் செய்துள்ள பல ஏற்பாடுகளாலும் நன்கு விளங்குகிறது. பொது நன்மைக்குப் பலன் கருதாது உழைக்கும் பெருந்தன்மையும் தர்மசிந்தையுமுள்ளவர். திருநெல்வேலி ஜில்லாவில் நமது தலைச்சங்கப் பிரதிநிதிகள் சென்ற வேனிற்காலத்தில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது இவர் பேருதவி புரிந்துள்ளார். அந்த ஜில்லாவில் நடந்த பிரசாரம் பெரும்பாலும் இவரது உதவியினால் நடந்ததென்றே சொல்ல வேண்டும். இராமேஸ்வரத்திலுள்ள நமது மடம் பிறரால் கைப்பற்றப்படும் தருவாயிலிருந்தபோது வெகுபிரயாசைப்பட்டு அதைப் பழையபடி நம்மவர் வசமாக்கினார். திருக்குற்றால நீர் வீழ்ச்சிக் கருகிலுள்ள நம்மவர் மடத்தையும் நந்தவனத்தையும் பெரும்பொருள் செலவிட்டுப் புதுப்பித்து வெகு ஒழுங்காக அமைத்து வைத்திருக்கின்றனர். இவற்றாலும் இப்பெரியார் சிறந்த குலாபிமானி என்பது சொல்லாமலே விளங்கும். நமது தலைச்சங்கத்தின் கல்விநிதிக்குத் திருவாளர் முதலியாரவர்கள் பெருந்தொகை அளிப்பதாகவும் வாக்களித்திருக்கின்றனர்.

### திரு. மா. வே. பீமராஜா முதலியார்.

குடியேற்றம் திருவாளர் மா. ஆ. சி. வே. பீமராஜா முதலியார் அவர்கள் நமது வாலிபர் மகாநாட்டிற்குத் தலைமை வகித்தனர். இவருக்குத் தற்போது வயது 38 ஆகிறது. மா. ஆ. வெங்கடாசல முதலியாரது நான்கு புதல்வருள் இவர் மூத்தவர். நிறைந்த செல்வந்தர். பிரபலமான புகையிலை வியாபாரி. தமிழிலும் ஆங்கிலத்திலும் போதிய ஞானமுள்ளவர். குடியேற்றத்தில் பரம்பரையாய் மிகுந்த செல்வாக்கும் அந்தஸ்துமுள்ள ஒரு பெரிய குடும்பத்தில் தோன்றியவர். இவர் 34-வது வயதில் குடியேற்றம் முனிசிபல் கௌன்சிலரானார். ஓராண்டு பின்னர் ஷை முனிசிபல் கௌன்சில் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பெற்று அப்பதவியை 1928ஞு அக்டோபர் மாதம் 30உ வரையில் திறமையோடு வகித்துவந்தார். சென்ற நான்கு வருஷங்களாகத் தாலுக்காபோர்டு அங்கத்தினராகவும், 3 வருஷ காலமாக ஜில்லா போர்டு அங்கத்தினராகவும் இருந்து வருகிறார். செங்குந்தர்கள் பெருந்தொகையினராக வசிக்கும் குடியேற்றத்திலுள்ள உயர்தர பாடசாலை ஏழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து வரும் பொது ஸ்தாபனத்திற்குத் தலைவராயிருந்து மிக்க ஊக்கத்துடன் ஷை தர்மத்தை நடத்தி வருகிறார். சுயநலங் கருதாது பொது நன்மைக்கு உழைத்து வருபவர். சென்ற சென்னைச் சட்டசபைத் தேர்தலில் தைரியமாக நின்ற செங்குந்தர் இவர் ஒருவரே. அச்சமயத்தில் நம்மவர்களுக்குள் இருந்த கக்ஷி வித்தியாசத்தினால் இவர் தோல்வியடைய நேர்ந்தது. கக்ஷி வித்தியாசமில்லாதிருக்குமாயின் நிச்சயமாய் ஜயம் பெற்றிருப்பார் என்பதிற் சந்தேகமில்லை. எடுத்த காரியங்களை ஊக்கத்தோடு செய்து முடிக்கும் ஆற்றலுள்ளவர். மகாநாட்டுப் பந்தலில் கல்வி நிதிக்குப் பொருள் வசூலிக்க எடுத்த முயற்சி திடுமென நின்றுவிட்டதற்கு நமது முதலியார் பெரிதும் வருந்தித் தாமும் தமது சகோதரரும் அதற்குப் பெருந்தொகை அளிப்பதாக வாக்களித்துள்ளார். இதோடு தாம் தமதூர் சென்றதும் அங்குள்ள நம் குலவாலிபர்களையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ஒரு வாலிபர் சங்கமும் ஸ்தாபித்துள்ளார். மேலும், கல்விநிதிக்குச் சித்திரை மாதம் தொடங்கி தமது கொட்டக்கல வாங்கலில் பாண்டு ஒன்றுக்குக் கால் ரூபாயும், புகையிலை கட்டொன்றுக்குக் காலணாவும் தாமே யளிப்ப



தன்றி, மற்றவர்களையும் அளிக்குமாறு தூண்டுவதாகவும் வாக்களித்திருக்கின்றனர். என்னே இவர்தம் குலப்பற்று!

## மகாநாடுகளைத் திறந்துவைத்தோர்

### திரு. தி. நா. சபாபதி வள்ளல்

நமது வியாபாரிகள் மகாநாட்டைத் திறந்து வைத்த பெரியாராகிய சபாபதி வள்ளலாரை அறியாத 'மித்திரன்' வாசகர் ஒருவருமிரா ரென்றே சொல்லலாம். இவரும் இவரது மூத்த சகோதரராகிய திரு. கலியாணசுந்தர முதலியாரும் செங்குந்த மரபும் உலகமும் உள்ள அளவும் தங்கள் பெயரும் கீர்த்தியும் நிலைத்திருக்குமாறு நமக்காக உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்து உழைத்து வருகிறார்கள் என்பதை யாவருமுணர்வர். இவ்விரு சகோதர வள்ளல்கள் 'செங்குந்த மித்திரன்' நம் வீடுகள் தோறும் வந்து உலாவுவதற்கும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் ஸ்தாபனத்திற்கும் காரணபூதராயிருந்ததன்றித் தங்கள் செலவிலேயே பத்திரிகையை முதல் ஒரு வருஷகாலம் சங்கத்திற்கு இனமாக அச்சிட்டுதவி வந்தார்கள். இவர்களது முயற்சி இல்லையென்றால் நமது 'மித்திர'னும், சங்கமும், சமீபத்தில் ஈரோட்டில் கூடிய மகாநாடும், காலப்போக்கிற்கிணங்கச் சில காலத்திற்குப் பிறகு நடைபெறுமாயினும், தற்போது நடைபெறுதல் அசாத்தியமென்றுதான் சொல்ல வேண்டும். சபாபதி வள்ளலார் பொதுஜன சேவை செய்வதிலும் பிரியமுள்ளவராகையால் திருவாரூர் முனிசிபல் வைஸ் சேர்மன் பதவியையும் தாங்கிப் பொதுஜன நன்றிக்கும் பாத்திரராக இருந்து வருகிறார். ஊரறிந்த இவரைப்பற்றி வாசகர்களுக்கு அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை என்றே எண்ணுகிறோம். இவரது வள்ளன்மையினாலேயே இவர் நிறைந்த செல்வாக்கையும் அந்தஸ்தையும் உடையவரென இவரை நேரிலறியாதாரும் உணர்வர். மதராஸ் பனியகாட் கம்பெனி கூட்டாளிகளில் இவரும் ஒருவர். நமது மித்திரன் ஆரம்பித்த காலத்தில் இவர் ஷை கம்பெனியின் மானேஜராகவிருந்தார். இவருக்குப் பல இடங்களில் வியாபாரமுண்டு.

### திரு. K. முத்துக்குமாரசாமி முதலியார்

நமது வாலிபர் மகாநாட்டைத் திறந்துவைத்த திரு. K. முத்துக்குமார முதலியார் அவர்கள் மலையாளத்தில் கொல்லங்கோடு என்னும் நகரத்தில் அவ்வூர் இராஜசமஸ்தானத்திற்கு அடுத்ததாக மதிக்கப்பெற்றுப் பரம்பரையாய் மிகுந்த செல்வாக்குள்ள 'பெரியவீ'டென வழங்கப்படும் ஒரு பிரபல செங்குந்த குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் மலையாளத்தில் பிறந்து வளர்ந்தும் தமிழில் பண்டைக்கால முறைப்படி பெரியோர்களை அடுத்துப் பாடங்கேட்டு நிரம்பிய பாண்டித்தியம் பெற்றவர். வடமொழியிலும் தர்க்கம், வியாகர்ணம் முதலிய துறைகளில் மிகவும் வல்லவர். இவருக்குக் கல்வியில் இயற்கையாய் உண்டாயிருக்கும் ஊக்கமேம்பாட்டால் இன்னும் தமது உபாத்தியாயரிடத்தில் பாடங் கேட்டுக்கொண்டிருக்கிறார். மிகவும் முற்போக்கான நோக்கமுடையவர். தமது காம்பீரமான உருவத்தைப்போலவே, இருபதினாயிரம் ஜனங்கள் கூடியுள்ள சபையிலும் நின்று ஒவ்வொருவருக்கும் நன்றாய்க் கேட்கும்படி, கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்பச் சொல்லும் கம்பீரமான குரலுடையவர். நமது முன்னேற்றத்தில் அளவுகடந்த ஊக்கமுள்ளவர். சில வருஷங்களுக்கு முன் மலையாளம் செங்குந்தர்களைத் திரட்டி 'ஆதிச் செங்குந்தர்' மகாநாடென ஒன்றைக் கூட்டிவைத்தனர். இவரது பெயர் மகாநாட்டில் 'முத்துக்குமார சாமி' முதலியார் என வழங்கப்பட்டதால் "எனது பெயரோடு 'சாமி'யென்னும் பட்டம் மகாநாட்டில் கொடுக்கப்பட்டபடியால், இனி என் பெயர் 'முத்துக்குமாரசாமி முதலியார்' என்றே வழங்கப்படவேண்டு"மென சந்தோஷத்தோடு தமது பெயரையும் மாற்றிக்கொண்டனர் என்றால், இவர் மகாநாட்டிற் கூடியிருந்த மகாஜனங்களிடத்து எவ்வளவு அன்பும் கௌரவமும் காட்டுகிறார் என்பது வெள்ளிடை மலை போல் விளங்குகிறது.

## வரவேற்புத் தலைவர்கள்

### திரு. V. S. செங்கோட்டையா முதலியார்

நமது முதலாவது மகாநாட்டு வரவேற்புச் சபைத் தலைவராகிய திரு. V. S. செங்கோட்டையா முதலியார் அவர்கள் சென்னிமலை என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் மிகுந்த செல்வாக்குள்ள ஒரு பெரிய கௌரவமான செங்குந்த குடும்பத்தைச் சார்ந்தவர். இவர்

வியாபாரத்தில் இயற்கை அறிவுள்ள நிபுணராகையால், தமது குடும்பத்தின் சார்பாக இவரே சென்னிமலை, கோயமுத்தூர், திருப்பூர், ஈரோடு, சென்னை முதலிய பல இடங்களிலும் பலவிதமான வியாபாரங்களையும் நடத்தி வருகிறார். முதலியார் அவர்களே கோவை ஜில்லா செங்குந்தர்களுக்குள் மிகுந்த செல்வாக்குடைய செல்வந்தரென்று சொல்லலாம். கோயமுத்தூர் முனிசிபல் கௌன்சிலராக இருந்து வருவதன்றி, அநேக ஏழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் முதலிய உதவி வருவதாலும், நமது முதலாவது மகாநாட்டைத் தமது ஜில்லாவிலேயே நடத்த வேண்டுமென்ற அவாக்கொண்டு, பொறுப்புவாய்ந்த வரவேற்புச் சபைத் தலைவர் பதவியையும் ஏற்று, மகாநாட்டை யாவரும் வியக்கும் வண்ணம் மிகச் சிறப்பாக நடத்தி வைத்ததாலும், இவர் பொதுநல நோக்கமும், பரோபகார தரும சிந்தையும், மிகுந்த குலாபிமானமும், பேராற்றலும் உடையவரென விளங்குகிறது. இவர் தமிழ் ஆங்கிலம் ஆகிய இருபாஷைகளிலும் போதிய ஞானமுள்ளவர். கோவைஜில்லாவில் நம்மவர் நன்மைக்காகச் செங்குந்த பாங்கி என்ற ஒரு பாங்கி ஏற்படுத்துவதாகவும், 25 செங்குந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம், உண்டி, உடை முதலியவை கொடுத்துதவுமாறு வேண்டிய ஏற்பாடுகள் கூடிய சீக்கிரம் செய்வதாகவும் உத்தேசித்துள்ளார் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நமது முதலாவது மகாநாட்டின் வரவேற்புச் சபைத் தலைவராக நியமிக்கப்பெற்று மகாநாட்டை நம்மவரேயன்றி பிற இனத்தவரும் ஆச்சரியப்படும்படி வெகு சிறப்பாக நடத்தியதனாலேயே இவருக்கு எவ்வளவு செல்வாக்கும் குலாபிமானமும் இருக்கிறதென்பதை நன்கு விளக்குகிறது.

### திரு. T. R. கந்தப்ப முதலியார்

நமது முதலாவது வாத்தகர் மகாநாட்டு வரவேற்புத் தலைவராகிய திரு. T. R. கந்தப்ப முதலியார் அவர்கள் சேலம் ஜில்லாவைச் சேர்ந்த திருச்செங்கோடென்னும் ஒரு பிரபல பாடல் பெற்ற சிவக்ஷேத்திரத்தில் 'புள்ளிக்காரர்' என்னும் பட்டம் பெற்றுள்ள ஒரு பெரிய பிரபல செங்குந்த குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் மிகுந்த செல்வாக்கும் எண்ணிய காரியங்களை எண்ணியவாறு செய்து முடிக்கும் பேராற்றலுமுடையவர். திரு. கந்தப்ப முதலியார் அவர்கள் சிறந்த குலாபிமானமும் தாராள சிந்தையுமுடையவர். பல வருஷங்களாகச் சங்ககிரி தாலூக்கா போர்டு மெம்பராக இருந்து வருவதோடு திருச்செங்கோடு யூனியன் தலைவராகவும் இருந்துவந்தார். தற்போது சேலம் ஜில்லா போர்டு அங்கத்தினராகவும் இருக்கிறார்கள். இவருக்குத் திருச்செங்கோடு, சேலம், ஈரோடு, மதுரை, சென்னை முதலிய பல விடங்களில் விஸ்தாரமான வியாபாரமுண்டு. நமது மகாநாடு சிறப்பாய் நடைபெறும் பொருட்டு மிகவும் ஊக்கத்தோடு வேலை செய்த முக்கியஸ்தருள் இவரும் ஒருவர். நமது 'செங்குந்த நகரை' இவ்வளவு அழகாய் நிர்மாணித்த சிற்பி இவரேயாவர். சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்களில் இவர் பெயரை அறியாதவர் ஒருவருமில்லை யென்றே சொல்லலாம். நம் குலமுன்னேற்ற விஷயத்தில் இவர்கொண்டுள்ள ஊக்கம் அளவிட்டுச் சொல்லற் பாலதன்று. முதலாவது மகாநாட்டைத் தமதூரிலேயே நடத்தவேண்டுமென்ற அவாக்கொண்டிருந்தவர். ஈரோடு செங்குந்தர் சங்கத் தலைவராக இருந்து சமீபத்தில் காலஞ்சென்ற திரு. சின்னப்ப முதலியார் அவர்கள் இவரது இளைய சகோதரராவர். திரு. முதலியார் அவர்களே மிகத் தீவிரமாக வேலைசெய்து வரும் கிளைச்சங்கங்களில் ஒன்றாகிய திருச்செங்கோடு செங்குந்தர் சங்கத்தின் தலைவர்.

### திரு. நா. மு. சண்முகசுந்தர முதலியார்

செங்குந்தவரவிய முதலாவது மகாநாட்டின் வரவேற்புச் சபைத் தலைவராகிய திரு. நா. மு. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் ஈரோட்டில் பரம்பரையாய்ப் 'புள்ளிக்காரர்' என்னும் பட்டம் பெற்றுள்ள ஒரு பிரபல செங்குந்த குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் வயதிலும் ஊக்கத்திலும் வாலிபரேயாயினும் மிகுந்த செல்வாக்குள்ளவர். திரு. V. M. மொட்டையப்ப முதலியார் அவர்கள் தாயாதியும், திருச்செங்கோடு திரு. T. R. கந்தப்ப முதலியார் அவர்கள் மாப்பிள்ளையுமாவர். இவரது முன்னோர்கள் ஈரோட்டைத் தலைநகராக உடைய பூந்துறைநாட்டுப் பட்டக்காரர்களாக இருந்தார்கள். சுமார் மூன்று மாதங்களுக்குமுன் திரு. முதலியார் அவர்கள் மேற்படி பூந்துறைநாட்டின் நாட்டாண்மைக்காரராகப் பட்டம் சூட்டப் பெற்றனர். இவரது பரம்பரைச் செல்வாக்கு, குலாபிமானம், இளமை, ஊக்கம், தாராளசிந்தை முதலிய விசேஷங்களைக் கருதியே இவர் வாலிப



மகாநாட்டு வரவேற்புக் கழகத்தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். மற்ற வரவேற்புச்சபைத் தலைவர்களைப்போலவே மகாநாட்டிற்குப் பெருந்தொகையாய்ப் பொருளுதவி செய்தன்றி அது சிறப்புறுமாறு இவரும் ஊக்கத்தோடு வேலை செய்தவர். இவரது வயதும் அனுபவமும் முதிர முதிர இவரது ஊக்கமும், குலாபிமானமும் முதிர்ந்து, நமது இயக்கத்திற்குப் பெருந்துணையாய் இருப்பாரென நம்புகிறோம்.

### திரு. V. V. C. V. நடேச முதலியார்

நமது மகாநாட்டுப் பொதுக் காரியதரிசியாகிய திரு. V. V. C. V. நடேச முதலியார் அவர்கள் திருச்செங்கோட்டிலுள்ள ஒரு பிரபல வியாபாரியாவர். திரு. T. R. கந்தப்ப முதலியார் அவர்களின் தாயாதி. இவருக்குத் திருச்செங்கோடு, சேலம், ஈரோடு முதலிய பல இடங்களில் வியாபாரமுண்டு. மிகுந்த குலாபிமானமும் தாராள சிந்தையும் உள்ளவர். சமூக ஊழியமேயன்றிச் சேலம் ஜில்லா போர்டு மெம்பராகவும், சங்ககிரிதாலூக்கா போர்டு மெம்பராகவும் இருந்து பொதுஜன ஊழியத்தையும் மேற்கொண்டுள்ளவர். இவரைப்போல் குலாபிமானமும் தாராளசிந்தையுமுள்ளவர்கள் ஜில்லாவுக்கு இரண்டொருவர் முன்வருவராயின், நமது சமூகம் சில வருஷங்களுக்குள்ளாகவே முன்னேற்றமடையுமென்பதிற் சந்தேகமில்லை.

### செங்குந்தர் களாச்சக்கு

### மூல புருஷர்கள்

### ஸ்ரீலஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர்

ஸ்ரீலஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவரவர்கள் காஞ்சீபுரத்தை யடுத்த ஏகனாம்பேட்டை என்னுமூரில் செங்குந்த குலத்தில் தோன்றியவர். இவரது தந்தையார் வாலாஜாபாத்தில் உபாத்தியாயராயிருந்த சரவணப்பெருமாள் முதலியார் என்ற ஒரு பிரசித்திபெற்ற தமிழ்ப்புலவராவர். ஸ்ரீலஸ்ரீ முனிவரவர்கள் தமது இளமையில் ஏகனாம்பேட்டையில் சிலகாலம் நமமரபிற்குரிய நெசவுத்தொழில் செய்துவந்தார். பிறகு அவரது சிறிய தகப்பனாரும், நமது 'மித்திரன்' பத்திராதிபராகிய திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் பாட்டனாருமாகிய புஜங்கராய முதலியார் அவர்களால் தமது தமையனார் மகனாகச் சென்னைக்கு வரவழைக்கப்பட்டு, அப்போது சென்னையில் பிரபல வித்துவானும், சைவசிகாமணியுமாக விளங்கிய அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியார் அவர்களை (பிறகு, கலியாணசுந்தர யதீந்திரர்) அடுத்து, இலக்கண இலக்கியங்களையும், சைவசித்தாந்த நூல்களையும் முறையாகப் பாடம் கேட்டுத் தேர்ந்து, யதீந்திரரது பிரதம சீடராக விளங்கினார்.

இவர் 'வண்ணப் பாக்கள்' பாடுவதில் மிக வல்லவராகையால் 'வண்ணக்களஞ்சியம்' என்னும் சிறப்புப் பட்டமும் தரப்பெற்றார். இவர், தமிழ் நூல் ஆராய்ச்சியிலும் சமயநூல் ஆராய்ச்சியிலும் தேர்ந்தவராதலின், ஆதியிலிருந்து மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் வித்துவான்களிலொருவராக விளங்குகின்றனர். காஞ்சிப் புராணம், காரணேஷன் தமிழகராதி, மெய்கண்ட சாஸ்திரம் முதலிய நூல்களேயன்றி, இதுவரையில் அச்சிடப்படாதிருந்த பல பழைய நூல்களையும் அச்சிட்டு வெளியாக்கியுள்ளார். நம் தமிழ்நாட்டின் கண் நமது முனீந்திரரை அறியாத மடாதிபதிகளும் தமிழ் வித்துவான்களும் இல்லை யென்றே சொல்லலாம். எல்லாச் சைவ மடங்களிலும் இவருக்கு நிரம்ப செல்வாக்குண்டு. இவருக்குத் தற்போது 60 வயதுக்குமேலாகிறது. பண்டிதரும் பாமரரும் இவரைக் குறித்துப் பேசுங்கால் 'நாகலிங்க முதலியார்' என இவரது பெயரைச் சொல்லாது 'வண்ணக்களஞ்சிய' மென்றே சொல்லுவர். இதனால் பொதுஜனங்கள் இவரிடத்து வைத்துள்ள மரியாதையும், இவரது கவனஞ் செய்யும் வன்மையும் நன்கு விளங்கும். வயோதிக பருவத்தில், நமது 'வண்ணக்களஞ்சியம்' காஞ்சிபுரம் நகரினுள் மழுவெடுத்த ஞானப்பிரகாச சுவாமிகள் ஆதீனத்தில் சந்நியாசமும் 'நாகலிங்க முனிவர்' என்னும் தீக்ஷாநாமமும் பெற்றனர்.

முனிவரது குலாபிமானத்தைக் குறித்துச் சுருக்கச்சொல்லின், ஆயுள்கால முழுவதும் நமது குலமுன்னேற்றத்திற்காக உழைத்தவர் யாதொருவர் உண்டெனின் அஃது இம்முனீந்திரரே யாவர் எனலாம். இப்பெரியார் பல வருஷங்களுக்கு முன்னரே 'தொழிற்கல்வி', 'செங்குந்தன்' என்னும் பத்திரிகைகளைச் சிற்சில காலம் தமது தனி ஊக்கத்திலேயே நடத்திவந்தார். அக்காலத்தில் இவருடன் ஒத்துழைக்கக் குலாபிமானிகள் தோன்றாமையால் அப்பத்திரிகைகள் நடைபெறாது நின்றுபோய்விட்டன. எனினும், இவரது குலாபிமானமும் ஊக்கமும் குன்றியதில்லை. கருணைவள்ளல்களான திருவாரூர் சகோதரர்கள் திருவாளர்கள்

தி. நா. கலியாணசுந்தர முதலியாரவர்களும், தி. நா. சபாபதி முதலியார் அவர்களும் நம் குலப்பிரபந்தங்களையெல்லாம் திரட்டித் திருத்தமாகவும், கற்றோரும் மதிக்கு முறையிலும் வெளியிட வேண்டுமென்று கொண்ட ஆவலினை நமது முனிவரே தமது வயோதிகத்தில தமக்கு நேரும் தேகசிரமத்தையும் பாராது நிறைவேற்றித் தந்தனர். 'செங்குந்தர் பிரபந்தத்திரட்'டின் பதிப்பாசிரியர் நமது முனிவரே என்பதை வாசகர்கள் முன்னரே அறிவர். இத்தகைய பெரியாரே ஆரம்பத்தில் நமது'மித்திர'னுக்குப் பத்திராசிரியராக இருந்தவர். வயோதிகங் காரணமாக இவர் பத்திரிகாசிரியர் பதவியினின்று விலகிக் கொண்டமையைப்பற்றி 'மித்திர'னில முதற்பகுதி 279-80 பக்கங்களில் வெளியிட்டிருப்பதை நண்பர்கள் அறிந்திருக்கலாம்.

திரு. தி. நா. கலியாணசுந்தர வள்ளல்

இந்த ஒப்புயர்வற்ற வள்ளலாரைக்குறித்து ஒரு சிலரைத் தவிர மற்றையோர்க்கு ஒன்றுமே தெரியாதென்று சொல்லலாம். ஆனால் ஒவ்வொரு செங்குந்தரும் என்றென்றைக்கும் மறவாது ஞாபகத்தில வைத்துக்கொள்ள வேண்டிய பெரியார் இவரேயாவர். இவர் நீறுபூத்த நெருப்புப போன்றவர். எக்காலத்திலும தம்மைப்பற்றி விளம்பரம் செய்துகொள்வதே கிடையாது. இவரது வலதுகை செய்யும் தர்மத்தை இடதுகை அறியாதவாறு செய்பவர். அவரோடு நெருங்கி நெருங்கின பழகினால் தவிர, அவரது அரிய குணங்களைப் பற்றி யாரும சுலபத்தில தெரிந்துகொள்ள முடியாது. சர்வ உலகங்களும அவற்றிலுள்ள பலவகை உயிர்களும தோன்றித் தழைத்திருப்பதற்கு மூலகாரணமாயுள்ள பரம்பொருள் அவையாவற்றுள்ளும கலந்திருந்தும் தன்னைப் பற்றி யாரும சுலபத்தில் அறிந்துகொள்ள முடியாததுபோல, சிலர் இல்லவேயில்லை என்று சொல்லக் கூடியதுமான தன்மையிலிருப்பதும்போல், நமது இயக்கம் தோன்றி நடைபெற்றுப் புத்துணர்ச்சி யுண்டாக்கியதற்கு மூலகாரணராகிய திருவாரூர் கலியாணசுந்தர வள்ளலாரும தம்மை இன்னாரென யாரும சுலபத்தில அறிந்து கொள்ளாதவாறு நம்மியக்கத்திற்குப பொருளாலும, தமது அநுபவ அறிவாலும வேண்டிய உதவி செய்து வருகிறார். நமது மகாநாட்டிலும நம்மெல்லாரோடும கலந்திருந்தும பலர் தம்மை இன்னாரென அறிந்துகொள்ளாத தன்மையிலிருந்தார்.

முதலியாரவர்களின் இளைய சகோதரராகிய சபாபதி வள்ளலார் நம்மியக்கத்திற்கு முதல்வர் என்பதைப் பலர் உணர்வர். ஆயினும் ஆரம்பத்தில் இவரது தூண்டுதலும், ஊக்கமூட்டுதலும் இல்லாதிருக்குமாயின், சபாபதி வள்ளலார் இவ்வளவு செய்ய முன்வந்திருக்கமாட்டாரென்றே சொல்லலாம். உற்சவ காலங்களில் அலங்கரிக்கப்பட்டு வெளியே வரும் உற்சவமூர்த்திக்கு உள்ள பெருமையெல்லாம் கோயிலில் எழுந்தருளியுள்ள மூலவரின் மூர்த்திகரத்தையே பொறுத்திருப்பதைப் போல், இவ்விஷயத்தில சபாபதி வள்ளலுக்குரிய பெருமையாவும் அவர் தமையனாரது குலாபிமானத்தையும் வள்ளன்மையையுமே பொறுத்திருக்கிறதென்பதை வாசகர்கள் உணர்வார்களாக. 'செங்குந்தர் பிரபந்தத்திரட்'டை ஸ்ரீலஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவரைக்கொண்டு வெளியிட்ட குலஸ்ரேஷ்டர் நமது வள்ளலாரே. இந்நூலை வெளியிட்ட முயற்சியே நமது செங்குந்தரிடைக் கிளர்ச்சியும் புத்துணர்ச்சியும் முனைந்தெழ அவாவும் தோன்றியதற்கு முக்கிய காரணம் என்பதை அன்பர்கள் உணர்வர்.

நமது இயக்க ஆரம்பத்தில் தலைச்சங்கத்து நிர்வாகிகளுக்கு ஊக்கம தந்தது "நமது குல முன்னேற்றத்திற்காகச் செய்யவேண்டிய முயற்சிகளையெல்லாம் தாராளமாய்ச் செய்யுங்கள். பொதுஜனங்கள் சங்கப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகிற வரையில் எவ்வளவு பொருட் செலவானாலும் நாங்கள் தாங்கிக் கொள்ளுகிறோம்" என இக்குல சிரேஷ்டர் சொல்லிய சொல்லேயாகும். அவ்வாக்கை அவர் ஒரு சிறிதும தவறாது காப்பாற்றினார். முதலியார் அவர்கள், எடுத்த காரியம ஒழுங்குற நடைபெறுமோ பெறாதோ எனச் சந்தேகிக்கக்கூடிய காலத்தில்,அதற்காக செலவிட்டது சுமார் ஆயிரம ரூபாயேயாயினும், அது காலத்தால் மனமுவந்து செய்த உதவியாகலின் அதையே ஒரு கோடியாகவும், அதற்கு மேலாகவும் நாம கொள்ளவேண்டும். அதனோடு நில்லாது இனனும் வேண்டிய உதவி செய்யத் தயாராயிருப்பார் என்றும் நிச்சயமும் கொள்ளலாம். நமது மகாநாட்டைக் கண்டு இவரைக் காட்டிலும அதிக ஆனந்தங்கொண்டவர் வேறெவரும் இல்லையென்றே சொல்லவேண்டும். இவரையறிந்த ஓரிரண்டொரு நண்பர்கள் மகாநாட்டில் இவரது தாராள குணத்தையும, குலாபிமானத்தையும் குறித்துப புகழ்ந்தபோது, "நாங்கள்



நமது குலத்திற்குச் செய்யவேண்டிய கடமையில் ஒரு சிறிதைச் செய்ததற்காக நாங்கள் யாரிடத்திலும் உபசார வார்த்தைகளை எதிர்பார்க்கவில்லை. பொதுஜனங்கள் இதன் பொறுப்பை ஏற்றுக்கொண்டு மேலும் மேலும் மேன்மையாக்கிக்கொண்டு வருவார்களாயின் அதுவே எங்களுக்குச் செய்த பிரதியுபகாரமாகக் கருதுகிறேன்" என்றார். இப்பொன் போன்ற வாக்கியங்களை ஒவ்வொரு செங்குந்தரும் மனமாகிய தம் பெட்டியில் ஜாக்கிரதையாக வைத்துப் போற்றவேண்டும்.

நமது இயக்கமானது நாளுக்குநாள் விருத்தியடைந்து நாமெல்லோரும் மேன்மையடைய வேண்டுமென்ற ஒரே எண்ணங்கொண்டு நமது வள்ளலார் இறைவனை இடைவிடாது சிந்தித்து வருகிறார். இவர் தெய்வபக்தியிலும் மேம்பட்டவராகலின், இறைவன் கோயிற்றிருப்பணிக்கும் அளவிறந்த பொருளைச் செலவிட்டு வருகிறார். இவருக்குச் சென்னை, திருவாரூர், கொழும்பு, காஞ்சிபுரம் முதலிய பலவிடங்களில் வியாபாரமுண்டு. நமது தலைச்சங்கத்துக்கு ஆதரவாயிருந்து வரும் மதராஸ் பாளையகாட் கம்பெனியின் கூட்டாளிகளில் இவரும் ஒருவர். கைலி வியாபாரத்தில் இளமையிலிருந்தே பழகிய நிபுணர்.

இவரது குண விசேஷத்தைப் பற்றித் தனிப் புத்தகம் வெளியிட வேண்டுமே தவிர இதில் எழுதி முடியாது என எண்ணி இத்துடன் பூர்த்திசெய்து கொள்ளுகிறேன்.

திரு. ம. சண்முகசுந்தர முதலியார்
எம். ஏ., எல். டி.,

நமது தலைச்சங்கத்தின் அமைச்சரும் 'செங்குந்த மித்திரன்' பத்திராசிரியருமாகிய திரு. மயிலாப்பூர் சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., அவர்களைக் குறித்துப் பலர் தெரிந்து கொள்ள விரும்புகிறார்களாகையாலும், நமது இயக்கத்திற்குப் பிரதானமான தலைவர்களுள் ஒருவராக விளங்குகிற அவரைக் குறித்து நம்மவர்கள் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமாகையாலும், அவரது ஜீவிய சரித்திரச் சுருக்கத்தையும் இச்சமயம் எழுதி வெளியிடுகின்றேன்.

குடும்ப வரலாறு.

காஞ்சிபுரத்தை யடுத்த ஐயன்பேட்டையிலிருந்து சுமார் 200 வருஷங்களுக்குமுன் நமது பத்திரிகாசிரியரின் முன்னோர்கள் சென்னையில் நம்மவர்கள் பெருங்கூட்டமாக வசிக்கும் திருமயிலாப்பூரில் வந்து குடியேறினர். அவர்களுக்கு அன்றுமுதல் 'மயிலாப்பூரான் வீட்டார்' எனப் பெயர் வழங்கலாயிற்று. இக்குடும்பப் பெயரையே நமது பத்திரிகாசிரியர் பெயருக்கு முன்னுள்ள மகரம் குறிக்கின்றது. இவர்கள் பல வருஷங்கள் செல்வாக்குடன் திருமயிலாப்பூரிலேயே இருந்து பிறகு தங்கள் வாசஸ்தானத்தைச் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனை யடுத்து இப்போது பார்க்டவுன் என வழங்குமிடத்திற்கு மாற்றிக்கொண்டனர். அங்குச் சில வருஷங்களிருந்து பிறகு சென்னைப் பயிராகி மடத்துத் தெரு என வழங்கும் ஜெனரல் முத்தையா முதலியார் தெருவில் சுமார் 90 வருஷங்களுக்கு முன் வந்து குடியேறினர். இவ்விடங்களிலெல்லாம் இப்பொழுதும் இக்குடும்பத்தினர்க்கு ஒரு லக்ஷத்திற்குமேல் மதிக்கத் தக்க ஸ்தாவர சொத்துக்கள் இருக்கின்றன.

இக்குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ஆங்கிலக் கல்வி பயின்று ஈஸ்ட் இந்திய கம்பெனியார் அரசாங்கத்தில் சேனைகளுக்கு வேண்டிய உணவுப்பொருள்களைச் சேகரித்துதவும் கமிசேரியட் ஆபீசில் பரம்பரையாக உத்தியோகம் செய்து வந்தார்கள் இக்குடும்பத்தினர் உத்தியோகத்திலும் பொதுமக்கள் சமூகத்திலும் மதிக்கத் தகுந்த அந்தஸ்தினை அடைந்திருந்தரென அவர்கள் வீட்டில்குடியிருந்த சென்னை சர்வகலாசாலை மாஜி வைஸ்சான்சலர் சர். வெங்கடரத்தினம் நாயுடுகாரு எம். ஏ., ஒரு சந்தர்ப்பத்தில் எழுதி இருக்கின்றனர். சென்னையில் இரங்கூன் முருகேச முதலியார், அப்பாராவ் முதலியார் முதலிய நம்குல சிரேஷ்டர்களின் குடும்பங்கள் பண்டைக்காலத்தில் வியாபாரத்தால் பேர்பெற்ற சமயத்தில், நமது பத்திரிகாசிரியரின் முன்னோர்கள் ஆங்கிலம் கற்று உயர்தர உத்தியோகங்கள் செய்து பிரபலமாய் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் சென்னைக்கு வந்த காலந்தொட்டே பரம்பரையாய் ஆங்கிலக்கல்வியில் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பதற்குச் சென்ற 100 வருஷங்களுக்கு மேலாக அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிவைத்து வரும் குடும்ப கணக்குகளே போதிய சான்றாகும்.

இக் குடும்பத்திற் றோன்றிச் சென்னையிலும் செங்குந்த உலகத்திலும் மிகுந்த பிரபலமாயிருந்த ம. புஜங்கராய முதலியார் அவர்களின் பேரப்பிள்ளைகளுள் நமது 'மித்திரன்' பத்திராதிபர் மூத்தவராவர். இவரது தகப்பனார் திரு. ம. தியாகராய முத

லியார் அவர்கள் பி.ஏ. வகுப்புவரைக்கும் ஆங்கிலம் பயின்று ராணுவ இலாகாவில் உத்தியோகஞ்செய்து தற்போது ஒய்வுபெற்று இருக்கின்றனர். காலஞ்சென்ற புஜங்கராய முதலியார் அவர்கள் 'திருவாசக'த்தை முதல் முதல் திருத்தமாகப் பதிப்பித்துப் புகழ்கொண்டனர். நமது பத்திராதிபரின் இரண்டாம் பாட்டனாராகிய இராமசாமி முதலியார் இளைய சகோதரர் இலக்ஷுமணசாமி முதலியார் 'செங்குந்தர் பிள்ளைத்தமி'ழை முதல் முதல் அச்சுவாகனமேற்றிவைத்த குலதிலகராவர். இவற்றால் இக்குடும்பத்தவர் பாஷாபிமானம், மதாபிமானம், குலாபிமானம், தெய்வபக்தி, சைவாசாரம் முதலிய போற்றத்தக்க அரிய குணங்களும், ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆழ்ந்த ஞானமும் பெற்றிருந்தார்கள் என விளங்குகிறது. "செங்குந்தர் பிரபந்தத் திரட்"டில் பதிப்பாளருரையின்கண் 80-86 பக்கங்களில் காணப்படும் பிள்ளைத் தமிழ் சிறப்புப்பாயிரச் செய்யுட்களினின்றும் இக்குடும்பத்தின் புகழினை யுணரலாம்.

### முதலியாரவர்களின் சரித்திரம்.

திருமயிலாப்பூர் சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி., அவர்கள் 1897ளு மார்ச்சுமீ 31உ பிறந்தவர். ஐந்தாவது வயதில் தமது தகப்பனாருக்கெனத் தம் இல்லத்திலேயே ஸ்தாபிக்கப்பெற்ற திருமழிசை குழந்தைவேல் முதலியார் (இவரும் செங்குந்தர்) பள்ளிக்கூடத்தில் அதே உபாத்தியாயரால் வித்தியாரம்பம் செய்யப்பெற்றுப், பின்னர் புரோக்ரெசிவ் யூனியன் ஸ்கூலிலும் (Progressive Union School) பச்சையப்பன் கல்லூரியிலும் வாசித்து, வகுப்புகள்தோறும் பரிசுகள் வாங்கி, 1915-ம் வருஷம் இண்டர்மீடியட் பரிக்ஷையில் முதல் வகுப்பில் தேறி, 1917-ம்வருஷத்தில் ஷேக்ஸ்பியர், ஆங்கில வசனம், இந்துதேச சரித்திரம், தமிழ் முதலிய பாடங்களில் சிறந்த பாண்டித்தியத்தோடு பி. ஏ. பரீக்ஷையில் தேறினார். இவற்றுள் இரண்டொரு பாடங்களில் இராஜதானியில் முதலாவதாகவும் நின்றார். அவ்வருஷமே சென்னை முத்தையாலுப்பேட்டை உயர்தரக் கலாசாலையில் உபாத்தியாயராக அமர்ந்தார். 1919 வருஷத்தில் உபாத்திமைத் தொழிலுக்குரிய எல்.டி. பரீக்ஷையிலும், 1923வருஷத்தில் எம்.ஏ. பரீக்ஷையிலும் தேர்ச்சியடைந்தார். எம்.ஏ. பரீக்ஷையில் ஆங்கில வியாகர்ணம், இலக்கியம் ஆகிய அரிய பாடங்களில் இரண்டாம் வகுப்பில் (2nd Class) இரண்டொரு மார்க்கு வித்தியாசத்தால் இராஜதானியில் இரண்டாவதாக நின்றார். எம்.ஏ பரீக்ஷையில் இரண்டாவது வகுப்பில், அதிலும் ஆங்கில இலக்கிய இலக்கணங்களில், தேர்ந்துள்ளவர்களைக் காண்பது மிகவும் அருமை என்பதை வாசகர்களுக்கு ஞாபகமூட்டுகிறோம். எனவே, சென்ற பத்து பன்னிரண்டு வருஷங்களாக நமது சென்னைச் சர்வகலாசாலைக் கல்லூரிகளில் இண்டர்மீடியட் (எப் ஏ.) வகுப்புக்கு இங்கிலீஷ் பாட புத்தகங்களாக நியமிக்கப்பெறும் அரிய இலக்கியங்களை ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் பதிப்பித்துக்கொண்டு வந்ததன்றி, நமது முதலியார் அவர்கள் ஆங்கில மகாகவிகள் பலரின் செய்யுட்களுக்கு வியாக்கியானமும் எழுதியுள்ளார் என்பதைக் கேள்விப்பட அன்பர்களுக்கு ஆச்சரியந் தோன்றும். இவரது ஆங்கில நூல்கள் இன்னும் சில கல்லூரிகளின் புத்தகசாலைகளில் போற்றி வைக்கப்பெற்றிருக்கின்றன. இந்நூல்கள் அச்சிட்ட இரண்டொரு மாதங்களுள் பல்லாயிரக்கணக்காகச் செலவாவது இவை எவ்விதம் மதிக்கப்பெறுகின்றன என்பதைக் காட்டுகிறது.

திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் தற்காலத்தில் ஆங்கிலம் கற்றோருள் பெரும்பாலரைப்போல் ஆங்கிலத்தில் மாத்திரம் நனி சிறந்து விளங்குவோரென எண்ணலாகாது. இவர் தமிழிலும் மிகுந்த ஞானமுள்ளவர்; பச்சையப்பன் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியராக யிருந்த காலஞ்சென்ற செல்வகேசவராய முதலியார்,எம்.ஏ., அவர்களது மனப்பூர்வமான ஆசீர்வாதம் பெற்ற சிறப்பு மாணவருள் ஒருவர். பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தை ஸ்தாபித்தவர் நமது பத்திரிகாசிரியரே. இவர் மாணவர்களுக்கு உபயோகப்படுமாறு தமிழில் அநேக கதைப் புத்தகங்களும் பாட புத்தகங்களும் எழுதியுள்ளார்கள். 'செங்குந்த மித்திர'னே யன்றி ஆரம்பாசிரியருக்கு உபயோகமாகும் 'ஆரம்பாசிரியன்' என்னும் மற்றொரு பத்திரிகைக்கும் இவர் ஆசிரியராக இருந்து வருகிறார். தமிழில் உரைநடையை வாய்ப்புறச் செய்வதையும், சிறந்த ஆராய்ச்சிமுறைகளைப் புகுத்துவதையும் தமது வாழ்க்கைக் கடன்களுள் ஒன்றாக மதித்துச் சென்ற பத்து பன்னிரண்டு ஆண்டுகளாக நமது பத்திரிகாசிரியர் உழைத்து வருகின்றார். இவ்வாண்டுகளில் இவரது சிறப்புப்பாயிரத்தைப் பெற்று வெளிவந்துள்ள அரிய தமிழ் நூல்கள்



பல உள. ஆழ்ந்த கல்வியறிவும் ஆராய்ச்சித் தெளிவுமுள்ள இவர்வெகு அழகான நடையில் யாவரும் விரும்புமாறு பொருட்செறிவோடு எழுதுவதையும் பேசுவதையும் உற்றுநோக்கின் இவர் ஒரு நறுமணம் வீசும் பொற்றாமரை மலரேயெனச் சொல்லவேண்டியிருக்கிறது.

இவரது விரிந்த அறிவும் பரந்த நோக்கமும், சுயநலமின்மையும், எவரும் ஆச்சரியப்படக் கூடிய சமயோசித புத்தியும் நெருங்கிப் பழகுவோர்க்கு விளங்காமற் போகாது. ஆகவே அவற்றை ஈண்டு விளக்காது விடுகின்றேன். விளக்கினும்,ஒருவர் தம்மைப் புகழ்வதற்குச் செவிசாய்க்க விரும்பமில்லாத அவர் அதற்குத் தம் பத்திரிகையில் இடம் தரமாட்டார் என்பதை யான் உணர்வேன்.

கல்விக்களஞ்சியமாகிய இவர் அரசாங்கத்திலோ கல்லூரிகளிலோ பெரிய வருவாய் வரக்கூடிய உத்தியோகங்களில் ஏன் அமரவில்லை என்னுஞ் சந்தேகம் அநேகருக்கு உண்டாகலாம். அதற்குக் காரணம் அநேக வருஷங்களாகத் திரு. முதலியார் அவர்கள் மனதிற் குடிகொண்டிருக்கும் குலாபிமானம் ஒன்றேயாகும். அரசாங்க உத்தியோகத்திலோ வேறு நிபந்தனையான உத்தியோகத்திலோ வருவாயை நோக்கி அமர்ந்திருப்பாராயின், இப்போது அவர் செய்துவரும் பொறுப்புள்ள குலத்தொண்டில் பத்திலொரு பாகங்கூட செய்ய முடியாது என்பது திண்ணம். இக்காரணத்தினாலேயே சென்ற 12 வருஷங்களாகச் சென்னை முத்தியாலுபேட்டை உயர்தரக் கலாசாலையில் பிரதம ஆங்கில போதகாசிரியராக இருந்து, குலத்தொண்டு செய்ய வாய்க்கும் சமயத்தையும், அத்தொண்டிற்குத் தமக்கு உதவியாக இருக்கவேண்டிய தோழர்களையும் எதிர்பார்த்திருந்தார். எதிர்பார்த்தவாறே சபாபதி வள்ளலாரும் மற்ற தோழர்களும் அமையும் சந்தர்ப்பம் நம் குலம் செய்த புண்ணியத்தால் வாய்த்தது.

நமது குலதிலகமாகிய திரு. முதலியார் அவர்களுக்குப் போதிய செல்வம் செல்வாக்கு முதலிய எல்லாச் சௌகரியங்களும் இயற்கையாகவே அமைந்திருந்தும், தாம் கற்க விரும்பிய அளவு கற்றுத் தாமே தமது வருமானத்தால் குடும்பத்தை நடத்தும் நிலைமைக்கு வந்த பிறகே கலியாணம் செய்து கொண்டது மிகவும் கவனிக்கத் தக்கது. ஆகையால், உற்று நோக்கின், இனி நமது வாலிபர்கள் யாரையாவது உதாரணமாக (இலக்ஷியமாக)க் கொண்டு பின்பற்றி நடக்க வேண்டுமாயின், இவரைவிட வேறொருவரைச் சொல்ல முடியாது. இத்தகைய பேரறிவு வாய்ந்த பெரியார் நமக்கு வாயாது வாய்த்தது நம் குலத்திற்கு நற்காலம் உண்டாயிருக்கிற தென்பதையே குறிக்கிறதாகையால், அன்னார் நீண்ட ஆயுள், ஆரோக்கியம் முதலிய யாவும் பெற்று நமக்குறுதுணையாயிருக்குமாறு அருள்புரிய நமது குலதெய்வமாகிய ஸ்ரீமுருகப்பெருமானை நாமெல்லோரும் வேண்டிக் கொள்வோமாக.

மா. அ. கனகசபை முதலியார்.


## செங்குந்தர் கல்வி நிதி

இக்கல்வி நிதி தமது முதலாவது மகாநாட்டின்கண் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் ஆதரவில் நம்மவர் கல்வியபிவிருத்திக்காக ஏற்படுத்தப்பட்டது.

இதற்கு அன்பர்கள் மகாநாட்டின்கண் நிறைவேறிய தீர்மானத்தின்படி

1. மகமை ஏற்பாடு செய்யவும்,
2. உண்டி வசூலித்து அனுப்பவும்,
3. சடங்குகளில் கட்டணம் செலுத்தவும்,
4. ஊர்ப் பொதுப்பணங்களிலிருந்து பங்கு தரவும்,
5. நன்கொடை அளிக்கவும்

வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர்.

ம. சண்முகசுந்தர முதலியார்,
பி. செ. மாணிக்கவாசக முதலியார்,
தலைச்சங்க அமைச்சர்கள்.

# நிரூபர்களின் அபிப்பிராயங்கள்

## எனது மகாநாட்டு யாத்திரை

### நமது சங்கமும் சமூகத் தொண்டர்களும்.

நான் ஒரு கிராமத்தில் வியாபாரஞ் செய்யும் ஒரு செங்குந்தன். எனக்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறிது ஞானமுண்டு. எனக்குப் 'பத்திரிகை படியாதவன் பாதி மனிதன்' என்னும் பழமொழியில் முழு நம்பிக்கையுண்டு. ஆகையால் நான் இளமையில் எங்களூரிலுள்ள சில வாலிபர்களோடு கூடிக்கொண்டு மாலைப்போதில் 3 மைல் தூரத்தில் இருக்கிற ஒரு வாசகசாலைக்குச்சென்று பல பத்திரிகைகளும் வாசிப்பதுண்டு. ஒவ்வொரு நாளும் 3மைல் தூரம் போவது மழைக்காலத்தில் மிகப்பிரயாசையாகத் தோன்றியபடியால் உள்ளூரிலேயே ஒரு வாசகசாலை ஏற்படுத்த வேண்டுமென்று முயன்றோம். இதை யுணர்ந்த என் தகப்பனார் வாசகசாலைக்குப் போதிய இடந்தந்து சில பத்திரிகைகளும் தருவித்துக்கொடுப்பதாக வாக்களித்தார். இரண்டொரு நாட்களில் வாசகசாலை ஸ்தாபிக்கப்பட்டது.

சுமார் ஒன்றரை வருஷங்களுக்கு முன் சென்னை சௌந்தரிய மகாலில் ஒரு செங்குந்தர் பொதுக்கூட்டம் கூடியதாகவும், அப்போது 'செங்குந்த மித்திரன்' பத்திரிகையை ஒவ்வொரு செங்குந்தரும் வாங்கவேண்டுமென்று சொல்லியதாகவும் தினசரிப்பத்திரிகைகளில் வாசித்தேன். பல சமூகத்தாரும் தங்கள் தங்கள் முன்னேற்றம் கருதி நடத்தி வரும் பத்திரிகை, சங்கம், மகாநாடு முதலியவற்றைக் குறித்து அடிக்கடி பத்திரிகைகள் மூலம் வாசித்துணர்ந்து மிகவும் கேவலமான நிலைமையிலிருந்து வரும் நம்மவர்கள் தற்காலமுறையில் யாதொரு முயற்சியுமின்றிக் கிடக்கிறார்களே! இவர்களுக்கு எக்காலத்தில்தான் புத்துணர்ச்சி வருமோ என எண்ணி வெகு ஆகாயக்கோட்டை கட்டிக்கொண்டிருந்த எனக்கு இச்செய்தி ஒருபுறம் அடங்காத ஆனந்தத்தையும், மற்றொருபுறம் ஆச்சரியத் திகைப்பையும் உண்டாக்கிற்று. நம்மவர்கள் இப்போதாவது முன் வந்தனரே என ஆனந்த மடைந்தேன். செங்குந்தர்கள் முயற்சியைக் குறித்து இதுவரையில் எந்தப் பத்திரிகையிலும் வாசித்ததும் கேட்டதும் இல்லையாயினும், சென்ற பதினைந்து வருஷங்களாக ஆண்டிற்கொருமுறை எவரும் செங்குந்தரெனச் சொல்லிக்கொண்டு வெளிவராதவாறு உண்மைக்கு மாறாகச் சில ஆசாமிகள் செங்குந்தர்களைக் குண்டரென்றும், அவற்றைப் போக்கவேண்டுமென்றும், சொல்லிக் கோவை ஜில்லாவில் சில இடங்களில் சிலர் மகாநாடு கூடி முயன்று வருவதாக வாசித்துள்ளேனே யொழிய, உண்மையில் நம்மவர்களது சங்கத்தைப்பற்றியாவது, பத்திரிகையைப் பற்றியாவது கேள்விப்பட்டதே இல்லையானபடியால், நம்மவர்களுள் சங்கம் பத்திரிகை முதலியவற்றை நடத்தும் அறிவாற்றலுள்ளவர்களில்லை என்றும், சென்னையில் கூடிய கூட்டமும் கோவை ஜில்லாவில் வருஷத்திற்கொருமுறை கூடுவோரது கூட்டமாகவே இருக்கவேண்டுமென்றும், இனி நம்மவர் கதி அதோகதிதானென்றும் நினைத்துத் திகிலடைந்தேன்.

எனக்குண்டாகிய சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டுத் 'செங்குந்தமித்திர'னை ஆரம்பத்திலிருந்து எனக்கனுப்பும்படி அன்றே எழுதினேன். கிடைத்ததும் படித்துப் பார்த்து 'ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோனெனக் கேட்டதாய்' என்றதுபோல முன்னினும் பன்மடங்கு ஆனந்தங்கொண்டேன். அது முதல் நங்குலத் தெய்வமாகிய ஸ்ரீ முருகப் பெருமானது அருளால் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக நமது கிளர்ச்சி வளர்ந்துகொண்டே வருகிறது. இது இன்னும் இளம்பூரணனது பெருமையைப்போல் வளருமாக.

### நமது இயக்கமும் அதன் தலைவர்களும்.

இப்பேரியக்கமாகிய கட்டடத்திற்கு அடிகோலியவர் பொதுவாய் மகான் மணக்காட் கர்பெனியாரும், சிறப்பாய் திருவாரூர் திரு. கலியாணசுந்தர முதலியார் அவர்களும் அவரது இளைய சகோதரராகிய வைஸ் சேர்மன் திரு. சபாபதி வள்ளலாரும், சைதாப்பேட்டைக் கபில வியாபாரிகளுமேயாவர். இச்சகோதரர்களது அளவு கடந்த வள்ளன்மையைக் குறித்து நன்றியான் அளவுபடுத்திக் கூறுவது மிகையாகுமெனக் கருதிக் கூறுதலொழிகின்றேன். இவர்கள் அடிகோலிய கட்டடத்தை ஒழுங்குற அமைத்தவர் திரு. ம. சண்முகசுந்தர முதலியார் என்னும் தன்னிகரிய அறிவும், ஆற்றலும், பொறையும் பொருந்திய ஒரு சிற்பியும் கிடைத்தனர். அவருக்கு உதவியாகச் சில உதவிச் சிற்பிகளும் சேர்ந்தார்கள். துவக்கிய கட்டட வேலையில் சந்திர சூரியர்கள் பரியந்தம் உழைப்பதாக இவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டனர். இக்குலப் பெருந்தொண்டர்கள் இன்னாரெனச் 'செங்குந்தமித்திரன்' வாசகர்களாகிய உங்களுக்கு யான் சொல்லவேண்டியதில்லை. வியாபார சம்பந்தமாக அடிக்கடி சென்னைக்கு யான் செல்லுவதுண்டாயினும் நமது மகாநாடு கூடும் வரையில் மேற்குறித்தவர்களுள் ஒருவரை மாத்திரமே நேரில் அறிவேன். மற்றையோரைக் குறித்துச் 'செங்குந்தமித்திரன்' மூலமாகவே அறிவேன். நம் குலங் கருதி உழைக்க முன்வந்திருக்கும் தலைவர்களை நமது மகாநாட்டில் என் கண்ணாறக் கண்டு அளவளாவும் பெரும் பாக்கியத்தைப் பெற்றேன்.



### மகாநாட்டு விளம்பரம்.

யான் வாழ்க்கையிற் பிரவேசித்த சென்ற 20 வருஷங்களாக மனோராஜ்யம் செய்துகொண்டிருந்த மகாநாடு கூடுமென்றறிந்து ஆனந்த பரவசனானேன். என் வியாபார வேலையாகச் சென்னைக்குச் சென்றேன். நமது மகாநாட்டுச் செய்தி மார்கழி௴ 28௳ வந்தது. நமது மகாநாட்டுச் செய்தி சென்னை முழுதும் காட்டுத்தீபோல் பரவித் தெருக்களிலும், வாசக சாலைகளிலும், வாத்தக சாலைகளிலும், பள்ளிக்கூடங்களிலும், மாணவர் விடுதிகளிலும் இதே பேச்சாக இருந்தது. எந்த இடங்களில் எங்குபார்த்தாலும் இதே பேச்சாக இருந்தது. எந்த சமூக மகாநாட்டைப் பற்றியும் இதுவரையில் எவரும் இவ்வளவு விமரிசையாகப் பேசக்கொண்டதில்லை என்று நிச்சயமாகச் சொல்லுவேன். நமது விளம்பரத்தைப் பற்றிய பத்திரிகை படிக்காத பாமரர்களும் நமது சமூகத் தலைவர்கள் பேரைத் தெரிந்திருந்தனர். சகோதரர் முயற்சிதான் என்னே! கொங்குநாட்டுச் சகோதரர் முயற்சிதான் என்னே! இதுவரையில் களின் குலாபிமானந்தான் என்னே! இதுவரையில் மூலைமுடுக்குகளில் உறங்கிக்கிடந்த நமது குலத்தவர் வழிப்பும் வேகமுந்தான் என்னே! ஈரோட்டில் மகாநாட்டைப் பார்க்க செங்குந்த களின் வைபவத்தையும், பதினாயிரக்கணக்கான பிரதிநிதிகள் வந்ததையும், தினசரிப் பத்திரிகைகள் மூலமும், வரவேற்புக்கமிட்டியார் பிரசுரித்த அறிக்கைகள் மூலமும் அறிந்தேன். செங்குந்த நகரம் இதுவரை முன்னதாகவே சென்று என் கண்ணாறக்காண விரும்பினேனாயினும், வியாபார நிமித்தத்தால் அவ்வாறு செய்ய இயலாமற் போயிற்று.

### நமது மகாநாட்டு ஸ்பெஷல்.

சென்னையிலிருந்து ஈரோட்டிற்கு நமது மகாநாட்டுப் பிரதிநிதிகளை ஏற்றிச்செல்லுதற்காக ஒரு ஸ்பெஷல் விடப்படுமென்று விளம்பரத்தின்படி 7-ந்தேதி ஸ்டேஷனில் காலை 6-மணிக்கு மகாநாட்டு வரவேற்புக் கமிட்டியின் அறிவிப்பின்படியும் யான் சென்று பல ஒருமணிக்கு முன்னதாகவே சென்றேன். 6-மணிக்கு முன்னதாகவே சென்ட்ரல் ஸ்டேஷனில் நமது மகாநாட்டைப் பற்றிய பெரியதொரு மகாநாடு நடக்கும் பெரிய சென்னை அசோசியேட் செய்த M. கிருஷ்ணன் நாயர் அவர்களும், மகாநாட்டுத் தலைவராகிய பிரமுகர் அசோசியேட் இருந்த மந்திரி கனம் ஆ. வெ. முத்தைய முதலியார் அவர்களும், சென்னை மகாஜன சபையின் சார்பாக வந்திருந்த முனிசிபல் கவுன்சிலர் திரு. ப. சுந்தரவேல முதலியார் அவர்களையும், திரு. கா. பா. கந்தசாமி முதலியார், B.A., B.L., அவர்களையும் மற்றும் பிரமுகர்களையும் பூமாலை சூட்டப்பெற்றனர். அந்த ஸ்பெஷலில் செங்குந்த சைதாப்பேட்டை வைஸ் சேர்மன் திரு. ப. சுப்ரமணிய முதலியார், திருவண்ணாமலை ஆ. வரதராஜ முதலியார், திரு. கந்தசாமி முதலியார் B.A., B.L., மா. அ. சுப்பிரமணிய முதலியார், ஜில்லா போர்டு மெம்பர் திருவண்ணாமலை திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்களும், திரு. N. குமாரசாமி முதலியார் அவர்கள், திருமழிசை திரு. கோ. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், திரு அ. விஜயரங்க முதலியார் முதலிய பல பிரமுகர்களும் வந்தார்கள். வண்டி 8-30 மணிக்குப் புறப்பட்டது. ஸ்பெஷல் திறந்த ஒவ்வொரு ஸ்டேஷனிலும் ஏராளமான பிரதிநிதிகள் ஏறினார்கள். அரக்கோணத்தில் கொடியுயர்த்தும் தலைவராகிய திரு. ம. த. சாமிநாத முதலியார் அவர்களும், ஜோலார்பேட்டையில் வாலிபர் மகாநாட்டுத் தலைவராகிய திரு. பீமராஜா முதலியாரவர்களும், திருச்செங்கோடு சங்கத்தின் சார்பாகக் கடலூராகிய ஒத்த ஜே கோஷ கரகோஷங்களிடையே பூமாலைகள் சூட்டப்பெற்றனர். மேற்குறித்த தலைவர்களோடு வந்திருந்த திரளான சகோதரர்களும் ஸ்பெஷலில் வந்தவர்களும் ஈரோட்டு மகாநாட்டிற்கு ஜே! மகாநாட்டிற்கு ஜே! செங்குந்த மகாஜன சங்கத்திற்கு ஜே! சபாபதி வள்ளலுக்கு ஜே! முதலிய பல ஜே கோஷங்களுடன் ஸ்டேஷன்களில் கலந்து ஆரவாரித்து ஒருவரோடொருவர் அளவளாவியது இருகடல்கள் பொங்கி ஆரவாரித்து ஒன்றோடொன்று கலந்ததுபோலிருந்தது. என்னுள்ளத்தில் முன்னரே நிறைந்து ததும்பிக்கொண்டிருந்த பேருவகையானது ஆனந்த கண்ணீராகப் பொங்கி வழிந்தது. யான் தலைவர்களை விரைந்தோடிக் கண்டு சிரமேற் கைகூப்பிச் சிறிதுநேரம் ஸ்தம்பித்து நின்று பிறகு அவர்களோடு கை குலுக்கினேன்.

எனக்குண்டாயிருந்த குதூகல மேலீட்டாலும், நமது சகோதரர்கள் அடிக்கடி செய்துவந்த ஜே கோஷத்தாலும் அன்றிரா முழுதும் யான் தூங்க முடியவேயில்லை. என் மனதில் அநேக எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றிக்கொண்டே இருந்தன. அநேக வருஷங்களாக நம்மவர்களுக்குள் ஒற்றுமை உணர்ச்சி இல்லையென்று கருதியிருந்தது முற்றும் தவறாகும். கிளர்ச்சி ஆரம்பித்து இரண்டொரு வருஷங்களுக்குள்ளாகவே, நம்மில் பெரும்பாலார் கல்வி யறிவில்லாதிருந்தும், ஒற்றுமையோடும் சகோதர பாவனையோடும் செய்ய வேண்டிய இத்தகைய பெருங்காரியங்களை இவ்வளவு விமரிசையாகச் செய்ய வியன்றதென்றால், நமக்குள் ஒற்றுமை உணர்ச்சியும், குலாபிமானமும் இல்லையென்று சொல்லலாமா? ஈரோட்டில் நமது மகாநாடு கூடுவதும், அதற்காக ஒரு ஸ்பெஷல் ட்ரெயின் விடுவதும், அதில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் பிரதிநிதிகளாகச் செல்வதும், உண்மையில் நடக்கிறதா அல்லது கனவு கண்டுகொண்டிருக்கிறேமா என்று சந்தேகித்தேன். பிறகு சற்று நிதானித்து என் கண்களைத் துடைத்துக் கைகால்களை அசைத்து எழுந்து நின்று நாலாபக்கங்களிலும் சுற்றிப்பார்த்து கனவல்ல உண்மையென்றே உணர்ந்தேன்.

### யான் கனவிற் கண்ட மகாநாடு.

ஸ்பெஷல் சேலத்திற்கு வந்ததும் 8ந்தேதி முழுவதும் எனது புதிய தந்தையை முன்னிட்டுச் சென்னையில் என் வியாபார சம்பந்தமான காரியங்களை முடித்துக்கொள்ள வேண்டி அலைந்த அலைச்சலாலும், இராமுழுதும் தூக்கமின்மையாலும் என்னையு

மறியாது அயர்ந்து தூங்கிவிட்டேன். எனினும் என் உடல் சோர்வடைந்ததேயன்றி என் மனம் சோர்வடையவே யில்லை. ஆகையால் அப்போது யான் ஒரு அற்புதமான சொற்பனம் கண்டேன், அதன் விபரம் வருமாறு:—

நமது மகாநாட்டு ஸ்பெஷல் விடியற்காலம் 5-மணிக்கு ஈரோடுபோய்ச் சேர்ந்ததும் கண்ணுக்கெட்டின தூரம் வரையில் நெருங்கிப்பாவி மிகுந்த உற்சாகத்தோடு தலைவர்களையும் பிரதிநிதிகளையும் வரவேற்க விழித்தகண் விழித்தபடி பார்த்துக் கொண்டிருந்த கொங்குநாட்டுச் சகோதரர்கள் போட்ட ஜே கோஷங்களும், பலவித வாத்திய கோஷங்களும் என் காதைச் செவிடுபடுத்தின. பிளாட்பாரத்தில் தலைவர்களும், மற்றைய சகோதரர்களும் நிறைந்திருந்தனர். எள்ளுப்போடவும் இடமில்லை. யானிருந்த வண்டி வெளியே செல்லும் வழிக்கு எதிரிலேயே நின்றதாயினும் யான் பிளாட்பாரத்தைக் கடந்து செல்ல வெகு நேரமாயிற்று. யான் இதுவரையில் ஈரோட்டிற்குப் போனதில்லை. புண்ணிய தலங்களுக்கு யாத்திரையாகச் செல்வோர் காலால் நடந்து செல்லுதலே சிறந்தது என்னும் கொள்கையில் எனக்கு முழுநம்பிக்கையுண்டு. எத்தனையோ வருஷங்களாக யான் பேராவலுடன் எதிர்பார்த்திருந்த நமது சமூக மகாநாட்டு யாத்திரையைவிடச் சிறந்ததும், பயன்தரத்தக்கதுமான யாத்திரை வேறொன்றில்லை என யான் நினைத்திருந்தபடியால், மேற்கூறிய நம்பிக்கை (சரியோ தப்போ) அச்சமயம் என் மனதைக் கொள்ளை கொண்டுவிட்டது. அதனால் என் கையிலிருந்த பெட்டியை வாங்கிக்கொண்டு என்னை மோட்டாரில் ஏறச்சொல்லிய மகாநாட்டுத் தொண்டர்களுக்கும் எனக்கும் சண்டையுண்டாயிற்று. தொண்டர்கள் பலர் என்னைச் சூழ்ந்துகொண்டு பெயரையும், விலாசத்தையும் மிக்க பணிவுடன் வற்புறுத்திக் கேட்டார்கள். என்னிஷ்டப்படி என் பெட்டியை யானே ரயிலடியிலிருந்து சுமந்துகொண்டு 'செங்குந்த நக'ராகிய ஒப்புயர்வற்ற பெரும் புண்ணிய தலத்தை அடையவிடமாட்டார்கள் என்ற எண்ணத்தால் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க மறுத்தேன். யான் மேற்கொண்டுள்ள விரதத்தை உணராத அவர்கள் பல இனிய மொழிகளால் என்னை வண்டியிலேறும்படி வற்புறுத்தினார்கள். யான் என் பிறவியின் பயனைப் பெற விரும்பிய பெரும் புண்ணியத்தைக் கொள்ளையிட்டுப் பங்கிட்டுக்கொள்ளப் பார்க்கின்றனரோ என நினைத்து வருந்தி அவர்களுடன் சண்டையிட்டுப் 'பகற்கொள்ளைக்காரர்களே! என்னைத் தயவுசெய்து விட்டுவிடுங்கள் யான் உங்கள் மகாநாட்டிற்கு வரவில்லை. செங்குந்தனுமல்லன். யான் ஒரு வியாபாரி; அவசரமாய்ப் போய்ப்பார்க்க வேண்டிய வேலைகளிருக்கின்றன. இன்னும் சிறிது நேரம் உங்களிடம் வீண்பேச்சு பேசிக்கொண்டிருப்பேனாயின் காலந்தவறிவிடும். அதனால் பெரு நஷ்டமுண்டாகும்' என்று கோபக்குறி காட்டி உரத்துக் கூச்சலிட்டுக் கொண்டிருக்கையில், என் அன்பிற்குரிய குலாபிமானம் பொங்கும் கொங்குநாட்டுச் சகோதரர்களின் அன்பின் மிகுதியைக்கண்டு என் கண்களிலிருந்து நீர் மாலை மாலையாகச் சொரிந்தது. அதைக்கண்ட தொண்டர்கள் பயந்து வணங்கி 'ஐய! தாங்கள் மகாநாட்டிற்கு வந்தவர்கள் என்று நினைத்துத் தங்களுக்குச் செய்த அபராதத்திற்காக எங்களை மன்னிக்க வேண்டுகிறோம்' என்று சொல்லி என்னைவிட்டகன்றனர். உடனே யான் இத்தொண்டர்களிடமிருந்து தப்பியது தம்பிரான் புண்ணியமென்றே நினைத்து அங்கு நில்லாமல் மூட்டையைத் தோளின்மேல் வைத்துக்கொண்டு சந்தோஷமாய்ச் செங்குந்த நகரை நாடிச் சென்றேன்.

ரயிலடியிலிருந்து செங்குந்த நகர்வரையில் ஒரே கூட்டமாகவிருந்தது. ஈரோடு அப்போது குசேலர் ஸ்ரீ கண்ணபிரானைப் பார்க்கச் சென்றபோது இருந்ததாக வர்ணித்துள்ள துவாரகையை ஒத்திருந்தது. யான் கண்ட கனவு முழுவதையும் இங்கு சொல்லப்புகின் பத்திரிகை இடந்தராதாகையால் முக்கியமானவற்றை மாத்திரம் சுருக்கிச் சொல்லுகிறேன். விண்ணுலகை யனையும், மண்ணுலகிற் பார்த்தும் கண்டோர் பிரமிக்குமாறு அலங்காரம் பெற்றிருந்த செங்குந்த நகரைத் தரிசித்து ஆனந்த பரவசனாகி அதை மூன்று தடவை பிரதக்ஷணம் செய்து உட்புகுமுன் தலைவர்களுடன் ஊர்வலம் முடிந்து மகாநாடு ஆரம்பித்துவிட்டது. நகருட் பிரவேசித்த யான், விண்ணுலகத்திலுள்ளவர்களையும் அவர்களிருப்பிடஞ் சென்று உங்கள் பரம்பரை மலைமுறை உங்களை எதிர்பார்த்து விண்குடியேற்றிய வீரகுந்தர்கள் இன்று மகாநாடு கூடுகின்றனர். யாவரும் வாருங்கள் வாருங்களென்று அழைப்பது போன்று ஓங்கி உலகளந்தபெருமாளை ஒக்குமாறு ஆகாயத்தை அளாவி நின்ற கம்பத்தச்சியில் பறந்து கொண்டிருந்த கொடியைப் பார்வையிட்டுத் தங்க மகாநாட்டு மண்டபத்திற்குச் சென்று பேரானந்த வாரிதியிலாழ்ந்து அடியற்ற மரம்போல் வீழ்ந்து நமஸ்கரித்துப் பின் எழுந்தேன். அப்போது மண்டபத்தில் அமைக்கப் பெற்றிருந்த மேடையின் மத்தியில் உயர்ந்த ஆசனத்தில் குழந்தைபோன்ற உருவத்தையுடைய ஒரு பெரியார் எழுந்தருளியிருந்தார். அவரைச் சூழ்ந்து ஒன்பது தலைவர்களும், அவர்களைச் சூழ்ந்து அநேக பெரியோர்களும் மண்டபத்தில் மற்றைய பாகங்களில் அணியணியாக லக்ஷக்கணக்கான சகோதரர்களும் வீற்றிருந்தனர். இதைக்கண்ட யான் குமரகுருவைச் சமயிசித்து, திருச்செந்தூரில் துணைவர்களாகிய நவவீரர்களும், இந்திராதி தேவர்களும், லக்ஷம் வீரர்களும், பூதகணங்களும் புடைசூழ வீற்றிருந்த நம்மையாளுடைய முருகவேளின் திருச்செந்தில் நகரம் இதுதானோவென சந்தேகித்தேன். முருகனைப் பாடினேன், ஆனந்தக் கூத்தாடினேன். முன்னர் கூறத்தகாத பழிக்கு ஆட்பட்ட பாதகர்போல நின்ற யான் திருவாரூர் கலியாணசுந்தர முதலியார் அவர்களுக்கும், சபாபதி வள்ளலுக்கும், சண்முகசுந்தர முதலியாருக்கும், நமது தலைச்சங்கத்தாருக்கும், கொங்குநாட்டுச் சகோதரர்களுக்கும், நமது மகாநாட்டிற்கும், பிள்ளைகளைப் பணிகுமாறு ஜே போட்டேன். பின்னர் சப்பிரதேசத்தைத் தோற்றந்தொண்டு கொண்டிருந்த தொண்டர் படைத்தலைவரால் மேடையின் மத்தியில் உயர்ந்த ஆசனத்திலிருப்பவர் தலைவர் திரு. ஆ. வெ. முத்தைய முதலியார் என்றும், அவரை அடுத்தாற்போலிருந்த ஒன்பதுபேர் திருவாளர்கள் ம. த. சாமிநாத முதலியார், I. P. K. ஆறுமுக முதலியார், M. V. பீமராஜ முதலியார், செங்கோட்டையா முதலியார், கந்தப்ப முதலியார், கா. மு. சண்முகசுந்தர முதலியார், சபாபதி வள்ளல், முத்துக்குமார முதலியார், ம. சண்முகசுந்தர முதலியார், ஆகிய தலைவர்களே என்றும், இன்னும் மேடையிலிருந்தவர்கள் வரவேற்புச் சபையாரும், நம் சமூக முன்னேற்றத்தைக்கோரிய முதியத் தலைவர்களும், பெரியோர்களுமாமெனவும், மற்றையோர் பிரதிநிதிகளென்றும் தெரிந்துகொண்டேன். இனி நமது மதிப்பிற்குரிய பதினாயிரக்கணக்கானவர்களை யான் கனவிற் கண்டவற்றுள் ஒரு விஷயத்தைப்பற்றி மாத்திரஞ் சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன்.

அம் மாசபையில் சபாபதி வள்ளலார் எழுந்து நின்று நமது சமூக முன்னேற்றத்திற்காகப் பொது நிதி சேகரிக்க வேண்டிய அவசியத்தைப்பற்றிக் கல்லும் கரைந்துருகுமாறு ஒரு பெருஞ் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். உடனே ஆங்கு குழுமியிருந்த பிரபுக்கள் ஐயாயிரம், நாலாயிரமென ஆயிரக்கணக்கிலும், மற்றவர்கள் ஐந்நூறு, நானூறு என நூற்றுக்கணக்கிலும் தாராளமாக வழங்க முன்வந்தனர். அவ்வாறு வழங்கியோருள் அநேகருடைய பெயர் எனக்கு இன்னும் ஞாபகமிருக்கிறது. கடைசியில் மொத்தம் 3,31,296 ரூபாய் சேர்ந்ததுபற்றிச் சபாபதி வள்ளலார் எழுந்து மகாநாட்டில் விஜயஞ் செய்திருந்த உறவின்முறை ஆண்டவர்களுக்கு அறிவித்தார். உடனே ஜனங்கள் சப்தசாகரங்களும் ஒன்றாய்ச்சேர்ந்து ஆரவாரித்ததுபோல் ஜேகோஷம் செய்தார்கள். யான் தூக்கத்தினின்று திடுமென விழித்துக்கொண்டேன்.

### வரவேற்பு வைபவம்.

அப்போதுதான் ஸ்பெஷல் ஈரோட்டு ஸ்டேஷனில் பிரவேசித்து நின்றது. பலவித வாத்தியங்கள் முழங்கின. தொண்டர்களும் தலைவர்களும் பிளாட்பாரத்தில் நிறைந்திருந்தார்கள். ஸ்பெஷலில் வந்த தலைவர்களுக்குப் பூமாலைகள் சூட்டி அவர்களுக்கு ஏற்படுத்தியிருந்த இடங்களுக்கு அழைத்துச் சென்றனர். யான் விரைவில் பிளாட்பாரத்தை விட்டு வெளியே வந்து நமது இயக்கத்திற்கு அடிகோலிய புண்ணிய புருஷராகிய திருவாரூர் திரு. கலியாணசுந்தர முதலியாரைக் கண்டு ஓடி 'ஆண்டவனே இனியும் சூழ்ச்சியில் சிக்குண்டிருக்கும் எங்களை இன்பமயமான சோலையில் சேர்க்க வந்த மெய்யே!' என்றுசேர்ந்து தழுவிக்கொண்டேன் ஆனால் அவருடன் ஒரு வார்த்தை பேசிய பிறகு அவர் திரு. கலியாணசுந்தர முதலியார் அல்லவென அறிந்தேன். பிறகு நமது வள்ளலாரையும், இளைய உடலையும் முதிர்ந்த அறிவையுமுடைய திரு. ம. சண்முகசுந்தர முதலியாரையும் கண்டு பணிந்தேன். உடனே தலைச்சங்கத்தார் முதலில் கொங்கு நாட்டில் பிரவேசித்துப் பிரசாரம் செய்வதற்குக் காரணபூதராயிருந்த திருவாளர்கள் R. V. சுப்பண்ண முதலியாரையும், கொட்டையப்ப முதலியாரையும், மகாநாட்டுக் காரியதரிசி V. V. C. V. நடேச முதலியாரையும் கண்டு வணங்கினேன். பின்னர் நமது குலப் பெருந் தொண்டர்களாகிய திரு. மா. அ. கனகசபை முதலியார் (இவரை ஒருவரையே யான் நம்பியக்கத்தின் ஆரம்பமுதல் அறிவேன்), மா. பா. கந்தசாமி முதலியார், தி. அ. சண்முகமுதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார் முதலியவர்களையும் கண்டு அளவளாவினேன். யான் பத்திரிகையின் மூலம் அறிந்த செங்குந்தநகரின் வைபவத்தை நேரில் கண்டானந்திக்க வேண்டுமென்று கொண்டிருந்த பேராவலைத் திருப்தி செய்யத் தலைச்சங்க அமைச்சர் திரு. ம. சண்முகசுந்தர முதலியார், திரு. மா. அ. கனகசபை முதலியார் ஆகிய இருவருடன் நகரைக் காணச் சென்றேன். வெகு விசாலமாக நிர்மாணிக்கப்பட்டிருந்த செங்குந்த நகரையும், பிரதிநிதிகளின் சௌகரியத்திற்காகச் செய்திருந்த ஏராளமான மற்ற ஏற்பாடுகளையும் கண்டு பிரமித்து, முதல் முதலாகப் பகலும் இரவுமாக செங்குந்த மகாஜனங்களைச் சமூக முன்னேற்றம் கருதித் தாங்கிடையறாது, அங்ஙனம் விருந்தளித்து உபசரிக்கும் பெரும் புண்ணியத்தையும் கீர்த்தியையும் கொங்குநாட்டுச் செங்குந்தர்களே பெற்றனரே எனப் பொறாமையுங் கொண்டேன்.

### எங்கும் மகாநாட்டுப் பேச்சே.

வெளியூர்களிலிருந்து வந்திருந்த ஆயிரக்கணக்கான சகோதரர்கள் அதிகாலையிலேயே செங்குந்த நகரிற் பிரவேசித்து அதன் அமைப்பையும் அழகையும் கண்டு களிப்பெய்தி நின்றனர். இந்நிலையில் அமைதி நிறைந்து ஒளிமுழுதும் பல விஷயங்களில் பறந்து சென்றுகொண்டிருந்த என மனத்தினை வழியையாவும் இடம்பெறவியலாதிருந்தது. அதனால், யான் என் நண்பர்களை விடுத்துத் தெருத்தெருவாகச் சுற்றிவர ஆரம்பித்தேன். எங்கு சென்றாலும் மகாநாட்டுப் பேச்சு, எங்கு பார்த்தாலும் பிரதிநிதிகளின் கூட்டம். ஆங்காங்கு ஜனங்கள் பேசிக்கொண்டிருந்ததை உற்றுக் கேட்டுக்கொண்டே சென்றேன். 'ஈரோடு இதுவரை இவ்வளவு பெருங்கூட்டத்தை ஒருநாளும் கண்டதில்லை' என்றார் சிலர். 'சென்ற பல மகாநாடுகளாகக் கூடாத பல நாட்டுச் செங்குந்தர்கள் ஒன்று கூடியது காலப்போக்கே' என்றார் சிலர். 'அல்ல, இவர்கள் கூடியதற்குக் காரணம் சென்னையில் ஸ்தாபிக்கப் பெற்றுள்ள மத்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் விடாமுயற்சியே' என்றார் சிலர். 'தஞ்சை ஜில்லாச் செங்குந்தர்களின் குலாபிமானமே' என்றார் சிலர். 'சபாபதி வள்ளலும் சண்முகசுந்தர முதலியாரும்' என்றார் பலர். 'காஞ்சீபுரம், சேலம், திருச்செங்கோடு போன்ற இவர்களது செல்வாக்கும் ஜனத்தொகையும் மிகுந்துள்ள பல இடங்களிருக்க, இக்

கொங்குநாட்டில் கூடினதேன்?' என்றார் சிலர். அதற்குப் பதில் விடையாக "அறியாதாம் அதைக் கொங்குநாடென்பர். இது குலாபிமானம் பொங்கு நாடன்றோ! நிறைந்த செல்வாக்கும், தாராள குண சிறப்புமுள்ள திரு. செங்கோட்டையா முதலியாரும், எவரும் எண்ணியவாறு இயற்றவல்ல ஆற்றலும், குலாபிமானமும் நிறைந்த திரு. கந்தப்ப முதலியாரும், தாராள சிந்தையுள்ள திரு. நடேச முதலியாரும், சென்ற பல வருஷங்களாக நியாயமுறையில் வாதப்போர் செய்து தம் குலத்துடைமையை நிலைநாட்டிய சுத்த வீராகிய திரு. குழந்தையப்ப முதலியாரும், சுயநலமற்ற திரு. வெள்ளையப்ப முதலியாரும், மற்றும் பல குலாபிமானிகளும் விளங்குவது இந்த நாடன்றோ!" என்றார் சிலர்.

இவற்றை எல்லாம் கேட்டுக்கொண்டே தெருத் தெருவாய்ப் போய்க்கொண்டிருந்தபோது, பத்துப் பதினைந்து அணிந்த வகுப்பினர் ஒரு தெருத்திண்ணையின் மேல் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு அத்திண்ணையின் மேல் யானும் போய் உட்கார்ந்தேன். என்னை அவர்கள் வரவேற்று "அறிந்து ஐயா வாருங்கள். நீர் எந்த ஊர்? என்ன வேலையாக இங்கு வந்தீர்?' என்றார்கள். நான் அவர்களைப் பார்த்து "ஐயா! நான் திருச்செங்கோட்டிலுள்ள ஒரு வியாபாரி. அது சம்பந்தமாக இவ்வூர் [illegible] இங்கு வந்தேன். ... [illegible] ... சாப்பிடவில்லை. ஹோட்டலில் [illegible] காலையில் ஏதாவது இளைப்பாறிக் கொள்ளலாமென்று [illegible] வந்தேன். நான் இதுவரையில் இவ்வூருக்கு வந்ததில்லை. [illegible] ... அறுபது வழக்கம். சுமார் 10 தெருக்களில் [illegible] ... காரணம் என்னவென்று விசாரித்தபோது, 'செங்குந்த முதலியார்கள் மகாநாடு கூடுகிறார்கள். அதற்காகப் பல நாட்டிலும் உள்ள செங்குந்தர் திரளாக வந்திருக்கிறார்கள். இந்த சிற்றூரில் ஒவ்வொருவரும் [illegible] ... 1000 சாப்பிடும்படி [illegible] ... செய்தார்கள்' என்றார்கள். அப்படியானால் அந்த மகாநாட்டை நானும் பார்க்கவேண்டுமென்று இந்தப் பக்கம் வந்தேன்' என்று அவர்களிடம் [illegible] ... 'இவ்வளவு பெரிய கூட்டம் இதுவரையில் செங்குந்தர்கள் கூடியதாக நான் கேள்விப்பட்டதில்லையே. காரணம் என்னவாயிருக்கும். இப்பெருங்கூட்டத்தை இவ்வூர்ச் செங்குந்தர்களால் சமாளிக்க முடியுமா! செங்குந்த கோபாலம், சவ்வீர மாளிகையாம் அது எவ்வளவு தூரத்திலிருக்கிறது' என்று கேட்டேன். 'ஐயா திருச்செங்கோட்டிலிருந்தா [illegible] வந்திருப்பவர்கள் இந்த ஊரிலேயே நான் சொல்ல முடியாது. [illegible] ... வந்தபடியே இருக்கிறார்கள். [illegible] ... மூல இடமும் ஒவ்வொரு வண்டிக்கும் ஆயிரக்

கணக்கான ஜனங்கள் வந்தார்கள். இன்று விடியற்காலம் செங்கோட்டையிலிருந்து மெல்ல வந்தது போதாது இன்றைக்கு வந்த ஸ்பெஷல் டிரயினிலும் நிறைய வந்தார்கள். கூட்டம் இன்னும் இரண்டு மூன்று நாட்களிருக்குமாம். பந்தல்களை சாப்பாட்டிற்காக ஏராளமான செலவுகளை செய்திருக்கிறார்கள். ஆயினும் சாப்பாட்டிற்குப் பொறுமையாகப் போகலாம் என்று காலை காப்பி ஓட்டல்களில் நுழைந்து விட்டார்கள் போலிருக்கிறது' என்று ஒரு வியாபாரி பதிலளித்தார். அவர் பக்கத்திலிருந்த மற்றொருவர், "முதலியார்கள் மத்தியில் ஒரு பெரிய சங்கம் ஸ்தாபித்து அதன் ஆதரவில் 'செங்குந்தமித்திரன்' என்னும் ஒரு மாதப் பத்திரிகையும் வெளியிட்டு வருகிறார்களே அது உமக்குத் தெரியுமா? உடுமலையில் அச்சாகி அடிக்கடி வருமென்று... [illegible] ... 'தாங்கள் 'செங்குந்தமித்திரன்' ஒரு பத்திரிகை படிக்கிறதுண்டு. [illegible] ... அவர்கள் [illegible] ... முதலியாரும், K. V. கருப்பண்ண முதலியாரும் ... [illegible] ... அவர்களுடைய கொங்குநாட்டு முதலியார்களும் சேர்ந்து தான் மகாநாட்டை முன்னின்று நடத்துகிறார்கள். மற்ற நாட்டுக்காரர்களும் தங்களைக் கொண்டு பெருமைப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். முதலியார் கொட்டாப்பாட் கட்டிப்பார்" என்றார்.

[illegible]



## கொடியேற்றல் விழா

விசாலமான செங்குந்த நகரின் மத்தியில், பகைவர்களை வென்ற செங்குந்த வீரர்கள் படைசூழ்ந்த பிரகாசமான கொடிக்கம்பத்தின் அடியில் நிற்க, விண்ணளாவிய கொடிக்கம்பத்தின் அடியில் பார்க்க ரூபமும் விரிந்த அறிவும், நிறைந்த ஆற்றலும், கம்பீரமான தோற்றமுமுடைய திரு. மீனாக்ஷிசுந்தர முதலியார் R. A., L. T., அவர்கள் 'வீரர் மணிக்கொடி பாரீர்' என்னும் தொடக்கத்தையுடைய கொடிப்பாட்டைப் பாடும்போது, அதை மிகுந்த அடக்கமாய்ப் பாடியபோது, இன்ன ஜனங்களது மனப்பான்மை போடு கேட்டு நின்ற ஜனங்களது மனப்பான்மை என்னென்று சொல்லுவேன். கொடிக்கம்பத்தில் அணைக்கப்பட்ட இக்கொடி கவிதையணியின் பொருத்தத்தை நினைக்குந்தோறும் என் மனம் அதன் வசம் பிரிந்து நிற்கின்றது. அக்கொடி இசையோடு பாடும்போது மெய்ச் சோம்பேறிக்குங்கூட மனவெழுச்சி உண்டாகாவிடில், உண்மையும், குலமும் உள்ள குலாபிமானிகளின் உணர்ச்சியைச் சொல்லவும் வேண்டுமோ.

நமது சம்பிரதாயங்கள் பிரசாரஞ் செய்யும் காலத்தில் ஜனங்களுக்கு உற்சாகத்தை யூட்டும் அவர்களை வசப்படுத்த விரும்புவோர்களின் இத்தகைய கொடிப்பாட்டுக்களை இடையிடையே பாடவேண்டும் என நினைத்தேன்.

பிறகு நமது குலப்பொருந்தலைவர் திரு. ம. த. சாமிநாதமுதலியார் அவர்கள், ஓமாக்காலமாக மகாநாட்டின் மூலம் சமூகத்தினிடம் கொடியேற்றும் பொருவிழாவைத் தாம் நடத்திவைக்க வேண்டுமாய் நமக்குள் நின்ற நோய் நீங்கி உடல் இருக்க வேண்டுமெனக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தவர்களாம். இறைவனருளாலோ அல்லது மகாநாடு கூடுகிறதென உண்மையான குலசக்தியாலோ அந்நோய் நீங்கி, வயது நூறும் அப்பெருங் கூட்டத்தினிடையே இளைஞர்கள் காண்கிற போல் நமது சொற்பொழிவை நிகழ்த்தியதைத் தகுதியோடு சொல்ல இடமில்லையே யென வருந்துகிறேன்.

தலைவர்களும் மற்றையோரும் பின்னர் நவவீரர் மாளிகையினுள் பிரவேசித்து ஆசனங்களில் அமர்ந்ததும் மாளிகை முழுதும் நிறைந்திருந்த எனது சகோதரர்களைக் கண்டு களித்து இத்தகைய செங்குந்தர் மாபெருஞ் சபையைக் காணப்பெற்ற பாக்யத்தைக் காட்டிலும் சிறந்ததொன்றில்லை எனப் பூரித்துச் சபையைப் பிரதக்ஷிணம் வந்து மேடைக்குச் சென்று நம் குலத்தலைவர்களையும் மற்ற பெரியோர்களையும் தரிசித்து எனது நண்பர் பக்கலில் உட்கார்ந்தேன். யான் மகாநாட்டிற்குச் சென்றதை ஒரு புண்ணிய யாத்திரையாகக் கொண்டபடியால் ஆரம்பத்தின் தீர்த்தத்தில் மூழ்கி, அறுமுகப் பெருமான் சந்நிதானமாகிய நமது மகாநாட்டைத் தரிசித்த, 'சுவிட்சர்லாந்து போலும் ஒரு சிறிய ஊராகும் நம் பதி' என்னும் முழக்கத்தை மறவாது, தலைவர்கள் சொற் பெருக்கையே உணவாக உட்கொண்டு பிரசங்கம் முடிந்தபின்பே சிறிது சாப்பிட்டேன். இதனால் உபசாரணைச் சபையார்மீது

யான் குறைகூறுவதாக நினைக்கலாகாது. எனக்கு மகாநாட்டு நிகழ்ச்சியும், பிரதிநிதிகளின் சொற்பெருக்கும் மாத்திரம் கவனிக்க நோக்கிருந்ததே ஒழிய சாப்பாட்டுவசதி நோக்கும் நினைவும் இல்லவேயில்லை. மகாநாடு முடிந்தபிறகு சுமார் 500 ரூபாய் பெறுமான உணவுப்பொருள்கள் ஏலத்தில் விற்பனையானதை கேள்விகண்ட யான் அவர்கள் மீது எவ்வாறு குறைகூறத் துணிவேன்.

### 'மித்திரன்' பத்திராதிபரின் பெருமை.

'மித்திரன்' இடர்க்காலமை குறித்து எதை விடுகினும் ஒருபொறுத்திருக்க விட என் மனம் இடந்தரவில்லை. திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் தம்மையுமறியாது கண்ணீர் ததும்பப் பல்லாயிரக்கணக்கான செங்குந்தர்களிடையே நின்று நமது மித்திரனுக்குத் தாதாயுள் மேன்மை பொருள்வருவாய் ஒரு சிறிதும் எதிர்பாராது உழைக்கத் தயாராயிருப்பதாயும், தமது தந்தைபோன்ற சபாபதி வள்ளலார் உடனிருந்து உடல் பொருள் ஆவி மூன்றாலும் உதவி வருவதாகவும், அது விஷயமாய்ச் செங்குந்தர்கள் செய்யவேண்டிய கடமை இன்னதென்றும் சொல்லிப்போந்த உருக்கமான சொல்மாரியைக் காதுகொண்டு கேட்ட யார்தான் மறக்கக் கூடும்? அது எனது ஊனையும் உடலையும் ஒருங்கே உருகச் செய்தது. யார் மனந்தான் கரைந்திராது? இராப்பகலாய் ஓய்வின்றி வேலை செய்த கொங்குநாட்டுச் சகோதரர்களுக்கும், தூரதேசங்களிலிருந்து சிரமத்தோடு வந்திருந்த மற்றைய சகோதரர்களுக்கும் ஊனையும் உடலையும் உருக்கும் இவ்வரிய சொற்பெருக்கு ஒத்தற பொருத்தமான பரிகாரமன்றோ? திரு. ம. ச. முதலியார் அவர்களுக்கு அப்போதிருந்த தேக நிலைமையையும், மனோ நிலைமையையும், நோக்கின், அவ்வரிய சொற்பெருக்கை அவர் நிகழ்த்தப் போதிய மனவெழுச்சியும், தேகதிடமும், எங்ஙனம் இருந்திருக்குமென்று உண்மையறிந்த யான் சொல்லவேமாட்டேன். ஆனால் மற்றென்னையோவெனில், தம்மையுமறியாது இறைவனருளால் வந்த ஆவேசமென்றே சொல்லுவேன். அச்சொற்பொழிவு நவவீரர் மாளிகைக்கு வெளியே அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருந்தவர்களையும் காந்தம்போல் இழுத்துக் கேட்கச் செய்தது. அவ்வளவு ஜனங்களும் அப்போது ஒருமைப்பட்டவராய் அசையாது ஸ்தம்பித்து இருந்தனர் என்றால் அதை மறுக்க வல்லார் யார்? அப்போது எனது பார்வை கொட்டகை முழுதும் எட்டக்கூடிய ஸ்தானத்தில் யான் இருந்தபடியால் உடனே சுற்றிலும் நோக்கினேன். எல்லோரும் அசைவற்ற பதுமைகளைப் போலிருந்தனர். யான் மாத்திரம் எழுந்து கொட்டகைக்கு வெளியே சென்று சுற்றிலுமிருந்த மரங்களையும் பக்ஷிகளையும் கவனித்தேன். அவைகளும் அசைவற்று ஸ்தம்பித்து நின்றன. அப்போது ஆன்றோனாயனார் முதலிய புராணக் கதைகள் எனக்கு ஞாபகம் வந்தன. மறுபடியும் எனது ஸ்தானத்தில் வந்து உட்கார்ந்து கொண்டேன். எல்லோருடைய மனமும் ஒருப்பட்டு நின்றமையால் யான் வெளியே சென்றதையும்

உள்ளே வந்ததையும் எவரும் அறிந்திலரென்றே எண்ணுகிறேன். அப்போது என் காலால் மிதியுண்டவரும் உணர்ந்தாரில்லை, அசைந்தாரில்லை.

### கல்வி நிதி.

கல்விப் பொது நிதிக்காக ஒரு பெருந்தொகை சேர்ப்பதற்கு வாயாத வாய்த்த சந்தர்ப்பத்தைச் சில காரணங்களால் நாம் இழக்க நேர்ந்ததைக் குறித்து வருந்தாமலிருக்கமுடியாது. இதைக்குறித்துப் பிரஸ்தாபம் செய்த உடனே ஜனங்களின் நோக்கத்தை அறியும்பொருட்டு எனது தேயு இந்திரியத்தையும் ஆராய இந்திரியத்தையும் கூர்மையாக்கிக்கொண்டு சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தேன். "ஆமாம், நாம் இதற்குத்தான் உதவவேண்டும். நீங்கள் எவ்வளவு தருவதாக இருக்கிறீர்கள்?" "அவர்கள் தானே முன் சொல்லவேண்டும்" என்றும், நான் தொகையொன்று கொண்டுவரவில்லையே இங்கு வாக்களித்துவிட்டுப் பிறகு அனுப்பலாமா? நான் இரண்டாயிரம் கொடுக்கலாமென்று உத்தேசித்திருக்கிறேன். 'நீர் மூவாயிரத்திற்குக் குறைந்து கொடுத்தால் நான் ஒப்பமாட்டேன்.' இவ்விஷயத்தில் யாரையும் வற்புறுத்த வேண்டியதில்லை சந்தர்ப்பம் வாய்த்தால் தாங்களே முன் வருவார்கள். எத்தனையோ கோவில்களுக்கும் மடங்களுக்கும் கொடுக்கிறோமே அதைப்போல் இதற்கும் கொடுக்கவேண்டியதுதானே என்றும், "ஒரு காரியம் செய்யத்தவறினீர்கள். பெருந்தொகை கொடுப்போர் தனித்தனியே கொடுக்கட்டும். நாலு மூன்று இரண்டு ஒன்று அநேகர் கொடுப்பார்களே—அப்படி எவ்வளவோ சேருமே. கொட்டகையின் வாயிலில் இரண்டொரு உண்டி வைத்திருக்கலாமே. ஹரித்துவாரத்தில் நடைபெறும் ஆரிய சமாஜ் குருகுலத்தின் வருஷோற்சவத்தில் உண்டி மூலம் வருஷா வருஷம் லக்ஷக்கணக்கான தொகை சேருகிறதல்லவா. அதைக்கொண்டுதானே நூற்றுக்கணக்கான பிள்ளைகள் இனாமாகக் கல்வி கற்கப் படுகிறார்கள் ஆகையால், ஒவ்வொரு மகாநாட்டுச் சமயத்திலும் உண்டிகள் வைத்து வசூலிக்கவேண்டும். சேர்ந்தவரையில் சேரட்டும்" என்றும், பலர் பலவிதமாக ஆங்காங்கு பேசிக்கொண்டார்கள். அவர்களுள் அநேகர் பெயரையும் ஊரையும் நான் நன்கறிவேன். இதற்கெனக் கொண்டுவந்த பணத்தைத் திரும்ப எடுத்துக்கொண்டு போய்விட்ட அநேக நண்பர்களையும் யானறிவேன்? அச்சமயத்தில் 15 அல்லது 20 ஆயிரத்திற்குச் சேர்ந்திருக்குமென்று மதிப்பிட்டேன். கைக்கெட்டினது வாய்க்கெட்டவில்லையே யென வருந்தினோர் அநேகர். பெருந்தொகை கொடுப்பதாக எழுந்து வெளியிட்ட கனவான்களுள் ஒருவர், 'நான் வாயைத் திறந்து சொல்லிய இரண்டொரு நிமிஷங்களுக்குள் தடுக்கப்பட்டதனால், என் பாவந்தான் குறுக்கிட்டு நின்று தடைசெய்ததோ. அஃதன்மையாயின் நான் கடைசியில் வெளியிட்டிருப்பேனே' நான் நினைக்காமலேனே என்று சொல்லித் தம்மைத்தாமே வெறுத்துக்கொண்டனர்.

மகாநாட்டின் இரண்டாம் நாள் மாலை எனது தென்னாட்டு நண்பர் ஒருவர் என்னைத் தனியே அழைத்துச் சென்று நம் மாணவர் விடுதிக்கென ஒரு பெருந்தொகை ஏற்பாடு செய்வதாகச் சொல்லி அரைமணிநேரம் வரையில் பேசிக்கொண்டிருந்தார். இப் பெரியார் பொறுப்பும் அந்தஸ்தும் உள்ளவர். அவர் சொல்லில் எனக்குப் பூரண நம்பிக்கையுண்டு. இவ் விஷயத்தில் இதற்குமேற் செல்ல எனக்கு இஷ்டமில்லை.

### மகாநாடு கூடியதன் பயன்.

மகாநாடு கூடியதினால் உண்டான பலனை ஈண்டு கூறுதல் விடுவேனாயின் எனது புனித யாத்திரையின் வரலாறு முடிந்ததென்று சொல்ல முடியாது. நம் சமூக முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான பல தீர்மானங்கள் செய்து அவற்றை அமுலுக்குக் கொண்டுவரும்படி நமது தலைச்சங்கத்தைக் கேட்டுக்கொண்டது மகாநாடு கூடியதால் உண்டான பெரும்பயனாகும். ஆயினும் ஈண்டு யான் கூறப்புகுவது, நமது சங்கம், முன்னேற்றம், மித்திரன் முதலியவற்றில் பொது ஜனங்களுக்கு நம்பிக்கை அதிகரித்திருக்கிறதா அல்லது அவநம்பிக்கை உண்டாயிருக்கிறதா? நமக்குள் புணர்ச்சியும் சகோதர பான்மையும் புத்துணர்ச்சியும் உண்டாயிருக்கிறதா? இல்லையா? என்பது போன்ற விஷயங்களைக் குறித்தேயாம்.

### புத்துணர்ச்சியும் பூரண நம்பிக்கையும் ஒத்துழைப்பும்.

நமது தலைச்சங்கமாகிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் நீடித்து நிற்குமா, கட்சிபேதத்தால் பிளவுபட்டுக்கிடக்கும் நம் சமூகத்தவர்க்குள் ஒற்றுமை யுண்டாகுமா? மித்திரன் தவறாது நடைபெறுமா? எனப் பல சந்தேகங்களை நமது மகாநாடு கூடுகிறவரையில் கொண்டிருந்த பல தலைவர்களது எண்ணத்தில் இப்போது பூரண நம்பிக்கை உதயத்து விட்டது. பராமுகமாய் ஒண்டும் காணுயம்போல் இருந்தவர்களும், காலப்போக்கின் வேகத்தை யுணர்ந்து கலந்து தங்கள் முழு பலத்தோடும் சங்கத்தோடு ஒத்துழைக்கக் கங்கணம் கட்டிக்கொண்டனர். பலரவர்களில் கிளைச்சங்கங்கள் நிறுவ விருப்பங்கொண்டிருக்கின்றனர். தங்களூர்களில் கிளைச்சங்கமின்மையால், பல நாடுகளிலுமுள்ள செங்குந்தர்கள் ஒன்று கூடிச் சமூகமுன்னேற்றத்தைக் குறித்து யோசித்து முடிவுகட்டும் மகாசபைகத்தில் தங்களுக்கு இடமில்லாமற்போனதைப் பெருங்குறையாக எண்ணினர் பலர். ஆயிரக்கணக்கான சகோதரர்கள் நமது மித்திரனைத் தருவித்து வாசிக்க விரும்புகின்றனர். எதிர்பார்த்ததைவிட பன்மடங்கு சிறப்பாக மகாநாடு நடந்ததைக் கண்டு மூலையிலிருந்தவர்களும் துணிந்து முன்னுக்கு வருகின்றனர். செங்குந்தர்கள் அனைவரும் எந்நாட்டவராயினும் ஒரே குடும்பத்தைச் சார்ந்த சகோதரர்களென எண்ணத் தலைப்பட்டனர். ஒருவரையொருவர் அறியாதவர்கள் செங்குந்த குலத்தைச் சேர்ந்தோரென அறிந்தவுடன் அன்பும் ஆர்வமும் மிகுந்து அளவளாவினர். நம் சமூகத்திலும் தற்சமயம் ஆழ்ந்து தெளிந்த கல்வியும், பெரிய காரியங்களை நிர்வகிக்கும் பேராற்றலும், பெருஞ் செல்வமும், நிறைந்த செல்வாக்கும, வியாபார நிபுணத்துவமும் உடையவர்கள் பலரிருக்கின்றனரென உணர்ந்து களிபேருவகை எய்தினர் அநேகர்.

இவற்றால் 1929௵ ஜனவரி௴ 18௳ வரையில் நமது சமூகத்தைக் குறித்து நாமும் பிறரும் கொண்டிருந்த அபிப்பிராயம் இப்போது முற்றும் மாறிவிட்டதென்றே யான் தைரியமாய்ச் சொல்லுவேன். நமக்குக் குலாபிமானமும், செல்வாக்கும், பிறவும் இல்லையென்றே நினைத்திருந்தோம். ஆனால் திருவாரூர் வள்ளலாரும், திரு ம சண்முகசுந்தர முதலியாரும், அவர்களது அரிய தோழர்களும் சென்ற 1½ வருஷங்களாகச் செய்துவந்த முயற்சியின் பயனைக் கொங்குநாட்டுச் சகோதரர்கள் பெருமுயற்சியால் கூட்டப்பெற்ற மகாநாட்டின் பின்னர் அவ்வெண்ணங்கள் யாவும் கானல் நீரையும் கனவையுமே போலவாயின. 'செங்குந்த சமூகம் தென்னிந்தியாவில் மிகுந்த செல்வாக்குள்ள ஒரு சமூகம்' என்றும், 'இதுவரையில் இவ்வளவு பெரிய சமூக மகாநாடு நடந்ததேயில்லை' என்றும், இதைக் 'கூட்டத்தில் காங்கிரசுக்கு அடுத்ததென்று சொல்லலா'மென்றும், 'இது முதல் மகாநாடேயாயினும், பல மகாநாடுகள் கூட்டி பழகியோர் நடத்தலது போன்றிருந்தது' என்றும் பல பத்திராசிரியர்களும் பெரியோர்களும் புகழ்ந்து பாராட்டினார்கள்.

### பெண்மணிகளின் மனவெழுச்சி.

மகாநாட்டினால் உண்டான மற்றொரு பெரும்பயன் உண்டு. நமது தலைச்சங்க நிர்வாக சபையில் மகாநாட்டுக் கொட்டகையைப் பற்றி யோசித்தபோது, அதில் நம் பெண்களுக்குத் தனியிடம் ஒதுக்கிவைத்தல் அவசியமா? மகாநாட்டிற்கு வந்து அதன் நடவடிக்கைகளைக் கவனிக்கக் கூடிய ஊக்கம் அவர்களுக்குண்டா? என நிர்வாக அங்கத்தினருள் சிலர் சந்தேகித்ததாக யான் கேள்வி பட்டேன். எனக்கும் அவ்விஷயத்தில் கொஞ்சம் சந்தேகமிருந்தது. ஆனால் உண்மையில் நமது பெண்மணிகளே ஆண்மக்களைக் காட்டிலும் மிகுந்த உற்சாகம் காட்டி குறித்த காலம் தவறாது பெருங்கூட்டமாக வந்திருந்து அங்கு நிகழ்ந்த சொற்பெருக்குகளையும் மற்றைய நடவடிக்கைகளையும் ஓரணுவளவேனும் விடாது முழுமனத்தோடுங் கவனித்து வந்தார்கள். அவர்களுள் இரண்டொருவர் மகாநாட்டில் சந்தர்ப்பம் கிடைக்குமாயின் பேசவுந் தயாராயிருந்தார்கள் என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். பெண்களுக்குக் கல்வியே இல்லையென்று சொல்லக்கூடிய நிலையிலிருக்கும் நம் சமூகப் பெண்மணிகளும் இத்தகைய மகா சபைகளில் ஊக்கம் மேலிட்டால் சொற்பெருக்குகள் நிகழ்த்தத் துணிந்தார்கள் என்றால், நம் சமூகம் முன்னேற்றப் பந்தயத்தில் வெகு விரைவாக ஓட ஆரம்பித்துவிட்டதென்பதற்கும், சில வருஷங்களுக்குள்ளாகவே முன்னணியிலுள்ள சமூகங்களுள் ஒன்றாய் விளங்குமென்பதற்கும் வேறு சான்றும் வேண்டுமோ?



### என் வேண்டுகோள்.

விஷயாலோசனைச் சபையின் அங்கத்தினராக இரு பெண்மணிகளை நியமித்தது மிகவும் பாராட்டத்தக்கது. நமது தலைச்சங்க நிர்வாகிகளை நம் குலப் பெண்மணிகளில் ஒருவரையாவது நிர்வாக சபை அங்கத்தினராக நியமிக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களும் பெண்கள் முன்னேற்ற சம்பந்தமான விஷயங்களில் ஊக்கத்தோடு நிர்வாக சபையிலும் மகாநாடுகளிலும் உழைக்க முன் வருவார்களென நம்புகின்றேன்.

தேனினும் இனிய தலைவர்கள் சொற்பெருக்குகளைப்பற்றியும், மகாநாட்டு மற்ற நடவடிக்கைகளைப் பற்றியும் சாக்கியுரைக்கவும் இடமின்மையால் எனக்குப் புண்ணியமின்மையைக் குறித்து யான் மிகவும் வருந்துகிறேன்.

### தென்னாடெங்கும் மகாநாட்டுப் பேச்சே

மகாநாடு முடிந்ததும், கோயமுத்தூர், சேலம், மதுரை, திருச்சி, வடஆற்காடு செங்கற்பட்டு முதலிய பல ஜில்லாக்களில் வியாபார சம்பந்தமாக அநேக விடங்களுக்குச் சென்றிருந்தேன். எங்கும் நம் மகாநாட்டுப்பேச்சே நிறைந்திருந்தது. ஒவ்வொரு செங்குந்தருக்கும் புத்துணர்ச்சி உண்டாய்விட்டது. நம்மவர்களேயன்றி, ஏனைய சகோதர இனத்தவரும் நமது மகாநாடு வெகு விமரிசையாகவும், ஒழுங்காகவும், திருப்தியாகவும், யாவரும் மெச்சத்தகுந்த முறையிலும் நடந்ததெனச் சொல்லிக்கொள்ளுகிறார்களே யொழிய எவ்வகையிலும் குறை கூறினர் ஒருவருமில்லை. இரண்டொரு தீர்மானங்களைக் குறித்து அபிப்பிராய பேதங்களிருப்பினும், பெரும்பாலோர் நோக்கத்திற்கிணங்க விட்டுக்கொடுத்து ஒருந்தன்மையாய் நடந்துகொண்ட நண்பர்களுக்கும், மகாநாட்டைச் சிறப்பாக நடத்திக்கொடுத்த குலாபிமானம் மிகுந்த கொங்குநாட்டுச் சகோதரர்களுக்கும், மகாநாட்டுச் சமயத்தில் வரவேற்புச் சபையார் தங்களால் கூடியவரையில் சௌகரியங்கள் செய்துகொடுத்தும், சில சமயங்களில் உண்டான அசௌகரியங்களைப் பொருட்படுத்தாது மகாநாட்டைச் சிறப்பாக நடத்த வேண்டியது தங்கள் முக்கியமான கடமை என எண்ணிய பெருந்தகையாளர்களுக்கும் தலைச்சங்க நிர்வாகிகளுக்கும், யாத்திரைவாசியாகிய யான் செங்குந்த உலகத்தின் சார்பாக மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

என்னை இன்னனென யாருமறியாத முறையில் குலப்பெருந்தொண்டர்களுடன் யானுமொருவனாக இருந்து என்னால் இயன்றவாறு என்னுயிர் பரியந்தம் உழைக்க முற்பட்டிருக்கிறேனென்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மகாநாட்டு யாத்திரைவாசி.

## நமது 'மித்திரன்' ஆசிரியரது பேருபந்நியாசத்தின் பயன்

மகாநாட்டில் நமது அன்பிற் சிறந்த தலைவர்களால் பல அரிய பெரிய சொற்பெருக்குக்கள் நிகழ்த்தப் பெற்றன என்பதையும், அவற்றுள் பொன்னைப்போல் போற்றத்தகுந்த அரிய சிறந்த விஷயங்கள் பொதிந்து கிடந்தன என்பதையும் யாரும் மறுக்கமுடியாது. ஆயினும், வேலை அலைச்சலால் தேக அசௌக்கியமுற்று இருந்தும், முக்கியமாய்ச் சொல்லவேண்டி யிருந்த ஏதோ ஒரு விஷயத்தைக் குறித்துமாத்திரம் இரண்டொரு நிமிஷம் பேசவேண்டுமென உத்தேசித்து எழுந்து நின்ற நமது மித்திரன் பத்திராதிபர்—ஏன்? நமது இயக்கத்திற்கே உயிராயிருப்பவர்—திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் நாலா பக்கங்களிலும் பல்லாயிரக் கணக்காகக் குழுமியிருந்த சகோதரர்களைக் கண்டு களித்துத் தம்மையுமறந்து ஆவேசங் கொண்டவரைப்போல் (அச்சமயம் அவர்கள் பேசிய விஷயங்களைக் குறித்து அவரைச் சிலர் கேட்டபோது 'நான் என்ன பேசினேனென்று எனக்கே தெரியவில்லை' என்றதனால் இது, அவர் தம்மையும் மறந்து பேசிய ஆவேசக் கூற்றென்றே சொல்லவேண்டி யிருக்கிறது) கேட்டோர் மனது நெக்குவிட்டுருகும்படி நிகழ்த்திய மகோபந்நியாசமானது என்றும் உருகாத கல் மனதையும் அனலிற்பட்ட மெழுகென உருகச் செய்ததென்னும் உண்மையை யாரே மறுக்க வல்லார்? அவர் வாயிலிருந்து வந்த ஒவ்வொரு சொல்லும் அன்பு மயமாகவே இருந்தது அச்சொற்களின் இடையிடையேயும் அன்பே வழிந்தொழுகியது. அவருள்ளத்திற் பொதிந்துகிடந்த பேரன்பாகிய அமிர்தமாரியை அவர் அன்று சோனவருஷம்போல் பெருவாரியாகப் பொழிந்தனர். அந்நீரானது, வறண்டு பிளவுபட்டும் அணுக்களாகியும் கிடந்த செங்குந்த புருஷரது மனமாகிய பூமியில் நிரம்ப ஊறி அது நெகிழ்ந்து ஒன்றிக் குளிர்ந்திருக்குமாறு செய்தது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட பூமியில், மகாநாட்டில் செய்த தீர்மானங்கள் மூலமாகவும், பிறவற்றின் மூலமாகவும் விதைக்கப்பட்ட ஊக்கமென்னும் அரிய விதையானது முளைத்து ஓங்கி வளர்ந்து, நாமெல்லோரும் எதிர் பார்த்து நிற்கும் பெரும் பயனைத் தருமென்பதில் சற்றும் சந்தேகமே யில்லை.

அன்பு ததும்பிய இவ்வுபந்யாசத்தின் சிரமாய் விளங்கி, பதுமைகள் போல் மெய்மறந்து இருந்த அத்தனை சகோதரர்களது பலதிறப்பட்ட மனங்களையும் உருக்கி ஒரே மனதாய்ச் சுமார் அரைமணி நேரம் வரையில் அசைவற்றுச் செயல் மறந்து நிற்கச் செய்தது அவர் கண்ணீர் ததும்ப "என் ஆயுர்காலம் வரையில் ஒரு காசும் எதிர்பாராது உழைக்கத் தயாராயிருக்கிறேன் என்பதை மகாநாட்டில் கூடியுள்ளவர்கள் முன்னிலையில் பகிரங்கமாய்ச் சொல்லுகிறேன். எனது தந்தைபோன்ற இச்சபாபதி வள்ளலாரும், அதற்கு உதவி புரியத் தயாராயிருக்கிறார்கள்" என்னும் பொருள்படப் பேசிய சொற்களேயாகும். உள்ளும் புறமும் ஒத்து நிகழ்த்திய இந்த சொற்பெருக்கானது அங்கிருந்தோர்க்கு இவரிடத்துப் பூரண நம்பிக்கையையும், சுயநலமற்ற நம் குலப்பெருந்தலைவர் இவரே என்னும் எண்ணத்தையும், நம்மியக்கத்தினிடத்து மிகுந்த அவாவையும் பற்றையும் உண்டாக்கிற்றென்பதில் சந்தேகமுமுண்டோ? பல்லாயிரக்கணக்கான செங்குந்தர்களை அச்சொற்கள் ஒரே கட்டாகக் கட்டிப் பிணித்ததென்றுதான் சொல்லவேண்டும்.

'அன்பிற்குமுண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்'

என்ற ஆன்றோர் வாக்கியத்திற்கு இதனினும் வேறு உதாரணம் வேண்டுமோ? இதுவரையில் செங்குந்தர்கள் இவ்வளவு மாபெருங் கூட்டமாகக் கூடி இத்தகைய அன்புததும்பும் சொற்பெருக்கைக் கேட்டு ஒற்றுமைப்பட்ட ஒரே உணர்ச்சியோடு இருந்ததில்லை என்றே சொல்லலாம். அத்தனை ஆயிரம் செங்குந்தர்களும் ஒருமனப்பட்ட காலத்தில் உதயமாகிய ஒற்றுமை என்னத்தோடு செய்துகொண்ட தீர்மானமானது ஒருகாலும் கருதிய பயனைத் தராமற் போகாது.

அச்சமயத்தில் மகாநாட்டுக் கொட்டகையிலிருந்து அங்குமிங்கும் பிரிந்து பேசிக்கொண்டிருந்த நண்பர்களும் காந்தக் கல்லை எதிர்த்த ஊசியைப்போல் கொட்டகைக்குள் இழுக்கப்பட்டு வந்தமர்ந்தார்கள். திரு. ம. ச. முதலியார் அவர்களை வயதிற்சிறியவர் என்றெண்ணியிருந்த பலர், 'உருவு கண்டு எள்ளாமை வேண்டும், உருள் பெருந்தேர்க்கு அச்சாணியன்னாருடைத்து' என்றபடி, இவரது சுயநலமற்ற போதிலை யுன்னி யுள்ள மகிழ்ந்து நம் குலம் விளங்கத் தோன்றிய பேருபகாரி யென்றெண்ணினர். இவ்வுபந்யாசத்தின் பலனாக அன்றே நூற்றுக் கணக்கானவர்கள் 'மித்திர'னுக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்தனர்; ஆங்காங்கு கிளைச்சங்கள் நிறுவவும் தீர்மானித்தனர்; என்றுமில்லாத உற்சாகத்தையடைந்தனர். இச்சொற்பெருக்கின் அன்பையும் அருமையையும் வியந்து குலாபிமானிகள் பலர் தலைச்சங்கத்திற்குக் கடிதங்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஆச்சரியமல்ல. ஆயினும் இதுபோன்ற உபந்யாசங்கள் இன்னும் இரண்டு மூன்றாவது கேட்டானந்திப்பதற்கு இல்லையேயெனப் பலர் வருந்தினர். இரண்டாவது மகாநாடு கூடுமுன் நமது 'மித்திர'னுக்கு 500 சந்தாதாரர்களுக்கு மேற்பட்டே யிருப்பார்களென நம்பப்படுகிறது.

சின்ன பழநியப்ப முதலியார்.

---



## தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாடும் 'குடியரசு' நிருபரும்.

27-1-29ல் வெளிவந்த 'குடியரசி'ல் 'தென்னிந்திய செங்குந்தர் மகாநாடு' என்ற தலையங்கத்தின் கீழ் ஒரு நிருபர் எழுதியுள்ள விஷயங்களைக் குறித்துச் செங்குந்தர் அனைவரும் கவலை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆயினும், வைசிராய் பாராவில் மகாநாட்டின் முதல்நாள் மாலை மகாநாட்டுப் பந்தலில் கணம் கிருஷ்ண நாயருக்கு நீக்காட்டிலுள்ள சகலகலைகளையும் வசித்துக்கொடுத்த உபசாரப் பத்திரங்களைப்பற்றி எழுதுமிடத்து, "இவ்வளவு...... பெரிதும் சமூகசீர்திருத்தச் சம்பந்தமாகவே இருந்ததால் அவைகளை படிக்கும்போது திரு. கிருஷ்ணன் நாயர் அவர்களுக்கும் மற்றும் அங்கு கூடியிருந்த பதினாயிரக்கணக்கான ஜனங்களுக்கும் ஏற்பட்ட குதூகலத்திற்கு அளவே இல்லை. திரு. கிருஷ்ணன் நாயர் அவர்கள்......வெகு கம்பீரமாய் எழுந்து பேச ஆரம்பித்து இரண்டொரு வார்த்தை ஆரம்பித்ததும், அங்குள்ள ஒருவர் பொறுப்பற்ற தன்மையில் மனுஷத்தன்மை யில்லாமல் நடந்துகொண்டு சட்டம் மூலம் பேச அவசரப்படுத்தியதால் திரு நாயகர், திரு நாயர் அவர்களைச் சீக்கிரம் முடித்துவிடும்படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டதின் பேரில், திரு நாயர் அவர்களும் சற்று மனவருத்தத்துடன் சுருக்கமாய் முடித்துவிட்டு உட்கார்ந்துகொண்டார். இச்சம்பவம் மகாநாட்டு பிரமுகர்களுக்கும், பொறுப்பாளிகளுக்கும், மற்றும் வந்துள்ள பிரதிநிதிகள் பலருக்கும், சில அறிஞர்கள் பலருக்கும் மிக்க சங்கடம் உண்டாக்கியது" என எழுதியுள்ளார்.

இது சம்பந்தமான உண்மையைப் பொது ஜனங்களுக்கு அறிவிப்பது அவசியமென்று கருதிப் பின் வருமாறு எழுதலானேன்:—மேற்குறித்த சம்பவம் நிகழ்ந்தபோது கூடவிருந்து கேட்டுக்கொண்டிருந்த என்னை ஒரு பொய் கூறுகிறார் என்று நமது 'குடியரசு' நிருபர் ஒதுக்கிவிட்டார். இவர் முழு பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முயலுவதுபோல் இருக்கிறது. மகாநாட்டில் நடந்த உண்மைகளை மறைத்து விட்டு வாய்க்கு வந்தபடி எழுதுவது தகுமா? நமது மகாநாட்டுக்கு வந்தவர்களுக்கும் கண்ணும் காதும் இல்லையென்று நினைத்துக்கொண்டார்போலும். நடந்ததை நடந்தபடி கூறாது புரட்டி கூறவேண்டுமா?

இனி இவர் கூறியுள்ள வாக்கியங்களை ஒவ்வொன்றாக ஆராயவோம். சீர்திருத்த சம்பந்தமான உபசாரப் பத்திரங்களும் சம்பாஷணைகளும் குதூகலத்தை உண்டாக்குமென்பதை நான் ஒருபோதும் மறுக்கமாட்டேன். ஆனால், அவை மகாநாட்டிற்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாதவையாயும், அளவுக்கு மிஞ்சிய அமுதமும் நஞ்சென்றபடி ஐந்தாறுக்கு மேற்பட்டவையாயும் இருந்தபடியால், மகாநாட்டின் அருமையான நேரத்தில் ஒரு மணிநேரத்திற்கு மேல சாப்பிட்டு விட்டு நிகழ்ச்சி முறையையும் தலைகீழாக்கியதால், வெகுதூரத்திலிருந்து மிக்க ஆவலோடு வந்திருந்த பதினாயிரக்கணக்கான பிரதிநிதிகளுக்குக் குதூகலத்தை உண்டாக்குவதற்குப் பதிலாக, வெறுப்பையும் அதிருப்தியையும் உண்டாக்கின என்பதை இந்நிருபர் மறைத்தது ஏனோ? மகாநாட்டிற்கு வெளியே படித்துக்கொடுக்கவேண்டிய பத்திரங்களையும் சம்பாஷணைகளையுமே பிரதானமாகக் கருதிய 'குடியரசு' நிருபரைப் போலல்லாமல், மகாநாடு நன்கு நடைபெறவேண்டுமென்பதையே தமது முக்கிய நோக்கமாகக் கருதி வந்திருந்த பல்லாயிரக்கணக்கான பிரதிநிதிகள் அளவுக்கு மீறிய பத்திரங்கள் வாசித்ததைக் குறித்து மிகவும் அதிருப்தி யடைந்தனர் என்னும் உண்மையைப் பார்க்கும் கண்ணையும் கேட்கும் காதையும் உடைய எவரும் மறுக்கமாட்டார்கள். 'வந்தகாலை விட்டுப் பந்தகாலைப்பற்றினார்போல் இவற்றைக் கேட்கக் காலங்கழிக்கவா நாம் இவ்வளவு தூரம் பிரயாசைப்பட்டு நமது முதலாவது மகாநாட்டுக்கு வந்தோம்?' 'மகாநாடு இரண்டு நாளில் முடியாது போலிருக்கிறதே' என்பவைபோன்ற பேச்சுகளே எங்கும் நிறைந்திருந்தன. இவற்றையெல்லாம் குறித்த பொறுப்பும் கவலையும் ஒரு பத்திரிகை நிருபருக்கு ஏன் உண்டாகப்போகிறது? பிரதிநிதிகளின் மனப்பான்மையை யுணர்ந்த யான், அதிரவோடு வெறுப்பால் ஜனங்கள் பெரும்பாலும் கலைந்துவிடுவார்களென்றே எண்ணினேன்.

பிறகு நமது நண்பராகிய நிருபர் கணம் நாயர் அவர்கள் பேச ஆரம்பித்து இரண்டொரு வார்த்தை சொன்னதும் ஒருவர் அவசரப்படுத்தியதால் திரு. நாயகர் அவர்கள் திரு. நாயர் அவர்களைச் சீக்கிரம் முடித்துவிடும்படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டதின் பேரில் சற்று மனவருத்தத்துடன் திடீரென முடித்துவிட்டு உட்கார்ந்துகொண்டதாகச் சொல்லுகிறார். இது முற்றும் பொய். கணம் நாயர் அவர்கள் வெகுநேரம் பேசினார்கள். கடைசியில் ஒருவர் புகைப்படம் எடுக்க வேண்டியதைக் குறித்து ஞாபகமூட்டினார். அச்சமயத்தில்தான் திரு. நாயகர் அவர்கள் அவருக்கு ஞாபகமூட்டினார். கணம் நாயர் அவர்கள் தமது பிரசங்கத்தின் முடிவில் 'திரு. நாயகர் அவர்கள் சீக்கிரம் முடித்துக்கொள்ளும்படி ஞாபகமூட்டினார். ஆம, சூரியன் நமக்காகக் காத்திருக்கமாட்டான்' (The sun will not wait for us) என்று சொல்லி முடித்துக்கொண்டார். நாயகர் பெயரைச் சொன்ன

வுடன் திரு. நாயகர் 'தங்களை நான் முடித்துக்கொள்ளச் சொல்லவில்லை. புகைப்படமெடுப்பதைக் குறித்து ஞாபகமூட்டினேன்' என்றதனாலும், திரு. நாயர் அவர்கள் 'நமக்காகச் சூரியன் காத்திருக்கமாட்டான்' என்றதனாலும், இவ்விஷயத்தில் மகாநாட்டின் பொறுப்பை வகுத்த இருபெருமக்களுக்கும் யாதொரு மனவருத்தமும் இல்லையெனத் தெரியவில்லையா? புகைப்படமெடுப்பதற்காக அப்போது கலைந்த மகாநாடு அன்று மறுபடியும் கூடவில்லை. அன்று மாலை நடக்கவேண்டிய வர்த்தகர் மகாநாடு உபசாரப் பத்திரங்களால் அன்று கூடமுடியாமற் போனதன்றித், தலைவர்கள் புகைப்படத்தினிடையே மகாநாட்டை அன்புகூர்ந்து திறந்துவைத்த ஒரு பெரியாரது உருவம் இல்லாமற் போகுமாயின் நிர்வாகிகளுக்கு எவ்வளவு மனவருத்தம் உண்டாயிருக்குமென்ற பொறுப்பை நமது குடியாக நிருபர் உணர்ந்தாரா?

கனம் நாயர் அவர்கள் சுமார் 15 நிமிஷங்களுக்கு மேல் பேசியிருக்க இரண்டொரு வார்த்தை ஆரம்பித்ததும் தடைசெய்ய முடித்துவிட்டு உட்கார்ந்துகொண்டார் என, ஒரு வாக்கியம்கூட பேசியிருக்கமாட்டார் எனப் பொருள்படும்படி, பொய்புனைந்துரைத்த நிருபரது செவி செவிடாகவாயிருந்தது? கண் குருடாகவா இருந்தது? தென்னிந்தியாவிலுள்ள எல்லாப் பாகங்களிலும், இலங்கை முதலிய வெளிநாடுகளிலுமிருந்து வந்திருந்த பிரதிநிதிகளுக்கு அத்தனை பத்திரங்கள் மகாநாட்டின் அருமையான காலத்தைச் சாப்பிட்டுவிட்டனவே என்றுதான் சங்கடமுண்டாயிற்றே யொழிய, குடியாக நிருபர் கூறிய முறையில் சங்கடமுண்டாகவேயில்லை. எங்கும் பிரதிநிதிகளுக்கும் கனம் நாயர் அவர்களுக்கு உபசாரப்பத்திரம் வாசிக்கக் கேட்டதனைப்பற்றி மிகவும் சந்தோஷமே. ஆனால் மகாநாட்டிலேயே படித்துக்கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்குமாயின் அவை இரண்டொன்றாக இருந்தால் பாதகமில்லை. ஒரு பொறுப்புள்ள பெரியார் விஜயஞ்செய்த காலத்தில் பல வகுப்பினரும் அவரை உபசரித்தழைக்க வருவது இயற்கையே. ஆனால் அவற்றால் மற்றொரு முக்கியமான பெரிய காரியத்திற்குச் சங்கடமுண்டாகாதபடி வேறிடத்தில் வைத்துக்கொண்டிருக்கவேண்டும்.

நிகழ்ச்சி முறையில் இடம்பெறாதவற்றிற்கு நிர்வாகிகள் இடங்கொடுத்தது சீக்கிரம் முடியுமென்று கருதியே. அவை காலம் நீட்டித்தபோதும் சம்மதப்பட்டே இருந்தனர். இவ்வளவு பொறுத்திருந்தும் அச்சமயம் தவறினால் [illegible] முடியாத ஒரு காரியத்தைக் குறித்து ஒருவர் ஞாபகமூட்டியதற்காக 'அங்குள்ள ஒருவர் பொறுப்பற்ற தன்மையில் மனுஷத்தன்மையில்லாமல் சட்டமீறலாகப் பேசி அவசரப்படுத்தியதால்' என்று நிருபர் எழுதுவது எனக்கு ஆச்சரியமுண்டாக்குகிறது. 'சட்டமீறல் பேசியவர்' பொறுப்புள்ளவராகவே இருக்கவேண்டுமென்பது நமது நண்பருக்கு விளங்கவில்லையா? அத்தகையாரைப் 'பொறுப்பற்றவர்' என்றும், மனுஷத்தன்மையில்லாதவரென்றும் எழுதினார். ஒரு பெரிய மகாநாட்டின் அரிய காலத்தை அத

னோடு ஒரு சிறிதும் சம்பந்தமற்ற விஷயங்களுக்காகச் செலவழிக்கப்பட்டுத் தாமதமாயதால், கனம் நாயர் அவர்களோடு தலைவர்கள் புகைப்படமெடுக்கும் காலம் தவறிவிடுமென்று ஞாபகமூட்டிய ஒரு பொறுப்புள்ளவரை இவ்வாறு தூற்றும் ஒரு நிருபருக்கு எவ்வளவு பொறுப்பும் மனுஷத்தன்மையும் இருக்கிறதென்று வாசகர்களே அறிந்துகொள்ளலாம். இந்தப் பொறுப்பு, மனுஷத்தன்மை என்னும் வார்த்தைகளுக்குச் சரியான பொருள் அறியாரென்றே நினைக்கிறேன். அறிந்திருப்பாராயின், பொறுப்பும் மனுஷத்தன்மையும் நிரம்பப்பெற்றுள்ள ஒருவரை, பொறுப்பற்ற தன்மையில், ஒரு சிறிதும் மனுஷத்தன்மையில்லாமல், அவசரப்பட்டு, உண்மையைப் புரட்டி, இவ்வாறு தாக்கியிருக்கமாட்டார். இவரது [illegible] பிடிக்காதவர்களைத் தாக்குவதற்கு இவ்வண்ணம் வார்த்தைகளைத்தான் உபயோகிக்கவேண்டுமென்று எண்ணியிருக்கிறார்போலும்.

அந்தோ! சாட்சியில்லாத போழ்தும் பொறுப்பற்ற தன்மையில் எழுத்தும் மனுஷத்தன்மையில்லாமல் அவசரப்பட்டு எழுத முன் வந்திருப்பீர்! நீர் யாரோ பாவம் தெரியவில்லையே! உங்களைப் போன்ற நிருபர்கள் பத்திராசிரியர்களின் பெயர்களைக் கெடுப்பார்களென்று சொல்லவும் வேண்டுமா? உபசாரப்பத்திரங்களுக்கும் சம்பந்தமில்லாதவைகளுக்கும் இடங்கொடுத்ததனால் மகாநாட்டு நிர்வாகிகளுக்கு மனம் எவ்வளவு சங்கடமுண்டாயிற்றென்பதைப் பொறுப்பும் மனுஷத்தன்மையுமுள்ள நீர் அறிவீரா? நிகழ்ச்சிக் குறிப்பையாவது கண்டீரா? அதில் இடம் பெறாதவற்றிற்கு இடமளித்த நிர்வாகிகளுக்கு நன்றி செலுத்தவேண்டியிருக்க, மிகவும் [illegible] கொண்டிருப்பீர்! உண்மை என்னவென்று தெரியாது [illegible] மகாநாட்டுத் தீர்மானங்களுக்கு [illegible] முடிவில்லாமல் விரைவாகச் செலவிட வேண்டியிருந்தது. அந்தோ! அறியாமையே ஆபரணமாகக் கொண்ட நிருபரே! அந்தோ பாவம்!

திரு. நாயகர் அவர்கள் பல விஷயங்களைக் கவனிக்க வேண்டியவராயிருந்தபடியால் இதைக் கவனிக்காமல் விட்டிருக்கலாம். [illegible]

பொறுப்பும் மனுஷத்தன்மையுமுள்ள,
ஒரு சுயமரியாதைச் செங்குந்தன்



## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் 10-11-வது நிருவாக சபைக்கூட்டங்கள்.

1929ஆம் ஜனவரிமீ 11உ வெள்ளிக்கிழமை மாலை 5-மணிக்கு நமது சங்கத்தின் நிருவாகக் கூட்டம் தம்பு செட்டி தெரு 240-வது நெ. வீட்டில் திரு. சு. குழந்தைவேல் முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிற்று. அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—

1. கீழ்க்கண்ட இடங்களிலிருக்கும் செங்குந்தர் சங்கங்கள் நமது சங்கத்தின் அங்கங்களாக அங்கீகரிக்கப்பெற்றன:—

வைற்றுக்குழி, உத்திரமேரூர், வாழைமங்கலம், திருவாரூர், கடைபதி, கோடம்பாக்கம், திருவல்லிக்கேணி, ஜயபேட்டை, வல்லிபுரத்தான்பாளையம், கொடுங்கையூர், மண்ணச்சநல்லூர், ஐயங்கார்குளம், வசந்தம்பேட்டை.

2. வசந்தம்பேட்டை செங்குந்தர் சங்கத் [illegible] சேர்த்துக் [illegible] தீர்மானமாயிற்று.

3. பஞ்சாமிக்குப் பரீக்ஷை கட்டணத்திற்காக இருபத்தைந்து ரூபா கொடுக்கலாம்.

4. அமைச்சர் தயாரித்துள்ள அறிக்கைப் பத்திரம் அங்கீகரிக்கப் பெற்றது.

5. மகாநாட்டில் பிரேரேபிக்க வேண்டிய தீர்மானங்கள் தயாரிக்கப்பட்டன.

### புது நிருவாக சபையின் முதல் கூட்டம்.

1929ஆம் பிப்ரவரிமீ 24உ ஞாயிற்றுக்கிழமை மாலை மூன்று மணிக்கு நமது சங்கத்தலை நிருவாக சபைக்கூட்டம் தம்பு செட்டித் தெரு 240-வது நெ. வீட்டில் திரு. ஆ. வே. முத்தையா முதலியார், பி.ஏ., பி.எல்., அவர்கள் தலைமையின் கீழ்க் கூடியது.

#### கூட்டத்திற்கு ஆஜராயிருந்தவர்கள்.

திருவாளர் ஆ. வே. முத்தையா முதலியார் அவர்கள், பி.ஏ., பி.எல்.
,, சு. குழந்தைவேல் முதலியார் அவர்கள்.
,, வீ. ரத்தின முதலியார் அவர்கள், பி.ஏ., பி.எல்.,
,, மா. அ. கனகசபை முதலியார் அவர்கள்.
,, மா. பாலகுருநாத முதலியார் அவர்கள்.
,, தி. நா. சபாபதி முதலியார் அவர்கள்.
,, சை. இரத்தினவேல் முதலியார் அவர்கள்.
,, மு. சரவண முதலியார் அவர்கள்.
,, மா. பா. கந்தசாமி முதலியார் அவர்கள், பி.ஏ., பி.இ.
,, P. A. கணபதி முதலியார் அவர்கள், பி.ஏ.,
,, K. P. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், பி.ஏ.
திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் எம்.ஏ., எல்.டி.
,, பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்.

(1) கீழ்க்கண்ட ஊர்களிலுள்ள செங்குந்தர் சங்கங்கள் நமது தலைச்சங்கத்தின் அங்கங்களாக அங்கீகரிக்கப் பெற்றன:—

அம்மாபேட்டை, சென்னிமலை, தென்காசி, புளியரை, அய்யாசமுத்திரம், சித்தோடு, அருப்புக்கோட்டை, திருமயிலாப்பூர், மருத்துவநீமலை, திருமலைவேலர், புத்தகரம்.

(2) ஆலோசனைக்கூட்டத்தார் பிரசுரித்திருக்கும் புத்தகங்களில் நமது வகுப்பைப் பழித்திருக்கும் இடங்களைக் குறித்துக் கொடுப்பதற்குக் கீழ்க்காணும் அங்கத்தவர்களடங்கிய ஒரு சபை ஏற்படுத்தப் பெற்றது:—

திருவாளர்கள் S. குழந்தைவேலு முதலியார், V. இரத்தின முதலியார், M. B. கந்தசாமி முதலியார், P. A. கணபதி முதலியார், M. சண்முகசுந்தர முதலியார்.

(3) ஆலோசனைக்குழு அதிகாரிகளைக் கண்டு அவர்களிடம் நமது குறைகளைக் குறித்து வாதாடுவதற்கு வேண்டிய பதில்களை இலாகா வாரியாகத் தயாரிக்கத் திரு. சு. குழந்தைவேல் முதலியார் அவர்களையும், திரு. V. இரத்தின முதலியார் அவர்களையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

(4) வயது முதிர்ந்தும் எழுத்து வாசனையில்லாதவர்களுக்கு ஒரு கல்வித் திட்டத்தைத் தயாரிக்கத் திரு. மு. சரவண முதலியார் அவர்களையும், திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்

களையும், திரு. பி. ஏ. கணபதி முதலியார் அவர்களையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

(5) சீட்டு ஒன்று அரை ரூபாய் விகிதம் மொத்தம் லக்ஷம் ரூபாய்க்குச் செங்குந்தர் கல்வி நிதியின் பெயரால் ஒரு லாட்டரி போடவேண்டியது. இது சம்பந்தமான திட்டத்தைத் தயாரிக்கத் திருவாளர்கள் S. இரத்தினவேலு முதலியார், வி. இரத்தின முதலியார், சு. குழந்தைவேல் முதலியார், மு. சரவண முதலியார், மா. அ. கனகசபை முதலியார், பி. ஏ. கணபதி முதலியார், தி. நா. சபாபதி முதலியார் முதலியவர்கள் வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர்.

(6) கல்வி நிதிக்காக லாட்டரி சீட்டுகளை விற்கவும், வியாபாரிகளிடையே மகமை ஏற்பாடு செய்யவும், நன்கொடை வசூலிக்கவும், உண்டியல் வைக்கவும், கூட்டமாகச் சென்று ஜில்லாக்கள் தோறும் பிரசாரஞ் செய்யக் கீழ்க்கண்டவர்களை இக்கூட்டம் வேண்டிக்கொள்கின்றது:— திருவாளர்கள் ஆ. வே. முத்தையா முதலியார், தி. நா. சபாபதி முதலியார், ம. சண்முகசுந்தர முதலியார், பி. ஏ. கணபதி முதலியார், வீ. ரத்தினவேல் முதலியார், சு. குழந்தைவேல் முதலியார், மு. சரவண முதலியார், மா. அ. கனகசபை முதலியார், K.P. சுப்பிரமணிய முதலியார்.

(7) 4/82 எண் கணக்கில் இந்தியன் பாங்கிலிருக்கும் ரூ, 1672—0—9-ல் கல்வி நிதிக்கு ரூபாய் 1000-0-0 எடுத்துப் பிரத்தியேகமாக பிக்சட்டிபாசட்டில் சேமித்து வைக்கவேண்டியது.

(8) திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்களை மாதம் 35 ரூபாய்க்குச் 'செங்குந்த மித்திரன்' துணையாசிரியராக இச்சபை நியமிக்கின்றது.

(9) திரு. தி. அ. சண்முக முதலியாருக்கு மாதம் ரூபாய் 25 சம்பளங்கொடுக்கவேண்டும்.

(10) சங்கத்திற்கு மாதம் ரூபாய் 20-க்கு ஒரு பிரசாரகரை நியமிக்க அமைச்சருக்கு அனுமதி கொடுக்கப்பட்டது.

(11) கீழ்க்காணும் அங்கத்தினர்கள் கொண்ட ஒரு ஆசிரியர் சபையைச் 'செங்குந்த மித்திரன்' ஆசிரியருக்குத் துணையாக இருக்குமாறு இச்சபை நியமிக்கின்றது:—திரு. ம. சண்முகசுந்தர முதலியார் (ஆசிரியர்), திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் (துணை ஆசிரியர்), திருவாளர்கள் ஆ. வே. முத்தைய முதலியார், V. இரத்தின முதலியார், பி. ஏ. கணபதி முதலியார், மா. பா. கந்தசாமி முதலியார், மா. அ. கனகசபை முதலியார், மு. சரவண முதலியார், மா. பாலகுருநாத முதலியார், A. S. முத்தைய முதலியார், E. V. சிங்காரவேல் முதலியார், V. S. சங்கர சுப்பிரமணிய முதலியார், S. மீனாக்ஷிசுந்தர முதலியார்.

(12) 'செங்குந்தமித்திரன்' ஆபீசுக்கு வாடகைக்கு ஒரு அலுவலகம் அமர்த்திக்கொள்ள வேண்டும்.

ம. சண்முகசுந்தர முதலியார்,
பி. செ. மாணிக்கவாசக முதலியார்,
அமைச்சர்கள்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்
1927—28 வருஷங்களின்

# அறிக்கைப் பத்திரம்.

ஈரோட்டில் 20-1-29-ல் திரு. சை. இரத்தினவேல் முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிய சங்கத்தின் இரண்டாவது பொதுக்கூட்டத்தில் வாசிக்கப்பெற்றது.

## முதல் பொதுக் கூட்டம்.

பல நாள் உறங்கிக்கிடந்த நம் செங்குந்த ஜனங்களிடையே ஒரு புத்துணர்ச்சியையும் கிளர்ச்சியையும் உண்டாக்கிக் குல முன்னேற்றமே முக்கிய நோக்கமாகக் கொண்டு தென்னிந்தியா முழுவதுமே முயன்று வருவதற்குச் சென்னையில் ஒரு சங்கத்தின் நிறுவுவதற்குத் திருவாளர் திருவாரூர் நா. சபாபதி முதலியார் அவர்கள் கையொப்பமிட்டழைக்கச் சென்னைச் 'சௌந்திரிய மஹா'லில் சென்ற பிரபவ௵ சித்திரைமீ' 17-ம் தேதி (29-4-27) மாலை 6-மணிக்குச் செங்குந்த மகாஜனங்கள் கூட்டமாகக் கூடினர். அக்கூட்டத்தில் காஞ்சிபுரம், திருமயிலாப்பூர், சென்னை, திருவல்லிக்கேணி, சைதாப்பேட்டை, புதுச்சேரி, திருவாரூர், மஞ்சக்கொல்லை, காரைக்கால், குடியேற்றம், தஞ்சாவூர் முதலிய பல இடங்களிலிருந்து வந்த செங்குந்த பிரமுகர்கள் பலர் ஆவலுடனும் ஊக்கத்துடனும் வந்திருந்து ஒருமனப்பட்டு அவைக்களங் நிறைந்து வந்தவர்களாய் ஒருங்கிருந்தனர் அளவளாவிக் குழுமியிருந்தனர். கூட்டம் இனிது நடைபெற வேண்டுமென்றும், அன்று ஸ்தாபிக்கப்பெறும் சங்கம் நீடூழிகாலம் குலமுன்னேற்றத்திற்காக உழைக்கவேண்டுமென்றும் ஆசிகூறிப் பல கனவான்கள் காஞ்சிபுரம், உத்திரமேரூர், புதுவை, மதுரை, திருநெல்வேலி, கோட்டாறு, சென்னிமலை முதலிய இடங்களிலிருந்து கடிதங்களும் தந்திகளும் அனுப்பியிருந்தனர்.



இக்கூட்டத்திற்குச் சென்னை போலீஸ் இலாகா பிங்கர்பிரின்ட் ஆபீஸின் மானேஜராகிய திருவாளர். சு. குழந்தைவேல் முதலியாரவர்கள் தலைமை வகித்தனர். கூட்டத்தின் நோக்கத்தினைத் திரு. தி. நா. சபாபதி முதலியாரவர்கள் விளக்கிக் காட்டினர். சென்னை முத்தியாலுப்பேட்டை கலாசாலையில் பிரதம ஆங்கில போதகாசிரியராகவிருக்கும் திரு. ம. சண்முகசுந்தர முதலியாரவர்கள். எம்.ஏ., எல்.டி., 'நமது முன்னேற்றம்' என்னும் விஷயமாக விரிவுரையொன்று நிகழ்த்தினார்கள். இவ்வுபந்நியாசத்தின் பயனாக அக்கூட்டத்திற்குத் 'தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க'மெனப் பெயரிட்டு, அன்று முதல் குலமுன்னேற்ற விஷயமாகத் தீவிர முயற்சிகள் செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. சங்கத்தின் காரியங்களைக் கவனிக்கக் கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்கள் அடங்கிய நிருவாக சபையொன்றும் உடனே தேர்ந்தெடுக்கப் பெற்றது:—

### தலைவர்.

திரு. P.V. நடராஜ முதலியார் அவர்கள்,
பி.ஏ.,பி.எல்.,
ஹிந்து தேவஸ்தான பரிபாலன போர்டு கமிஷனர்.

### துணைத் தலைவர்கள்.

திரு. S.P. அருணாசல முதலியார் அவர்கள்,
பி.ஏ., பி.எல்.,

திரு. S. குழந்தைவேல் முதலியார் அவர்கள்,
பிங்கர் பிரின்ட் ஆபீஸ் மானேஜர்.

திரு. அரு.சி. தியாகராஜ முதலியார் அவர்கள்,
வர்த்தகர், மிராசு, மஞ்சக்கொல்லை

### அமைச்சர்கள்.

திரு. தி. நா. சபாபதி முதலியார் அவர்கள்,
முனிசிபல் கௌன்சிலர், திருவாரூர்.

திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள்,
எம்.ஏ.,எல்.டி., ஆசிரியர்,
முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.

### பொக்கிஷதார்.

திரு. S. முருகைய முதலியாரவர்கள்,
கவர்ன்மென்ட் பென்ஷனர், திருவாரூர்.

### நிருவாக சபையின் இதர அங்கத்தினர்.

திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள்,
ஜெனரல் போஸ்ட் ஆபீஸ், சென்னை.

திரு. சு. முருகேச முதலியார் அவர்கள்,
பி.ஏ., எல்.டி.,
கல்வி இலாகா ஆபீஸ், சென்னை.

திரு. மா. பா. கந்தசாமி முதலியார் அவர்கள்,
பி.ஏ., பி.இ.,
எலெக்ட்ரிகல் இன்ஜினீர், சென்னை.

திரு. C. S. சபாபதி முதலியார் அவர்கள்,
பி.ஏ.,
சென்னை எழும்பூர் போலீஸ் கோர்ட் மானேஜர்.

திரு. மு. சரவண முதலியார் அவர்கள்,
ஆசிரியர், கார்பொரேஷன் மாடல் ஸ்கூல்,
திருமயிலாப்பூர்.

திரு. சை. இரத்தினவேல் முதலியார் அவர்கள்,
முனிசிபல் கௌன்சிலர், சைதாப்பேட்டை.

திரு. சை. தி. நடேசமுதலியார் அவர்கள்,
ஏஜென்ட் ஆபீஸ், எம். எஸ். எம். ரயில்வே.

திரு. தி. சாந்தலிங்க முதலியார் அவர்கள்,
பென்ஷனர், சைதாப்பேட்டை.

திரு. சு. சடையப்ப முதலியார் அவர்கள்,
முனிசிபல் கௌன்சிலர், சைதாப்பேட்டை.

திரு. T.S. சிங்காரவேலு முதலியார் அவர்கள்
திருமயிலாப்பூர்.

திரு. மு. குரு. ஆறுமுக முதலியார் அவர்கள்,
வியாபாரம், திருமலைராயன்பட்டினம்.

திரு. மு. இராமலிங்க முதலியார் அவர்கள்,
வியாபாரம், திருவல்லிக்கேணி.

திரு. சு. அண்ணாமலை முதலியார் அவர்கள்,
வியாபாரம், புதுவை.

திரு. சை. சமரபுரி முதலியார் அவர்கள்,
ஸ்டாம்பு ஆபீஸ், சென்னை.

திரு. D. N. தீர்த்தகிரி முதலியார் அவர்கள்,
கதர்ஸ்டோர், குடியேற்றம்.

திரு. ஆ. கி. கணபதி முதலியார் அவர்கள்,
வியாபாரம், குடியேற்றம்.

இந்நிருவாக சபையினர் சங்கத்தின் சட்டதிட்டங்களை வரையறுத்து வைக்கவும் அதிகாரம் கொடுக்கப் பெற்றனர்.

இரவு 9-மணிக்குக் கூட்டம் மிகுந்த குதூகலத்தினிடையே கலைந்தது.

## 1927ஷு த்தில் நடந்த வேலை.

### சங்கத்தின் சட்டதிட்டங்கள்.

1927ஷு முடிவதற்குமுன் நிருவாகசபை, முதல் பொதுக்கூட்டத்தில் அதற்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்துக் கிணங்க, நமது சங்கத்துச் சட்டதிட்டங்களை வரையறுத்து வைத்தது. இச்சட்டதிட்டங்கள் 1927ஷு டிசம்பர் மாதத்துச் 'செங்குந்த மித்திர'னில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

### சங்கத்தின் நோக்கங்கள்.

இச் சட்டதிட்டத்தின்படி நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் காரியாலயம் சென்னையிலிருத்தல் வேண்டுமெனவும், செங்குந்த சமூகத்தினை முன்னேற்ற மடையச் செய்வதெனை அதுகொண்டுள்ள முக்கிய நோக்கத்தினை

(1) செங்குந்தர் பெருங்கூட்டமாய் வதியும் இடம் ஒவ்வொன்றிலும் செங்குந்தர் சங்கங்கள் நிறுவி, அவற்றை இத்தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைமையின்கீழ்க் கொண்டுவருதல்,

(2) குல முன்னேற்றத்தின் பொருட்டு நம் குல சம்பந்தமான முக்கிய குறைபாடுகளைக் குறித்து அப்போதைக்கப்போது அந்தந்த சங்கங்களின் அபிப்பிராயங்களைச் சேகரித்து வெளியிட்டு அவற்றை நிவர்த்தி செய்ய ஏற்பாடுகள் செய்தல்,

(3) குல சம்பந்தமான விஷயங்களை ஆராய்ந்து யோசிக்கும் பொருட்டும், நம்மவருள் குலாபிமானத்தையும், ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும் விருத்தி செய்யும் பொருட்டும் நம் சமூகப் பிரதிநிதிகள் கூடிய மகாநாடுகளை அப்போதைக்கப்போது கூட்டுதல்,

(4) கல்லறிவையும் குலாபிமானத்தையும் ஊட்டவல்ல உபந்யாசங்கள் செய்வதற்கும், துண்டுப் பத்திரிகைகள் வெளியிடுவதற்கும் ஏற்பாடுகள் செய்தல்,

(5) நமது சங்கத்தின் வெளியீடாகத் தமிழில் 'செங்குந்த மித்திரன்' என்னும் பெயர் புனைந்த ஒரு பத்திரிகையை நடத்தல்,

(6) செங்குந்த சமூகத்தின் பண்டைக்கால தற்கால நிலைமைகளைக் குறித்தும், இனி நடந்து கொள்ள வேண்டிய முறைகளைக் குறித்தும் விளக்கக்கூடிய நூல்களைத் தயாரித்து வெளியிடுதல்,

(7) செங்குந்த குலமக்கள் நன்மைக்காகவே ஒருபொது உபகார நிதி ஸ்தாபித்தல்,

(8) உயர்தரக் கல்வி கற்க விரும்பும் ஏழைச் செங்குந்த பிள்ளைகளுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதற்கும், தாய் உண்டிச்சாலை ஏற்படுத்துவதற்கும் உதவ வல்ல ஒரு சாசுவதநிதியைத் திரட்டிவைக்கும் பொருட்டுச் சங்கத்துக்குச் சொத்துக்களும் நன்கொடைகளும் சேகரித்தல்,

(9) அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஸ்தலஸ்தாபனம் சட்ட சபை முதலிய சபைகளிலும் உத்தியோக சாலைகளிலும் செங்குந்த சமூகத்திற்குப் போதிய பிரதிநிதித்துவம் பெறச் சமூக முன்னேற்றத்திற்கான நியாயமான எல்லா வழிகளிலும் கிளர்ச்சி செய்தல்,

(10) சங்கத்தின் நோக்கங்களை முற்றுவிப்பதற்கு அவ்வப்போது அவசியமாகவும் அநுகூலமாகவும் தோன்றும் இத்தகைய மற்ற எல்லாக் காரியங்களையும் செய்தல்

என்னும் பத்துச் சாதனங்களால் நிறைவேற்ற முயலவேண்டுமெனவும் நிருமாணமாயிற்று.

### சங்கத்தின் அமைப்பு

மேலும், இச்சட்ட திட்டங்களில், நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கமானது தலைமையாய் மேற்கொண்ட செங்குந்தர் சங்கங்களைத் தனக்கு அங்கமாகக்கொண்டு அவற்றுள் தனி ஒவ்வொன்றும் அவற்றை ஆதரிப்பதுமாகிய ஒரு 'தலைச் சங்கத்தின்' திட்டத்தையுடையதாக இருத்தல்வேண்டுமெனவும், இச்சங்கத்தின் நோக்கங்களுக்கு மாறுபடாத நோக்கங்களையுடைய எந்தச் செங்குந்தர் சங்கமும் (முன்னமே நிறுவப்பெற்றதாயிருப்பினும் இனி நிறுவப்பெறுவதாயினும்) இச்சங்கத்தின் அங்கமாகச் சேருவதற்கு யோக்கியதை யுண்டெனவும், இப்படி அங்கமாகச் சேரும் சங்கம் 'கிளைச் சங்க' மெனப்படுமெனவும், அங்கமாகிய ஒவ்வொரு கிளைச்சங்கமும் தனது அங்கத்தினர் எண்ணிக்கைக்கு அல்லது பொருள் வருவாய்க்குத் தக்கவாறு செய்துகொள்ளும் ஏற்பாட்டின்படி தலைச் சங்கத்திற்கு வருதொகைச் சந்தாவைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றதெனவும், அங்கமாகிய ஒவ்வொரு கிளைச் சங்கமும் தலைச்சங்கத்தின் பொதுக் கூட்டத்துக்குப் பிரதிநிதிகளாக அதன் காரியதரிசியையும் மற்றொருவரை அங்கத்தினரையும் மூன்று வருஷத்திற்கொருமுறை தேர்ந்தெடுக்க வேண்டுமெனவும், இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கூட்டமே தலைச்சங்கத்தின் பொதுக்கூட்டம் எனவும், தலைச்சங்கம் தனது சட்டதிட்டங்களிலும், அப்போதைக்கப்போது பிரசுரஞ்செய்யும் பத்திரிகைகளிலும் வெளியிட்டுள்ள நோக்கங்களுக்கும் முறைக்கும் விரோதமான வழியில் கிளைச் சங்கங்கள் நடந்துகொள்ளக்கூடாதெனவும், யாதாமொரு கிளைச்சங்கம் வருஷக்கட்டணம் செலுத்தத் தவறினாலும், அல்லது தலைச்சங்கத்தின் நன்மைக்குப் பாதகமானதெனக் கருதப்படும் எந்தக் காரியத்தைச் செய்தாலும், தலைச்சங்கத்தோடு யாதொரு சம்பந்தமுமில்லாதவாறு நீக்கப்படுமெனவும், நமது சங்கத்தின் அமைப்பும் வகுக்கப்பெற்றது.

### நம்மவர் மாகாண மகாநாடு.

இச்சட்டங்களிலேயே வருஷா வருஷம் நம்மவர் மாகாண மகாநாட்டினை நமது சங்கத்தின் ஆதரவில் பல ஜில்லாக்களில் கூட்டுவதற்கும் விதிகள் ஏற்பட்டிருக்கின்றன.

### ஆரம்ப வேலை.

நம்குல முன்னேற்றத்திற்கு அடிப்படையாக வேண்டுவது கல்வியென்பதை நிருவாக சபையினர் உணர்ந்து, அதை நம்மவரிடைப் பரப்புவதற்கான வழிகளைத் தேடுதலே சட்டதிட்டங்கள் தயாராவதற்கு முன் நமது சங்கத்தின் முக்கியமான ஆரம்பவேலையாக இருத்தல் வேண்டுமென்னும் முடிவுக்கு வந்தனர். இம்முடிவினையனுசரித்து அதற்குரிய மூகாந்தரங்களாக,

1. நமது குலப் பத்திரிகையாகிய 'செங்குந்த மித்திர'னை வேரூன்றச் செய்தல்,

2. நம்மவர் வசிக்கும் கிராமங்களுக்குத் தக்க பிரசாரகர்களை அனுப்பி அவர்களின் உபந்நியாசங்களின் மூலம் நம்மவரிடையே அறிவுச் சுடர் கொளுத்துதல்,

3. உயர்தரக் கல்வியை நாடும் ஏழைச் செங்குந்த மாணாக்கர்களுக்கு உண்டி உடை உபகாரச் சம்பளம் முதலியன வழங்கிப் போற்றல்

என்னும் மூன்று முறைகளைக் கையாள முதல் முதலில் முற்பட்டனர்.

### 'செங்குந்த மித்திரன்.'

'செங்குந்த மித்திரன்' பத்திரிகையானது நமது சங்கத்தின் மாதவெளியீடாக வெளிவரினும், ஆரம்பத்தில் மிகவும் குறைவாக வருலான சந்தாத் தொகையினைக் கொண்டு அதை நடத்துதல் சங்கத்துக்கு அசாத்தியமென்பதையுணர்ந்து, நமது குலவள்ளல்களுள் மிகவும் சிரியராகிய திருவாளர் திருவாரூர் தி. நா. கலியாணசுந்தர முதலியார் அவர்களும், அவர்தம் இளைய சகோதரராகிய திரு. தி. நா. சபாபதி முதலியாரவர்களும் நமது பத்திரிகை சம்பந்தமாக ஏற்படும் அச்சுச் செலவு, தபாற் செலவு, சிப்பந்திகள் செலவு முதலிய எல்லாச் செலவுகளையும் முதல் வருஷம் தாமே ஏற்றுக் கொள்ளுவதாக முன்வந்து உதவி நமது 'மித்திர'னைக் குழந்தைப் பருவத்தில் பாலூட்டிவளர்த்தனர். இச் சகோதரர்கள்தம் வள்ளன்மைக்குச் செங்குந்த உலகம் என்ன கைம்மாறியற்றப் போகிறது?

பிரபவஷு ஆவணிமீ அதற்குமுன் 'செங்குந்த மித்திரன்' ஆசிரியராக விருந்த ஸ்ரீலஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்கள் வயோதிக மேலீட்டால் தம்மால் பத்திரிகையை நடத்த இயலாமையை யோர்ந்து ஆசிரியர் ஸ்தானத்தினின்றும் விலகிக்கொள்ள, சங்கத்தின் நிருவாக சபையினர் திரு. ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., அவர்களைச் 'செங்குந்த மித்திரன்' ஆசிரியராகத் தேர்ந்தெடுத்தனர். முதலியாரவர்களும் தமது ஆயுள்பரியந்தம் நமது 'மித்திர'னுக்கு யாதொரு ஊதியமுமின்றித் தொண்டியற்றுவதாக முன்வந்து, பத்திரிகையைப் பலவிதத்திலும் சீர்திருத்தி மிக மேன்மையாக நடத்திவருகின்றனர்.

### பிரசாரம்.

இரண்டாவதாக, சங்கத்தின் பால்ய நிலையில் அதற்குப் பணவருவாய் ஒன்றுமின்மையால், நிருவாகசபை அங்கத்தினரும் சங்கத்தின் அமைச்சர்களும் முதல் வருஷம் தத்தம் சொந்த செலவில் வெளியூர்களுக்குச் சென்று தீவிர பிரசாரஞ்செய்ய ஏற்றுக்கொண்டனர். இவ்விதமாகத் தமது சொந்த செலவில் பிரசாரஞ்செய்து சங்கத்தின் நோக்கங்களை முதன் முதலாகச் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள பல கிராமங்களிலும் பரவச்செய்து ஆங்காங்கே செங்குந்தர் சங்கங்கள் நிறுவி வந்தவர்கள் திரு. ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., திரு. மா. அ. கனகசபை முதலியார், திரு. மா. பா. கந்தசாமி முதலியார், பி.ஏ., பி.இ., திரு. தி. நா. சபாபதி முதலியார் முதலியோராவர்.

### ஏழை மாணாக்கர்களுக்கு உபகாரம்.

மூன்றாவதாக, ஏழைச் செங்குந்த மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளமும் உண்டியுமளித்து ஆதரிப்பது நம்மவர் உயர்தரக் கல்வியில் முன்னேற்ற மடைவதற்கு அத்தியாவசியம் என்பதை யுணர்ந்து, சங்கத்தின் பிள்ளைப் பருவத்தில் இதற்குரிய பணவருவாய் இன்றேனும், நிருவாகசபை அங்கத்தினருள் சிலர் மாதம் மாதம் தத்தம் சக்திக்கேற்ற நன்கொடையினை யளித்துதவ முன்வர, ஏழைச் செங்குந்த மாணாக்கர்களிடமிருந்து சங்கத்தின் உபகாரத்துக்கு 1927௵ ஜூலை௴ முதன் முதலாக மனுக்கள் தருவிக்கப்பெற்றன. பலர் மனுக்கள் அனுப்பினரேனும், கீழ்க்கண்டுள்ள மாணாக்கர்களுக்குமட்டும் சங்கத்தினின்றும் அரைச்சம்பளம் அனுமதிக்கப் பெற்றது :—

(1) S. காளத்தி, ஆறாவது பாரம், செந்தோம் ஹைஸ்கூல், மயிலாப்பூர்.

(2) கா. பக்கிரிசாமி }
(3) S. சண்முகம் } ஜூனியர் இன்டர்மீடியட் வகுப்பு, பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

(4) மா. அ. சந்திரசேகரன், மூன்றாவது பாரம், போர்ட் ஹைஸ்கூல், உத்திரமேரூர்.

(5) மா. ர. சிவப்பிரகாசம், மூன்றாவது பாரம், மிஷன் ஹைஸ்கூல், காஞ்சிபுரம்.

(6) வே. சிங்காரவேலு, ஜூனியர் இன்டர்மீடியட் வகுப்பு, இராஜதானிக் கல்லூரி, சென்னை.

(7) தி. பொன்னுசாமி, நான்காவது பாரம், போர்ட் ஹைஸ்கூல், வந்தவாசி.

(8) சி. மீனாக்ஷிசுந்தரம், நான்காவது பாரம், நேஷனல் ஹைஸ்கூல், நாகப்பட்டினம்.

(9) K. வீராசாமி, சீனியர் இன்டர்மீடியட் வகுப்பு, மீனாக்ஷி கல்லூரி, சிதம்பரம்.

(10) K. சண்முகம், நான்காவது பாரம், போர்ட் ஹைஸ்கூல், திருவாரூர்.

(11) . மாணிக்க முதலியார், சீனியர் இன்டர்மீடியட் வகுப்பு, சென்தாமஸ் கல்லூரி, திருச்சூர் கொச்சி.

(12) C. பாலசுந்தரம், முதலாவது பாரம், பென்னாத்தூர் ஹைஸ்கூல், மயிலாப்பூர்.

(13) பா. பொன்னுசாமி, ஜூனியர் இன்டர்மீடியட் வகுப்பு, ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.

இம்மாணவர்களுக்கு உபகாரஞ் செய்வதற்கு அனுகூலமாக மாதம் மாதம் நன்கொடையளித்துவந்த நிருவாக அங்கத்தினர் திருவாளர்கள் தி. நா. சபாபதி முதலியார், ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ. எல்.டி., மா. பா. கந்தசாமி முதலியார், பி.ஏ., பி.இ., மா. அ. கனகசபை முதலியார், ம. இராமலிங்க முதலியார் ஆவர்.

இதன்றி, நமது சங்கத்து அமைச்சரின் முயற்சியால், மணலி சின்னைய்ய முதலியார் தருமசாலையில் க. வச்சிரவேலு (பச்சையப்பன் கல்லூரி பி.ஏ. வகுப்பு மாணவர்), க. பக்கிரிசாமி (பச்சையப்பன் கல்லூரி இன்டர்மீடியட் வகுப்பு மாணவர்) என்னும். இரண்டு செங்குந்த மாணாக்கர்களுக்கு இடங்கிடைத்தது; க. வச்சிரவேலுக்குப் பச்சையப்பன் கல்லூரியில் சம்பளமின்றிப்படிக்க அநுமதியுங் கிடைத்தது. மேலும், திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி., அவர்கள், க. சண்முகம் (பச்சையப்பன் கல்லூரி இன்டர்மீடியட் வகுப்பு மாணவர்) என்னும் செங்குந்தமாணாக்கருக்குத் தமது இல்லத்தில் உணவளித்து வந்தார். இவ்வருஷ முடிவில் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியிலிருந்து இன்டர்மீடியட் பரீக்ஷைக்குச் சென்ற ஈ. வே. சோமசுந்தரம் என்னும் மாணவர்க்கு நமது சங்கம் பரீக்ஷைக் கட்டணம் கொடுத்துதவியது.

### சங்கத்துக்கு வியாபாரிகளின் மகமை.

நிருவாகசபை அங்கத்தினர்களின் நன்கொடையால் மட்டும் வருஷா வருஷம் இத்தருமம் சங்கத்தின் ஆதரவில் நடைபெறுவது அசாத்தியமாகுமாதலால், இதற்கென ஒரு மாபெரு நிதியைத் திரட்டிவைக்க, நமது தலைச்சங்க அமைச்சர்களாகிய திருவாளர்கள் தி. நா. சபாபதி முதலியாரவர்களும், ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்டி., அவர்களும் அரும்பாடுபட்டுச் சென்ற ஆவணி௴ தொடங்கிச் சென்னையிலும், சென்னைக்கடுத்த சைதாப்பேட்டையிலும், காஞ்சிபுரத்திலும் கைலி வியாபாரஞ் செய்யும் செங்குந்த வியாபாரிகளிடம் ஒரு மகமை ஏற்பாடு செய்தனர். அதன்படி, இவ்வியாபாரிகளுள் சிலர் தம்மிடம் விற்பனையாகும் ஒரு முடிக்கு ஒரு பை வீதம் நமது சங்கத்திற்கு மகமை யளிப்பதாகவும், மற்றையோர் தமது வியாபாரத் தலங்களில் நமது சங்கத்தின்பேரில் ஒரு உண்டியலை வைத்து அதில் சேரும் பணத்தை மாதம் மாதம் கொடுத்து உதவுவதாகவும் வாக்களித்து அதன்படியே இதுகாறும் கொடுத்து வருகின்



றனர். இவ்வருவாயே நமது சங்கத்தின் முக்கியமான வருவாயாகும். இதர நகரங்களிலும் கிராமங்களிலுமுள்ள நம்மினத்து இதர வியாபாரிகளுள்ளும் இவ்வேற்பாட்டினை நிலைநாட்டுவதற்கு நமது சங்கத்து உத்தியோகஸ்தர்களுக்குப் போதிய அவகாசம் இன்னும் கிடைக்கவில்லை.

### போலியர்களுக்கு மறுப்பு.

இவ்வருஷத்தில், இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள நாகபாசத்தார் என்பவரும், கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள மேளக்காரர் என்பவரும் நூதனமாகவும் சில வருஷங்களாகவும் செங்குந்தர் என்னும் பெயரைப் புனைந்துகொண்டு, தத்தமிடையேயுள்ள பொட்டுக்கட்டும் பழக்கம் செங்குந்த சமூகத்திற்கு நெடுங்காலமாக உண்டெனச் சாதித்துச், சென்னைத் துரைத்தனத்தாருக்கு மகசர் மூலமாகவும் பத்திரிகைகளில் பகிரங்கமாகவும் தமது தீர்மானங்களையும் அபிப்பிராயங்களையும் தெரிவித்து வெளியிட்டு, அவர்கள் ஒட்டிக்கொள்ளத் தேர்ந்தெடுத்த நமது செங்குந்த சமூகத்திற்கு அபகீர்த்தியையும் அவமானத்தையும் மிகவும் நன்றியற்ற முறைகளில் உண்டாக்க முயன்று வந்த சூழ்ச்சிகளை நமது சங்கத்தின் நிருவாக சபையினர் வெகு அழுத்தமாகக் கண்டித்து வெளிப்படுத்தி, உண்மைச் செங்குந்தர்களிடையில் அத்தகைய தீய பழக்கம் யாதொன்றும் எப்பொழுதும் இருந்ததில்லை யென்னும் உண்மையைப் பெருவாரியாக விளம்பரப்படுத்திப் பொது ஜனங்கள் மேற் சொன்ன கூட்டத்தாருடைய சூழ்ச்சிகளால் மயங்காதிருக்கும் வண்ணம் பத்திரிகை வாயிலாலும் உபந்நியாச வாயிலாலும் அதிதீவிரமான பிரசாரஞ்செய்து வந்தனர். உண்மைச் செங்குந்தர்களனைவரும் எமது தொண்டினைப் போற்றி எமக்கு இது விஷயமாகப் பெரிதும் ஆதரவளித்தமை மிகவும் பாராட்டற்பாலதே.

## 1928௵ நடந்த வேலை

1928௵ முதல் புதிய சட்டதிட்டங்களில் வகுத்துக் காட்டிய முறைகளை யொட்டி வேலை செய்யவேண்டுமென நிருவாகசபை தீர்மானித்தது.

### ‘செங்குந்த மித்திரன்’

இத்தீர்மானத்துக் கிணங்கச் ‘செங்குந்த மித்திரன்’ பத்திரிகையை இரண்டாம் தொகுதி முதல் நமது சங்கமே சகல பொறுப்புக்களையும் ஏற்று நடத்திவர வேண்டுமெனஏற்பாடாயிற்று.

இப்பொறுப்பினை ஏற்றுக்கொள்வதில் நமது சங்கத்தினர்க்குத் தைரியமும் உற்சாகமும் ஏற்படுமாறு, சென்னையில் பிரபலமாகக் கைலி வியாபாரம் நடத்தும் மதராஸ் பாலையகாட் கம்பெனியார், நமது ‘மித்திரன்’ காரியாலயத்துக்கும் சங்கத்துக்கும் தமது கட்டடத்திலேயே யாதொரு குடிக்கூலியுமின்றி இடந்தந்ததன்றி, கம்பெனியின் கூட்டாளிகள் எழுவரும் மாதத்துக்கு ஒருவராக நமது ‘மித்திரன்’ அச்சுச் செலவுக்கு நூறு நூறு ரூபாய் நன்கொடை தந்து பிரதி வருஷமும் உதவுவதாக வாக்களித்தனர். இந்த ஏற்பாட்டின்படி இவ்வருஷத்திற்கு ஷை கம்பெனியாரிடமிருந்து மட்டும் நன்கொடையாக எழுநூறு ரூபாய் நமது சங்கத்திற்கு வரவு ஏற்பட்டிருக்கிறது. இவர்கள் தம் வள்ளன்மைக்குச் செங்குந்த உலகம் எவ்வளவு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறதென்பதை எவரும் அளவிட்டுச் சொல்ல வியலாது.

நமது பத்திரிகையும் இவ்வருஷம் பெரிதும் விருத்தியடைந்திருக்கிறது; முன்னினும் பெரிதாகவும், விஷய புஷ்டியுள்ளதாகவும், பலரும் மெச்சும் முறைகளிலும் வெளிவருகின்றது. இடைவிடாத பிரசாரத்தின் பயனாக இவ்வருஷ ஆரம்பத்தில் 1200 தொகையுள்ள சந்தா நேயர்கள் சில மாதங்களில் 3200 தொகையுள்ளவர்களாகப் பெருகியிருக்கின்றனர். எனினும், இவர்களுள் 1500 அன்பர்கள் இவ்வருஷத்தின் சந்தாவினை இன்னும் செலுத்தவில்லை என்பதைக் குறிப்பிட வருந்துகிறோம். சந்தாதாரர்களின் எண்ணும், அவர்கள் மொத்தத்தில் செலுத்தும் சந்தாத் தொகையும் இன்னும் பெருகுமேல், நமது பத்திரிகையை இன்னும் மேலான ரீதியில் நடத்த இயலுமென்பதற்கு ஐயமில்லை.

### பிரசாரம்.

சென்ற ஆண்டில் இயன்றதைக் காட்டிலும் அதிகமான பிரசாரத்தினை இவ்வாண்டில் செய்ய வேண்டுமென்னும் நோக்கத்தோடு, சங்கத்தின் பிரசாரகர்களாக இருவரைச் சம்பளத்திற்கு அமர்த்திக் கிராமங் கிராமமாக அனுப்பி, ஆங்காங்கே சங்கங்கள் நிறுவி நம்மவரிடை அறிவுச் சுடரைக் கொளுத்திப் புத்துணர்ச்சி யுண்டாக்கவேண்டுமென இவ்வருஷ ஆரம்பத்தில் நிருவாக சபை தீர்மானித்தது. இத் தீர்மா

னத்தின்படி, தமிழ்ப்புலவர்கள் திருவாளர்கள் பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்களும், தி. அ. சண்முக முதலியார் அவர்களும் நமது சங்கத்தின் பிரசாரகர்களாக அமர்த்திக்கொள்ளப் பெற்றனர். நமது பிரசாரகர்களின் இடைவிடாத உழைப்பினால் இவ்வாண்டில் செங்கற்பட்டு, வடஆற்காடு, தென்னாற்காடு, சேலம், கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் வெகு தீவிரமான பிரசாரம் நடைபெற்றது. இப்பிரசாரத்தின் பயனாக நூற்றுக் கணக்கான கிராமங்களில் செங்குந்தர் சங்கங்கள் முதல் முதலாக நிறுவப்பெற்றதோடு, பலவிடங்களிலுமுள்ள நம்மவரிடையே என்றுமிராத முன்னேற்ற உணர்ச்சியும் கிளர்ச்சியும் தோன்றிக்கொண்டு வருகின்றன. இதற்கு முக்கிய காரணம் நமது பிரசாரகர்கள் கூலிக்கு மாரடித்துக் கொள்ளுபவர்கள் போல் இல்லாமல், குலமுன்னேற்றத்திற் குழைப்பதே தமது வாணாளின் சிறிய கடனென்பதைக் கடைப்பிடித் தொழுகும் சிறந்த குலாபிமானிகளாக இருப்பதேயாம் என்பதை இச்சங்கத்தின் நிருவாக சபை மிகவும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ளுகிறது. பல சமயங்களில் நமது பிரசாரகர்கள் போதிய ஊணுறக்கமின்றிப் பிரயாணத்தினால் ஏற்படக்கூடிய அபமிரிதமான கஷ்டங்களிடையே தமது வேலையைத் தீர்மையாகவும் மிக்க ஊக்கத்துடனும் செய்துவந்திருக்கின்றனர். இதற்கெல்லாம் அவர்கள் பெறுவது வெகு சொற்ப ஊதியமே. இத்தகைய தியாகிகள் நமது சங்கத்தின் பிரசாரகர்களாக வாய்த்தது நம் குலம் செய்த பூர்வ புண்ணிய பலனேயாகும்.

இவ்வருஷத்தின் தொடக்கத்திலும் கோடைகால விடுமுறையின் போதும் நமது சங்கத்தின் அமைச்சரும், 'செங்குந்த மித்திரன்' ஆசிரியருமான ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., அவர்களும், நிருவாகசபை அங்கத்தினர் திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்களும் மொத்தத்தில் ஏறக்குறைய மூன்றுமாத காலம் கோயமுத்தூர், வடஆற்காடு, தஞ்சை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணம் செய்து வெகு தீவிரமான பிரசாரம் நடத்தினர். இப்பிரசாரங்களின் விவரங்களும் பலன்களும் நமது 'மித்திர'னிலும் தினசரிப் பத்திரிகைகளிலும் அப்போதைக்கப்போது பிரசுரிக்கப்பெற்று வந்தன.

பலவிடங்களிலும் நமது சங்கப் பிரசாரகர்களை அன்புடன் வரவேற்று அவர்களுக்கு அவசியமான அநேக உதவிகளை வெகு உற்சாகமாகச் செய்துவரும் குலாபிமானிகளுக்கு இச்சந்தர்ப்பத்தில் எமது வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நமது சங்கத்துப் பிரசாரத்தின் பலனாகப் பல இடங்களிலும் கட்சி பேதங்களினால் ஏற்பட்டிருந்த தொல்லை மனஸ்தாபங்களும் சச்சரவுகளும் தீர்ந்து ஒற்றுமையும் கட்டுப்பாடும் இருப்பது பலருக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தரும் ஒரு விஷயமாகும்.

## கிளைச் சங்கங்கள்.

இதுவுமன்றி, இப்பிரசாரத்தின் பயனாக இவ்வருஷம் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தினைத் தலைசங்கமாகக் கொண்டு பல கிளைச் சங்கங்கள் கட்டணம் செலுத்திச் சேர்ந்திருக்கின்றன. அவைகளின் ஜாபிதாவும், அவைகள் தலைச்சங்கத்தின் பொதுக் கூட்டத்திற்குத் தேர்ந்தெடுத்த அனுப்பியுள்ள கனவான்களின் பெயர்களும் மற்றொரு இடத்தில் காண்க.

## பிரசாரத்துக்குப் பொருள்வேண்டும்

இது வரைக்கும் நடந்திருக்கும் பிரசாரம் வெகு தீவிரமானதாயினும், நூற்றுக்கணக்கான செங்குந்தர் கிராமங்களுக்கு நமது குலமுன்னேற்றக் கிளர்ச்சி இன்னும் எட்டவில்லை என்பதையும் குறிப்பிடல் அவசியம். இதன் காரணம் யாதோவெனில், நமது சமூகத்தவரிடையே அபூர்வமான பிரசாரம் செய்வதற்கு இருவர் போதாமென்பதேயாகும். சங்கத்தின் பொருள் வருவாய் இடந்தருமாயின், கூடிய சீக்கிரத்தில் ஜில்லாவிற்கு இரு பிரசாரகர்களை நியமிக்கப்பெறல் அவசியமாகும்.

இதோடு, புகைப்படங்களைப் பெரிதாக்கிக் காட்டும் இயந்திர விளக்குகளை இரண்டு மூன்றும், தொழிலையும் அபிவையும் விளக்கவல்ல பலவிதமான புகைப்படங்களும் நமது சங்கத்துக்குச் சொந்தமாக வாங்கி நமது பிரசாரத்திற்கு உதவியாக வைத்துக்கொண்டால் நிறைந்த பயன் தருமெனக் கருதப்படுகிறது. ஒரு ஆயிர ரூபாயிருந்தால் இவற்றின் யாவற்றையும் வாங்கி விடலாம். இவ்வேலைக்கென நமது சங்கத்திற்கு நன்கொடை உதவவல்ல கனவான்கள் பலர் இவ்வருஷம் முன்வருவாரென்றே நம்புகின்றோம்.



## மாணாக்கர்களுக்கு உபகாரம்.

நம் குலமுன்னேற்றத்திற்கு அடிப்படையானவை உயர்தரக் கல்வியும், தொழிற் கல்வியும் என்னும் உண்மை பலர்க்குப் புலனாயிருந்தும், அவற்றைப் பெறும் செங்குந்த மாணாக்கர்களின் தொகை மிகவும் சிறிதாக இருப்பதற்குக் காரணம் நம்மினத்தவருள் பெரும்பான்மையோரின் ஏழ்மை நிலைமையாகையால், இது விடயமாக அதிகமும் ஒத்தாசை யளிக்கவேண்டியது அவசியமென்பதையுணர்ந்து நமது சங்கம் சென்ற வருஷம் கொடுத்த உபகாரச் சம்பளங்களை விட இவ்வருஷம் அதிகமாக உதவ முயற்சிக்கவேண்டுமெனத் தீர்மானித்தது. இத்தீர்மானத்தின் படி,

1. சென்ற வருஷம் நமது சங்கத்தின் உபகாரச் சம்பளத்தைப் பெற்று மேல் வகுப்புக்கு மாறிய காஞ்சீபுரம் பிள்ளையார் பாளையம் பக்கிரிசாமிக்கும், S. சண்முகத்திற்கும், மாணம்பதி R. சிவப்பிரகாசத்திற்கும், அ. சந்திரசேகரனுக்கும், திருவாயில் C. பாலசுந்தரத்திற்கும், டிராயிட்ஸ்மன் வகுப்பில் சேர்ந்திருக்கும் S. காளத்திக்கும், அய்யம்பாளையம் T. பொன்னுசாமிக்கும், திருநெல்வேலி P. பொன்னுசாமிக்கும், இவ்வருஷமும் அரைச்சம்பளம் கொடுத்து வரவேண்டுமென்றும்,

2. புதிதாக இவ்வருஷம் மனு அனுப்பியவர்களுள், திருநெல்வேலி V. சுப்பிரமணியத்துக்கும் (முதலாவது பாரம்), அப்பாசமுத்திரம் N. அருணாசலத்துக்கும் (மூன்றாவது பாரம்), சிதம்பரம் பி. சதாசிவனுக்கும் (ஆறாவது பாரம்), மதுரை M. அங்குசாமிக்கும் (இண்டர்மீடியட் வகுப்பு) ஜூலை மாதம் முதல் அரைச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்றும்,

3. காஞ்சீபுரம் திருவேங்கடத்திற்கும் (இரண்டாவது பாரம்), முனுசாமிக்கும் (மூன்றாவது வகுப்பு), நவம்பர் மாதம் முதல் அரைச் சம்பளமும், திருநெல்வேலி மாணவர் லக்ஷ்மிக்கு (முதல் பாரம்) நவம்பர் மாதம் முதல் மாதம் ஒன்றுக்கு ரூபாய் மூன்றும், கோயமுத்தூர் M. R. பெருமாளுக்கு (ஜூனியர் இண்டர்மீடியட் வகுப்பு) அக்டோபர் மாதம் முதல் பாசசுமாதம் வரையில் சாப்பாட்டுச் செலவுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் பத்தும் கொடுக்க வேண்டுமென்றும்,

4. சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் ஜூனியர் பி.ஏ. வகுப்பில் வாசிக்கும் சேலம் ஜில்லா மோகனூர் கிராமத்து U. S. செல்லாண்டிக்குச் சாப்பாட்டுச் செலவுக்காக அம்மாணவர் சென்னையிலிருக்கும் மாதங்களுக்கெல்லாம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் எட்டு வீதம் கொடுத்துவர வேண்டுமென்றும் ஏற்பாடாயிற்று.

மேலும், நமது சங்கத்து அமைச்சரின் முயற்சியால் சென்னை நெசவுத்தொழிற் சாலையில் சூபர்வைசர் வகுப்பில் படிப்பதற்குத் திருமாற்பேறு இராஜவேலு என்னும் மாணாக்கருக்குத் துரைத்தனத்தாரின் உபகாரச் சம்பளமாக மாதம் இருபது ரூபாயும், பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. வகுப்பில் வாசிக்கும் மோகனூர் U. S. செல்லாண்டி என்னும் மாணாக்கருக்கு அக் கல்லூரியில் சம்பளமின்றிப் படிக்கும் உரிமையும், அக் கல்லூரி மாணவர் விடுதியில் குடிக்கூலியின்றி இருந்துகொண்டு அரைக் கட்டணத்திற்குச் சாப்பிடுவதற்கு அனுமதியும், திருச்செங்கோடு பொ. முனியப்பன் என்னும் மாணவர்க்கு அக் கல்லூரியில் சம்பளமின்றிப் படிக்கும் உரிமையும் கிடைத்தன. இவ்வருஷம் இண்டர்மீடியட் பரீக்ஷைக்குப் போகும் பச்சையப்பன் கல்லூரி பக்கிரிசாமிக்குப் பரீக்ஷைக் கட்டணம் நமது சங்கம் உதவியது. அதே கல்லூரியில் அதே வகுப்பில் வாசித்துவந்த காஞ்சீபுரம் S. சண்முகமென்னும் மாணவர் சாப்பாட்டுச் செலவுக்கு மாதம் மாதம் பதினொன்று ரூபாய் வட்டியில்லாத கடனாக இவ்வருஷம் நமது சங்கத்தினின்றும் கொடுக்கப்பட்டு வந்தது. நமது அமைச்சர் திரு ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி., அவர்கள் தமது இல்லத்தில் திருச்செங்கோடு பொ. முனியப்பனை வைத்துப் போஷித்து வருகிறார்.

## மாணவர் உபகார நிதியின் அவசியம்.

இவ்வளவு ஒத்தாசை செய்தும், உதவிக்குப் பாத்திரமானவர்கள் ஏழை மாணாக்கர்களிடமிருந்து வந்த இன்னும் எத்தனையோ மனுக்களைத் தள்ளிவிட நேர்ந்தது பற்றி நமது சங்கம் மிகவும் வருந்துகின்றது. சாசுவதமான உபகாரச்சம்பள நிதியொன்று ஏற்பட்டு, அதன் வட்டி வருவாயிலிருந்து தக்கவர்களெல்லோருக்கும் உதவி செய்யவல்ல நிலைமை நமது சங்கத்துக்கு அமைந்தாலன்றி, இவ்விஷயத்தில் போதிய அளவு உபகாரஞ்செய்ய இயலாது. இந்நிதியிலிருந்து, வெளிநாட்டுச் சர்வகலாசாலைப் பயிற்சிக்கும் கைத்தொழில் கல்விக்கும், புத்தி கூர்மையும் இவ்விஷயங்களில்

னக்கமுள்ள மாணாக்கர்களைத் தேர்ந்தெடுத் தனுப்புவதற்கு வேண்டிய அளவு வருவாய் ஏற்படுதல் அவசியம். இத்தகைய நிதியினைத் திரட்டித் தருவதற்கு நம் குல வள்ளல்கள் பலரும் கூடிய சீக்கிரம் முன்வருவார்களென்றே நம்புகின்றோம்.

பரம ஏழைகளாகிய சில புத்தி கூர்மையான செங்குந்த மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளமே யன்றி உண்டி உடை இருப்பிடங்களையும் இலவசமாகத் தந்துதவுவதும் அவசியமே. இதற்கொரு தரும விடுதியினை இராஜதானியாகிய சென்னையில் ஏற்படுத்த நமது சங்கம் முயன்று வருகின்றது. இதற்கும் ஒரு மா பெருநிதி அவசியமென்பதைச் சொல்லவேண்டியதில்லை. ஆயினும், ஆர்வமிக்கோரும் அபிமானிகளும் முன்னின்றால் ஆகாததொன்றுமில்லை.

**சென்னையில் செங்குந்த விடுதியின் அவசியம்.**

மேலும், பல இடங்களிலிருந்து வந்து சென்னையில் உயர்தரக் கல்வியை நாடும் நமது செங்குந்த மாணாக்கர்கள் தற்போது அவரவர்கள் கல்லூரி மாணவர் விடுதிகளிலோ பிராமணர் சாப்பாட்டு ஹோட்டல்களிலோ தங்கி அபரிமிதமான பணத்தைச் சாப்பாட்டுக்கும் குடிக்கூலிக்கும் இதர சௌகரியங்களுக்கும் செலவழித்தும், தகுந்த அக்கறையுள்ள மேலபார்வையின்றிச் சுகமும் நலமும் வேண்டிய அளவு பெறுமலிருக்கின்றனர். இக்குறையை நீக்க நமது சங்கத்திலுள்ள அறிவாளிகளின் மேல்பார்வையில் ஒரு செங்குந்த மாணவர் விடுதியைச் சென்னையில் ஏற்படுத்துதல் அவசியமென்பதை எவரும் ஒப்புக்கொள்ளாமலிரார். இதோடு வியாபார நிமித்தமாகவும், கோர்ட் வியாச்சியங்களுக்கும், இதர அலுவல்களுக்கும் சென்னைக்கு அடிக்கடி வந்துபோகும் செங்குந்த கனவான்கள் சௌகரியமாகத் தங்கியிருக்கவும் நகரத்தார் மடங்களைப்போன்ற ஒரு விடுதி நம்மவர்களுக்கு இந்நகரில் இருக்க வேண்டியதும் அவசியமாகின்றது. இதற்கெல்லாம் வேண்டிய நிதிகளைச் சீக்கிரமாகத் திரட்டி மேற்சொன்ன விடுதிகளை யாதொரு தாமதமுமின்றிக் கட்டுவிக்கவும் நமது சங்கம் முயன்று வருகின்றது. (இவ்விடுதிகளைப்பற்றிய விவரங்கள் விபவஹூ சித்திரை, ஆவணி மாதங்களில் வெளிவந்த 'செங்குந்த மித்திர'னில் பத்திராசிரியரின் முன்னுரையிற் கண்டுகொள்க). வேண்டிய பொருள்களை அவசியமான இம்முயற்சிகள் சித்திபெறுமாறு வழங்குவோர் சிறந்த புண்ணிய புருஷர்களாவர் என்பதை இவ்விடத்தில் குறிப்பிடுகின்றோம்.

**நம்மவர் ஜனத்தொகையையும் ஓட்டர் தொகையையும் பொருளாதார நிலையையும் கணக்கிட முயற்சி.**

இவ்வருஷம் நமது அமைச்சரால், நம்மவர் ஜனத்தொகையினையும், பொருளாதார நிலைமையினையும், மக்கள் சமூகத்திலவரிடையே அமைந்துள்ள அந்தஸ்தினையும் அபிவிருத்தியினையும் கிராமங்கள்தோறும் செல்லும் நமது சங்கப் பிரசாரகர்களும் மற்றையோரும் உணர்ந்து நமது சங்கத்துக்குத் தெரிவிக்குமாறு ஒரு அட்டவணை தயாரிக்கப்பெற்றது. அதன் பிரதியொன்று நமது மித்திரனில் விபவஹூ ஆடியில் வெளியாயிற்று. ஆயினும் இவ்வட்டவணையினைப் பூர்த்திசெய்து அனுப்பியோர் வெகு சிலரேயாவர். மற்றையோர் இவ்வருஷம் இவ்விவரங்களை அனுப்புவார்களென்று எதிர்பார்க்கின்றோம். நமது கிளைச் சங்கங்களும் இவ்விஷயத்தில் முனைந்து வேண்டிய விவரங்களைச் சேகரித்தனுப்புமென எதிர்பார்க்கின்றோம்.

தாலூகா போர்டு முனிசிபாலிடி தேர்தல்களில் நம்மவர்கள் வெற்றியடைய வேண்டுமென்னும் நோக்கத்துடன் ஆங்காங்கேயுள்ள ஓட்டர்களின் தொகையைச் சாதிவாரியாகப் பிரித்து உணர்த்துமாறு மற்றொரு அட்டவணையையும் நமது சங்கம் இவ்வருஷம் தயாரித்திருக்கின்றது. அது இத்தேர்தல்களில் நிற்கும் செங்குந்த அபேக்ஷகர்களுக்கு மிகவும் பிரயோஜனப்படும்.

**ஸ்தல ஸ்தாபனங்களில் நம்மவர்க்குப் பிரதிநிதித்வம் வேண்டுமென்று கிளர்ச்சி.**

தேர்தல்களில் நம்மவர் எவரும் வெற்றிபெற இயலாத ஸ்தல ஸ்தாபனங்களுக்கெல்லாம் [illegible] நம் சமூகத்துப் பிரதிநிதிகளாக நம்மவர்கள் நியமிக்கப்பெற வேண்டுமென்னும் நோக்கத்துடன் சங்கம் இவ்வருஷம் அதற்குரிய அதிகாரிகளுக்கு மனு செய்துகொண்டது. அம்மனுவில், நம்மவர் மொத்த தொகை அதிகமாயிருந்தும், நம்மவர் செய்யும் நெய்தற்றொழில் அதி முக்கியமானதாயினும், பெரும்பாலனையோர் பல கிராமங்களிலும் [illegible] சிறு சிறு கூட்டங்களாகச் சிதறிக் கிடப்பதாலும், மிக்க ஏழ்மை நிலைமையிலிருப்பதாலும், நம் குலத்து அபேக்ஷகர்கள்



தேர்தல்களில் வென்று வருவது அசாத்தியம் என்பதைக்கூறி, நம்மினத்துப் பிரதிநிதி ஒருவரேனும் ஜில்லா போர்ட், தாலூகா போர்ட், முனிசிபாலிடி, யூனியன் போர்ட், பஞ்சாயத்து கோர்ட், ஹிந்து தேவஸ்தான பரிபாலன சபை, ஜில்லா கல்விச் சபை முதலிய எல்லா ஸ்தல ஸ்தாபனங்களிலும் சர்க்கார் நாமினேஷனில் அமர்த்தப்பெற வேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொள்ளப்பெற்றது. பல அதிகாரிகளிடமிருந்து திருப்திகரமான பதில்கள் வந்திருக்கின்றன.

எனினும், நம்மவரிடையேயுள்ள கட்சிப் பிரதிகட்சிகள் தொலைந்து ஒற்றுமை அதிகமாக ஏற்படுமாயின், பல முனிசிபாலிடிகளையும் தாலூகா போர்டுகளையும் நம்மவர் ஆதிக்கத்திலேயே வைத்திருக்க இயலும் என்பதை இங்குக் குறிப்பிடுகின்றோம். இது இனி இயலுமென்றே நம்புகின்றோம்.

**நம்மவர் முதல் மகாநாடு.**

இதற்கறிகுறி நம்மவர்களின் மாகாண மகாநாட்டினை முதன் முதலாகக் கூட்டிவைக்க நமது சங்கம் ஒரு வருஷ காலமாய்ச் செய்து வந்த முயற்சிகள் 1929ஹூ ஜனவரிமீ 19, 20-தேதிகளில் ஈரோட்டில் சித்திபெற நேர்ந்ததேயாகும். 'தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாடு' என்னும் பெயரால் நம்மவர் மகாநாட்டினைச் சமூக, வர்த்தக, வாலிபர் என்னும் மூன்று பிரிவாகக் கண்காட்சிகளுடன் இங்கு அதிவிமரிசையாகக் கூட்டிவைப்பதற்குத் துணையாய் இருந்த நமது சங்கத்தின் அங்கங்களுக்கு நமது சமூகத்தினரது என்றும் மறவாத நன்றி உரியதாகுக.

**வரவு செலவு கணக்கு.**

சங்கம் ஆரம்பித்த நாள் முதல் 1928ஹூ டிசம்பர்மீ 17உ வரைக்கும் அதன் வரவு செலவு விபரங்கள் கீழே அச்சிடப்பெற்றிருக்கின்றன.

**நன்றி செலுத்தல்.**

சங்கத்திற்கு நன்கொடையாகவும், மகமையாகவும், உண்டியல் வசூலாகவும் பண உதவி புரிந்து வரும் கனவான்களுக்கும், சங்கத்தின் முயற்சிகளிலும் நோக்கங்களிலும் பரிவுகாட்டி ஆதரவளித்த கனவான்களுக்கும் எமது வந்தனம் உரியதாகுக.

இங்ஙனம்,

நிருவாக சபையின் உத்தரவின்படி,

தி. நா. சபாபதி முதலியார்,

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,

அமைச்சர்கள்.

அனுபந்தம் 1.

**தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் 1927—28-வது வருடத்திய கணக்கு**

வரவு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1. செங்குந்தமித்திரன் வரவு:— | | | |
| சந்தா ... | 2,573 | 1 | 0 |
| நன்கொடை ... | 700 | 0 | 0 |
| 2. சங்கத்து வரவு:— | | | |
| மகமை ... | 723 | 9 | 1 |
| உண்டியல் .. | 1,492 | 14 | 5 |
| உபகாரச்சம்பள நன்கொடை... | 468 | 8 | 0 |
| இராஜன்கொடை ... | 162 | 8 | 0 |
| கிளைச்சங்கக் கட்டணம் ... | 207 | 8 | 0 |
| | 6,328 | 0 | 6 |
| பாங்கி வட்டி ... | 17 | 11 | 3 |
| ஆக ... | 6,345 | 11 | 9 |

செலவு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1. மித்திரன் செலவு:— | | | |
| அச்சுச் செலவு ... | 1,314 | 14 | 0 |
| பயிண்டு ... | 251 | 0 | 0 |
| காகிதச் செலவு ... | 819 | 6 | 6 |
| தபால் ,, ... | 555 | 3 | 3 |
| சில்லரை ,, ... | 3 | 14 | 0 |
| 2. சங்கச் செலவு.— | | | |
| பிரசாரம் ,, ... | 493 | 15 | 11 |
| சிப்பந்திகள் ,, ... | 484 | 1 | 0 |
| தந்தி தபால் ,, ... | 109 | 12 | 0 |
| ஸ்டேஷனரி ,, ... | 2 | 8 | 0 |
| உபகாரச் சம்பளம் ... | 512 | 4 | 0 |
| சில்லரை ,, ... | 194 | 1 | 6 |
| அனுமதி ,, ... | 184 | 14 | 3 |
| கையிருப்பு ... | 77 | 2 | 1 |
| | 4,963 | 0 | 6 |
| இந்தியன் பாங்கியில் இருப்பு... | 1392 | 11 | 3 |
| ஆக ... | 6,345 | 11 | 9 |

## கிளைச்சங்கங்களும் அவற்றின் பிரதிநிதிகளும்.

### சென்னை ஜில்லா

**சென்னைச் செங்குந்த வாலிபர் சங்கம்.**

திருவாளர் ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,
,, K. P. சுப்பிரமணிய முதலியார், பி.ஏ.

**சென்னைச் செங்குந்த வியாபாரிகள் சங்கம்.**

,, T. S. R. M. நடேச முதலியார்
,, S. K. M. இரத்தினசாமி முதலியார்.

**திருவல்லிக்கேணி வீரவாத சங்கம்.**

,, M. ப. கந்தசாமி முதலியார், பி.ஏ., பி.இ.
,, M. இராமலிங்க முதலியார்

**திருமயிலைச் செங்குந்தவாலிபர் சங்கம்.**

,, சு குருநாதவேல் முதலியார்
,, மு. சரவண முதலியார்

**மதராஸ் பனியகாட் கம்பெனி சங்கம்.**

,, தி. முத்துக்குமாரசாமி முதலியார்

### செங்கற்பட்டு ஜில்லா

**காஞ்சிச் செங்குந்த வாலிபர் சங்கம்**

,, பி. செ. மாணிக்கவாசக முதலியார்
,, ஒ. அருணாசல முதலியார்

**ஐயம்பேட்டை செங்குந்தர் வளர்நிலைச் சங்கம்.**

,, கை. காமசெட்டி முதலியார்
,, வி. சச்சபாலய முதலியார்

**மானம்பதி செங்குந்தர் சங்கம்.**

,, அ. பசுபதி முதலியார்
,, R. சம்பந்தமூர்த்தி முதலியார்

**ஐயங்கார்குளம் செங்குந்தர் சங்கம்.**

,, திரு. வெங்கடாசல முதலியார்
,, சோ. இலக்ஷ்மண முதலியார்

**பெருநகர் செங்குந்தர் சங்கம்.**

,, ப. கோவிந்த முதலியார்
,, கண. கன்னியப்ப முதலியார்

**சிறுகுளத்தூர் செங்குந்த வாலிபர் சங்கம்.**

,, வே. பொன்னுசாமி முதலியார்
,, ந. அண்ணாமலை முதலியார்

**உத்திரமேரூர் செங்குந்தர் தலாபிமான சபை.**

,, சா. உ. பொன்னுசாமி முதலியார்
,, பு. கதிர்வேலு முதலியார்

**கருங்குழி மேலவலம்பேட்டை செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.**

,, சோ. சாம்பசிவ முதலியார்

**பெரிய கயப்பாக்கம் செங்குந்த வாலிபர் சங்கம்.**

,, சந்தி ஆ. கந்தசாமி முதலியார்
,, வி. சு. நடேச முதலியார்

**மணிமங்கலம் செங்குந்தர் சங்கம்.**

,, கா. நா. கிருஷ்ணசாமி முதலியார்
,, ந. வைத்தியலிங்க முதலியார்

**கன்றம்சேரி செங்குந்த வாலிபர் சங்கம்.**

,, ஒ. முத்தாண்டி முதலியார்

**கோடம்பாக்கம் செங்குந்தர் சங்கம்.**

,, மா. அ. சபாபதி முதலியார்
,, மா. பழமகுநாத முதலியார்

**சைதாப்பேட்டை செங்குந்தர் சங்கம்.**

,, இரத்தினவேலு முதலியார்
,, S. நடேச முதலியார்

### வட ஆற்காடு ஜில்லா

**திருவராஜப்பேட்டை செங்குந்த வாலிபர் சங்கம்**

,, உட்டிசிதம்பர முதலியார்
,, M. G. மணிபால முதலியார்

**அம்மையப்பட்டு செங்குந்தர் சங்கம்.**

,, பா. அ. மாணிக்க முதலியார்
,, அ. க. அப்பாவு முதலியார்

**கொடுங்காலூர் செங்குந்தர் சங்கம்.**

,, K. V. மாணிக்க முதலியார்
,, K. கன்னியப்ப முதலியார்

**பொன்னூர் செங்குந்தர் சங்கம்.**

**அசனம்மாபேட்டைசெங்குந்தர் அபிவிருத்திசங்கம்**

,, K. சுப்புசாமி முதலியார்
,, N. S. அண்ணாமலை முதலியார்

### புதுச்சேரி

**பிரான்சு இந்திய செங்குந்தர் சங்கம்.**

,, ஆ. சிவ முத்துக்கு முதலியார் பி.ஏ., பி.எல்.
,, ச. அண்ணாமலை முதலியார்

### தஞ்சை ஜில்லா

**திருவாரூர் செங்குந்த மகாஜன சங்கம்.**

,, தி. கா. சபாபதி முதலியார்
,, ம. சுந்தரேச முதலியார்

**கோரநாடு செங்குந்தர் சங்கம்**

,, வீ. இ. கந்த முதலியார், பி.ஏ., பி.எல்.

**மஞ்சட்கொல்லை செங்குந்த மகாஜன சங்கம்.**

,, ச. பா. சி. விநாயகமூர்த்தி முதலியார்
,, திரு. சி. தியாகராஜ முதலியார்

**திருமருகல் செங்குந்த தலாபிமான சங்கம்.**

,, S. கந்தசாமி முதலியார்
,, வா. வ. சிதம்பரய முதலியார்

**வாழுமங்கலம் செங்குந்தர் சன்மார்க்க சங்கம்.**

,, ப. அ. கந்தசாமி முதலியார்
,, த. க. முத்தையா முதலியார்

**புத்தகரம் செங்குந்த தலாபிவிருத்தி சங்கம்.**

,, கா. பழனி முதலியார்
,, ஆ. முத்துக்குமார முதலியார்

### திருச்சி ஜில்லா

**உன்னியூர் செங்குந்தர் சங்கம்.**

,, R. மாணிக்க முதலியார்
,, P. மாரியப்ப முதலியார்



**கட்டிப்பாளையம் செங்குந்தர் சங்கம்.**

,, மு. கருப்பண்ண முதலியார்
,, ப. ஆறுமுக முதலியார்

**கரூர் செங்குந்தர் சங்கம்.**

,, கோ. கெ. இராமசாமி முதலியார்
,, அ. சு. அருணாசல முதலியார்

**மண்ணச்ச நல்லூர் செங்குந்தர் சங்கம்.**

,, செ. பெ. வீ. பொன்னுசாமி முதலியார்
,, கொ. கா. பிச்சையப்ப முதலியார்

### சேலம் ஜில்லா

**திருச்செங்கோடு செங்குந்த மகாஜன சங்கம்.**

,, T. R. கந்தப்ப முதலியார்
,, க. அ. சு. அருணாசல முதலியார்

**மோகனூர் உண்மைச் செங்குந்தர் சங்கம்.**

,, P. P. முத்துசாமி முதலியார்
,, கு. ல. சடையப்ப முதலியார்

**சேலம் அம்மாபேட்டை செங்குந்த மகாஜன சங்கம்**

,, K. மாரிமுத்து முதலியார்
,, S. P. பொன்னுசாமி முதலியார்

### கோவை ஜில்லா

**ஊத்துக்குழி உண்மைச் செங்குந்ததல சங்கம்.**

,, சா. கோவிந்தா முதலியார்
,, M. C. இராமசாமி முதலியார்

**சென்னிமலை செங்குந்தர் சங்கம்.**

,, க. பாலசுப்பிரமணிய முதலியார்
,, வா. செ. முருகேச முதலியார்

**பவானி செங்குந்தர் சங்கம்.**

,, க. செ. வீ. இராமசாமி முதலியார்
,, வை. ரா. பழநியப்ப முதலியார்

**பவானி செங்குந்த சன்மார்க்க வாலிபர் சங்கம்.**

,, செ. பெ. சென்னியப்ப முதலியார்
,, கொ. செ. லக்ஷ்மண முதலியார்

**மருதவாரைநிழல் வடவழி செங்குந்தர் நன்னெறிக் கழகம்.**

,, V. V. வெள்ளியங்கிரி முதலியார்
,, K. அங்கண்ண முதலியார்

**கணபதி உண்மைச் செங்குந்த வாலிபர் சங்கம்.**

,, சி. ரா. சுப்பைய முதலியார்
,, வா. ப. கஞ்சைய்ய முதலியார்

**வள்ளிபுரத்தாம்பாளையம் செங்குந்தர் ஒற்றுமைச் சங்கம்.**

,, வ. அ. பழனியப்ப முதலியார்
,, வ. ப. மா. சின்னப்ப முதலியார்

**ஜம்பை செங்குந்த வாலிபர் சங்கம்.**

,, க. மு. லக்ஷ்மண முதலியார்
,, கா. முனுசாமி முதலியார்

**சித்தோடு செங்குந்தர் சங்கம்.**

,, வ. சுப்புராய முதலியார்
,, செ. செ. ராமசாமி முதலியார்

### மதுரை ஜில்லா

**மதுரைச் செங்குந்தர் சங்கம்.**

,, வீ. சாலை முதலியார்
,, P. V. முத்துக்கருப்ப முதலியார்

### இராமநாதபுரம் ஜில்லா

**மண்டலமாணிக்கம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.**

,, மு. ஆ. பாதம்பிரியா முதலியார்
,, இ. முனியப்ப முதலியார்

**அருப்புக்கோட்டை செங்குந்த மகாஜன கிளைச்சங்கம்**

,, அ. கு. சி. குழந்தைவேல் முதலியார்,
,, ச. மூக்க முதலியார்

### திருநெல்வேலி ஜில்லா

**தென்காசி செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.**

,, T. P. K. ஆறுமுக முதலியார்.

**அம்பாசமுத்திரம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.**

,, ரா. வேலாயுத முதலியார் பி.ஏ.,
,, பா. ஆ. கணபதி முதலியார்

**வீரவநல்லூர் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.**

,, ந. ஆ. சிதம்பர முதலியார்
,, வி. எஸ். சங்கரசுப்பிரமணிய முதலியார் பி.ஏ., பி.எல்.,

**திருநெல்வேலி செங்குந்தர் சங்கம்.**

,, சிதம்பரநாத முதலியார்
,, முருகாவுடையா முதலியார்

### மலையாளம் ஜில்லா

**கொல்லங்கோடு செங்குந்தர் சங்கம்.**

,, கு. முத்துக்குமாரசாமி முதலியார்
,, சொ. சொக்கலிங்க முதலியார்

### திருவாங்கூர் இராச்சியம்

**கோட்டாறு செங்குந்தர் சங்கம்.**

,, பா. வேலாயுத முதலியார்
,, A. S. முத்தைய முதலியார் பி.ஏ.,

### சிலோன்

**யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு செங்குந்த முதலிமார் சங்கம்.**

,, இ. சி. விநாயகதேசிகர்
,, P. ராசேகர முதலியார்

## அநுபந்தம் 2-A.

**1921-ம் வருஷத்திய ஜனசங்கியைப்படி சென்னை இராஜதானியிலுள்ள சில இனத்தவரின் ஆண் பெண்கள் தொகையையும் படிப்பையும் குறிக்கும் அட்டவணை.**

சென்னை இராஜதானியின் மொத்தஜனத்தொகை ... 42,318,985-

ஆண்கள் ... 20,870,749 பெண்கள் ... 21,448,236

| ஜாதி. | மொத்த ஜனத்தொகை. | | தாய் மொழியில் எழுத்து வாசனையுள்ளவர்கள் | | | | ஆங்கிலம் படித்தவர்கள். | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | 100க்கு | பெண் | 100க்கு | ஆண் | 100க்கு | பெண் | 100க்கு |
| பிராமணர்கள் | 784558 | 779553 | 476796 | 60 | 118356 | 15 | 148700 | 19 | 6497 | 0·8 |
| கோமுட்டி செட்டிமார்கள் | 199468 | 194304 | 103995 | 52 | 10405 | 5 | 5749 | 3 | 168 | 0·08 |
| செட்டிமார்கள் | 186069 | 194574 | 72011 | 39 | 4879 | 3 | 4364 | 2 | 107 | 0·05 |
| வாணியர்கள் | 110129 | 108993 | 32844 | 30 | 2273 | 2 | 1198 | 1 | 68 | 0·06 |
| கம்மாளர்கள் | 638901 | 648909 | 176812 | 28 | 17192 | 3 | 4386 | 0·7 | 218 | 0·03 |
| கைக்கோளர்கள் | 205987 | 205506 | 53786 | 26 | 3781 | 2 | 1627 | 0·8 | 42 | 0·02 |
| வெள்ளாளர்கள் | 1311309 | 1342466 | 317949 | 24 | 33731 | 2 | 31031 | 2 | 1362 | 0·1 |
| பலிஜவர் | 515864 | 525633 | 115876 | 22 | 17188 | 3 | 17705 | 3 | 635 | 0·1 |
| நாடார்கள் | 103870 | 96968 | 14236 | 14 | 3177 | 3 | 478 | 0·5 | 41 | 0·04 |
| கள்ளர்கள் | 259428 | 274544 | 42273 | 16 | 1442 | 0·5 | 988 | 0·4 | 23 | 0·008 |
| கம்மவார் | 588017 | 572967 | 79740 | 14 | 8486 | 1 | 2672 | 0·5 | 111 | 0·02 |
| யாதவர்கள் | 371268 | 380086 | 41553 | 11 | 3405 | 0·9 | 3333 | 0·9 | 141 | 0·04 |
| வன்னியர்கள் | 1380425 | 1429544 | 152837 | 11 | 6191 | 0·4 | 4955 | 0·4 | 136 | 0·01 |
| ஆதித்திராவிடர்கள் | 1178573 | 1288646 | 43075 | 4 | 3994 | 0·3 | 1894 | 0·2 | 139 | 0·01 |

## அநுபந்தம் 2-B

**1921-ஆம் வருஷத்திய சென்னை இராஜதானியின் ஜன சங்கியைப்படி பல இனத்தவருள் கலியாணம் ஆகாதவர்கள், ஆனவர்கள், நாயகனிழந்தவர்கள் நாயகி இழந்தவர்களின் வயதுப் பிரகாரம் குறித்துள்ள அட்டவணை.**

| ஜாதி. | | வயது 0—5 | வயது 5—12 | வயது 12—15 | வயது 15—20 | வயது 20—40 | வயது 40க்கு மேற்பட்டவர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | கலியாணமாகாதவர்கள். | | | | |
| பிராமணர்கள் | ஆண் | 29,693 | 32,637 | 18,280 | 18,508 | 13,694 | 7,705 | ஆண் |
| | பெண் | 31,657 | 40,299 | 5,878 | 1,918 | 1,573 | 1,729 | பெண் |
| கைக்கோளர்கள் | ஆண் | 8,613 | 11,354 | 6,145 | 6,076 | 3,284 | 524 | ஆண் |
| ,, | பெண் | 9,337 | 11,036 | 4,672 | 1,828 | 1,221 | 325 | பெண் |
| செட்டிமார் | ஆண் | 3,016 | 4,302 | 2,288 | 1,833 | 1,900 | 144 | ஆண் |
| ,, | பெண் | 3,604 | 4,644 | 1,891 | 1,421 | 646 | 214 | பெண் |
| நாடார்கள் | ஆண் | 14,093 | 19,784 | 8,698 | 10,047 | 10,795 | 399 | ஆண் |
| ,, | பெண் | 13,863 | 18,948 | 7,677 | 6,122 | 1,910 | 641 | பெண் |
| வெள்ளாளர்கள் | ஆண் | 63,594 | 91,652 | 39,269 | 44,980 | 45,574 | 5,607 | ஆண் |
| ,, | பெண் | 59,165 | 87,784 | 34,402 | 21,293 | 7,731 | 2,590 | பெண் |
| | | | | கலியாணமானவர்கள். | | | | |
| பிராமணர்கள் | ஆண் | 149 | 863 | 2,455 | 9,823 | 68,446 | 53,366 | ஆண் |
| ,, | பெண் | 224 | 5,344 | 10,926 | 23,868 | 64,572 | 24,841 | பெண் |
| கைக்கோளர்கள் | ஆண் | 81 | 232 | 660 | 1,661 | 14,371 | 10,833 | ஆண் |
| ,, | பெண் | 54 | 426 | 1,418 | 4,432 | 14,894 | 8,039 | பெண் |
| செட்டிமார் | ஆண் | 6 | 42 | 103 | 478 | 6,059 | 5,165 | ஆண் |
| ,, | பெண் | 10 | 86 | 435 | 1,974 | 7,954 | 3,437 | பெண் |
| நாடார்கள் | ஆண் | ... | 3 | 18 | 212 | 19,720 | 16,533 | ஆண் |
| ,, | பெண் | ... | 28 | 119 | 3,125 | 25,191 | 7,728 | பெண் |
| வெள்ளாளர்கள் | ஆண் | 346 | 1,098 | 3,241 | 11,276 | 1,19,591 | 1,02,721 | ஆண் |
| ,, | பெண் | 386 | 1,887 | 7,971 | 23,061 | 1,39,149 | 63,753 | பெண் |
| | | | | நாயகன் அல்லது நாயகி இழந்தவர்கள். | | | | |
| பிராமணர்கள் | ஆண் | 10 | 25 | 65 | 435 | 3,532 | 11,812 | ஆண் |
| ,, | பெண் | 11 | 168 | 558 | 1,986 | 15,659 | 44,742 | பெண் |
| கைக்கோளர்கள் | ஆண் | ... | 33 | 28 | 121 | 932 | 2,022 | ஆண் |
| ,, | பெண் | 5 | 16 | 88 | 395 | 2,534 | 5,921 | பெண் |
| செட்டிமார் | ஆண் | ... | ... | ... | 10 | 237 | 874 | ஆண் |
| ,, | பெண் | ... | 7 | 6 | 85 | 1,521 | 3,945 | பெண் |
| நாடார்கள் | ஆண் | ... | ... | ... | 16 | 763 | 2,436 | ஆண் |
| ,, | பெண் | ... | ... | 4 | 90 | 2,881 | 8,741 | பெண் |
| வெள்ளாளர்கள் | ஆண் | 18 | 63 | 562 | 1,287 | 9,945 | 22,565 | ஆண் |
| ,, | பெண் | 48 | 188 | 214 | 1'260 | 22,590 | 71,584 | பெண் |

# அன்பர்களுக்கு அறிக்கை.

நமது 'மித்திரன்' மூன்றும் ஆண்டின் தொடக்கத்தில் இவ்வளவு கால தாமதமாக வருவதைக் குறித்து அன்பர்களின் மன்னிப்பை நாடுகின்றோம். மகாநாடு சம்பந்தமான எல்லா விஷயங்களையும் ஒரே புத்தகமாகத் திரட்டி ஒரு 'மகாநாட்டு மலர்' வெளியிட வேண்டுமென்னும் பேரவா ஒன்றே இத்தாமதத்திற்கு முக்கிய காரணமாகும். நான்கு சஞ்சிகை பருமன் கொண்ட இம்மகாநாட்டு மலரில் அடங்கியுள்ள விஷயங்களை மாதமாதமாகத் துண்டித்து வெளியிட்டுக்கொண்டு வருதல் யாவர்க்கும் திருப்தியைத் தராதெனத் தோன்றியதனால், எல்லாவற்றையும் திரட்டி இப்போது தை, மாசி, பங்குனி மாதங்களின் திரண்ட வெளியீடாக அனுப்புகின்றோம். இதைத் தயாரிப்பதற்கு எவ்வளவு வேலையும், காலமும், பொருளும் கொண்டிருக்குமென்பதை அன்பர்கள் உணர்ந்து, நிவர்த்திக்கமுடியாதவாறு நேர்ந்த இத்தாமதத்திற்காக எம்மை மன்னித்தருள்வார்களென நம்புகின்றோம்.

நிற்க, இனி நமது 'மித்திரன்' பிரதி இங்கிலீஷ் மாதமும் 15-ம் தேதி தபாலில் போடப்படும் ஒவ்வொரு தமிழ் மாதத்தின் முதல் வாரத்திலேயே அம்மாதத்தின் 'மித்திரனை' நமது அன்பர்களுக்கு எட்டவேண்டுமென்னும் விருப்பமே இவ்விதம் அனுப்பும் தேதியை மாற்றத்தூண்டியது.

மூன்றுந்தொகுதி நான்காம் பகுதி (அதாவது, அடுத்த சித்திரை மாதம் பகுதி) யிலிருந்து நமது 'மித்திர'னை முன்னினும் நூதன முறையில் வெளியிட ஏற்பாடு செய்திருக்கிறோம். அம்முறை சகல சந்தா நேயர்களுக்கும் திருப்தியைத்தருமென்றே எதிர்பார்க்கிறோம். செங்குந்தர்களேயன்றி இதர வகுப்பினரும் நம் 'மித்திர'னைப் போற்றிப் பாராட்டும் நெறியில், விஷயங்களையும், விஷயங்களை உபகரிக்கும் முறையினையும் புதுப்பிக்க எண்ணியுள்ளோம். இவ்வெண்ணம் நிறைவேறும் வண்ணம் நமது 'மித்திரனு'க்கு விஷயதானஞ் செய்யும் அன்பர்கள் கீழ்க்காணும் குறிப்புக்களைக் கவனிக்குமாறு வேண்டுகின்றோம்:—

1. எவ்விஷயமாயினும் இரண்டோரு அச்சிட்ட பக்கங்களுக்கு மேற்படாமல் சுருக்கி எழுதியனுப்பவேண்டும்.

2. எவ்வளவு பார விஷயமாயினும், வெகு சாமானிய படிப்பும் அறிவுமுள்ள மக்கள் படித்துச் சிரமமின்றி அறிந்துகொள்ளக்கூடிய எளிய இனிய நடையில் வியாசங்கள் அமைந்திருக்கவேண்டும்.

3. சரித்திர ஆராய்ச்சி, பூதபௌதிக சாஸ்திரம், கைத்தொழில் முறைகள், வியாபார நுட்பங்கள், நாகரீக மேம்பாடுகள், சமூகசீர்திருத்தம், சுகாதாரம் முதலிய விஷயங்களைப்பற்றி அன்பர்கள் அதிகமும் எழுதுவார்களாக.

4. சங்கக்கூட்ட விவரங்களைக் [illegible] எழுதியனுப்பும்படி காரியதரிசிகளை வேண்டிக்கொள்ளுகிறோம்.

'செங்குந்தமித்திரன்' ஆபீஸ்,
சென்னை, 15—3—29.

[illegible] ம. சண்முகசுந்தர முதலியார்,
பத்திராசிரியர்.

129809

# அன்பருக்குச் சில விளம்பரங்கள்.

## குலதிலகரின் புகைப்படங்கள்.

'செங்குந்தமித்திரன்' ஆபீஸில் நமது குலதிலகரின் புகைப்படங்கள் கீழ்க்கண்ட விலைகளுக்குக் கிடைக்கும்:—

| | ரூ. அ. பை. |
|---|---|
| ஒட்டக்கூத்தர் | 1—8—0 |
| தலைச்சங்கத்தின் நிருவாக அங்கத்தினர் (22 பேர் கொண்ட படம்) | 2—8—0 |
| ம. சண்முகசுந்தர முதலியார். 'செங்குந்தமித்திரன்' பத்திராசிரியர் | 1—8—0 |
| தலைச்சங்கப் பிரசாரர்கள் | 1—8—0 |

இத்தொகையில் படத்தின் கிரயம் பாக்கிங் தபால்செலவு முதலிய அனைத்தும் அடங்கியுள்ளன. வேண்டுவோர் முன்பணமனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்

## 'மகாநாட்டு மலர்'

ஈரோட்டில் சிபவருஷ தையீ கூடிய தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டின் வை[illegible]ம் நிகழ்ச்சிகளும், தலைவர்களின் பேருரைகளும் தீர்மானங்களும், அறிஞரின் அபிப்பிராயங்களும் தலைச்சங்கத்தின் முயற்சிகளும் வெளுத்த வழுவழுப்பான தாளில் வெகு அழகாக அச்சிடப்பெற்று, நாற்பதிற்கு மேற்பட்ட ஹாப்டோன் படங்களுடன், இம் 'மகாநாட்டு மல'ரில் அடங்கியிருக்கின்றன. நமது 'மித்திரன்' செல்லாத ஒவ்வொரு செங்குந்த குடும்பத்திலும் இப்புத்தகம் [illegible] ஒன்று இருக்கவேண்டியது அவசியம். இதன் விலை அணா 8 தான். தபாற்செலவு அணா 3. வேண்டுவோர் முன்பணமாக அணா 11 அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

## விளம்பர விகிதங்கள்.


'செங்குந்த மித்திர'னில் விளம்பரஞ் செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட விகிதம் முன்பணமாகக் கட்டணஞ் செலுத்தவேண்டும். மாதம் மாதம் 5,000 பிரதிகள் அச்சாகின்றன. ஜாதீய பத்திரிகைகளுள் இதற்கு மேலான பத்திரிகை யில்லை. இதில் விளம்பரஞ் செய்வோர்க்கு அதிக பலனுண்டு:

| | | ஒரு வருஷம். | ஆறு மாதம். | மூன்று மாதம். | ஒரு மாதம். |
|---|---|---|---|---|---|
| ஒரு பக்கம் | ரூ. | 100 | 5) | 26 | 10 |
| ½ பக்கம் | ,, | 60 | 30 | 16 | 6 |
| ¼ பக்கம் | ,, | 40 | 20 | 11 | 4 |

# 'செங்குந்த மித்திரன்' காலண்டர்.

அடுத்த சுக்கில வருஷத்திற்குச் சித்திரையீ முதல் தேதியில் நமது குலதிலகர் பலரின் உருவப்படங்களோடு வழுவழுப்பான பெரிய தாளில் ஒரு காலண்டர் வெளியிட உத்தேசித்திருக்கிறோம். அதற்கும் தபால் செலவு உள்பட அணா 4 கிரயமாகும். வேண்டுவோர் கிரயத்திற்குத் தபால் தலைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். சொற்ப பிரதிகளே அச்சிடப்போவதால் வேண்டுவோர் உடனே தபால் தலைகள் அனுப்பித் தமது பெயர்களை ரிஜிஸ்டர் செய்து கொள்ளல் அவசியமாகும்.

இங்ஙனம் :
மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ்,
31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.




# தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டுக் கொடி.

This [illegible] T. N. [illegible] Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam, Madras at 3[illegible] Armenian Street, Madras, and is Printed by T. C. Nataraja Mudaliar at the Cambridge Press 8/19 A. Armenian Street, Madras.